சர்வேஸ்பராய நம.

# திருமரணத் திறவுகோல்

என்னும்

# நன்மரண அம்மானை.

இஃது

நடுத்தீர்வையுலாமதியுள்ளான முதலிய

சிறந்த பிரபந்தங்களை உண்டாக்கியவரின் சகோதரர்

சருகணி

மகா-ள-ள-ஸ்ரீ ராயப்பபிள்ளையவர்களின்

புத்திரராகிய

மகா-ள-ள-ஸ்ரீ ச. ரா. சூசையாபிள்ளையவர்கள்

இயற்றியது.

TRICHINOPOLY:
ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS.

1914.

OFFICE OF THE REGISTRAR
14 APR 1915
136
Q6:417
N14.
68165

135 / 1915 II

OFFICE OF THE REGISTRAR OF
14 APR 191[illegible]
MADRAS

சர்வேஸ்பராய நம.

# திருமரணத்திறவுகோல்

என்னும்

# நன்மரண அம்மானை.

இஃது

நடுத்தீர்வையுலாமதியுள்ளான முதலிய சிறந்த பிரபந்தங்களை

உண்டாக்கியவரின் சகோதரர்

சருகணி

மகா-ா-ா-ஸ்ரீ ராயப்பபிள்ளையவர்களின்

புத்திரராகிய

மகா-ா-ா-ஸ்ரீ ச. ரா. சூசையாபிள்ளையவர்கள்

இயற்றியது.

TRICHINOPOLY:
ST. JOSEPH'S INDUSTRIAL SCHOOL PRESS.

1914.

2075
8916.8113

Nihil obstat : L. BESSE, S.J., cens. dep.




Imprimatur :

✠ AUGUSTINUS, S.J.,

*Ep. Trichinopolit.*

68165
Q16:417
N14

OF THE REGISTRAR OF ... MADRAS

# முகவுரை.

எனது நண்பன்பான மித்திரனே கேள். நீடித்த காலங்களாக இந்த நூதன நூலைச் சிருஷ்டித்து, உனக்கெழுதித்தர உத்தேசித்துங் காலங் கடந்தோடிவிட்டன. மீட்டுமிப் பிரபந்தமானது தகுந்த விலக்ஷணங்களுடன் முடிவுபெறவேண்டுமென்பதை யூகித்து. போலிச் சரிதையொன்றிசைக்கப்பெற்றன. என்னிலும் ஞான ஏகாங்கியர்களுடைய உறுக்கச் சுருக்கமான ஆழ்ந்த கருத்துக்களையும், வேத சாஸ்திரிகளுடைய அமிர்த போதக சாரங்களையும், கிரந்த கர்த்தாக்களுடைய நீதி வாக்கிய சுலோகங்களையும், கதாப்பிரசங்கியர்களின் சித்தாந்தங்களையும், உலோகக் கவி நடைவல்லோர்களி னரும்பொருள்களையும், நாளடைவில் நன்காராய்ந்துணர்ந்து குருப்பிரசாதியர்களுடைய உபதேசங்களைச் சிரமேற்கொண்டு, அம்மானை வரைந்தேனேயன்றி என் சுயார்ச்சித மொழியாக மதிக்கக்கடவதல்ல

இந்த நூதன நூலை யேற்படுத்தவுள்ள முகாந்தரமேதோவெனில், நோயாளிகளுடைய நேரப்போக்கிற்காக மாத்திரமன்று. இக்கருத்தை முன்னிட்டே இதர மதங்களிற் பலவாறுகப் பயன்றரும் பிரபந்தங்களை யுண்டாக்கி, யதனைத் தக்க விநயமாக வாசித்துப் பூசித்து வருகிறார்களென்பதைத் தாங்களே கேட்டுங் கேள்வியுற்றும் அறிந்திருப்பீர்களன்றோ. எமது வேத வழிப்பாடேதோவெனில் மனச்சமாதானம், தேவசித்தத்துக் கமைவு, மேன்பதவியை யடைவதற்கிடையூரானபுறக்கவலைகளற்று மரிப்பதற்கேதுவாமென்பதே இந்நூலையமைக்க முகாந்தரமாம். மேலும் அச்சமயங்களில் பற்பல பத்திக்குரிய புஸ்தகங்களைத் தெரிந்தெடுத்துப் பிணியாளர்களுக்குத் தேற்றரவாக எக்காலங்களிலும், வாசித்து வருகிறார்களென்பதும், எதார்த்தமே. என்றாலும் இக்கருத்தைக் குறிப்பிட்டோர் புஸ்தகமுமேற்படவில்லை. ஆதலின் இந்நூலை நியமனஞ் செய்யவேண்டியிருந்தனம்

மரணமானது சமஸ்தருக்கும் மறுலோக பிரயாணத்துக்குச் செல்லும் வாசலென்று கூறப்படினும் அது நன்மரணமென்றுந் துன்மரணமென்றும், இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளனவாம். துன்மரண வாசலானது இடையூரற்றதும், விஸ்தீரணமானதுஞ் சுளுவானதுஞ் சாதாரணமாகத் திறந்திருக்கலானதுமாம், ஆனாற்றிருமரண வாயலோவெனின் மகாயிடுக்கமுள்ளதுங் கக்கிஷமானதுந் தாளிட்ட சூஸ்திரக்கபாடமுள்ளனவுமாமே. இவ்வாயலைத் திறப்பதற்கித்திருமரணத் திறவுகோலையச்சில்வாற்றனம்.

இந்நூலிற்கு நன்மரண (ஆயத்த) அம்மானையென நாமகரணஞ் சூட்டியமையால் நோயாளருக்காக மாத்திரமெனத் தீர்வையிடத்தக்கதல்ல. சுகவாசிகளுஞ் சுகதேசிகளும் படிப்பாளரும், நன்கு வாசித்துணர்ந்துபதேசிக்கும்வாறு நிருபிக்கப்பட்டனவாம்.

மேலு முரோகஸ்தருக்கு வாசிக்குங் கிரமமெப்படியெனில், இக்காப்பியப் பாயிரத்தின் 4-ம் பிரிவில் விபரித்திருக்கின்ற கிரமந்தவிராது தக்க பத்தி சுத்தி சங்கையுடன் நடப்பதே யோக்கிதையாம். அன்றியும் நோய்களிடையே வருந்தி நொந்து மெலிந்து பற்பல விசாரங்களாலலைபாய்ந்துளன்று நிற்கும் வியாதீஸ்தனுள்ளத்திலுனது சொற் சத்திக்கும் வண்ணம் நாத்திருந்த வழூவற நிருத்தி விபரித்து வாசிப்பாயாக. இவ்வாறு நீ செய்கில் பிணியாளனுடைய சாவதானமாகிய அவ்வேளையிற் புத்திக்குத் தீக்ஷண்யமும், மனதுக்கு உற்சாகமுஞ் சமய சஞ்சீவியுந் தரும சகாயமுமாயிருக்குமென்பதற் காக்ஷேபனையில்லையன்றே.

## விண்ணப்பம்.

இப்புத்தகமானது சாதாரண ஜனங்களும் வாசிக்கவுங் கேட்கவும் வேண்டியிருக்குமெனச் சிந்தித்து இதனை எழிய தமிழ் நடையிற் புணர்ச்சி விகாரங்களை மிக்கனவாகத் தவிர்த்து அச்சியற்றலாயினம். ஆதலில் நன்னூலாரியரோ ஏனையோருடைய வதிமிக நன்மையையு மேமெறடுத்தென்னைப் பிறக்கணித்தகற்று தேற்றருள வேண்டுகின்றேன்.

## அர்ச். சூசைமாமுனிவருக்கு பாதகாணிக்கை.

அமலோற்பவ கன்னியாஸ்திரியின் விரத்தப் பத்தாவுமெனது நேசதகப்பனுமாகிய திருமாமுனீஸ்வரனே தேவரீருடைய தாசானுதாசர்களிலொருவனாகிய அடியேனிச்சிறு நூலை உமது பாதாரவிந்தங்களே ஆதாரமென நம்பி ஸ்தாபகஞ் செய்கின்றேன். ஏனெனில் ஏக தமதிரித்துவ தேவன் உலகவிர்க்ஷணியமென்ற உச்சித வேலையைச் சித்தாந்தமாக நிறைவேற்றக் கருதி உம்மையே துணைக்கருவியாக நித்தியத்தில் நியமனஞ் செய்தாரல்லோ. அவ்வாறே யிந்நூலுந் தக்க பிரசித்திபெற்றுப் பயனைப் பயக்கும் வண்ணம் உமது பூஞ்சரணிற் காணிக்கை வைப்பது எனக்கு எத்தகையோ சந்தோஷகரமான அதிஷ்ட பாக்கியமாம்.

அன்றியு மும்மிணையாயிகத்தைத் துறந்து பரத்துக்கேகுங்காலம் பரமானந்த நித்திரையடைந்த புண்ணியசீலரொருவருமே யில்லையாதலின் நன்மரண அம்மானையையுமுமது திருப்பாதங்களிற் காணிக்கை வைப்பதென்பது அத்தியாவசியமாமே.

மேலும் யேசுமரியென்ற மோக்ஷத் திறவுகோலுமது பாத்தியமென் பதை யான் சிந்திக்கையில் நன்மரணத் திறவுகோலையுமுமது ஆதீனத்தி லொப்பிக்கில் அந்தியகாலஞ் சந்தித்தபோது நன்மரணவாயிலைத் திறந் தருளுவீரென்பதற்கையமேயில்லை.

அல்லாமலுஞ் சத்திய திருச்சபையைப் பரிபாலிப்பவராகத் தேவரீ ரைத் தெரிந்துகொண்டு உலகெங்கும் புகழ்ந்து பாராட்டுவதை என் னிரு கண்குளிரத் தரிசித்து என் செவி குளிரக் கேட்டு இப்பிரபந்தத்தை யுமது கண்காணிப்பில் ஸ்தாபிக்கின்றேன். தேவரீரிந்நூலைப் பரிபாலிக்க வேண்டுகின்றேன் திருமுனியே.

இறுதியாய் அவஸ்தைக்காரர்களுக்கு அடைக்கலமுஞ் சாகிறவர்களுக் குறுதித்துணைவருமாயிருக்கிற அர்ச். சூசைமாமுனிவரே, மோக்ஷ சம் பன்னர்களாகிய முத்திப்பேறுபெற்ற அர்ச்சீஷ்டர்களிற் சிலர் ஒவ்வொரு விஷயங்களுக்கு மாத்திர மன்றாடுகிறவர்களாகவும் பாதுகாவலர்களாகவும் திருச்சபையினு லேற்படுத்தவுஞ் சருவேஸ்பரனு லலங்கரிக்கவுஞ் சமஸ்த கிறீஸ்துவர்களால் மன்றாடவுங் கொண்டாடவும் படுகின்றதாமே.

அவ்வண்ணமே விஷப்பாம்பு கடியில் அப்போஸ்தலரான அர்ச். சின் னப்பரையும், ஆடு மாடு முதலிய மிருக நோய்களில் அர்ச். பெரிய அந்தோ னியாரையும், பேய் நாய் கடியில் அர்ச். வித்தாலப்பரையும், வைசூரி வியாதியில் அர்ச். செபஸ்தியாரையும், பேதி முதலிய கொள்ளைநோயில் அர்ச். ஆரோக்கியநாதரையும், இழந்த பொருளைக் கண்டடைய அர்ச். சின்ன அந்தோனியாரையும், கண்ணோயில் அர்ச். பிரகாசியம்மாளையும் இடி குமுறலில் அர்ச். பார்பரம்மாளையுமிப்படியே மன்றாடிப் பிரார்த்தித்து வருகிறோம். ஆனல் அர்ச். தெரசம்மாள் பரிக்ஷித்து நிச்சயித்துரைத்த வண்ணம் சகல அவசரங்களிலும் சகலருக்கு முதவிபுரிந்தருளும்படி சரு வேஸ்பரனல் அதிகாரமும் வல்லமையும் தேவரீர் பெற்றிருக்கிறதினலிந் நூலை யுமது பாதுகாவலில் வைத்து அஷ்டாங்கமு மண்பிரளச் சாஷ்டாங்க மாக விழுந்து வணங்கி மன்றாடிப் பிரார்த்திக்கின்றேன். ஆமென்சேசு.

நூலாசிரியனுச்சாரணம்.

திருச்சபைக் கண்காணியர்கள் இச்சிறு பிரபந்தத்தில் வேத பேதக போதகமிருப்பதெனத் தீர்ப்பிடுவார்களாயின் நானுமவ்வாறே தீர்மானிக் கிறதாகப் பிரசித்தமாகச் சங்கீர்த்தனஞ் செய்கின்றேன்.

இங்ஙனம்,

ச. ரா. சூசையாபிள்ளை.

முகவுரை முற்றிற்று.

சர்வேஸ்வராயநம:

# திருமரணத் திறவுகோல்

என்னும்

# நன்மரண அம்மானை.

**காப்பு வெண்பா.**

மானிடரைத் தீர்வையிட வல்லான் வருநாளில்
வானிடமேற் றோன்று மரக்குருசே—யானறையும்
நன்மரண அம்மானை நாகரீக மாய்வழுத்த
என் மனத்தே வந்திரங்கா யே.

**தெய்வ வணக்கம் விருத்தம்.**

திருமருவு முலகொறுங்குந் துணைமா லின்றிச்
சிஷ்டிசெய்தாங் காங்கமைத்தெஞ் சீவன் வாழ்க
உருமருவு முயிருளவு மிலவு மாக
உளவாக்கி யெமைவீடு சோக்கலாய
கருமருவு கனிமரியின் கனியாய் வாய்ந்த
காரணமு மாரணமுங் கசிந்த பாகாந்
திருமரணத் திறவுகோற் றமிழைக் கூறத்
தேவனடி சிரமுடியாய்ச் சேர்த்துவாமே.

**அர்ச். கன்னிமரியாயி ஸ்துதி.**

**விருத்தம்.**

ஆதி பிதாப் புத்திரியா யமைந்த சீலி
அமல சுத னைமனுவாய்த் தரித்த சூலி
நீதிசாந் திஸ்ப்ரீத்தின் நேய தாலி
நீடூழி நாளில்நிரு பித்தமாலி
சோதிபரன் சிஷ்டிகளி லுசித சாலி
சுரர்களடி பணிந்திறைஞ்சு மறையினூலி
ஆதரையின் நன்மரண மாலை கூற
அலர்ப்பதமென் சிரக்கிரீட மாக்கினேனே.

## அர்ச். சூசைமாமுனிவர் ஸ்தோத்திரம்.

### விருத்தம்.

ஆதி தந்தை ஸ்தானாதி பதியு மாகி
அமலசுத னானவர்கைத் தாதையாகி
சோதிசாந் திஸ்ப்ரீத்தின் றுணையு மாகி
தூய கன்னி யாஸ்திரி மணாளனாகி
மேதினியின் றிருச்சபைக்கண் காணி யாகி
விண்ணவரிற் பிரதான சிரேஷ்டனாகி
நீதிமா னெனவிளங்கு சூசை யையா
நின்னிருதா ளென்னடுநா நிறுத்துவாயே.

---

## பாயிரம்.

### தெய்வ வணக்கம் அம்மானை.

1. ஆதியந்த மொப்பெதிரில் லாதவச ரீரிசுய ஞ்
சோதிசுயா னந்தவஸ்தே தோத்திரமா தோத்திர மே.
2. அங்கிங்கெ னாதபடிக் கானந்த சின்மயமாய் த்
தங்குங்கோ நாயனடி சாஷ்டாங்க நிஷ்டை செய்தே ன்
3. உன்னால் வடிவானே னோர்வடிவு மில்லா நீ
ரொன்னால் வடிவானா யேகசுத னேநமஸ் து
4. பூவினிதழ் வாடாது பூமுகத்தி லேகனித் த
ஜீவகனி யேகழலிற் நீர்க்கதண்ட பூசனை யே
5. அந்தரங்க சிந்தனையி லாலோ சனையுணாக் க
வந்திரங்கு மிஸ்ப்ரீத்தே மாறாதா ராதனை யே
6. தாசரித யங்களிலே தங்கியருள் மெஞ்ஞா ன
நேசசாந் திஸ்பிரித்தே நித்திய நமஸ்கார ம்
7. அற்புதத்துள் ளீருந்த வற்புதமா யுற்பவித் த
முப்பொழுதுங் கன்னி முளரிமலர்த் தாள் போற் றி
8. முப்பொருளோ னொப்பிதமாய் மூவுலகுக் காண்டவளா ய்
எப்பொருட்குந் தாபரமா யேற்கவந்தாய் வந்தனை யே
9. தந்தைக்குத் தந்தையுமாய் தாய்க்குநே யாய்த் தே வ
மைந்தன்கைத் தாதையுமாய் வாய்ந்தமுனி தாள்சரண ம்
10. சம்மனசோர்க் கெட்டாத ஸ்தானமடைந் தாச்சரி ய
சிம்மா சனத்தெழுந்த திவ்யமுனிக் கர்ச்சனை யே.

11. அண்டர்கோனுக் கெதிரி யாருமில்லை யென்றெகி — ரி
வண்டர்கோ னையடித்த வானபிர தானிமிக்கே — ல்
12. சம்மனசே தேவுலக சங்கமெச்சு மந்திரி — யே
எம்மறைக்கண் காணியுமை யேற்றியே வாழ்த்துகின்றே — ன்
13. தேவகட்ட ளைப்படியே சிந்தையிசைந் தந்திசந் — தி
காவலாஞ் சம்மனசுன் காந்தண்மலர்த் தாள்பணிந்தே — ன்
14. அகலாத மாக்ஷிமையோ டாண்டவரைத் தோத்தரிக்கு — ம்
சகலவர்ச் சிஷ்டர்களே சாகரண தீர்க்கதண்ட — ம்
15. தேவுலகோர் மானிடர்க்குச் சிந்தாத் திரையுணவா — ய்
ஜீவகனி காய்த்த திருக்குருசே முன்னடவா — ய்

## 2-ம் பிரிவு. அவையடக்கம்.

1. அருள்மரிபார்த் தாண்டவரோ அங்குலியி னுளிமுத் — தி
அருள்வீ ரொனமதித்தே அம்மானை கூறிவிட்டே — ன்
2. நாவலர்முன் னின்னூலை நாவெடுத்துப் பாவிசைத்தே — ன்
பாவலவென் றின்னூலைப் பார்வையுறு தாதரிப்பீ — ர்
3. நாலிரண்டைக் கற்றறியான் நாவெடுத்தல் தப்பித — மே
பாலையுண்டு நீரகற்றும் பக்ஷியிணை யேறெடுப்பீ — ர்
4. கல்லார்க்கும் பேதையர்க்குங் கல்லானசொற் கீழ்மொழி — யை
எல்லாருங் கொண்டுபொருத் தேற்றுசீர் வாதமென்பீ — ர்
5. அவஸ்தைச் சுவடியேன்றோ ரரியநூற் றேடுமுங்க — ள்
உவத்தலெனை யேவியதால் உற்சாக மாயுரைப்பே — ன்
6. நன்மரணம் விண்ணுலக நாடுபுகும் வாயலெ — ன
நன்மரண மாலைசொல நாவசைத்தே னுவலினு — ல்
7. ஆசையேநூற் பாயிரமா யம்மானை பேசுகிறே — ன்
தாசரிலே தாசனென்மேற் றப்பிதங் கூறுதெடுப்பீ — ர்
8. கிள்ளைகிளற் றும்மொழியைக் கேட்போரு வப்பனபோ — ல்
பிள்ளைபினற் றும்பழிப்பை பெற்றோரே கையேற்பீ — ர்
9. சலதாரை நீரையலை தன்னினமென் றேற்பனவா — ம்
புலவீரோ மூகைசொல்லை புன்மொழியென் றேற்பீ — ர்
10. தந்தபொருட் கின்றளவிற் குரணைசொல் லென்றுபர — ன்
எந்தனிடங் கேட்பொன ஏங்கிவறை யத்துணிந்தே — ன்
11. ஞானநூ லுற்றுணர்ந்தோர் நன்கெழுதி வைத்தபொரு — ள்
ஈனநூல் முற்றுணர்ந்தோ னென்மொழியாற் சொல்லலுற்றே — ன்

12. புலவோ ரகத்துட் புதைபொருளாய் மங்கிய தை
உலகோர் முகத்துக் கோர்விளக்கா யேற்றுகிறே ன்
13. நெல்லிலுமி யேற்காது நென்மணியைக் கொள்ளுவர்போ ல்
சொல்லிலுயர் நோக்காது சொற்பொருளை யேற்றருள்வீ ர்
14. பாவிருக்க ஞானியர்சொற் பாகிருக்க நான்சுவைக் க
நாவிருக்க வாயடைக்க ஞாயமுண்டோ மேலோ ரோ
15. ஆயிரத் தொளாயிரத்தெட் டாமாண்டி லம்மா னை
வாயவிழ்த்துப் பாடிவைத்தேன் மானிலமே நீயறிவா ய்
16. சருகணிரா யப்பபிள்ளை தந்தருள்சேய் சூசையென்பா ன்
மரணவாயித் தம்பகர்ந்தேன் வாக்கியங்கே ளம்மா னை

## 3-ம் பிரிவு. வரமிரத்தல்.

1. ஜீவாஜீ வாதிகட்கு ஜீவாதி யின்னூற்கு ம்
ஜீவாதி யாய்நடத்த சேவைசெய்தேன் நின்சர ணை
2. கல்லைக் கரைப்பதுவுங் கன்மனதை மாற்றுவது ம்
சொல்லைப் புகட்டுவதுஞ் சொந்தவுந்தன் வேலையை யா
3. குஷ்டமெனும் பாவக் கொள்ளைநோய் நீக்கிய தை
அஷ்டதிக்குங் கூறுமிதை யாரறியா ருன்மகி மை
4. சாவைநர கைச்செயித்த தற்சுதனே நன்மரண ப்
பாவை நடத்தவருள் பாலிப்பாய் நூன்முறையா ய்
5. ஞானியர்கள் சிந்தனையில் ஞானோப தேசமு னை
வானசாந்தி ஸ்பிரீத்தே வாக்கெனக்குத் தந்தரு ளே
6. ஓதுகிறேன் காதிலேயா னுள்ளமதிற் பேசுவ தோ
சாதகமா யும்வேலை சாந்தசரு வேஸ்பர னே
7. சொல்வழுக்க ளண்டாது தோஷமொழி மூளா து
நல்வாக்குத் தந்தருள்வாய் ஞானத் திருப்பிட மே
8. எல்லையற்ற னைவயற்றி லேந்தியரு ளம்மணி யே
சொல்விவரு நன்மரணச் சூத்திரத்தை யோதிவை யே
9. பாரிலுனைப் போலிதுநாட் பாக்கியமாய் வீய்ந்தவர்க ள்
ஆருமில்லை யாதலினு லர்ச்சிஷ்ட சூசைமு னி
10. நல்லமர ணத்தையிந்த நானிலருக் கீய்ந்தரு ள
வல்லபத்தைப் பெற்றிருக்கு மாதவனே வாக்கருள்வா ய்
11. நன்மரணப் பாமாலை நாகரீக மாய்வழுத் த
உன்மரணத் தைநிதானித் தொத்தாசை யீய்முனி யே

12. சாந்தருணம் வந்திருக்குஞ் சம்மனசோ ரேயடியே ன்
ஆந்தமிழா யிங்கெழுத ஆசீர்வா தமிர்ந்தே ன்

## 4-ம் பிரிவு. ஆசான்முயற்சி.

1. அம்மானை பாடவந்த ஆசானே வேதிய னே
இம்மாலை பாடுவதற் கெச்சரிக்கை கூறுகிறே ன்
2. பாடத் துடங்குமுன்னுன் பக்கமாய் நோயனெதி ர்
பாடுபட்ட வோர்சுரூபம் பத்திராசனத் தமைப்பா ய்
3. பாபிகளின் ருயார் படமுமெதி ராகவைத் து
தியதூபப் புட்பமுடன் றீர்த்தமுமே சேகரிப்பா ய்
4. எல்லாமுஞ் சேகரித் தேற்றதல நீயிருந் து
சொல்லுவா யம்மானை சொற்பிசகு சாரா து
5. மைந்தனே நீயம்மானை வாசிப்ப திற்சலித் து
எந்த வரியையுநின் னிஷ்டம்போற் றள்ளா தே
6. வேதியரோ வாசகத்தை வேடிக்கைக் கோதா து
சாதகமாய்க் கற்றறிந்து சாற்றினல் நன்மையுண் டு
7. அரையிலே யாடியல்லோ அம்பலத்தி லாடுவதா ம்
ஒருமுறை யாகிலுநீ யுன்னுள்ளே வாசிநய ம்
8. ஆத்திரமாய்ப் பாடாதே அம்மானை வீணாகு ம்
சூத்திரத்தை யொவ்வொன்றாய்ச் சொல்லிநிறுத் தென்பிறப் பே
9. உன்னாலே கூடுமெனி லுள்ளபொருளை விளக் கு
உன்னாலே லாதெனிலோ வுற்றதைநீ கேட்டறி யே
10. வந்தோர்கள் கேட்டறிய வாசிப்பாய் நாத்திருந் த
சந்தடியை யானமட்டிற் றக்கமுறை யாய்த்தடுப்பா ய்

## 5-ம் பிரிவு. கேட்போருக்குரை.

1. இந்தவிடத் துள்ளவரோ யெல்லவரும் வந்தடைவீ ர்
வந்தபெரி யோர்சபையே வாசிப்ப துங்களுக் கே
2. கைவலித்துக் காதடைத்துக் கண்ணிருட்டிக் கானீட் டி
மெய்விளைத்த நோயனிந்த வேளையிதைக் கேட்பா ஞே
3. காதலனே கேள்செவிடன் காததிலே சங்கைவைத் து
ஊதினபோ ஞேயனுக்கா யோதுவதி லேதுபய ன்

4. சாகிறவன் செத்தபின்பு சாகாது பின்றாடர்ந் து
போகிறவ ராருமக்கே புத்தியிது புத்தியி து
5. சாகப் பிறந்துவிட்டோந் தப்பினவ ராருமில் லை
சாகுமுன்ன றிந்தமதி சற்றே நினைப்புறுவீ ர்
6. சிந்தியாமை யாலுலகஞ் சேதமாய்ப் போவதெ ன
முந்தவொரு திஷ்டிமுனி மூதுரையா கப்பகர்ந்தா ர்
7. ஆதலினாற் சேர்ந்திருக்கு மத்தனைபேர்க் குந்தகுந் த
போதகமா யானுணர்ந்தே போதித்தே னம்மா னை

பாயிரம் முற்றிற்று.

பாயிரத்தின் பிரிவைந்துக்குச் செய்யுள்—60.



## நூல்.

## நாடாளன் சருக்கம்.

### விருத்தம்.

தாத்திரிதே யஞ்சுடர்போ லொளிர்ந்த வாறுந்
தலைநகர்சி வாசிபுரி தளைத்தவாறுந்
தோத்திரமாய்ச் சோமனர சாண்ட வாறுஞ்
சுருதிமறை நெறியிலவ னொழுகாவாறுஞ்
சேத்திரத்திற் சேட்டகுரு வசித்த வாறுந்
தேசாதிப திசமுக மடைந்த வாறுஞ்
சூத்திரமாய்க் குருவுவுமை பகர்ந்த வாறுந்
துங்கனுறும் பயங்கரமுந் துலக்குவாமே.

### முதற் பிரிவு. நாட்டு வளம்.

### அம்மானை.

1. ஆதிமுதற் பூவுலகி லாதாமை யுண்டுசெய் து
சோதிபரன் வைத்திருந்த சுந்தரஞ்சேர் நாடிது வே
2. மாயன் விஷம்போக்க மானிலத்தை நீருக் கி
நோயன் பிதிர்தளைத்த நூதனஞ்சேர் நாடிது வே
3. செல்லமலி யப்பாலுந் தேனுமிகப் பெரு க
வல்லபரன் யூதருக்கு வாக்களித்த நாடிது வே

4. கற்பலகை யானதிலே காரணனு ரீரைந் து
கற்பனை யளித்தசீனுக் கன்மலைவாழ் நாடிது வே
5. முப்புவியி னுள்ளடங்கான் முப்பொழுதுங் கன்னிகைபா ல்
இப்புவியி லேமனுவா யெய்தமலை நாடிது வே
6. மண்ணுலகர் வானேற மார்க்கமீ தெனக்கரு த
விண்ணையழா விப்படர்ந்த மேறுவடர் நாடிது வே
7. மோக்ஷமதில் மாக்ஷிமையாய் முத்திபெற்ற சித்தரொலா ம்
ஆச்சரிய மாதவஞ்செ யாரணிய நாடிது வே
8. மாதவர் பசிக்கனலால் வாடாது புள்ளினங்க ள்
சாதங் கொணர்ந்தளித்த தத்துவஞ்சேர் நாடிது வே
9. பூவுலகை நீருக்கிப் புண்ணியனா யன்னியனா த்
தேவ னடுத்தீர்வை செய்யவரு நாடிது வே
10. மாலையிலே பூத்தவுடு வாடுவ திகழ்ந்துவன ச்
சோலையிலே பூத்தமலர் தோதடிக்கு நாடிது வே
11. நாட்டுமிரு கங்காவில் நாள்விடுதல் கண்டுவன க்
காட்டு மிரு கமூரிற் காலாறு நாடிது வே
12. சந்திரனுஞ் சூரியனுந் தங்கியெழு குங்கட லை
சொந்தவுடை யாயுடுத்த சோங்குசெறி நாடிது வே
13. முத்துரத்தி னம்பவளம் மூலமுத லுற்பனஞ்செ ய்
சத்துவந் துலங்கிவளர் தாத்திரி நாடம்மா னை

## 2-ம் பிரிவு. நகர்வளம்.

1. தாத்திரிதே யஞ்சுட்ராயத் தங்கமுடி மேன்மணியா ய்
நேத்திரசி வாசிபுரி நேர்மைசொல நாவுள தோ
2. வானையளா வும்மதிளும் மாளிகையோ டுப்பரி கை
பானுலா வுஞ்சிகரி பார்வையுசா வாவுயர ம்
3. கீழுலகர் மேலெகிரக் கீல்வழியா மவ்வகழி ன்
தாழறியா தேமகரஞ் சஞ்சரிக்க வஞ்சிவிடு ம்
4. ஆனைபரி தேர்திரளோ டாயுத சாலையுற் ற
சேனை தளங்களெல்லாஞ் சிங்கார மாய்வழங்கு ம்
5. ஆலயங்கள் சத்திரங்க ளன்னதா னம்விளங்கு ம்
சாலையும் பூங்காவுஞ் சாதகமாய்ப் பொங்கிநிற்கு ம்
6. ஏறி மதகுமில்லை யேற்றமிறைப் பாருமில் லை
வாரிவடி காலுமில்லை மானிலமே தேனிலமா ம்

7. நன்செய்நீர் பாய்ச்சாது நாளறிந்து வானிரங்கு ம்
புன்செய்களை பற்றாது பூரணமாய் நெல்விளையு ம்
8. செட்டிமார் நாட்போக்க செய்தொழிலே யல்லா து
வட்டிகேட் பாருமில்லை வட்டிகொடுப் பாருமில் லை
9. பிச்சைகொடுத் தீருந்த பேரடையத் தேடுகிலு ம்
பிச்சையெடுப் பாரிலதாற் பேரொடுப்பா ராருமில் லை
10. உற்றபவு சைவிபரித் தோதுதற்கு நாவுள தோ
வற்றாச் சமுத்திரஞ்சி வாசிபுரியம்மா னை

## 3-ம் பிரிவு. அரசியல்.

1. இன்னகருக் காவியினை யெல்லவர்க்கு நல்லவனா ய்
ஒன்னலரில் லாதுசெங்கோ லோச்சிநின்றான் சோமனென்பா ன்
2. பூமிக் குகந்தவனாய்ப் பொக்கிஷசி லாக்கியனா ய்
நேமியிலிவ் வேந்தனுக்கு நேரிலனாய் வாழ்ந்தான்கா ண்
3. நீதி நெறிபிரளா நிற்தாச்சணை நடுவா ய்
சாதிஜன ரொன்றநிலை தங்கா நெறித்தலைவ ன்
4. அரசுறிமை நாடறிய ஆண்டகையி னாணையெ ன
வரியிறைக ளைத்தயவாய் வாங்கவிதி யைவிதிப்பா ன்
5. தன்னகத்தைக் கொண்டாடான் றன்னயத்தை யுந்தேடா ன்
தன்பிரசை யிஷ்டமொன்றைத் தன்னதெனச் சிந்தைவைப்பா ன்
6. மாந்தர் மனவசிய மையாடுங் கையனி ணை
சாந்தகுணத் தையுடையாய்ச் சாதிப்பா னென்றாலு ம்
7. வேதத்தி லேபிறந்து வேதத்தோ ரால்வளர்ந்து ம்
வேதவிசு வாசமின்றி வேடனாய்க் காணநிற்பா ன்
8. ஆலயங்களைத்தொழுவா னாசாரத் தோடுஜெ ப
மாலையையுங் கையேந்தி வாசிப்பான் ஞானியர்போ ல்
9. தன்னையுல கோரேற்றத் தானதன்மத் தைநடத் தி
அன்னமு மாடையளித் தாதரிப்பா னேழைக ளை
10. வேண்டுவா னாருவப்ப வேண்டுவதே னென்றைவா ன்
வேண்டுதலா லாம்பயனை விள்ளுமென்பா னிவ்வுலகி ல்
11. விதித்த விதிப்பயனே வேண்டுதலா லாவதில் லை
மதித்திரஞ்சி னாலுமது மாறுமோ அல்லவல் ல
12. பாவத்தைப் புண்ணியத்தைப் பார்த்தவனார் கேட்டவனா ர்
பாவ கருமமெனப் பாசாங்கேன் பேசுகிறீ ர்

13. ஆவிநமக் குண்டதைநீ ரர்த்துமமென் றோதுகிறீர்
ஆவிசீவ ஜெந்துவுக்குண் டாத்துமமோ சொல்லுமென்பான
14. மற்றமற்ற ஜீவனெல்லாம் மாய்ந்தளிந்து போவதுபோல்
செத்தமனுச் சீவனுமே சீரளிந்து போகுமென்பான்
15. மாண்டவுயிர் வேறுடலில் வந்துபிறந் திவ்வுலகை
ஆண்டதெனச் சொல்லிவரு மாராய்வில் லாக்கதைபோல்
16. மாண்டதன்பின் வேறுலகில் வாழுமெனத் தர்க்கமிட
வேண்டாங்கேள் நம்முயிர்க்கு வேறுலக மில்லையென்பான்
17. மோக்ஷ நரகமென முன்னோர் மொழிந்ததெல்லாஞ்
சூட்சமொழி யல்லாது சொர்க்கமே யில்லையென்பாண்
18. பொல்லாங்கி லேமலிந்து பூமிகெட்டுப் போகாமல்
நல்லாராய்ப் பேயொடுக்க நாட்டிவைத்த வார்த்தையென்பான்
19. நல்லா ரெனவுலகில் நாள்விடுதல் முக்கியமே
பொல்லானாய்ப் பேயொடுக்கப் போகாதீ தென்கருத்தாம்
20. இவ்வுலகி லேயுயிருக் கின்பசுக மல்லாது
அவ்வுலக மில்லையிதை ஆராட்சே பிப்பதென்று
21. இந்தவிக டம்பேசி யேகச்சக் கிராதிபனாய்
சுந்தரமா யாண்டிருந்தான் சோமனர சம்மானை

## 4-ம் பிரிவு. குருவியல்.

1. சற்சனசி வாசிபுரி சார்ந்தகிறிஸ் தோர்களுக்கு
சற்குருவாய் வீற்றிருந்தான் சாந்தப்ப சேட்டனென்போன்
2. வேத வடிவாகி வேதியர்கட் கோர்சுடராய்
மாதவத்தி லேநிலைத்த மாரூச் செபக்குருவாம்
3. தன்னுயிரை யெண்ணாதான் றக்கதரு ணங்கிடைத்தாற்
பின்னுயிரைத் தன்னுயிராய்ப் பேண மனமுடையான்
4. எல்லார்க்கு நல்லவனா மெல்லவர்க்கு மெல்லாமாம்
பொல்லாரைச் சீர்திருத்தப் பூரண மனத்தினனாம்
5. அன்னகரில் முன்னிருந்த வஞ்ஞான சிந்தனையை
நன்னயமாய் மாற்றிநெறி நாட்டினனே யென்றாலும்
6. மன்னவனைச் சீர்திருத்தி மாற்றினால் மாத்திரமே
இன்னகரோர் சத்தியத்தி லேற்கநடப் பார்களென்று

## 5-ம் பிரிவு. குருவுபதேசம்.

1. தேர்ந்தொருநாட் சற்குருவுந் தேவா லயத்தெழுந் தி
சேர்ந்தகிறிஸ் தோர்களுக்குச் செப்புகின்றார் போதகங்க ள்
2. அன்புமிகுந் தம்பியரோ ஆண்டகையே நம்மரச ன்
இன்புறு குணத்தோன்றா னென்பதற்கோ ணையமில் லை
3. ஆருக்கு நல்லவனே ஆனாற் கிறிஸ்தவனாய்ப் ப்
பேருக்கு மாத்திரமே பேசுவதோ வீண்விகட ம்
4. வார்த்தையொன்று செய்கையொன்றாய் மன்னவனே தானடந்தா ல்
பார்த்தவர்க ளெவ்வாறாய்ப் பாவிப்பார் தேர்ந்துகொள்ளு ம்
5. பெற்றோர்க ளெக்குலமோ பிள்ளைகளு மக்குல மே
பெற்றோ ரொழுக்கமல்லாற் பின்னோ ரொழுக்கமுண் டோ
6. அரசனு ரெந்தவழி யந்தநெறி யேகுடியு ம்
சிரசிலே நோயிருந்தாற் றேகஞ் சுகம்பெறு மோ
7. நலியா வரவமென நாமிருக்கப் போகா து
வலியவன் வெட்டினதே வாய்க்காலாய் வந்துவிடு ம்
8. சாதி முறைப்படிக்குச் சாதகமாய்ச் செல்லிறைவ ன்
வேத நெறிப்படிக்கோ வேண்டா வெறுப்புடையா ன்
9. எப்படியு மன்னவன்முன் னேகமன தாய்த்துணிந்தோ ஞ்
செப்புமதி வேந்தேற்கத் தேவனைநீர் வேண்டிநில்லு ம்
10. நல்லார்சொற் கேட்டறியான் நல்லோ ருறவறியா ன்
பொல்லார் சகவாசப் பூபதியே யென்றாலு ம்
11. வேண்டுதல் செய்வீராகில் வேந்தன் மனந்திரும் ப
ஆண்டவரா லாகாதோ ஆக்ஷேபனையுமுண் டோ
12. ஏதுந் தடையறவே யென்னையரசன் கேட் க
ஓதுமதி யைக்கடவு ளுள்ளமதிற் சொல்லிவைப்பா ர்
13. ஆதலினால் மூன்றுதின மந்திசந்தி வந்துசெப ம்
ஓதியொரு சந்தியிரு முச்சிதமாய்க் கைக்கூடு ம்
14. என்றுரைத்தார் சற்குருவு மெல்லாக் கிறிஸ்தவரு ம்
அன்றுமுதல் மூன்றுதின மந்திசந்தி வேண்டல்செய்தா ர்

## 6-ம் பிரிவு. குரு அரசனைக் காணல்.

1. ஒருசந்தி யும்பிடித்தா ரோர்நாளின் காலையி லே
குருவா னவர்வந்தார் கோமான்றன் மாளிகைக் கே
2. கண்டானே சற்குருவைக் கண்டவுடன் கோபவெ றி
கொண்டாலுந் தார்வேந்தன் கோபமொளித் தோதுகிறா ன்

3. ஏனோ நீ ரிங்கெழுந்தி ரிங்கெழுகக் காரணமே ன்
நானோ வுமையழையேன் நாடியதைக் கூறுமென்ற ன்
4. நாடியதை யோதுகிறோம் ராஜரா ஜேஸ்பர னே
வாடிமன வாதையுறும் வாறான சங்கதியா ம்
5. கண்டறிந்து கூறவந்தோங் காவலனே யுன்சமுக ம்
உண்டான செய்திசொல்ல வுள்ளரங்கத் தஞ்சுகிறோ ம்
6. ஆனாலுஞ் சொல்லுகிறோ மத்தா லெமதுத லை
போனாலு மச்சமில்லை பூபதியே நீர்கேளு ம்
7. உன்னையிந்த நாட்டிலேநின் றோட்டி விடும்படியா ய்
இன்னவித மென்கிறதா யேற்பாடா யிற்றர சே
8. ஊரடங்கலுஞ் சேர்ந்தே யொப்பந்தஞ் செய்தனரு ன்
பேரொடுக்கும் பிள்ளைகளும் பெண்டிருஞ் சேகர மே
9. உந்தனுக்குப் பின்னரச னுன்சமஸ்தா னத் தொருவ ன்
வந்திருக்கி றானவன்பேர் மாத்திரமே கண்டறியோ ம்
10. உன்னுடன் பிறந்துவளர்ந் துண்மையுற வாயிருப்போ ர்
உன்னை யப்பு றப்படுத்த வொத்தாசைக் காரர்களா ம்
11. எல்லவரு மாய்க்கூடி யெல்லவையுஞ் சூழாயிட் டு
சொல்லாம லோட்டிவிடத் தோதுமுடிந்த தப் பா
12. ஆர்வினைய சூழ்ச்சிகளு மாகாது நீநிலைக்க ப்
போர்புரிய வுன்சமர்த்தும் போதாதுன் றற்கால ம்
13. சேனா சமுத்திரமுந் தேயத்து மந்திரியு ம்
ஆனைபரி தேருமுந்த னுஸ்திகளு மாறிவிடு ம்
14. என்னேர மென்னாளி லேற்பாடு தீருமெ ன்
உன்னாலு மென்னாலு முண்மைசொல்ல லாகா து
15. நினையா தயர்ந்திருக்கு நேரங்கண் டேற்பாட்டி ன்
வினையங்கள் தீருமிதை வெட்டவெளி யாயுரைத்தே ன்
16. உள்ளனுங் கள்ளனுமா யொன்றித் திருப்பதனா ல்
கள்ளனச்ச மில்லாது காலமறிந் துண்ணுளைவா ன்
17. அடுக்கடுக்காய்க் கோட்டைவளைத் தப்பா லொளிந்தாலு ஞ்
சடுக்காவி லுண்ணுளைந்துத் தள்ளிவிடத் தீர்மான ம்
18. ஆழியடி சென்றாலு மந்தரம் பரந்தாலு ம்
ஊழிகடை சேர்ந்தாலு முன்னையவ ரொட்டிவைப்பா ர்
19. இந்தக் கவுத்துவத்தை யேற்கனவே யெச்சரிக் க
வந்தோ மிதையறிந்து வாழுமென்றா ரம்மா னை.

OFFICE OF THE REGISTRAR OF ... 14 APR 1915 MADRAS

## 7-ம் பிரிவு. அரசனையுறல்.

1. என்றமொழி சேட்டமன்ன னேங்கிமனே வாதையுற் று
நின்றகுரு வையிறுத்தி நேயமுடன் கூறலுற்ற ன்
2. வேதகுரு வேமஸ்து வேறெனக்கிங் காருமில் லை
சாதிஜனர் சேனைமுதற் சண்டாளஞ் சண்டாள ம்
3. மந்திரியு மின்னேரம் மாற்றானய் நிற்பதனு ல்
தந்திரஞ்சொல் வாருமில்லை தப்புதற்குஞ் சத்தியிலே ன்
4. அபாயத்தைத் தேர்ந்தறிந் தாக்கியாபித் தீரதுபோ ல்
உபாயத்தை யுங்கவனித் தோதினுல் மாசுகிர்த ம்
5. மலைநாகங் கௌவியவோர் மானய் மயக்கமுற்றே ன்
உலைமெழுகுக் கொப்பனையா யுள்ளமுந் தயங்குதை யா
6. கோலிழந்த கண்குருடன் கும்பிட்டே னின்சர ணை
மேலுமினி யாதுரைப்பேன் வேதாந்த வேதிய னே
7. தந்தையுநீர் தாயுமேநீர் தப்பி யொளிவதற்கு ப்
பாதையுநீ ரோதியெனைப் பாதுகாத் தாளுமென்று ன்
8. பாதுகாத் தாள்வதற்குப் பாதைகிடை யாதிறை யே
ஏதுதவி செய்கிலுநீ ரிங்கிருக்க வேலா தி
9. ஆனலு மோருபாய மாதரவின் றித்தனித் தி
போனலும் போகுமுன்றன் பொக்கிஷத்தைப் பந்தகஞ்செ ய்
10. உய்யுமுந்தன் பொக்கிஷத்தை யுற்றவுள வாளிகளி ன்
கையிலே சேகரித்தாற் காலத்தி லக்களிப்பா ய்
11. சேகரியிவ் வெல்லைவிட்டுச் சீக்கிரத்திற் பந்தகஞ்செ ய்
நீகருதும் பேர்களுனை நிச்சயமாய்க் கைவிடுவா ர்
12. ஆருமறி யாதவண்ண மந்தரங்க மாய்முடித்தா ல்
நீருமங்கு சேர்ந்தபின்பு நீண்டநாள் வாழ்ந்திருப்பீ ர்
13. உன்னையுநீ நம்பாதே யுன்பொருளைக் காப்பதற் கு
என்னையுநீ நம்பாதே யென்றுரைத்தா ரம்மா னை

நாடாளன் சருக்கம் முற்றிற்று.

சருக்கம் ஒன்றுக்கு பிரிவேழுக்குச் செய்யுள்—96.

## மாய்வினிச்சயச்சருக்கம்.

### விருத்தம்.

மன்னவனை யந்தீர்ந்து ஞரியாருண் டென்றவாறும்
இன்னமுங் கருப்பமுண்டா லேதெனத் தெளிந்தகூரும்
துன்னிய வுயிரின்மீக்ஷி சுயவேலை யறிந்தநேரும்
என்னகா ரணம்பிறந்தோ மென்றது முறைசெய்வாமே.

### 1-ம் பிரிவு. அரனையமறல்.

### அம்மானை.

1. நம்பாதே யென்றுரைத்த நாதனொனுஞ் சற்குரு வே
அம்புவியி லாருமற்றே னுறுதல்பெற் றுறுதற் கு
2. சுக்கா னிழந்தகப்பற் சுற்றிச் சுழல்வதுபோ ல்
துக்ககட லிற்றவிக்கச் சூதொளித்துப் பேசுகிறீ ர்
3. என்னுயிரு மென்பொருளு மெவ்விதமு மீடே ற
இன்னுமதி கத்தெளிவோ டேதமறக் கூறுமென்று ன்
4. மன்னன் மயங்குவதை மாமுனிவன் றுனுணர்ந் து
சொன்ன வுவக் கதையைச் சூதறவே யோதுகின்று ன்
5. அஞ்சுகிறீர் மன்னவனே யச்சமறச் சொல்லுகிறே ம்
வஞ்சகமே யில்லையில்லை மாற்றிடநாள் வந்ததுமெ ய்
6. உன்னையிந்த நாடதைவிட் டோட்டவல்லா னுமொனி லோ
உன்னையென்னை யுண்டுசெய்தோ னேதியவோர் கட்டளைதா ன்
7. ஏகபர னுதனைப்பார்த் தெம்முனைநீ மீறியதா ல்
சாகவேசா வீர்களெனச் சாமியன்றே தீர்வையிட்டா ர்
8. எத்தனைநா ளிவ்வுலகி லெவ்வகையாய் வாழ்ந்தாலு ஞ்
சத்தியமாய் மாய்ந்திடுவோஞ் சாமியிட்ட தீர்வையினு ல்
9. ஊகாந்த மிருந்தத் துள்ளதெலாஞ் சந்தேக ம்
சாகாதா ரொன்பதிலே சந்தேகிப் பார்களில் லை
10. வானத்தின் சாஸ்திரத்தும் வாகடத்தின் சாஸ்திரத்து ம்
தானுத்தே சித்தமுறை தற்கிப்பார் சாஸ்திரர்க ள்
11. மண்டலத்தின் சாஸ்திரத்தில் வாக்குவா தங்குதற்க ம்
உண்டெனினு மாள்வதிலே உண்டோவோர் சந்தேக ம்
12. சத்தியங்க ளில்முதலாய்ச் சந்தேகிப் பார்மர ண
நித்திரையுண் டில்லையென நீதிசொல்வ தார்மக னே

13. மூடர் மொழிவதைத்தான் மூதுணையோர் சாஸ்திரிக ள்
கூடி யுளருகிறார் கோமானே நீயறிவா ய்
14. ஏகாதி யிவ்வுலகை யேற்படுத்தி யின்றளவி ல்
சாகா திருந்தவரார் சாற்றுவென்று ரம்மானை

## 2-ம் பிரிவு. சாகாரு முளரோ.

1. சாற்றுவெனக் கூறியதாற் சற்குருவே புத்தியி லே
தோற்றுசில சந்தேகஞ் சொல்லலுற்றேன் யாதுவெனி ல்
2. எல்லாருஞ் சாவதுமெய் என்றாலு மின்னமுஞ் சா
வில்லாது சிற்சிலர்க ளிங்கிருக்கி றாரறிவே ன்
3. ஏனோக் கெலியாசு மின்னு மிருப்பதென் று
ஞானோப தேசமொழி நானறிவே னல்லா து
4. என்பெரிய தாதை *யியம்புநடுத் தீர்வையு லா
வின்மொழியு நானறிவேன் வேதபுத் தகத்துமுண் டே
5. ஏகாதி யுண்டுசெய்த யெண்ணிலா மானிடரி ல்
சாகாத பேருமுண்டே சந்தேகந் தீருமென்று ன்
6. சந்தேகம் நீங்கிடக்கேள் தார்வேந்தே யோதுகிறே ம்
அந்தவெலி யாசேனோக் கந்திக் கிறிஸ்துமட் டே
7. நோவில்லான் கண்டறிதல் நூதனத்தில் நூதன மே
சாவில்லான் கண்டறிதற் சத்தியமாய்க் கிட்டா து
8. பூவுலகை ரட்சைசெய்யப் பூமியிடம் வந்த பர ன்
தேவுலகஞ் சேருதற்குச் செத்துயிர்க்கா தேறின ரோ
9. ஜென்மவிதி தோஷமின்றி ஜென்மிக்க யோகமுற் ற
கன்னிமரி மாதாவுங் காசினியி னின்றதில் லை
10. ஆண்டவன்கை வேலையல்லோ ஆதாமு மேவாளு ம்
மாண்டார்க ளல்லாது வாழ்ந்ததுண்டோ சொல்மக னே
11. நாதன்மட் டேழுபத்து நாலுகோத்தி ரத்தவரு ம்
சேதமாய் மாண்டதல்லால் ஜீவித்த துண்டா மோ
12. கண்ணெதிரிற் கண்டதெல்லாங் கச்சிதமாய் மாறுவபோ ல்
மண்ணுலகின் மாந்தரெல்லாம் மாண்டழிவா ரென்பதுமெ ய்
13. உதயகிரிக் கஸ்தகிரிக் குள்ளிட்ட மண்களெல்லா ம்
பிதைகுளியே யல்லாது பின்னோர்மண் கிட்டா து

* மாகூதிமைபொருந்திய நடுத்தீர்வையுலா வியற்றிய மகா-ா-ா-ஸ்ரீ கனகப்பபிள்ளை என்புவா இந்நூலாசிரியரின் பெரியதந்தை.

14. மாழவென்றே புற்றீசல் மண்மேற் பரந்தனபோ ல்
மாழவென்றே மாந்தர்களும் மண்மேற் பிறந்துவிட்டோ ம்
15. வாரிதீ ராழியினேர் மாறாமலோடுதல்போ ல்
பாரினருங் கல்லறையின் பாதையினே ரோடுகிறா ம்
16. முற்பிறந்தோர் முன்னிறந்து முன்னேகு வாறதுபோ ல்
பிற்பிறந்தோர் பின்னிறந்து பின்னடைவார் கல்லறை யை
17. வஸ்துவெதும் பத்திரத்தில் வைத்திருந்தால் நஷ்டியின் றி
சொஸ்தமுடன் நீடியநாட் டொல்லுலகில் வாழ்ந்திருக்கு ம்
18. பட்டா லுடையும் பளிங்கையுமே பத்திரத்தி ல்
வைத்தா லுடையாது மாந்தருட லப்படி யோ
19. எத்தனைநாள் சொஸ்தியுட னிவ்வுடலைக் காப்பா யோ
அத்தனையா யுன்னுடலி னாயிசு மாண்டதைப் பா
20. அன்றன்று நம்முடைய ஆயிசுநாட் குன்றுவதா ல்
என்றிருந்தா லுஞ்சாவோ மென்பதுமெய் வாழ்வதுபொ ய்
21. சாவுசா வென்றுலகஞ் சாற்றுவதைப் போலுட லை
ஆவிபிரிந் தாக்கை யகலுமென்றா ரம்மா னை

## 3-ம் பிரிவு. கற்பமருந்து.

1. அகலுமென வேபகர்ந்தீ ராரணநற் போதக ரே
சகலருடல் மாயுமல்ல சந்தேகங் கூறுகின்றா ர்
2. ஆத்துமம் பிரிந்துபின்னு மாக்கையளி யார்கள்சில ர்
ஆத்தும சரீரமுட னண்டமடைந் தோர்கள்பல ர்
3. கற்ப மருந்தருந்திக் காயசித்தி யையடைந் து
கற்பகோடி நாளிருந்து காயத்தோ டேகினரு ம்
4. என்றடியேன் கேள்வியுற்றே னித்தாதி சங்கதி யை
நன்றாய் விளக்குமென்றான் நற்குருவு மோதுகிறா ர்
5. காயசித்தி காணவெனக் கற்பமருந் துண்பருண் டு
காயசுத்தி கண்டாலுங் காயசித்தி வாய்க்கா து
6. காயசுத்தி யானதினாற் காலவரு நாளளவு ம்
நோயணுகா தென்னிலுமோர் நோயணுகிற் சாவணுகு ம்
7. எத்தனைதான் காயசுத்தி ஏற்பாடு செய்தாலு ம்
கத்தனிரு பித்தநொடி கட்டாய மாண்டிடுவா ர்
8. மாண்டோ ருடலழிந்து மண்ணாகப் போகுமல்லா ற்
கூண்டோடு முத்திபெறக் கூடாது சத்திய மே

9. சாகா துயிருடனே தம்மோக்ஷத் திலழைக் க
ஏகாதி காரணரா லேலாதோர் வாசகங்கே ள்
10. யோகமுத்தி பெற்றசிலர் ரோமான் றிருச்சபையி ல்
ஆகமழி யாதிருக்க வற்புத நடப்பதுண் டு
11. காத்திரத்தின் சிக்கறுத்துக் கற்பில் நிலைத்தவர்க ள்
மாத்திர மிறந்தபின்னும் வாழுமழி யாதுடல ம்
12. அழியா துடலிருக்க ஆத்துமத் தைப்பிரிந் து
ஒழியாத செல்வகதி யுள்ளுவக்கும் புத்திர னே
13. அங்கமழி யாதசெய லாண்டவரின் செய்கையல்லா ற்
தங்களகத் தால்மருந்தால் சாயாது பூபதி யே
14. தீர்வைக்குப் பின்னுயிருந் தேகமுஞ் சேர்ந்துயிர்த் து
நேர்கதியைச் சேர்வதிது நிச்சயமே யானாலு ம்
15. செத்தவரிற் சிற்சிலரைத் தேகத்துயிர் செலுத் தி
இத்ததியே மோக்ஷதலத் தேற்படுத்தினா ரதுபோ ல்
16. செத்தசில பாவிகளைத் தேகத்தோ டேநரகி ல்
வைத்துவா திப்பதுவும் வல்லபரன் நீதியல் லோ
17. சாமிமனு வைப்படைத்து சாகா வரமளித் து
பூமியிலே நின்றவனைப் பொன்னுலகில் வைப்பதெ ன
18. சாகா வரங்கொடுத்தோன் றம்மாணை மீறினதா ல்
சாகா வரமெடுத்துச் சாவதற்குச் சாபமிட்டா ர்
19. மண்ணாலுண் டானவனே மண்ணாவா யென்றுபர ன்
திண்ணமுறச் சொன்னமொழி தீர்மானஞ் சோதர னே

## 4-ம் பிரிவு. ஆத்துமமுங் கதியும்.

1. ஆத்துமமுண் டோவுனக்க தாக்ஷேபணையுள தோ
பாத்திபனே சந்தேகப் பட்டதுண்டோ கூறுவென்றா ர்
2. கூறுமென்றார் மாமுனிவன் கொற்றவனாஞ் சோமனென்பா ன்
தேறுவதி லோதுகின்றான் சித்தர்பணி மெய்க்குரு வே
3. வானுலகைப் பூவுலகை மற்றுமுள்ள வஸ்துவெல்லா ம்
தானமைத்த வோர்கடவுள் சத்தியமா யுண்டெனவு ம்
4. ஆத்துமமெ னக்குமுண்ட தாண்டவரின் சாயலென்று ம்
ஆத்துமம் பிரிந்தவுட னவ்வுலகைச் சேருமென்று ம்
5. சத்தியமாய் நம்பிமனச் சாக்ஷியின்றி யானுரைத் த
புத்தியில்லா வார்த்தைகளைப் போலவொரு மாபா வி

6. ஆத்துமமுண் டென்பதும் பொய் யாண்டவனுண் டென்பதும்பொய்
ஆத்துமம் பிரிந்ததன்பின் னவ்வுலகுண் டென்பதும் பொ ய்
7. மோக்ஷ நரகமில்லை முன்னோருட் சூதுவைத் து
சூக்ஷமாய்ச் சொன்னதெனச் சொல்லுவான் கூடினர்க் கு
8. ஆத்துமத்தைக் கொள்பவர்க ளாருமிருந் தாற்கதியு ஞ்
சேர்த்துவிலை கூறுகிறேன் தேறுமென்றா னக்கயவ ன்
9. இப்படியா யக்கசட னேகசபை யோரறிய ச்
செப்பினனு மச்சபையிற் சேர்ந்திருந்தோ ருள்ளிருவ ர்
10. ஆத்துமத்தைக் கொள்வதற்கா யாட்களுண்டு நீ கொடுத்தா ல்
மாத்திரமே போதுமென்று வாக்குறுதி செய்ததன்பி ன்
11. என்னவிலை யென்றுசொன்னா லிச்சபையோர் மத்தியி லே
சொன்னபடி ரூபாயைச் சுண்டிவைப்போ மென்றார்க ள்
12. இன்னவிலை யாகுமென யெக்களிப்பாய்ச் சொல்லவவ ன்
சொன்னவிலை யைக்கொடுத்துச் சோடா யகன்றுவிட்டா ர்
13. ஆத்துமத்தைக் கொண்டவர்க ளப்புறத்தி லேகுவ தை
பார்த்திவனுங் குஞ்சிரிப்பாய்ப் பட்டணத்தி னூடுசென் று
14. வாங்கினா னேகடையில் வஸ்துவோ வகைவகையா ய்
வாங்கியுண்டு மீந்தபணம் மாறினா னேசவ ளி
15. உண்டுடுத்தி னான்சொகுசா யுல்லாச மாய்நடந் து
கொண்டுகுலா விக்கயவன் கொந்தளிப்பாய் வீடுபுக் க
16. வந்தாரோ யாத்துமத்தை வாங்கினவர் விற்றவன்மு ன்
வந்தணுகி யாத்துமத்தை வாங்கினவ ரோதுவ து
17. ஆத்துமத்தைக் கொண்டவெம்மை யானெனநீ யெண்ணமுற்றா ய்
சாத்திர மறிந்தவன்போல் தர்க்கித்தா யேமூர டா
18. தேவதூஷ ணத்திலுள்ள தேவகோப சாபனையு ம்
பாவதோஷத் தீதினையும் பார்த்திடநாள் வந்தத டா
19. கடலே கரைபுரண்டாற் கட்டிமறிப் பாருள ரோ
கடவுளரோ கோபமுற்றாற் கங்குகரை யெங்குமுண் டோ
20. விகடமாய்ப் பேசினதும் வேடிக்கை பேசினது ம்
பகடியைப் பாம்புகுற்றிப் பட்டகதை யானத டா
21. நாங்களிரு பேய்களல்லால் நாட்டிலுள்ள மாந்தரல் ல
வாங்கியவுன் னாத்துமத்தை வன்னரகிற் கொண்டுசெல் ல
22. ஆண்டவர்தம் முத்தரவே அவ்வுலகைப் பார்த்திட வா
ஏண்டாநீ தாமதிப்பா யென்றுடலோ டன்னவ னை

23. ஆகாய மார்க்கமெடுத் தந்தரத்தில் விட்டுவி ட
சாகாமுன் மண்வெடித்துத் தாழ்ந்தனனே வன்னியி லே
24. நரகதியைக் கண்டவந்த நாஸ்திகனப் பாலெனினு ம்
பரகதியை யுண்டெனவும் பாணிப்பா னென் குரு வே
25. ஆத்துமமு மேற்கதியு மல்லவென்று சொன்னவந் த
சாத்திரியின் னேரமென்ன சாக்ஷியுரைப் பான்மேலு ம்
26. லோஞ்சினென் றோர்பிரபு லுத்தனெனப் பேர்தாங் கி
லாஞ்சினையி லாதுகுடி லாகிரியி லேமிகுத் து
27. வங்கிஷத்தின் மாக்ஷிமையாய் மானுபி மானமென் ற
சங்கையற்ற தீயொழுக்கச் சாதகனாய் நாட்கடத் தி
28. ஓர்நாட்டன் றோளருட னுல்லாசித் தேகுநெ றி
பார்மிசை கபாலமொன்றைப் பார்த்தனனே பார்த்தவுட ன்
29. காலால் மிதித்துருட்டிக் கைத்தடியாற் றட்டிமுட் டி
வாலாயத் தோடுரைப்பான் வாராய்வெண் மண்டையேகே ள்
30. ஆத்துமமுண் டோவழியா தாச்சேந்த்ர வாதையுண் டோ
ஆத்துமமே நித்தியமா யானந்தித் துய்வதுண் டோ
31. இம்மூன்று கேள்விகட்கு மேதெதார்த்த மோநடப் பை
நம்மசன வேளைவந்து நன்குணர்த்தா யென்றகன்று ன்
32. சென்றுதன் சிநேகருடன் சேர்ந்துவிருந் தாடுகையி ல்
அன்றுநடந் தேறியவை யற்பமு நினைவிலனு ய்
33. நேயருடனே களிக்கு நேரமவ னுசா ர
வாயலிடங் காத்திருப்போர் வாய்பதரிக் கையுத ரி
34. ஆண்டகைமுன் னோடிவந்திங் காவிநிழ லாட்டமொன் று
தீண்டரிய பேய்வடிவஞ் செப்பியதி யாதெனி லோ
35. தங்களிடம் வந்துசில சங்கதிகள் சொல்வதற் கு
எங்களிட முட்புகுத ஈயும் விடையென்று ன்
36. அஞ்சிமிரண் டாவியற்றோ மாரவனோர் பூதமேயா ம்
நெஞ்சம் பதைபதைத்து நிற்புரமா யோடிவந்தோ ம்
37. காதுமில்லை மூக்குமில்லை கண்ணுமில்லை வாயுமில் லை
ஓதுமொழி யெவ்விதமோ உச்சரிப்ப தந்தநிழ ல்
38. ஏதுபதிற் கூறிடுவோ மிங்குவர வுத்தர வோ
ஓதுமென வத்துரையோ னோதுகின்றான் றூதுவர்க் கு
39. நீங்களவன் பாலணுகி நீயார்பே ரூரொன் ன
ஈங்குவந்த சங்கதியா தென்றறிவீ ரென்றறைந்தா ன்

40. அவ்வாறவ் வேவலர்க ளன்னிழற் பூச்சியை நீ
எவ்வூர்நீ யார்துரைக்கி யாதுசமாச் சாரமென்று ர்
41. என்றவர்க்கு மாயநிழ லின்று துரை பாட்டைநெ தி
சென்றிடுங்கால் முக்கேள்வித் தீர்மானஞ் சொல்லுமென்று ர்
42. அந்தமூ வினாக்களுக்கு மாகேஷபனை யறுக் க
வந்திருக்கி றேனெனநீர் மாறுரைபோய்க் கூறுமென்று ன்
43. சேவகருங் கேட்டோடிச் செய்திசொல்லக் கேட்டவுட ன்
பாவியவன் காலையிற்க பாலமதைக் கேட்டதெல்லா ம்
44. சிந்தனைசெய் தச்சமுற்றுச் சேவகரே யிச்சண நீ ர்
வந்தவனை யோட்டிவிட்டு வாயலெல்லாம் பூட்டு மென்று ன்
45. அப்படியே யிங்கிலிய ராசார வாசலும்பி ன்
எப்புரமு மூடிவிட்டா ரொன்றுலு மச்சா. யை
46. மாயமென வேபறந்துள் வந்துதுரை முன்புநிற்கு ஞ்
சாயநிழற் பார்த்ததுரை தத்தியொழிந் தோடின னே
47. அக்கணமே மாயநிழ லன்னவனை முன்மரித் து
சிக்கெனப் பிடித்தணைத்து சேர்த்துக்கக் கத்திடுக் கி
48. உன்கேள்வி மூன்றினுக்கு முத்தார மோதுகிறே ன்
என்மொழியிற் சத்தியமா யெள்ளளவும் பேதமில் லை
49. நம்பிக்கை வைப்பதற்கு நான்பெரிய தாதை நீ யோ
தம்பிமக னாமுனக்குச் சாற்றுவதைக் கேளச டா
50. நீதியாள ராத்துமமோ நீடூழி வாழ்வடைவா ர்
தீதினர்கள் நித்தியமாய் தீநரகில் வெந்திருப்பா ர்
51. முக்கேள்வி கட்டுமுனா மூடனேநீ நம்பின தோ
தக்கவிடை கூறிவிட்டேன் சாமியிட்ட தீர்வையுங் கே ள்
52. நானரக வாசியடா நானிருக்குந் தீநர கே
தானுனக்கு மென்றவனைத் தள்ளிமதி ளோடடிக் க
53. மண்டைமூளை சிந்திவிழ வாரியேதன் றோளேற் றி
கொண்டு சென்ற தேயவனைக் கோதறுமென் சற்குரு வே
54. சத்திய வேதத்திலுள்ள சத்தியங்க ளத்தனையு ம்
புத்திவிந யத்துடனே பூசித்தே னுண்மையெ ன
55. ஆனாலு முன்னாள்நா னாலோசி யாமதியா ல்
நானாவால் வீண்விகடம் நாடறியப் பேசிவந்தே ன்
56. பொல்லாத வென்னொழுக்கம் பூரணமாய்ச் சீரடை ய
நல்லகுரு வேயெனக்காய் நாயகரை வேண்டுமென்று ன்.

## 5-ம் பிரிவு. சொந்தவேலையெது.

1. என்னுடைய வேண்டலின்மே லேக்கமுற்ற பூபதி யே
உன்னுடைய வேலையிதை ஓயாது செய்துசொல்வா ய்

2. தன்னாத்து மம்பிழைக்கத் தானுழைத்தால் நன்மைதரு ம்
என்னாலுன் னாத்துமத்துக் கெய்துபயன் யானறியே ன்

3. மற்றமற்ற வேலைகளை மாற்றாளாற் செய்திடலா ம்
உற்றபடிக் கிவ்வேலை யுன்னாலே தான்முடியு ம்

4. கோட்டைகளைக் கட்டுவதுங் கோபரத்தை யேற்றுவது ம்
வீட்டை முடிப்பதுவும் வெவ்வேறா ளால்முடியு ம்

5. ஆத்துமத்தின் வேலையுன்னா லல்லாம லின்னொருவ ன்
பார்த்துமுடித் தாவதல்ல பங்கிட்டுஞ் செய்வதல் ல

6. தேசத்தை யாளுவதுஞ் செங்கோல் செலுத்துவது ம்
நீசத் தொழிலேயன்றி நின்மலமா வேலையல் ல

7. தான்படித்தால் மாத்திரமே தன்னவச ரத்துதவு ம்
நான்படித்தா லுன்னவதி நாடுமோ நாடா தே

8. சாஸ்திரங்க ளத்தனையுஞ் சாமார்த்தி யத்தொழி லே
ஆத்துமத்தின் வேலைமட்டு மாச்சரிய மானசெய் கை

9. சாஸ்திரங்க ளேதொன்றுந் தானறியா னாலு ம்
பார்த்திடலா மற்றவரால் பங்கமணு காதவண்ண ம்

10. ஆத்துமத்தின் சாஸ்திரத்தை யாரறிந்து மாகுமோதா ன்
மாத்திரந்தன் னிரக்ஷணிய மார்க்கமறிந் தாற்பயனா ம்

11. உன்பசிக்கா யின்னொருவ ருண்பதினா லேதுபய ன்
உன்னுயிர்க்காய் நீயுழைத்தா லுன்னாத்து மம்பிழைக்கு ம்

12. தன்சுமையை யின்னொருவன் றாங்கிவைப்பான் மாறல்செய்வா ன்
உன்னுடல்நோய்க் காவொருவ ரூப்பொறுத்தூ ணுண்பா ரோ

13. ஆத்துமத்தை யீடேற்ற அக்கரையாய் நீமுயன்றா ல்
மாத்திரமே மீட்படைவாய் மற்றவரா லாகா தி

14. உனதுமன மில்லாம லுண்டாக்கி வைத்தகத்த ன்
உனைமீட்கப் போமோசொல் லுண்மையிது தம்பிய ரே

15. இத்தனை வருத்தமுள்ள யேகதொழி லைவிலக்கி ப்
பித்தனைப்போல் நீயுழன்று பேசுவது நீதமல் ல

16. ஒன்றே யவசியமற் றுள்ளதோ வநித்தியமா ம்
என்றுநம தாண்டவர்முன் னேனுரைத்தா ரொன்பிறப் பே

17. சொந்தயிந்த வேலைவிட்டுச் சொந்தமில்லா வீணு ன
அந்தந்த வேலைசெய்ய வாசைவைப்ப தென்னபுத் தி
18. பூவுலகை யாளுவதும் பூமியோர் கொண் டாடுவது ம்
பூவுலக வாழ்வுமெது போலெனிலோ கேளர சே
19. குணமுடைய பாலியர்கள் கூடிவிளை யாடுகையி ல்
மணலாலே கட்டிவைத்த மாளிகைதா னித்தொழில்க ள்
20. நாடகரி ராவிழித்தி ராஜாவாய் மந்திரியா ய்
வேடமிட்டாற் போலுலக வேடிக்கை யென்பிறப் பே

## 6-ம் பிரிவு. ஏதுக்குப் படைத்தார்.

1. பூமியிலே யேன்பிறந்தோம் பூவுலகி லேன்வளர்ந்தோ ஞ்
சாமிநமை யேன்படைத்தார் தம்மைத்துதிக்கவல் லோ
2. வந்தந்த வேலைவிட்டு மற்றமற்றச் செய்கையெல்லா ஞ்
சொந்தமெனச் செய்துவரிற் றன்மரணமோடிவரு ம்
3. அவனைநாந் தோத்திரஞ்செய் தாத்துமத்தை மீட்காம ல்
அவரோவ லைமறந்தா லாக்கினைசெய் யாதுவிடா ர்
4. இக்கடமை நம்மீதி லில்லையென்று தள்ளுதற் கு
எக்கோடி முத்தரொனு மேலாது மாளா து
5. உண்டுபண்ணி வைத்தவரு முன்கடனீ சல்லவென் று
விண்டுரைக்கச் சாயாது மெய்யான சத்திய மே
6. தீராக் கடமையிது தீநரகம் போனாலு ந்
தீராக்கட னிதுதான் சேணுலகம் போனாலு ம்
7. பரகதிபோய் நாந்துதித்தாற் பாக்கியத்தோ டேதளைப்போ ம்
நரகதிபோய் நாந்துதித்தால் நாசமலோ கண்டடைவோ ம்
8. சாகுமுன்ன ரிந்தத் தலங்களிலே யொன்றினை நீ
போகத் தெரிந்தமைத்தாற் புத்தியிது சத்திய மே
9. என்னாளி லுஞ்சாகா தீடேறச் சாமிவைத்தா ர்
தன்னாலே சாபமுற்றுச் சாகவரத் தையடைந்தோ ம்
10. சாவதென்ற சத்தியத்தை ஸ்தாபிக்க வித்தகையா ய்
கூவ வவசியமோ குட்டொன்று கூறுகிறோ ம்
11. உன்னுடைய கோத்திரத்தி லுள்ளாரிலே யிருந் த
முன்னோர்கள் போனதெங்கே மூதாதையோ ராரெங் கே
12. பிறந்தநா ளுனக்குவைத்த பேரார தாரதன்பே ர்
இறந்தமுன்னோர் பேராமே யாரவரிப் போதெங் கே

13. இப்பொழுது நீவிற் றிருக்குமிந்த வீடும ஊேன
எப்பொழுதுன் கைக்குவந்த தாருடைய தாரவர் பே ர்
14. நன்செய்களும் புன்செய்களு நாடுநக ரூதியமு ம்
உன்செய்கைக் கேறுமுத லூராரி லாரதுசொ ல்
15. தந்தைதா யார்தேட்டோ தந்தைபிதாத் தேடின தோ
முந்தையோர்கள் தேடினதோ முன்னனுப வித்தவரு ர்
16. முன்னுனக்கு மீய்ந்தவர்க்கு முன்னிதனை விட்டவரு ர்
பின்னுமுனை விட்டகன்று பேருமிது நிச்சய மே
17. நடந்தால் வழிதொலையு நாமுமூர் போய்ச்சேர்வோ ம்
நடவா திருந்தமட்டில் நாம்நினைத்த வூரடையோ ம்
18. நின்றாலுஞ் சென்றாலு நித்திரைநீ செய்தாலு ம்
அன்றன்று மாள்வதிலே யாக்ஷேபனையு முண் டோ
19. வெள்ளாமை நீநடத்தும் விஸ்தாரப் பூமிகளை க்
கொள்ளையடித் துன்பாற் கொடுத்தவனார் சொல்சே யா
20. சாகவென நீபடைக்குஞ் சண்டைவெட்டு குத்துகட்கு ம்
போக வவசியமோ போகாது சொஸ்தியுட ன்
21. பஞ்சா வமிர்தமுண்டு பஞ்சணையி லேதுயின் று
சஞ்சீவி தான்றெரிந்து சாப்பிடுகி லுஞ்சாவா ய்
22. உடலுடனே தான்ஜெனித் துன்னுடலோ டேவளர்ந் து
உடலைச் சிதைக்கவென உள்வசிக்கு தம்மரண ம்
23. உன்னூரின் மாந்தர்களி லோர்மனிதன் மாத்திர மே
துன்னுபவன் மற்றவர்கள் துஞ்சார்க ளென்றுபர ன்
24. சாபனையைப் பெற்றவனே தப்பிதமா யுன்னிணையாய் ப்
பாவவழி செல்கிலதைப் பார்த்தவனுக் கேதுசொல்வா ய்
25. மடையாகே ளெங்களைப்போல் வாழ்வுசத மோவுனக் கு
தடையாநீ சாவதிலே சாபிக்கப் பட்டவ னே
26. எங்களைப்போல் நீதுணிவா யின்பசுகத் திச்சைவைத் து
தின்கவுங் குடிக்கவும்பின் றேடவுமே ஞடுகிறு ய்
27. நாங்களிவ்வா றுய்நடக்க ஞாயமுண்டு யாதெனி லோ
சாங்கவலை யற்றவர்யாஞ் சாபமெம்மீ தில்லையென் று
28. வீடுகட்டிச் சிங்கார மெத்தையின்மேல் மெத்தைவைத் து
காடுவெட்டிக் காடுகட்டிக் காசுபணந் தேடுகிறே ம்
29. ஓர்நாளுஞ் சாகோமென் றுல்லாசிப் போமுலகி ல்
ஓர்நா ளிறப்பவன்நீ யூணுறக்கந் தேடுவ தோ

30. இன்னுஞ் சிலதினத்தி லிங்கிருக்கப் போகாய் நீ
உன்னுடைய காலவிதி யொவ்வொருநா ளோடிவிடு ம்
31. மாளுகிற மட்டும் வழிப்போக்கன் போலிருந் த
நாளை நீ யோட்டாமல் நாட்டியமேன் மேட்டிமையே ன்
32. வம்பு வழக்கேது மனஸ்தாப மேனுனக் கு
என்பாயே வென்மகனே இந்தமொழி வாஸ்தவ மே
33. மற்றவர்க்குப் புத்திசொல்ல வாக்குமுண்டு நாக்குமுண் டு
உற்றபடி யிந்தமதி யுந்தனுக்கே சொல்விமு டி
34. வழியருகில் நட்ட மயிற்கல்லைப் போலிருந் து
மொழிவதிலே சாரமென்ன முந்த நீ நடந்தொழுகா ய்
35. சாகிறநாள் மாத்திரமே சந்தேக நாமிறந் தி
போகிறநா ளாரறிவார் போதியென்று ரம்மா னை

மாய்வினிச்சயச்சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கம் இரண்டுக்குப் பிரிவு பதிமூன்றுக்கு கூடிய செய்யுள்—261.

## நன்மரணத்தடைச்சருக்கம்.

### விருத்தம்.

சன்னதைக் கணிக்கும்வாறுஞ் சாதக முடிக்குங்கூறும்
இன்னிலந் தன்னினீளித் திருத்தலாற் பவமேசேரும்
அன்னியிற் பாவமொன்றா லாக்கினை மிருக்குநேரும்
மின்னிய காலப்போக்கும் விளக்கமாய்த் துலக்குவாமே.

### 1-ம் பிரிவு. சாதகசாரம்.

#### அம்மானை.

1. போதகரோ நீர்மொழிந்த புத்தியெலாங் கேட்டுணர்ந்தே ன்
சாதகர்கள் செய்தொழிற் சந்தேக மேதுமுண் டோ
2. பிறந்தநாள் நாழிகையைப் பேதமற வோதிலவ ர்
கறந்தபா லொப்பனையாய்க் காட்டவென்றார் சாதகத்தி ல்
3. ஆங்கருமம் போங்கரும மன்று ணடப்பனவு ஞ்
சாங்கடிகை நாளையுமே சாதகர்கள் தீட்டுகிறா ர்
4. பண்டிதருந் தேகசுகப் பங்கமதைத் தாதுகொண் டு
கண்டதுபோ லின்னதினங் கண்மூடு வார்களென்பா ர்
5. சாதகரும் பண்டிதரும் சத்தியமே பேசின ரோ
பேதகத்தைத் தீட்டினரோ பின்னமற வோதுமென்றா ன்
6. ஓதுவதைக் கேள்மகனே யொவ்வாத நீதிக ளை
சாதுரிய மாயெழுதி சாற்றுகின்றா ரந்தணர்க ள்
7. நன்மைகலப் பில்லாத நாழிகையெக் காலுமில் லை
தின்மைகலப் பில்லாத தேதியில்லை யாதலினா ல்
8. தின்மைநன்மை யெக்காலுஞ் சேர்ந்துழலு மென்பதினா ல்
தின்மைநன்மை யைக்கலந்து தீட்டுகின்றார் சாதகத்தி ல்
9. நேராத துன்பமெலா நேருமெனக் காட்டுகிறா ர்
வாராத நன்மையெலாம் வாய்க்குமெனத் தீட்டுகிறா ர்
10. இன்னநன்மை யின்னதின்மை இன்னபடி நேருமென் று
சொன்னதுண்டோ பண்டிதருஞ் சுட்டாது சொல்லுவதே ன்
11. அந்தணர் குறித்ததிலே அப்படியு மிப்படியு ம்
வந்துமுடி யுங்கருத்தை வாயெடுத்துக் கேட்பவர்க் கு
12. சோசியன்க ணித்ததிலே தோஷமென்றும் பேதமென்று ம்
ராசிப் பொருத்தமென்று நக்ஷத்ர சந்தியென்று ம்

13. துற்கிறக சந்தியென்றுந் துற்காலப் பேதமென்று ஞ
சொற்பிசகு கண்டமென்றுஞ் சொல்லுதற்கு ஞாயமென் ன

14. முன்னமொரு பூபதிதன் மூத்தகுமா ரன்பிறந் த
சன்னதத்தை விரித்தெழுதித் தாபிதது வைத்திறந்தா ன்

15. இளவரசன் செங்கோல்கொண் டேந்தியபின் சாதகத்தி ன்
வளமைகளை யாராய வாசித்தான் றன்னுயு ள்

16. இன்னதிதி யின்னமணிக் கேந்தலுக்குச் சாவெ்ன வே
சன்னதத்திற் கண்டிருந்த தப்பறையைச் சத்தியமா ய்

17. நம்பி மனங்கசந்து நாட்போக வேலையற் று
வெம்பியவன் றன்னெந்திரி வேந்தன்பா லோலைவிட் டு

18. கேட்டபொரு ளைக்கொடுத்தாற் கீர்த்திமிகு ராச்சியமு ம்
கோட்டையும் பட்டணமுங் கூசா தளித்திடுவே ன்

19. என்றெழுதி யொப்பமிட் டிஷ்டம்போ லப்பணத் தை
அன்றதே வாங்கி யனுபவித்தான் பாலமன்ன ன்

20. ஆடலிலும் பாடலிலு மந்திசந்தி சூதுவி ளை
யாடலிலு முண்டுடுத்தி யக்களித்தான் சாதகத்தோ ன்

21. கையிலுள்ள் காசு பணங் கட்டோட ழிந்ததன்பி ன்
மெய்யிலுள்ள பூண்பணியும் விற்றழித்தான் சொஸ்தியுட ன்

22. குறித்தபணத் தைக்கொடுத்த கோமான் கெடுப்படிக் கு
மறித்தரச னைப்பிடித்து வாங்கினனு மோர்கரத் தை

23. சாதகர் குறித்ததுவே தன்னுயு ளென்று நம் பி
பாதகமாய்ப் பாணித்தே பட்டணத்தைத் தோற்றுவிட்டா ன்

24. கரமில்லா தேழாண்டு காசினியி லவ்வரன்பா ல்
இரந்துபசி யால்வருந்தி யிவ்வாறே மாண்டுவிட்டா ன்

25. பிறக்கின்ற பிள்ளையையும் பெய்கின்ற மாரியையு ம்
இறக்கின்ற வேளையையு மின்னதென யெட்டா தே

26. கள்ளர் வருவதையாங் கண்டறியா தேமாந் து
கொள்ளை கொடுத்துவருங் கூராகு நம்மரண ம்

27. உயிரைச் சரீரத்து ளுண்டாக்கி வைத்தவ ரோ
உயிரோகு நாளறிவா ருண்மை யிஃ தென்பிறப் பே

28. புசிக்க ஒருகவளம் போசனந் தந்தவர்க் கு
பசிக்கா வரங்கொடுப்பேன் பந்தயமென் பார்களைப்போ ல்

29. சோஜியர்கள் தங்கள் சுகதுக்கங் காணு து
காசினியி லேயலையக் காரணத்தைச் சொல்மக னே

30. ஆரியருந் தாதுநடை யாலுத்தே சித்ததையு ம்
வீரியமா யோதுவரோ வீண்விகட மேபகர்வா ர்
31. ஆதலினுல் மானிடரி னுயுளினுட் கண்டறி ய
பூதலரா லாகாது புத்தியொன்று சொல்லுகிறே ம்

## 2-ம் பிரிவு. நீடிய ஆயுளியல்பு.

1. நீண்டவய திவ்வுலகில் நீளித்து வாழ்ந்திருக் க
வேண்டுமென வாசைவைத்தால் வில்லங்க மோதுகிறே ன்
2. எத்தனைநாட் சீவனுட னிவ்வுலகில் வாழ்வா யோ
அத்தனையாய்ப் பாவ மதிகஞ்சே ரும்மக னே
3. ஒருமதி லாபநஷ்ட மொட்டிரொட்டி யாயிருந்தா ல்
இருமதி லாபநஷ்டி யெவ்வாறு சுப்பெருகு ம்
4. ஒருநாளிற் செய்தபவ மொன்பதென வானுலு ம்
ஒருவருடப் பாவயெண்க ளோடுமூ வாயிரமே ல்
5. ஒருமூட்டை தாங்குவதற் குன்னுலே லாதிருக் க
இருமூட்டை யைச்சுமக்க யெவ்வாறு கத்துணிவா ய்
6. ஓர்பவத்தைத் தீர்க்கவுல குக்கேலா துன்வயதி ல்
சேர்பவவி மோசனமென் செய்வதுசொல் லென்பிறப் பே
7. இன்றளவி லுன்றனுக் கென்னவய தித்தினத்து ள்
நன்ருய் நடந்துவந்த நாளையெண்ணிப் பார்மக னே
8. இந்தமட்டி லுன்பவத்தி னெண்கனைக் கணக்கறுத் து
அந்தயெண்ணின் பேர்மொழிய வாகுமோசொல் லாகா தே
9. சீர்சிறிய பாவமெலாஞ் சேர்க்கையாய்த் தள்ளிவிட் டு
பேர்பெரிய பாவமெண்ணப் பேர்தெரியா தேமக னே
10. அல்லதுந்தன் ஜீவியத்தி லானவகை யாய்முடித் த
நல்லசெய்கை யையுரைக்க நாவுண்டோ யானறியே ன்
11. அன்னுளோர் மாமுனியை யானவய தோதுமெ ன
இன்னமுமோ ராண்டறியே னென்றறைந்தா ரத்தவ சி
12. புண்ணியஞ்செய் யாநாளைப் போக்கிவிட்டுன் னுயுளினு ள்
எண்ணிப்பா ரொன்பிறப்பே யென்னவய தென்றறிவா ய்
13. அன்றன்றும் பூசைகள்கண் டத்தனையாய்க் கற்பொருக் கி
சென்றுசிறு பெட்டகத்துட் சேகரித்தா ளோர்மா து
14. கண்ட பூசைமொத்தங் கணக்கறிய வாண்டீற்றி ல்
உண்டான கல்லையெண்ண வோர்கல்லே கண்டதனு ல்

15. நித்தியமும் பூசைகண்டு நிஸ்பலமாய்ப் போனதற்   கு
பத்தியற்ற சிந்தனையாற் பாழாயிற் றென்றுணர்ந்தா   ள்

16. நீண்டநாட் பூவுலகில் நீளித்தே வாழ்ந்தாலு   ம்
மாண்டிடுங்காற் பாவமற்று மாசிலனு கக்கடவா   ய்

## 3-ம் பிரிவு. ஓர் பாவத்தீது.

1. ஓர்பவத்தாற் றீநரக முண்டாயிற் றுண்மையி   து
ஆர்பவத்தா லாயதென வாராய்ந்து பார்மக   னே

2. மோக்ஷசிங் காரிகளாய் முத்திநிலை வித்துகளா   ய்
சூக்ஷமில கக்ஷயராய்ச் சோதிமிகு சம்மனசோ   ர்

3. உன்னியவோர் சிந்தனைக்கே ஊழியுள்ள நாளளவா   ய்
வன்னிநர குண்டாக வல்லபரன் றீர்வையிட்டா   ர்

4. லெக்ஷாதி வானவனை நிஷ்டூரே மாய்வதைப்போ   ன்
லெக்ஷாதி பாவனுனை நீதிபர னேதுசெய்யா   ர்

5. ஆண்டவன்கை வேலையல்லோ வாதாமே வாளிருவ   ர்
வேண்டாமென்றோதியசொல் மீறியவோ ரோபவத்தா   ல்

6. கார்மேக மண்ணைக் கவிந்ததுபோல் நஷ்டியெல்லா   ம்
பார்மனுவைச் சூழ்ந்ததன்றிப் பாழ்நரகுக்காளானோ   ம்

7. ஆதனுந்தொள் ளாயிரமாண் டளவு மப்பவத்தா   ல்
மாதவசு செய்திருந்தும் மாறினதோ வாக்கினைக   ள்

8. இப்பவத்துக் காகவுமே யேசுபரன் பாடுபட்டு   ம்
அப்பவத்தி னுக்கினையை யல்லவென நீக்கின   ரோ

9. பெற்றவரத் தையிழந்தோம் பேரின்ப வீடிடைந்தோ   ம்
மற்றுநோய்கள் தானடைந்தோம் மாளவிதி யையடைந்தோ   ம்

10. பற்றினதே தீயாய்ப் படர்ந்ததே நங்குலத்தை   த்
தொற்றினதே மாவிஷமாய்த் துன்பமலை மேன்மலையா   ய்

11. ஓர்பவத்தை யேசகியா துக்கிரமங் கொண்டகத்த   ன்
ஆர்பவத்தைத் தான்சகிப்பா ராராய்ந்து கொள்வா   யே

12. மந்திரிகள் செய்தவொரு மாபிசகைத் தாளா   து
அந்தநொடி யேமடிக்க வாக்கினையிட் டாலரச   ன்

13. அப்பிழையை யோர்நீச னுணவமாய்ச் செய்கிலர   ன்
எப்படிச் சகித்திருப்பா னெக்கொடுமை யாய்நடத்தா   ன்

14. ஏகசுதன் நம்பவத்தை யேற்றதனால் மாத்திர   மே
சாகமனம்பொருந்திச் சம்மதித்தா ரோகபி   .தா

15. இக்கரும தோஷமுடித் தென்புதல்வா நன்மரண ஞ்
சிக்காதே நீ நரகிற் செல்லாதே சேடடைவா ய்
16. ஓர்குருபால் வந்தொருவ னுன்சீஷன் மாய்ந்துவிட்டா ன்
நீர்பூசை செய்யுமென நீத்தமுனி கூறவு ந்
17. சம்மனசாம் நஞ்சீடன் சந்தேக மோமோ க்ஷ
சிம்மா சனனெனினுஞ் செய்வோம்நாம் பூசையென் று
18. காலையிற்போய்க் கோவிற் கதவைத் திறந்தவுட ன்
ஆலயத்திட் புக்கா தடைபடுதல் கண்டார்த் து
19. ஆர் கதவைச் சாத்துபவ ருண்டவரின் நாமமதா ற்
பேர்மொழி யெனக் கதவின் பின்னிருந்துன் சீடனேயா ன்
20. இன்பமுண்டு காமியத்தி லென்றொருவன் கூறியதா ல்
இன்றிரவிற் சிந்தைசெய் திறந்து நர குற்றனென்று ன்
21. சிந்தனைக்காய் நன்மரணஞ் சேராது தீயடைந்தா ன்
உந்தனுக்கு நன்மரண முண்டாக நீதியென் ன
22. ஓர்பவத்தை மாத்திரமே உத்தரித்து விண்ணடை ய
ஆர்தவத்தா லுமியலா தப்பனே சொல்வதைக்கே ள்
23. தேவதாய் முத்தர்களுஞ் சித்தர்களு மாந்தருமோ ர்
பாவமதற் கோர்மனமாய் பல்லா யிரங்கோ டி
24. ஆண்டே னுறக்கமற் றுசையற்று வீரதவ ம்
பூண்டு புலன வித்தும் போமோ வோர் பாவவிஷ ம்
25. எல்லா மமைத்தளிப்போ னேகசுதன் பாடுகளா ல்
அல்லாது நாம்புரிந்த வக்கிரம நீங்குமல் ல
26. அற்பசுகத் தையடைய வாணவமாய்ச் செய் பவத்தா ல்
நற்பதவி யைப் பயக்கு நன்மரண மெட்டா தே

## 4-ம் பிரிவு—வீண்காலநஷ்டி.

1. பாரகத்தில் நீதினமும் பாவஞ்செய் யென்று பர ன்
நேரத்தைத் தந்ததுபோல் நீநடந்து வாழுகிறு ய்
2. வீண்பொழுதாய்ப் போக்கியப்பால் மெத்தமனஸ் தாபமுற ல்
ஆண்மையல்ல புண்ணியத்தை யாவலுடன் செய்யமுய ல்
3. மேற்கதியோர் தாமுலகில் மிக்கதவஞ் செய்திருந்தா ல்
மேற்படியி லுய்வமென வேட்கையுறு நாளிது வே
4. உத்தரிக்கி றஸ்தலத்தோ ருத்தரிக்க இங்கு வந்தா ல்
உத்தம தவத்தினரா யுய்யவெண் ணுங் காலமி தே

5. பாழ்நரகோ ரிங்குவந்து பாவவழி யைமுனிந் து
வாழ்நாளைப் போக்குதற்கு வாஞ்சைகொள்ளு நேரமி தே
6. எக்காலும் வெந்தளியா திவ்வுலகில் நீயிருந் து
தக்க தவஞ் செயவதற்காய்ச் சாமிதந்த வாயுளி தே
7. பாவியுனை மீட்கவெனப் பாடுபட்டு நீபிழைக் க
ஜீவபலி யானபரன் தேடியிட்ட நாளிது வே
8. உன்னுடைய சீவியத்தை யுத்தமமா கக்கடத் தி
நன்மரணத் தையடைய நாதரீய்ந்த நேரமி தே
9. பைப்பொருளைத் தோற்றுவழி பார்த்திருக்கு மூடனைப்போ ல்
கைப்பொழுதை வீண்போக்கிக் கஸ்தியுற ஞாயமென் ன
10. இப்பொழுதுன் கைப்பொருளா மேற்ற கரு மஞ்செயலா ம்
பிற்பொழு தையுன்னதெனப் பேசிடவு நாவுள தோ
11. தன்னிழலைப் பின்றுடர்ந்து தாவிப்பிடிப் பவன்போ ற்
பின்னெடியை நம்புவது பேதமையாய்க் காணுமப் பா
12. இருப்பேனிப் போதிறவே னென்றேக்க மற்றிருந்தா ல்
ஒருக்காலு நன்மரண முன்னிறுதிக் கெட்டா தே
13. சாகிறநா ளறிந்துச் சாக்கிரதை யாயொழுகி ல்
போகிறநா ளச்சமில்லை புத்தியினுஞ் சொல்வதைக்கே ள்

## 5-ம் பிரிவு—ஆவலாதிப்பெருக்கம்.

1. வீண்காலம் போக்குவதால் மேவுபவ மெத்தவதி ல்
ஆண்பெண் ணடங்கலுமா யாவலாதி யேசகச ம்
2. நாவழுவைக் காப்பவனே ஞானியென்று யாகுமு னி
பாவவழி நாவெனவே பாராட்டி னர்பரனு ம்
3. மற்றவர்கள் தப்பிதத்தை வாயெடுத்த பேருமந்த க்
குற்றமடைந் தார்களெனக் கூறுகின்று ராரியர்க ள்
4. தப்பிதத்தை வாயெடுத்தாற் றப்பிதமாய் மூளுமெனி ல்
தப்பறையைச் சொல்லுவது தக்கப்பிச காய்முடியு ம்
5. விண்ணுலக பாக்கியமே வேண்டாமென் றேறுதினபோ ல்
புண்ணியனைத் தூறுவதும் பொய்விகடங் கூறுவது ம்
6. அவதூறே பேசிடுமோ ராரணங்காள் தன்குருபா ல்
தவரில்லா நாவடையச் சாற்றுமதி யென்னமு னி
7. சந்தையிற்போய்க் கோழிகொண்டு சாலையில் மயிர்பரித் து
வந்துசேரொன் வீட்டிலென்றுர் வந்தபிற கந்தமு னி

| | | |
|---|---|---|
| 8. | வந்தாய் மிகவு நன்றம் மார்க்கமேசென் றம்மயி | ரை |
| | சிந்தாது சேருவென்றார் சேர்ப்பதெவ்வா றுமறியே | ன் |
| 9. | என்னவந்த ணன்கனிந் தேந்திளையே மீண்டும | தை |
| | சொன்னபடி சேகரித்தல் துன்பமெனச் சொல்லவந்தா | ய் |
| 10. | சென்ற மயிரைவருந்திச் சேகரிக்க லாஞ்சிறி | து |
| | சென்றவவ தூறலகச் செய்வதெவ்வா றுமறியே | ன் |
| 11. | காற்றுமுகந் தூற்றிவிட்ட கஸ்தூரி போலுன | து |
| | வார்த்தையவ தூருலக வட்டார மெட்டா | தோ |
| 12. | எத்தனைபேர் காதிலேநீ யெத்தனைபே ரிங்கிஷத் | தை |
| | எத்தனை முறையுரைத்தா யத்தனையா றுய்வழியு | ம் |
| 13. | ஆவலாதிப் பேச்சோ வடர்வனத்திற் பற்றிய | தீ |
| | தீவிரித்துச் சென்று திசையடங்க லுந்தீயக்கு | ம் |
| 14. | கேவலமாய்ப் பேசுவதைக் கேட்பவனுஞ் சொல்பவனு | ம் |
| | பாவிகளா யப்பவத்தின் பாத்தியஸ்த ராய்நிலைப்பா | ர் |
| 15. | பாம்புகடித் தாலவனே பட்டிறப்பா னன்றிமற்றோ | ர் |
| | தீம்படையா ரிப்பவமோ சேர்ந்தவரை யுங்கெடுக்கு | ம் |
| 16. | பரிகரித்தால் மாத்திரமிப் பாவமுனை நீங்குமன் | றி |
| | மரணசம யத்திலேயும் மாக்ஷியென்று ரம்மா | னை |

## 6-ம் பிரிவு—இடரற்பாவத்தீமை.

| | | |
|---|---|---|
| 1. | நாட்போக வாழ்வதினால் நஷ்டியல்லா தாத்துமத் | தை |
| | மீட்பதினுங் கக்கிஷமாய் வில்லங்கஞ் சூழும | றி |
| 2. | இத்தனைநாட் சாவைமறந் தெப்படியோ வாழ்ந்ததி | லே |
| | எத்தனைபே ராத்துமத்தை யேமாற்றி நீகெடுத்தா | ய் |
| 3. | உன்னொழுக்கங் கண்டுபல ரொன்றினுக்கு மஞ்சா | து |
| | பின்னடந்து கெட்டாற் பிணையாளி நீயல | வோ |
| 4. | உன்னாலே கெட்டவரை யொவ்வொருவர் கண்டுகெண் | டு |
| | தன்னாலே செய்பிழையுஞ் சாம்பொழுதுன் மேற்சாரு | ம் |
| 5. | தீப்பொரி யடுத்ததெலாந் தீய்க்குமே துன் மாதிரிகை | ப் |
| | பேய்ப்பொரி யிப்பாவம் பெருவாரிக்காய்ச்சலி | ணை |
| 6. | பாவகாரணத்தோன் பரிகரித்தால்மாத்திர ந | ற் |
| | சாவடைவா னல்லாது தப்பவழி காணரி | தே |
| 7. | ஓர் தவசி யாசகஞ்செய் துண்ண வெளி யேறியகா | ல் |
| | ஊர்வாலர் நாற்பதுபே ரோரிடத்திற் சேர்ந்திருந்தா | ர் |

| | | |
|---|---|---|
| 8. | நாற்பதுபேர் சென்னியிலு நாய்குரங்கு பூனைகள்போ | ல் |
| | நாற்பதுபேய் கூத்தாட நற்றவன் கண் டா குலித் | து |
| 9. | இத்தாதி பொல்லாரை யீடேற்றுஞ் சாமியென் | று |
| | கத்தாவை யன்னேரங் கைகுவித்து வேண்டுகையி | ல் |
| 10. | அப்பாலி ருந்தொருவ னக்கூட்டத் துண்ணுழை | ய |
| | இப்பேய்க ளத்தனையு மில்லாம லோடின | தே |
| 11. | புண்ணியவான் வந்தமையாற் பொல்லாத பேயினங்க | ள் |
| | கண்ணில் மறைந்ததென்று காரணரைத் தோத்தரித்தா | ன் |
| 12. | அன்னேர மிம்முனிவர்க் காகாச வாக்கியமாய் | ச் |
| | சொன்னமொழி யையுனக்குச் சொல்லுகிறேன் கேள்மக | னே |
| 13. | நல்லவர்க ளாகுமிந்த நாற்பதுபேர் வாலிபரு | ம் |
| | பொல்லாத வன் பின்னாற் போய்ப்புகுந்த வாலிப | னே |
| 14. | நாற்பதுபே ராக்கெடுக்க நாற்பது பேய் வேலையையு | ம் |
| | தீர்ப்பதற்கோர் துற்சனனே தேவையெனவோர்மனமா | ய் |
| 15. | அப்பேய்க ளாலோசித் தன்னவரை விட்டதென | ச் |
| | செப்பின தவ் வோசையிதைச் சிந்தையில்வை யென்பிறப் | பே |
| 16. | நஞ்சொரோ துள்ளியல்லால் நான்குதுள்ளி வேண்டிய | தோ |
| | பஞ்சிற் பொரிநெருப்பாய்ப் பற்றிடுந்துன் மாதிரி | கை |
| 17. | துற்பேய்கள் தங்களினாற் றேசவகை மூள்வதிலு | ம் |
| | துற்சனராற் பாவகன்ம தோசமடர்ந் தேறுமெ | ன |
| 18. | சத்துருக்களெண்ணிச் சீரமுள்ள பேய்களினா | ல் |
| | மித்திரச் சதிபுரிந்து வேணபவங் கள் விளக்கு | ம் |
| 19. | சந்தையிலே சூறையிட்ட தானியம்போ லிப்பவங்க | ள் |
| | அந்தந்த ஆ ரடைந்தா லாங்கார் பரிகரிப்பா | ர் |
| 20. | ஆற்றிற் கரைத்த புளி யாங்காங்கு செல்வதுபோ | ல் |
| | தோற்றிடுநம் யேசுபரன் சொல்வசனங் கேள்மக | னே |
| 21. | காரண பா வக்கசடன் கல்லை மிட ரிற்பிணித் | து |
| | வாரணத்தில் வீழ்ந்திறந்தால் மாநயம தாயிருக்கு | ம் |
| 22. | காரண பவத்தா லிக் காதகனுக் கையை | யோ |
| | தாரணிக்கு மையையோ சண்டாளஞ் சண்டாள | ம் |
| 23. | கண் கால் கை பாவவினைக் காரணமாய்த் தோன்றுகில் | நீ |
| | கண் கரத்தை வெட்டிக் சடக்க வெறி யேனெனி | லோ |
| 24. | கண் காலோ டக்கினியிற் கத்தா தவைகளின் | றி |
| | விண்ணிலே நீ சேருவது மேன்மையென வாக்களித்தா | ர் |

25. சடக்க வெறிந்துவிடக் கட்டளையிட் டாரதிலோ ர்
அடக்க மிருப்பதப்பா அந்தரங்கங் கண்டறி யே
26. தன் பாவக் கன்மசுமை தாங்கத் தாளாதவ னே
என் பாவ மூட்டையைநீ யேனெடுக்கக் காதலுற்று ய்
27. இன்னொருவ னாத்துமத்தை யீடேறா தாக்கிலை யோ
உன்னுடைய வாத்துமத்துக் கோர்போத மீக்ஷியில் லை
28. ஆத்துமத்துக் காத்துமமே ஆனபழி தீருமென் று
ஆத்திரமா யாண்டவரோ யன்னாளிற் கூறினர்கா ண்
29. இன்னொருவ னைக்கதியி லீடேற்றி னானெவ னோ
தன்னுயிரை மீட்டதெனச் சாற்றினா ரம்மா னை

---

நன்மரணத் தடைச்சருக்கம் முற்றிற்று.

---

ஆகச்சருக்கம் மூன்றுக்குப் பிரிவு பத்தொன்பதுக்குக் கூடிய செய்யுள்—392

## மரண முன்னுத் தீமைச் சருக்கம்.

### விருத்தம்:

என்றதைக் கேட்டமன்ன னேதொரு வியாதி வந்தால்
அன்றேதுஞ் செய்வேனென்ற தாக்ஷேபித் தறைந்தவாறுஞ்
சென்றதீச் செயலைநீங்கச் சிரமமென் றுரைத்தநேரும்
அன்றியுந் தெய்வகுக்ஷி யடைவது மொழிகலாமே.

### முதற் பிரிவு. சாங்காலத் தேக்கம்.

### அம்மானை.

1. புத்திபல திவ்விடத்திற் போதகஞ்செய் சற்குரு வே
சத்தியமே நீருரைத்தீர் தாட்சியுட னேர்ந்து கொண்டே ன்
2. என்றாலுஞ் சாவதன்முன் னேதோவி யாதி வரி ல்
அன்றுமுதல் நன்மரண வாயித்தஞ் செய்துநிற்பே ன்
3. இன்றயத் தினக்கவலை யின்றைக்கேன் போதா தோ
அன்றயத் தினக்கவலை யாருக்கு மேற்றதல் ல
4. சாவுசா வென்றேங்கிச் சஞ்சலித்து மாழ்வதிலு ம்
நோவணுகி னுற்றகுந்த நோக்கம்போற் செய்வதென்று ன்
5. நோக்கமென்ன வாறிலேயு நூறிலேயுஞ் சாவென் ற
வாக்கியம றந்தலோநோய் வந்ததன்மேற் பார்ப்பதென்று ய்
6. நோயடைந்து சாவதன்றி நோயிலராய்ச் சாகா ரோ
ஞாயமிலா வார்த்தையிது நன்றுயா லோசிதம் பி
7. நன்று யிருக்கையிலே நன்மரணந் தேடாம ல்
அன்றுகு மென்று லருத்தமென்ன சொல்லுகிறே ன்
8. நச்சுமரத் தைவளர்த்து நற்சனிக ளைப்பரிக் க
இச்சைவைத்த மூடனைப்போ லென்றுசொல்ல லாகா தோ
9. காலமெலாந் தீமைநெறி கால்கடுக்க வோடியபி ன்
சீலமரணந் தேடிற் சித்திக்கு மோமக னே
10. பருவம றிந்தழுது பாங்காய்வெள் ளாமை யிடா ன்
கருதை யறுக்க வுன்னுங் காரணந்தா னிந்தம தி
11. உத்தியோகப் பக்குவத்தி லூக்கமுடன் கற்றறிந் து
உத்தியோகஞ் செய்வதென்று லூமைகளுக் கண்டதொக்கு ம்
12. ஓரிருநாள் வேலையல்ல வுள்ளநா ளுள்ளமட்டு ம்
ஆரொவருந் தேடறிய வாத்துமத்தின் வேலையீதா ம்

13. தன்னூரிற் றீப்பிடித்தாற் சாக்கிரதை யாகாம ல்
உன்மனைதீ பற்றியபின் புள்ள தெடுப்பதென்று ய்
14. தேகத்தில் நோயடுத்தாற் செல்கதியைப் பார்ப்பதென் ற
பாகத்தி லெண்ணமுற்றுப் பாழானோர் கொஞ்மல ல
15. இந்தநோயி னாலே யி றப்பதில்லை யில்லையென் று
அந்தநோ யினாலே ய ழிந்தவருங் கொஞ்சமல ல
16. நாட்போக நாட்போக நங்குளியுங் கிட்டுமெல்லா ல்
நீட்சிவய தெய்துமென்றால் நீசமதி யாகுமி து
17. எண்ணியவெண் ணப்படியே யின்றளவும் வாழ்ந்தவனா ர்
மண்ணிலிது வாய்க்காது வானபரன் வாக்கியங்கே ள்
18. நினைவாலே தன்னளவை நீட்டவுங் கு ருக்கவுமா ர்
எனயேசு நாயகனா ரேற்கனவே யோதினர்கா ண்

## 2-ம் பிரிவு. துற்பழக்கச் சருக்கல்.

1. பாவப் பழக்கமுனைப் பந்தனிக்க நேராமு ன்
சாவைநி னைந்திறக்கச் சாக்கிறதை யாய்நடவா ய்
2. அடிமே லடிக்கவிருப் பாணிமரத் துட்புகுந் து
படிவாய பின்பெடுக்கப் பார்ப்பதுபோற் றுற்பழக்க ம்
3. பற்றியநோ யோர்மருந்தாற் பாகுவமாய்த் தீர்த்திடலா ம்
முற்றியநோய் நாளடவே மோசமாய் மூளா தோ
4. தாமதிக்கத் தாமதிக்கச் சத்திமிகு நோய்க்கதுபோ ல்
தாமதித்தாற் றுற்பழக்கஞ் சாத்தியப்ப டாதுபின் னே
5. தொட்டிற் பழக்கஞ் சுடுகாட்டை முட்டுமென்பா ர்
கெட்ட வழக்கஞ் கீழ்நரகை யெட்டா தோ
6. கருமேனி செவ்வுடம்பாய்க் காட்டலரி தாமதுபோ ல்
பெரும்பாவி புண்ணியனாய்ப் பேறொடுத்தல் கக்கிஷ மே
7. தக்கவிளங் கன்றுகிற் சாதாய்ப்பி டுங்கவரு ஞ்
சிக்கெனவே. ரூன்றிவிட்டாற் செல்லாதே கைவலு மை
8. இத்தருண மீசுமுண்டே யெல்லாச் சமர்த்துமுண் டி
ரத்தஞ்செத் தாலதன்பின் னடாதுன் சத்துவமு ம்
9. உன்னடத்தை மாற்றுவதற் குற்றவய தைத்தவிர்த் து
நன்னடத்தை யைப்படிக்க நாள்வருமோ பிற்கால ம்
10. பாலவய திற்படிக்கும் பக்குவத்தைப் பாழாக்கி ல்
வாலவய திற்படித்தல் மாளா வருத்தமல் லோ

11. இக்கால மாண்டவனை யேற்றிட வாதிருந்தா ல்
எக்கால மாண்டவருக் கேற்கநடப் பாயறியே ன்
12. எட்டிப்பழத் தின்கசப் பெக்காலு மாறுமல் ல
துட்ட நடத்தையுமே தொந்தமாய் நீளும றி
13. பாவநச லுன்மனதிற் பாசம்பி டித்து விட்டா ல்
தேவ புதுமையல்லாற் றீராதே நீதிரும் ப
14. ஆச்சரிய மும்பயமு மானதே து ணர்ந்தாலு ம்
மாச்சரியங் காணுமல்லால் மாற்றமெதுங் காணரிதா ம்
15. பாவவழி யத்தனையும் பக்குவமாய்க் கற்றறிந்தா ல்
தேவவு தவியைப்பின் றேடவரி தாகுமென்றா ர்

## 3-ம் பிரிவு. பாவப்பழக்கச்சுருக்கு.

1. உத்தமநற் புத்திகளை யோதியருள் மாமுனி யே
இத்ததிநீ ரோதியதற் கெவ்வாறெதிர்புகல்வே ன்
2. தீண்டிய விடம்பரந்து சென்னியின் மீ தேறியுயி ர்
மாண்டுபறந் தோடாது வாய்த்தமருந் தொப்பனையா ய்
3. துய்யமறை நீதியெல்லாஞ் சொக்கமாய்க் கண்டறிந்து ந்
திய்யவழி யாயொழுகிச் சீவித்தேன் காலமெல்லா ம்
4. விரும்பியுண்ணு மாஒவர்க்கும் வேய்புகரும் பென்பதுபோ ற்
கரும்பாமே பாவங் கசப்பாமே புண்ணியங்க ள்
5. என்றாலும் புண்ணியத்தி லெட்டிவைப்பே னோரடி யை
அன்றுதின மேஒண் டடிசருக்கு தென்னசெய்வே ன்
6. பாவத்தை விட்டெழுகப் பாடுபட் டேன்வியர்த்த ந்
தேவதயை யெந்தனுக்குச் சித்திக்கு மோவறியே ன்
7. சேற்றிப்புதைந்தவனச் சேற்றையகன் றேறிவ ர
மாற்றியகா லுட்புதைய மற்றொருகா லாழ்வதுபோ ல்
8. நல்லநினை வாற்றுணிந்து ஞாயவழி யேநடந் து
செல்லமனத் தெண்ணுகையிற் சிக்கியதிற் றாழுகிறே ன்
9. பண்ணுபிர திக்கினைகள் பாழடைந்து போனதல்லா ல்
திண்ணமற் றுளங்களைத்துச் செய்வதறி யாஞ னே

## 4-ம் பிரிவு. பாவப்பழக்கவபாயம்.

1. பத்தியுள்ள வோர்முனியோர் பாவநெறி மூர்க்கனுக்கு ப்
புத்திசொல்ல யேவலுற்றுப் போயவன்பால் நேரணு கி

2. தொலத்து பட்டணத்தின் றோன்றலேரீ காமியனா      ய்
உலகத்துக் கஞ்சாணா யோர்பெண்ணை வைப்புவைத்தா      ய்
3. பாவியே யுன்னுடைய பாதகங்கள் வானே      றி
தேவபழி தேடினதைச் செப்பிடவு நாவுள      தோ
4. தீர்வையிட்டார் யேசுபரன் றீநரகுக் குன்னையின்      று
தீர்வையிட்ட வன்றொடியே தேவதாய் வேண்டினதா      ல்
5. முப்பதுநா ளுண்டுகெடு மோகினியை நீக்காயே      ல்
அப்பாலித் தீர்ப்பினுக்கே யாளாவாய் சத்திய      மே
6. பின்வரவை யாண்டவருன் பேரிலிதோ மாதயவா      ய்
முன்காக்ஷி யால்விடுத்தார் முக்கிய க டாட்சம      றி
7. ஒட்டாரஞ் செய்யாதே யோர்நாளவ் வேசியை      நீ
கட்டாயம் விட்டெறியிற் கத்துவா யென்றறைந்தா      ர்
8. என்றமொழி பாவியகத் தெய்தஎறி வேலா      கி
அன்றே வைப்பாட்டிதனை யப்பாலே யோட்டிவிட்டா      ன்
9. நீக்கியபின் னவ்வேசை நெஞ்செரிந்து கண்சொரிந்      து
நோக்கியதாற் காமியனு நொந்துபவத் தைப்புரிந்தா      ன்
10. பாவத்தில் வீழ்ந்தவுடன் பச்சத்தா பத்துரு      கி
பாவசங் கீர்த்தனத்தைப் பண்ணினா னென்றாலு      ம்
11. மறுமுறை மும்முறையாய் மாறியே வீழ்ந்தெழுந்து      ம்
இறுதியி லுச்சரித்த லில்லானாய் நின்றுவிட்டா      ன்
12. பாவச் சுருக்கவனைப் பற்றியி ழுத்தவுட      ன்
தேவதய வைநெகிழ்ந்து சீரளிந்தா னக்கயவ      ன்
13. என்றாலு மக்குருவே யிக்கயவன் பாற்சேர்ந்து      ம்
ஒன்றேனும் பேசானா யூமையனாய்க் காணலுற்றா      ன்
14. அன்னேரம் வேதமுனி யண்டிநிற்போ னைவருந்      தி
இன்னேர முங்களிறைக் கேதுமில்லை நற்சுக      மே
15. முப்பதுநா ளென்றகெடு முற்றுமுடி வின்றிரவி      ல்
தப்பாதோர் நோவுகண்டாற் சாற்றுமெனச் சென்றன      ரோ
16 அர்த்த நடுராத்திரிதம் மாண்டவனை நோய்பிடிக்க      ச்
சத்தமிட்டா னூழியர்போய்ச் சாற்றினரவ் வேதியர்க்      கு
17. வியாதியென்ற சொற்கேட்ட வேதமுனி நெட்டுயிர்த்      து
தயாதீக சீலனெனச் சந்தித்தா ரக்கயவ      ன்
18. நம்பிக்கை யில்லானாய் நாய்போல வூழையிட்      டு
கும்பிபற்றி வேகுதெனக் கூறியே மாண்டுவிட்டா      ன்

19. முக்காலுங் காக்கை முழுகிநீ ராடிடினு ங்
கொக்காகா தென்றகதைக் கூறுயிற் றென்குரு வே
20. இச்சரிதை கேட்டதன்பின் பென்னகத்தி லேமிகுந் த
அச்சஞ் செனித்ததனு லாத்துமமீ டேறுவ து
21. கூடாத கக்கிஷமே கூளிகளின் செய்கையெண்ணி ல்
ஓடாத சிந்தனைக ளுள்ளரங்கத் தோடிடு தே
22. பாவப் பழக்கமெனும் பந்தனத்தின் சிக்கறுத்து த்
தேவயிஷ்டங் காணநெறி செப்புமெனத் தாள்பணிந்தா ன்

## 5-ம் பிரிவு. நன்மனவசியம்.

1. அன்னேரம் வேதமுனி யன்னவனைக் கண்ணோக் கி
என்னருமைப் புத்திரனே யென்றுலு மஞ்சா தே
2. நல்லமன மொன்றிருந்தால் நாளடவே நீதிருந் தி
நல்லமர ணம்பெருவாய் நம்புதலாய்ச் சொல்லுகிறே ம்
3. குடிமிஞ்சி யத்தைவிடக் கூடாதான் றன்குருவி ன்
அடிதொழுதென் செய்வதென்று ஞசா னெதிர்மொழியா ய்
4. நல்லமன முண்டானல் நாளடவே நீதிருந்த ச்
சொல்லுகிறேன் சன்மார்க்கந் தோதாகச் சித்திரரு ம்
5. கட்டோடே நீமறக்கக் கட்டாது சட்டாய ம்
திட்டமாய் நீபருகச் சீசாவை நிச்சயித் து
6. கள்ளருந்தும் வேளையொரு கல்லெடுத்ததட் போட்டு ட்
கொள்ளுகுறை யுங்குறையக் கூடக்குறு குங்குடியு ம்
7. என்றுசா னேதவத்தே யேற்பாடா யாசரித்தா ன்
அன்றுமுதற் சாருய ராச்சரிய முற்றன ோ
8. ஆத்துமத்தை யீடேற்ற வக்கனாவைத் தாலவர்க் கு
மாத்திரமே யீடேறு மார்க்கமெளி தாமக னே
9. வாலசந் நியாசி மரியானுற் கற்பளிந் து
சூலுதித்த தென்றுரைத்தாள் தோகைதன்ற லைவனுக் கே
10. திரவியவா னுனபத்தா சேஷ்டரிடங் கோளுனாக் க
துரிதமுட னச்சிரேஷ்டர் தோஷியென வோட்டிவிட்டா ர்
11. பிச்சையெடுக் கப்புகுந்தான் பிள்ளைகளும் லெட்சைபண் ண
பிச்சையிடு வோர்துறத்தப் பிச்சா டனர்வெறுக் க
12. பசிதீராப் பிச்சையுண்டு பாவியெனப் பேரடைந் து
வசதியின்றி மெய்மெலிந்து மாய்ந்தான் மடத்தருகி ல்

13. அநாதிப்பி ணம் புதைப்போர் அங்கவுடை மாற்றுகையி ற்
கனாக்கண்டாற் போலதிர்ந்து காட்சியெனத் தேர்ச்சியுற் று
14. மடத்தினதி காரியென வாழ்ந்திருந்த வச்சிரோஷ்ட ர்
இடத்தினி லிச்சம்பவத்தை யிவ்வா றியம்பலுற்று ர்
15. அண்ணலேசீர் நீக்கிவிட்ட அம்மரியா ளுணல வே
பெண்ணாருவாய்க் காணாதெனப் பிரமித்த சேஷ்டரும்போ ய்
16. கண்டாரோ தன்குறைக்காய்க் கன்னியரை மன்று டி
கொண்டாட்ட மாயடக்கிக் கும்பிட்டார் சீஷ்டவளா ய்
17. வந்த விடை யூர்களிலே மாறுத நன்மனதா ல்
சுந்தரஞ்சே ரிம்மரணஞ் சூழ்ந்ததவ ளைப்புதல் வா
18. நல்லமன முண்டெனநம் நாதனறிந் தாலிரங் கி
வில்லங்க முங்கயற்றி வெற்றியளிப் பார்நமக் கு
19. மற்கரித்தா ளென்றபெண்ணாள் மாதர்களின் வேலியற் று
துற்குணனோர் நேயனொடு தூரநகர் போயிருந்தா ள்
20. அவ்வூரின் றூர்த்தர்களவ் வாடவனைக் கொன்றுவி ட
இவ்வவதிச் சாவுதனக் கெய்துமென வஞ்சினளா ய்
21. தன்னடத்தை யைத்திருத்தித் தந்தைமனை சேரவவ ன்
என்னெதிர் நில்லாதோ டென் றீனமொழி பேசிவைதா ன்
22. கன்னியர் மடத்திருக்கக் காதலித்துக் கேட்கவவ ர்
உன்னொழுக்க மிம்மடத்துக் கூனமெனத் தள்ளிவிட்டா ர்
23 ஆலயத்திற் சென்றழுக ஆண்டவ ரவட்கிரங் கி
சீலியெனப் பேரளைத்துச் செய்தபவத் தைப்பொறுத் து
24. ஆண்டவ ரனுக்கிரகத் தம்மடத்தி லேசேர்ந் து
வேண்டிய ஜெபதபங்கள் வீரியமாய்ச் செய்தமையா ல்
25. அன்னாளில் வாழ்ந்திருந்த அர்ச்சயசீஷ் டர்களி லே
இன்னாரிக் கீடுளரா ளென்றேற்ற நின்றிறந்தா ள்
26. ஆனதினால் நீதிருந்த ஆசையில்லா மாபிசகா ல்
தானலோவிச் சோதனைகள் தர்க்கமிட்ட துன்னாட னே
27. ஆசையிருந் தாலரிது மாகா ததுங்கிடை யா
ஆசைக்கிடர் காலனில்லை யல்லா தணையுமில் லை
28. ஆண்டவ ருனக்கருளு மற்பயேவு தல்களையு ம்
வேண்டா வெறுப்புடனீ மீறிநடந் தாற்பிசகா ம்
29. கத்தரோவு தல்களில்நீ காதுசெவு டானது வே
இத்தாதி கஷ்டமுற வேதுவென்று ரம்மா னை

### 6-ம் பிரிவு. பேயின் சத்துவம்.

1. சஷ்டமுற வேதுவென்றீர் காரணநற் போதக ரோ
துஷ்டப்பேய் வல்லமையுந் தோதலவோ மாமுனி யே
2. சாமியவை கட்குமுணர் தந்திருக்குஞ் சத்துவ மோ
பூமியையு மாட்டிவிடும் பூதியங்கள் தோற்றிவைக்கு ம்
3. கற்பவிடர் நீக்கிவைக்குங் கைகொடுக்குங் கால்கொடுக்கு ம்
அற்புதம்போற் பற்பலநோய்க் காரோக்கி யங்கொடுக்கு ம்
4. நோயூனத் தைத்தவிர்க்க நுட்பமருந் தத்தனையு ம்
பேயறியு மென்கிற பிரஸ்தாப மாரறியா ர்
5. பிறவிநோ யல்லாத பீடைகளை யுங்கயற்று ஞ்
சிறுமை பலவிதமாய்ச் செய்யுமன்றி நீடியநா ள்
6. வயிராக்கி யத்தவத்தோர் மானவங்கள் செய்தோ ணா
குயவர்கை மண்ணிணையாய்க் கோலம்பு ரிந்த தல் லோ
7. எத்தனையோ மாமுனிக ளெண்ணிலாக் கன்னியர்க ள்
அத்தனைபே ணாக்கெடுத்த தாரிந்தக் கூளிகள்தா ன்
8. ஆதன்சால் மோனரச னந்தயூதாஸ் காரியோத்து ம்
பேதரப் போஸ்தலரும் பேய்களினு லேமாந்தா ர்
9. ஆளரசர் சேனைகளு மஞ்சிநடுங் கிப்பதைக்கு ங்
கூளிகளை வெல்லவென்னுற் கூடுமோ கூறுமென்று ன்

### 7-ம் பிரிவு. தேவ செயல்.

1. கூடாதோ வென்மகனே கொல்லும் பருந்தெதிரி ல்
ஆடாதே பாம்பின்வா லத்தகமை பேய்கள றி
2. சத்துருக்கள் சம்மனர்போல் சத்துவர்தா னுனலு ங்
கத்தரினுட் சித்தமல்லாற் கண்ணிமைக்க வேலா தே
3. பேய்களதன் வல்லமையும் பேராண்மை யும் பிணித் த
நாய்களதன் சத்துவந்தான் நம்பிடுவா யென்பிறப் பே
4. கட்டிவைத்த குக்கலுனை கவ்வுமோசொல் கவ்வா தே
எட்டிநின்றுற் பேய்களுமே யேதேதுஞ் செய்யா தே
5. பேய்க்கிதவாய்ச் சோதனையைப் பேணிநடந் தாலவையி ன்
வாய்க்கிறையாய்ப் போவாய்நீ மைந்தாயீ துண்மைய றி
6. சகிக்கரிய சோதனையைச் சாமிதா முனக்கனுப் பி
மிகக்கொடுமை செய்வாரோ வீணேக்கங் கொள்ளா தே
7. நம்முடைய துற்பலத்தை நாதனறி வாரறிந் தே
இம்மயிலே நீஜெயிக்க ஏற்றசோத னைகொடுப்பா ர்

8. தந்திரங்களைச்செயிக்கச் சத்துவங் கொடுப்பதவ ர்
அந்தரங்க சிந்தனையென் றுச்சரியங் கொள்மகி பா
9. அஞ்சாதே பாலா வலகைகளின் சோதனைக ள்
மிஞ்சா திருக்கவழி வேண்டியதோ நன்றாய்க்கே ள்
10. நெத்திக்கு மார்புக்கு நேராய்த் திருச்சிலு வை
பத்தி யுடன்கூடப் பறக்காதோ பேய்க்கூட்ட ம்
11. யேசுமரி யேசூசை யென்னையொட் சியுங்களென்று ல்
நீசக் கணங்களெல்லா நில்லாமலோடுமப் பா
12. சம்மனசே யின்னேரந் தற்காரு மென்றளைத்தா ல்
அம்மணிபே யையோட்டி யாதரிப்பார் தப்பாம ல்
13. துன்பமனதோ ருக்கதிகச் சூக்ஷமுண்டோ வுன்காவ ற்
சம்மனதோ ருக்கதிகச் சத்துவமோ சொல்புசல் வா
14. ஆகுமோவா காதோவென் றையுரவை நெஞ்சில் வைத்தா ற்
போகுமோவச் சோதனைகள் போகாது பேய்களு மே
15. ஓர்பேயை யேசுபர னோட்டிடப்பே யோடாதா ல்
ஆர்சகிப்பா ருங்களினிவ் வைவிசுவா சத்தையென்று ர்
16. சத்தி விசுவாசமுடன் சாமியைநீ நம்பிநின்று ல்
சித்திபெறு தேதுமுண்டோ தீர்மானஞ் சொல்சுத னே
17. சாமியைநீ நம்பிலிந்தச் சாத்தானுக் கஞ்சுவை யோ
பூமிக்கு மஞ்சாது பூரணமாய் மீட்படைவா ய்
18. பாவப்ப ழக்கமதாற் பற்றறவச் சோதனைக ள்
போவதில்லை யென்றுபுலம்பித் தவிக்கா தே
19. உன்னுடைய நெல்வயலி லோட்டார் மாய்ச்குரு வி
தின்னவரக் கண்டதைநீ தேடாதி ருப்பா யோ
20. சோதனையை வெல்வதற்காய்த் தோதெடுத்தும் வீணானே ன்
ஆதலினா லேலாதென் றஞ்சாதே யென்மக னே
21. பக்ஷணஞ் சீரணித்துப் பாழாகப் போவதென் று
அக்ஷணத்தோ டேயருந்த லாகாதென் றெண்ணுவை யோ
22. சாதஞ் செமிப்பதனாற் சத்திமிகும் வாறதுபோ ல்
சோதனைகளைச் செயித்தாற் றுய்யமர ணம் பெறுவா ய்
23. துன்மனப்பேய் கட்கிணங்கிச் சோதனைக் கிடங்கொடுத்தா ல்
நன்மரணங் கிட்டாது நாசமென்று ரம்மா ணை

---

மரண முன்னாத் தீமைச் சருக்கம் முற்றிற்று.

---

ஆகச்சருக்கம் நான்குக்குப் பிரிவு இருபத்தாறுக்குக் கூடிய செய்யுள்-517.

## நன்மரணேதவிச் சருக்கம்.

### விருத்தம்.

வாலதிசை சீருருதென்றுகூற மன்ருடி லனுகூலம் வாய்க்கும்வாறுஞ்
சீலமிகுநன்மரண வரத்திநேருந் தேடிவைத்த சாபமேநமக்குநேருங் [ருந்
காலவயதாற்பவமே மிகுதிசேருங் கடமையோரோயாத்துமத்தை மீட்கப்பா
தூலமதிலாத்துமத்தின் பெருமைக்கூறுந் துய்யமுனிமகுத்துவமாய்த் துலக்
[குவாரே.

### முதற் பிரிவு வாலதிசையைச் சீரிடல்.

### அம்மானை.

1. நாசமுரு தாத்துமத்தை நாடிநட வென்றறைந்தீ ர்
தேசிகரோ யென்குருவே செப்புமொழி கேட்டருள்வீ ர்
2. வாலவய தேகமட்டும் வாழ்ந்துவயோ தீபதி சை
காலமணுகி ற்றவத்திற் காலங் களித்திடுவே ன்
3. வாலதிசை யின்மூர்க்கம் மட்டாகு மச்சமய ஞ்
சீலநெறி செல்லுதற்கு சித்தமுமே யொத்திசையு ம்
4. வாலதிசை யாடமட்டும் வாட்டிவச திப்படுத் த
ஏலுவது கஷ்டமையா யெவ்வாறென் ருேதுகிறே ன்
5. மூர்க்கப் பரிவிணைந்து முன்னேறிச் செல்லுகி ற
மார்க்கமதைச் சிக்கெனவே வாதித் திழுப்பவனு ர்
6. போக்கிலே விட்டிழுத்தாற் பொல்லாங்கு நேரா து
ஆக்கையுமே யாண்மையற்ரு லாத்துமத்தைச் சீரிடலா ம்
7. நாணளவில் வில்வளைத்தால் நன்ருக வம்பெகிரு ம்
நாணற வில் வீர்த்தால் நடுவே முறிந்துவிடு ம்
8. சோக்கான யிவ்வயதிற் சுந்தரமாய் வாழ்த்துடலி ன்
ஆக்கிரமங் குன்றியபின் னாத்துமத்தைத் தேடுகிறே ன்
9. என்னாலே மாளாத விவ்வயதி லேதவத் தை
உன்னுவதே மாகடுமை யொப்புவதே தீரமென்ரு ன்
10. தீரமென்ரே சொன்னாய் செயகால மாறிவிட்டா ல்
வீரமிருந் தாவதென்ன வெட்கமிலா வார்த்தையி து
11. மலர்ந்தபுஷ்பஞ் சாற்றுவரோ வாடியபூச் சூட்டுவ ரோ
அலர்ந்துலர்ந்த வாடலதை யாரும் பி றக்கணிப்பா ர்
12. பக்குவகா லத்திரத்தைப் பாழாக்கி நாட்போக் கி
சிக்கடர்ந்த காலமதைத் தேவனுக்கேன் சாட்டுகிரு ய்

13. பருவமதிற் காய்த்துப் பலனளியா வெம்மரமு     ம்
ஒருவருக்கு நோங்காதே யுற்சாகங் கொள்ளா     தே
14. வளர்ந்து வளைந்தமரம் மாறிநிமிர்ந் தோங்குமெனி     ல்
தளர்ந்து கிழண்டவனுந் தன்குணத்தை மாற்றிடலா     ம்
15. நல்லவய தாமிதிலே நன்மரணந் தேடா     நீ
செல்லாத நாளிலேதுஞ் செய்;நடத் தி டன்றரு     மோ
16. வாழும் பருவமதில் மன்றல்செய் யாயேயாகி     ல்
மாழுங் கிழப்பருவம் மாப்பிள்ளையாய்க் கொள்பவனா     ர்
17. கனைத்தபுளிக் கோதையெதிர் கண்டவர்கள நீண்டுவ     ரோ
நனைத்த கிழப்பிணத்தை நாதனுக்கோ சாட்டுகிறா     ய்
18. சிறுவயதில் நோய்களையுன் றேகமதில் வாழவைத்தா     ல்
இறுதியிலன் னோய்நிலைக்கு மென்பதற்கு மையமுண்     டோ
19. பருவநாளி லாத்துமத்திற் பாவநோய்கள் தொற்றிவிடி     ல்
மரணவய தாம்பொழுது மாறுமென வுன்னா     தே
20. வெண்பனியால் மூடலுற்ற வேசுவென்ற தீமலைபி     ன்
மண்புகைதீச் சாம்பலையே வாறிவிடும் வாறது போ     ல்
21. நறைதிணா ப டர்ந்தவனே நாணமற்றுத் தன்வாயி     ல்
நுறைபிரள வோடியங்கண் ணூறு நூறாய்க் கக்கிநிற்பா     ன்
22. மாவிற்பூ பிஞ்சுவடு மாங்காயு திர்வதுபோ     ற்
சாவிலிள மைகிழமுஞ் சாதா ர ணம் விழு     மே
23. இந்தவய துன்னதல்லா லின்னமுநீ பேசிவரு     ம்
அந்தவய துன்னதென ஆருறுதி சொன்னார்க     ள்
24. நாளை யிருப்பதும்பொய் நம்பிக்கை சொல்வதும்பொ     ய்
வேளை குறிப்பதும்பொய் மெய்யாகச் சொல்லுகிறே     ன்
25. நொடிப்பொழுதே யுன்னதென நூலோர்கள் பேசுகையி     ல்
வெடிப்பாய்ப்பல் லாண்டுகளை வீணிலே னெண்ணுகிறா     ய்
26. நல்லவய தோடிருக்கு நாளையிலே மாளா     ரோ
அல்லுபக லாகவிதற் காசையுடன் வேண்டிநிற்பா     ய்

## 2-ம் பிரிவு. தேவதாயாரை மன்றாடு.

1. எல்லா வரங்களிலு மீடில்லா மேன்மையுள்     ள
நல்ல மரணவர நாதனுனக் கீய்ந்தரு     ள
2. பாவிகளைத் தன்னுடைய பங்கெனக்கொண் டாண்டருளு     ந்
தேவமரி யம்மணியைச் சிந்தனையாய் வேண்டுதல்செ     ய்

3. நம்மையிவள் கையேற்று நாதனிடம் வேண்டுகி லோ
இம்மைமறு மைக்குநமக் கேக்கமில்லா நிச்சயந்தா ன்
4. பூவுலகைத் தேவுலகைப் போற்படைக்க லாமனந்த ந்
தேவமரி தத்துவம்போற் சிஷ்டிசெய்யா ரோபரம ன்
5. இவ்வளவாய் வல்லபிகை யேற்றுனக்காய் வேண்டிநின்று ல்
திவ்வியமாய் நன்மரணஞ் சித்திதருஞ் சத்திய மே

### 3-ம் பிரிவு. சூசைமாமுனிவரை வேண்டு.

1. நன்மையுடன் வாழ்ந்திறுதி நன்மரணங் காணவெனி ற்
சின்மயன்கைத் தாதையைநீ சேவித்தாற் சித்திதரு ம்
2. வானிலிவ ருக்கிணையாய் மன்றுடி யீய்ந்தருளு ம்
ஞானியர்க ளில்லையில்லை நாதனிவர் பிள்ளையல் லோ
3. யேசுமரி தங்கரத்தி லேந்தவதிஷ் டத்துட னே
சூசைமுனி மாதவன்போற் றுஞ்சினவ ராருமில் லை
4 எல்லா வரங்கொடுக்க எப்புதுமை யைமுடிக் க
வல்லாண்மை பெற்றதிவர் மாத்திரந்தான் வானுலகி ல்
5. ஆதலினால் மாதவனை யஞ்சலித்து வேண்டிவரி ல்
சாதகமாய் நன்மரணந் தட்டளியா நீயந்தருள்வா ர்
6. உன்னுடைய பேர்க்குரிய ஒவ்வோரர்ச் சிஷ்டரையு ம்
இன்னமுநீ வேண்டிவந்தா லேற்றுனக்காய் வேண்டிநிற்பா ர்

### 4-ம் பிரிவு. காவல் சம்மனசைப் பிரார்த்தி.

1. நித்தியமு நேரிடரை நீக்கியுனை ரக்ஷைசெய் ய
கத்தரருள் சம்மனசைக் கையெடுநற் சாவனுகு ம்
2. உன்னத சிருஷ்டியவ ருந்தனையீ டேற்றுதற் கே
உன்னதத்தை விட்டுவந்தா ரொப்பனைக்கென் றெண்ணு தே
3. நித்தநித்த நீயவர்க்கு நேர்விரோதஞ் செய்திடினு ஞ்
சத்திய முனைவிலகத் தக்கதல்ல சாமளவு ம்
4. பித்துப் பிடித்தபிள்ளை பேசிவைத டிக்கிலுந்தா ய்
மெத்தவும தற்கிரங்கும் வீதமுனைக் காத்திருப்பா ர்
5. எதினா லுன்னையவ ரீடேற்ற வேண்டுமென் றே
ஆதலால்நீ நற்சா வடையவவர் நோக்கமெத் த
6. எல்லவரு நீங்கிடப்பேய் எக்கலிடு மீற்றிலிவ ர்
சொல்லவருந் தேற்றரவைச் சொற்பமென வுன்னு தே
7. முற்றிக்கை யிட்டு முடிமன்ன னைப்பிடிக்க ச்
சுற்றிவந்து சத்துருக்கள் தோதடிக்குந் தக்ஷணத்தி ல்

8. சத்துருக்களைத் துறத்திச் சங்கரித்து மன்னவ னை
பத்திரா சனத்தமைத்த பாண்மையெனல் நிச்சய மே

9. வன்னியடி தாழாது மாள்பொழுதுங் காத்திருந் து
பொன்னகரில் நீசேரப் போதிப்பார் நல்லுணர்ச் சி

10. நமதுயிர்வாழ் நாளையிலே நாஸ்திகனாய் வாழ்ந்தாலு ஞ்
சமயசஞ் சீவியெனச் சாதிப்பா ரத்தருண ம்

11. ஆகையினால் நீயவரை யந்திசந்தி வேண்டிவரி ற்
சாகையிலே நன்மரணஞ் சாஸ்வதமாய்க் கண்டடைவா ய்

## 5-ம் பிரிவு. உத்தரிப்புச் சபையாருதவியை நாடு.

1. உத்தரிக்கி றஸ்தலத்தோ ருன்னவஸ்தைக் கிங்கணு கி
ஒத்தாசை செய்யவென வோர்மைசெய்கில் மிக்கநய ம்

2. செல்லனைச்சீ ராட்டலிற் சிறைமகனை மீட்பவ னை
நல்லரசன் கொண்டாடி நன்குமதிப் பானதுபோ ல்

3. ஆக்கினைக்குள் ளாகியதம் மாதீன மக்கள்சி றை
மீட்கிறவ ரைக்கடவுள் மேன்பதவி சேர்த்தருள்வா ர்

4. பாவிகளை மீட்பதிலும் பாவவினைக் குத்தரிக்கு ஞ்
சீவியரை மீட்பதுவே தேவனுக்கு மாபிரிய ம்

5. பாவிகள் திரும்புகிலும் பங்கமுறு வாறிறந் த
ஜீவியர்க ளோர்காலுந் தீயவரா சாரறிவா ய்

6. வானவரை வாழ்த்தலிலும் வாதையுறு வோர்க்கிரங்கி ல்
தானவ னதிமிகுதி சந்தோஷிப் பாரதனா ல்

7. தேவசமு கத்திலிவர் செல்வாக்கு வல்லப மே
ஆவலுடன் வேண்டிலுன தந்தியநாள் வந்திருப்பா ர்

8. இன்பத்தில் நீபுரிந்த யெவ்வுதவி யானாலு ந்
துன்பத்தில் நீபுரியுஞ் சொற்பநன்மைக் கீடுள தோ

9. உத்தரிப்போர் தம்மவதிக் கொத்தாசை நிற்பவர்க்கா ய்
நித்தியனை வேண்டிலது நிஷ்பலமென் றுகுமோசொ ல்

10. அரையிலுள்ள தம்மகன்சொல் லன்னைபிதா யேற்பதிலு ஞ்
சிறைமகன்செய் யெம்மனுவுந் தீர்மானம் மாய்முடியு ம்

11. ஆகையினால் நீயிவர்க ளாதரவைத் தேடி நின்று ற்
சாகையிலே யுத்தரிப்போர் தக்கபடி நன்றிசெய்வா ர்

### 6-ம் பிரிவு. நன்மரணந்தேவவரம்.

1. எந்தெந்த வேண்டலையு மென்பேரார் கேட்டுநில்லு ந்
தந்தருள இல்லைதடை தட்டினுற் றிறக்கவரு ம்
2. நாலுபேர் கூடில் நடுவிருப்போ நாமென வே
ஏலவேயிவ் வாக்களித்தார் யேசுபர னெல்லவர்க்கு ம்
3. மடிசுரந்து பால்கொடுக்க மாய்ந்துமுட்டுங் கன்றுகள்போ ல்
பிடிவாதஞ் செய்துகெஞ்சிற் பேறடைவோ நன்மரண ம்
4. நன்மரணம் வேண்டுமென நாளொருங்கு நாவசைத் து
உன்மனதிற் பற்றுதலற் றோதுவதா லென்னபய ன்
5. சிந்தனையூ றூராகச் சென்றுலவி வாய்திறந் து
மந்திரங்க ளோதுவதால் வாய்க்காது நன்மரண ம்
6. இடிமுகத்து முல்லையி னிதள்விரிந்து வீசமிகு ம்
மடிபிடித்த வாறுசெபம் வாதிடில் வ ரம்பெறுவோ ம்
7. ஆலையிலே யிட்டகரும் பல்லோ வ முதீயு ங்
காலைப்பிடித் திரஞ்சிற் கட்டாயங் கைக்கூடு ம்
8. அந்தந்த மேன்மைபெற்ற வர்ச்சய சிஷ்டவர்க ள்
இந்தவரம் பெற்றதனு லீடேறி னுர்கதியி ல்
9. எவ்வரமும் பெற்றிவர்க ளிவ்வரம் பெருதிருந்தா ல்
எவ்விடம்போய்ச் சேர்ந்திருப்பா ரொன்றுரைப்பா யென்மக னே
10. சன்மனசோ ரிம்மணிசீ சாவாபென் றோதினபோ ல்
உன்மனதில் நிச்சயித்து உத்தமனுய் நாள்விடுவா ய்
11. உன்சுகத்தைப் பின்வயதை யூர்ச்சிதமாய்க் கொள்ளா து
என்னுெடியுஞ் சாவதுபோ லெண்ணுமென் ருரம்மா னை

### 7-ம் பிரிவு. தேவசாபம்.

1. நன்னிலமை யோடிருக்கு நாளிலெனைச் சாம்படியா ய்
இன்னமுநீ ரோதுகிறி ரெவ்வாறு நான்பிழைப்பே ன்
2. சொல்லம்பு வில்லம்பு தொல்புவியில் ரெண்டுளதா ம்
சொல்லம்பு தப்பாது சுட்டெரிக்கு மென்பா ரோ
3. வாக்குப் பலித்தடியேன் மாய்ந்திற வா தும்மரு மை
வாக்கா லெனக்குநல்ல வாக்கருளு மென்றிரந்தா ன்
4. சொல்வோங்கே ளூன்றனுக்கோர் தோஷமணு காதிருப்பா ய்
நல்கால மென்றளவு நம்புதலாய்ச் சொல்வா யோ

5. வான்புவியை யுண்டுசெய்தோன் வாக்கியமீ தல்லா    து
நான்புகன்ற சாபமல்ல நாதாக்கள் வாக்குமல்    ல
6. ஆதாமு மேவாளு மாகியவெம் மாதிமுத    ல்
மாதாபிதா யிவர்கள் வாங்கிவந்த திவ்வர    மே
7. தூங்குகையிற் போமூச்சு தும்முகையி லுன்மூச்சு    ள்
வாங்குகையி லார்மூச்சா மாள்வதொன்றே மெய்ப்பேச்    சு
8. கண்மூடு நேரமொன்றுன் கைப்பொழுதாய்க் காணுமல்லா    ல்
மண்மீது யாமிருந்து வாழ்நிமிஷம் வேறுள    தோ
9. ஆளடிமை யாடுமா டாஸ்திகளும் பூஸ்திதியு    ம்
நீளரன் மனைசுகமு நேர்ந்திருந்தா னோர்தனவா    ன்
10. பண்டக சாலையெலாம் பாக்கியங்க ளால்நிறைய    க்
கண்டன்னே கண்டவுடன் காதல்மிகுந் தேதுரைப்பா    ன்
11. என்னுயிரோ யாத்துமமே யேதுங் குறைகளுண்    டோ
தன்னகனாய் வாழ்ந்துபிரஸ் தாபியென்றா னென்றநொ    டி
12. இன்றிரவே நீமடிவா யீட்டியவை யேதுபய    ன்
என்றசரி வாக்கியங்கேட் டேங்கியிறந் தானிர    வே
13. உன்னொழுக்க மாற்றிவிட வுற்றநொடி யின்னொடிதா    ன்
இன்னேர நீமுயல்வ தேற்கையென்றா ரம்மா    னை

8-ம் பிரிவு. தன்மமே நிச்சயம்.

1. இன்னேர மோதியவை யெல்லாமெய் யென்குரு    வே
முன்னேநீ ரோதியதில் முக்கியமொன் றேன்மறந்தீ    ர்
2. நாளடவுன் தேட்டிலொன்று நாசமுறு தப்பொரு    ளை
ஆளறியா தோரிடஞ்சே ரந்நாட்சென் சொந்தமென்    று
3. கூறியதி னுள்ளுறையை கோதறயான் கண்டுணர்ந்தா    ல்
மீறியொழு கேன்குருவே விஸ்தரித் து ணாயுமென்று    ன்
4. உன்பொருளை யென்மகனே யுற்றவுள வாளர்கையி    ல்
தன்மமிடி லப்பொருளுன் சாஸ்வதமென் றுண்மைய    றி
5. உற்றவுள வாளனொன்று லுன்னுடைய தானதன்ம    ம்
பெற்றவராற் பின்னுதவி பேசவிதி யற்றவர்தா    ன்
6. பாத்தியஸ்த ராரொவர்க்கும் பண்ணுதவி நன்கொடையா    ம்
பாத்திர மறிந்துபிச்சை பண்ணிலதுன் பாக்கிய    மே
7. மக்கள்மறு மக்களென வைத்தபொரு ளுன்னதல்    ல
பிற்கால முன்னளவிற் பேறுபல னைப்பயக்    கா

8\. பின்னுபசா றம்பெறநீ பிச்சையிடிலத்தனையு ந்
தன்னுடைய சம்பளத்தைத் தானடைந்த தாகும றி
9\. சாவடைந்த பின்னுனக்குத் தக்கபொருட் சேரவெனி ற்
பூவுலகில் யேசுபரன் போதித்த வாசகங்கே ள்
10\. செகதலத்திற் பொக்கிஷத்தைச் சேகரிக்க யெண்ணுகி லோ
பகையாள ராலவைகள் பாழணுகு மாதலினு ல்
11\. தேவுலகிற் பொக்கிஷத்தைச் சேகரிப்பீ ரவ்விடத்தி ற்
காவலுண்டு பூச்சியில்லை கள்வரில்லை சேதமில் லை
12\. தருமவினை யாரொவருஞ் சற்றுமறி யாதுசெய் து
ஒருகரத்தின் செய்கையைமற் றோர்கரங்கா ணுதமு டி
13\. கத்தாக்க ளாஸ்தியைநீ கையாடி லப்பொருளு ன்
பத்தாமை யென்றுரைக்கிற் பார்ப்பவர்க ளேதுசொல்லா ர்
14\. கத்தருக்குச் சொந்தமேயுன் காணிகணா யாஸ்தியெல்லா ம்
அத்தனையிற் பிச்சையிட்ட தல்லாதுன் சொந்தமில் லை
15\. தனவான்கள் வீடுபெறத் தக்கவரோ கக்கிஷமா ம்
எனயேசு நாயகர்தா மெச்சரித்தா ராகையினு ல்
16\. தண்ணீருட் டாழாத தக்கையிணை யுன்வாழ்வி ல்
எண்ணமகத்திருந்தா லிப்பொருளைத் தானமிடே ன்
17\. என்பதனு லென்பிறப்பே யேசுபர னைக்குறித் து
உன்பொருளை யாசகர்பா லொப்பிவைப்பாய் வீடுபெ ற
18\. உழைத்துண்பார்க் கிட்டாலு மூழூழி வானதில் நீ
தழைத்திருக்க வப்பொருளில் தானமிட ஒல்கா தே
19\. தானமிட்ட வப்பொருளுஞ் சாமிகடன் வாங்கினபோ ல்
ஆனதினு லொட்டிரொட்டி யாகவட்டி யோடளிப்பா ர்
20\. ஓர்தனவான் யாசகனை யோட்டியடிப் பானிரப்போ ர்
யாரிவனுற் பிச்சைகொள்வா ரல்லவென்று ரோர்தீன ன்
21\. நானவன்பாற் பிச்சைபெற்றுல் யாசகரோ நீரொடுக்கு ங்
தானமென்ன தென்று தனவானின் வீடுபுக் க
22\. கண்டகன்மி கோபமுற்றோர் காய்ந்தரொட்டி யையெடுத் து
கொண்டெறிந்தா னோட்டவெனக் கூசாதேற் றோடியிவ ன்
23\. தனவானை லோபியென்றீர் தந்தபிச்சை ரொட்டியி தோ
இனியவனை லோபியென்னு தென்சபதந் தீருமென்று ன்
24\. அடுத்தநாள் மாலையிலவ் வாஸ்திகனுக் காண்டவனு ற்
கடுத்தசுரங் கண்டிரவிற் காக்ஷிகண்டு சொல்லலுற்று ன்

25. இன்றிரவில் யானிறந்து யேசுபர ஞர்சமுக ஞ்
சென்றநொடி யான்புரிந்த தீமைதிரா சேறின தே
26. இன்னுமொரு தட்டதிலே யேதுமில்லை யாதலினு ல்
என்னையவர் தீர்வையிட யெத்தனித்தார் சம்மனசோ ர்
27. யாசகனை யோட்டவென நானெறிந்த அவ்வடை யை
யேசுபரன் சன்னதியி லேற்றிவைக்க வந்தநொ டி
28. தின்மைநன்மை ரெண்டுமொரு சீராகக் கண்டுபர ன்
நன்மையின்னுஞ் செய்கிலன்றி நந்தீர்வை நேருமென்று ர்
29. அச்சணமே காகூதிமுடிந் தாச்சரியத் தாழ்ந்தவனாய் ப்
பிச்சையிட யான்றுணிந்தேன் பேரின்பங் காணவென்று ன்
30. பொன்னகர்போம் புண்ணியர்க்குப் புன்னகையா யேசுபர ன்
என்னபுகழ் கூறவொன் றென்புதல்வா காதுகொ டு
31. பொறைநிறை கற்புடைய புண்ணியனென் றோதுவ ரோ
மறைமுறை ஞானியென்ற வாழ்த்துதல்தான் சொல்வா ரோ
32. பசித்தே னுணவழித்தாய் பட்டசிறை யைமீட்டா ய்
வசிக்க விடங்கொடுத்தாய் மானமற்றே னுடையிட்டா ய்
33. என்றுதன்ம மத்தனையு மெந்தனுக்கே யீய்ந்ததெ ன
அன்றுபரன் கொண்டாடி யானந்திப் பார்மக னே
34. தன்மமே நிச்சயமாந் தானமிட்டுக் கெட்டவனு ர்
தன்மமே ரொட்சணியந் தந்தருளுஞ் சன்மார்க்க ம்
35. நிச்சயமுன் னுத்தமத்தின் ரொக்ஷணியம் வேண்டுமெனி ற்
பிச்சையிடில் நன்மரணப் பேறுபெறச் சூக்ஷவ ழி
36. தானதவஞ் செய்வதிலுந் தக்கபேறு பேறுபெ ற
ஆனவொரு சூக்ஷநெறி யப்பனே யுனக்குரைப்பே ன்
37. பாவ வுத்தரிப்பினுக்காய்ப் பண்ணுவதே நன்கெனினு ங்
தேவதோத்தி ரப்பொருட்டாற் செய்வதேமா வுத்தமா ம்
38. சொக்கவெள்ளி பச்சிலையாற் சொர்னமாகு மென்பதைப்போ ல்
இக்கருத்தா லெச்செயலு மேற்றபய னைப்பயக்கு ம்
39. தேவதோத்தி ரப்பொருட்டாற் செய்தபுண்ணி யங்களன்றி ப்
பாவபுண்ணி யங்களற்ற பற்பலவுக் கப்பல னே
40. கவைக்குதவாச் சிப்பியிலே கண்டெடுப்பா ராணிமுத் தை
இவைக்கதுபோல் நற்கருத்தா லெய்துநலன் மிக்குளதா ம்
41. இக்கருத்தாற் செய்கிரிகைக் கெக்கோடி பேறெனி லோ
மிக்கநன்மை யைத்தொகுத்து விஸ்தரிக்க நாவுள தோ.

## 9-ம் பிரிவு ஒரே ஆத்துமம்.

1. சூட்சவழி தன்மமிடிற் றுய்யவ னருள்சுரந் து
மீட்சிநீ யடைவதற்கு வேணவுபா யம்பொழியு ம்
2. இத்தனைசு ளுக்குணர்ந்து மேமாந்து நீயிருந்தா ல்
பித்தனைப்போ லாத்துமத்தின் பேரிலேக்க மற்றவன்று ன்
3. ஆத்துமத்தை யீடேற்ற ஆவலற்ற வென்மக னே
ஆத்துமமு னக்கிரண்டோ வல்லதொன்றோ சொல்லுறு தி
4. ஆத்துமமொன் றுயிருந்தா லாத்துமம்வீண் போகா து
காத்தலோநீ நன்மரணங் கண்டடைய வேண்டியதா ம்
5. தாரணியா ளோரிறைவன் சாந்தப்பர் பாப்புவின்பா ல்
சீரளிவா யோர்மனுவைச் செய்துநின்றான் பாப்பதற் கு
6. பாதமதில்நீ வணைந்த பத்திரத்தைப் பார்வையிட்டோ ம்
வேதமொழிக் கிந்தமனு மெத்தவிப ரீதமேதா ன்
7. என்னிலுங்கே ளெந்தனுக்கி ரெண்டாத்து மமிருந்தா ல்
உன்னிமித்த மொன்றுகெட்டா லொன்றினையீ டேற்றிவைப்பே ன்
8. உள்ளதொரே யாத்துமந்தா னென்றையும்வீ ணாக்கிவிட் டு
வள்ளலேயான் நீநரகில் வாதையுறே னென்றறைந்தா ர்
9. உந்தனுக்கு மாத்துமமு மொன்றேதா னென்றறிந்து ம்
எந்தநியா யத்துடனே யிவ்வுயிர்க்குத் தீங்குணர்ந்தா ய்
10. ஒராத் துமமிருக்க வொன்றையுங் கெடுத்துவி ட
ஆராத் துமமெனநீ யக்கறையி லாதிருந்தா ய்
11. அக்கறைவைத் துன்னுடைய வாத்துமத்தை யேன்கெடுத்தா ய்
இக்குறையார் மேற்சுமரு மெல்லாமுன் மேற்சாரு ம்
12. தீதுபுரிந் தாத்துமத்தைச் சேதமாக் கென்றுபர ன்
ஓதியுனக் காத்துமத்தை யொப்படைத்த தோவுரையா ய்

## 10-ம் பிரிவு. ஆத்துமப் பெருமை.

1. தன்னாத்து மப்பெருமை சற்றேனுந் தேரும ல்
சின்னப் படுத்துகிறாய் சேதமுனைச் சாரா தோ
2. ஆண்டவரோ தஞ்சுரூப மாய்ப்படைத்த வாத்துமத் தை
மாண்டுபேய்த் தாசிகத்தில் வையாதாட் கொள்ளவென் று
3. உன்னதனார் பூவுலகி லுன்னுருவா கப்பிறந் து
தன்னுயிரை மாய்ப்பதற்குச் சம்மதித்தா ரென்றறிவா ய்

4. ஆத்துமத்துக் கேதோ ரபாயமணு காதுநித்ய ங்
காத்திருக்கச் சம்மனசைக் கற்பித்த ஞாயமி தே
5. ஜீவனைவிண் சேரொணவே சிஷ்டிசெய் தளித்திருக் க
ஜீவனைக் கெடுக்கவெனத் தேடுகிருய் காலமெலா ம்
6. ஓரடிமண் சேதமுரு தோயாக்க வலைவைப்பா ய்
சீருடைய வாத்துமத்தின் சேதமதி யாதிருந்தா ய்
7. தேடாது நீநடந்தாற் றேடுகிற நன்மரண ங்
கூடாது கூடாது குற்றமாய் வந்தடுக்கு ம்
8. தேகாதி யோம்பவெனச் சிந்தைவைப்பாய் முக்காலு ஞ்
சாகாத வாத்துமத்தைச் சட்டைசெய்யா தேனிருப்பா ய்
9. தேகசுதந் தேடியல்லோ தின்ரு யவிழ்தமெல்லா ஞ்
சாகிறநாள் நன்மரணந் தானடையத் தேடாதே ன்
10. பிறந்தநாள் வறைந்துவைத்துப் பேணியே கொண்டாடுகிரு ய்
இறந்துவிடு நாளைநினைக் தேதொன்றுஞ் செய்வதில் லை
11. வானவரா யேவவிட மாக்ஷிபெற்ற வாத்துமத் தை
ஈனவல கைக்கடிமை யென்றமைப்ப தோதகு தி
12. தேசமொறுங் காளுமுடி செங்கோலை விட்டெறிந் து
நீசவிற கைச்சுமக்க நேர்ச்சிசெய்த பித்தனைப்போ ல்
13. வானுலகி ராஜனென வாழ்ந்திருக்க வெட்கமுற் ரே
ஈனநர கக்குளிக்குள் ளெய்தமன வாஞ்சைவைத்தா ய்
14. ஆத்துமமார் சாயலப்பா ஆண்டவரின் சாயலல் லோ
ஆத்துமத்தைப் பேய்க்கோல மாக்குவது புத்தியல் ல
15. ஆலயசு ரூபமொன்றை யக்கிரமி யாமொருவ ன்
காலா லுதைப்பதைநீ கண்டுசகி யாதிருப்பா ய்
16, ஆண்டவர்சு ரூபமுந்த னாத்துமத்திற் பேய்கூ டி
தாண்டிமிதிக் கச்சகித்துச் சந்தோஷங் கொள்வதென் ன
17. வேண்டாங் கேளென்பிறப்பே மெய்யாகக் கேடுவரு ம்
மாண்டிடு நாள் சந்தேகம் மாழ்வையெண்ணிச் செல்மக னே
18. பெட்டிநகை யையெறிந்து பெட்டகத்தைப் பத்திரஞ்செ ய்
செட்டியுண்டோ வுன்னுடைய தேகமந்தப் பெட்டகந்தா ன்
19. தேகத்துக் கீனமின்றிச் சீவனுக்க பாயமெண் ணி
ஏகத்துக் கக்கிரம மென்பதெல்லாந் தேடுகிரு ய்
20. தண்டிகை யழுக்கடைந்தாற் சாகிநிற மங்குமென் று
மண்டலனைத் தள்ளியத்தை மாசுபடா தாள்பவரு ர்

21. உன்னுடலே தண்டிகையா முன்னுயி ரதற்கெஜமா ன்
உன்னுயி ரழிந்துவிட உன்னுடலைப் பேணுகிறா ய்
22. அடிமையை வேலைகொள்ளு மாணவத்தைத் தான்மறந் து
அடிமைகா விற்பணியு மாண்டவனீ யாகும றி
23. ஆத்துமத்தைப் பேய்க்கடிமை யாக்கியத னிச்சையைப்போ ல்
மாத்திர நடப்பவர்க்கு வாய்ப்பதல்ல நன்மரண ம்
24. எறினவன் றன்பரியி னிச்சையைப்போ லோடவிட்டா ல்
வேறுதூ ராக்குமினும் மேவிவருந் துன்மரண ம்
25. ஆக்கை யிச்சைபோல்நடந் தாத்துமத்தைச் சீரளித்தா ல்
மோக்கிஷத்திற் சேராது மூண்டுவிடுந் துற்சா வு
26. வெட்கங் கெட்டாலுந்தன் வேஷ்டியழுக் கேறா து
கக்கத்தில் வைப்பவன்போற் கன்னியத்தைப் போக்கா தே
27. உடல்மீ தணிந்தசட்டைக் கோர்பழுது நேரா து
சடலத்தடி யேனத்தன் சட்டையைக் களைபவனா ர்
28. தோட்டமழி வாகுமெனச் சூழவேலி கட்டுகிறா ய்
ஆத்துமத்தி னஷ்டிமட்டி லக்கணாயி லாததென் ன
29. இப்புவியி லின்பமுட னெத்தனை நாள்வாழுகினு ம்
அப்பால் மரணமடைந் தாத்துமமெங் கேகுமு ணா
30. வானுலகுன் னாத்துமம்போய் வாழுமிட மென்றிருக் க
ஆனமர ணம்பெறநீ யாவலுறா ஞாயமென் ன
31. கூண்டிலடை பட்டபக்ஷி கொந்தளித் திருந்திடினு ங்
கூண்டைவிட்டு மேற்பறக்கக் கொள்கையுறா தோமக னே
32. உடலென்னுங் கூண்டினுக்குள் ளுய்த்திருக்கு மாத்துமமு ங்
கடவுளடி சேரவெனக் காதலுறும் வாறதுகே ள்
33. சந்துவிட்ட யென்பிணையோ தண்ணீரில் வாழ்மீ னோ
அந்தவவஸ் தைவிரிக்க வார்க்கியலுந் தம்பிய ரோ
34. ஆதலினாற் சாவைமதித் தாத்துமத்தைக் காத்துவரி ல்
கோதறவே நன்மரணங் கூடுமென்றா ரம்மா னை

---

நன்மரணோதவிச் சருக்கம் முற்றிற்று.

---

ஆகச்சருக்கம் ஐந்துக்கு பிரிவு முப்பத்தாறுக்கு கூடிய செய்யுள் 686.

---

## மரணானுபவச்சுருக்கம்.

### விருத்தம்.

நினையாத வேளையிற்சா வணுகு மென்றும்
நிலைத்ததவஞ் செய்வதனு கூலமென்றுந்
தனதுயிர்நா ளுத்தரித்தல் சுலப மென்றுஞ்
சாமியெவர் தபசெபமு மறிவாரென்றும்
மனமறியா தவரறிவா ரறிந்து நல்ல
மரணவர மளிப்பதவா ஞாயமென்றுங்
கனம்பெருகு நன்மரண வரங்கை யேற்க
கள்ளஞானத் தடையுங் கழறுவாமே.

முதற் பிரிவு. சாவணுகிற சந்தி.

### அம்மானை.

1. கூடுமென வாக்களித்தீர் கொற்றவர்கள் சற்குரு    வே
ஓடுகிற வென்னினைவை யுண்மையுறக் கூறுகிறே    ன்
2. தக்கநெறி யாயொழுகிச் சாகமனஞ் சென்றாலு    ந்
தொக்கான தொல்லையெலாஞ் சூழ்ந்துருக்கு தென்குரு    வே
3. தொல்லை கவலையெலாஞ் சூதான மாயொளித்    து
நல்லமர ணம்பெறவென் றுளெல்லாம் போக்கடிப்பே    ன்
4. நெஞ்சார வோதுகிறேன் நீடியநாட் செல்லா    து
கொஞ்சநா ளிற்றவங்கை கொள்வே னெனப்பணிந்தா    ன்
5. கொஞ்சநா ளென்றறைந்தாய் கூறியநா ளாரதுசொ    ல்
அஞ்சாது நீயிருந்தா லாபத்து நேர்ந்துவிடு    ம்
6. நினையா தயர்ந்திருக்கும் நேரம்நஞ் சாவணுகு    ம்
எனயேசு நாயகர்சொல் லிங்குதொகுத் தோதுகிறே    ன்
7. எசமான் வருஞ்சாம மெச்சரிக்கை யாயிருக்கு    ம்
அசராத ஆழியனே யக்காலம் பாக்கியவா    ன்
8. என்னெசமா னிங்குவர யிச்சமய மல்லவென    த்
தன்னிதயத் தெண்ணுபவன் றண்டனைக்கா ளாயிருப்பா    ன்
9. கள்ளனோ விழிப்பயர்ந்த காலாகா லந்தெரிந்    து
கொள்ளையிட வுண்ணுளைவான் கூர்மையாய்க் காத்திருப்பா    ய்
10. நினையா தயர்ந்திருக்கும் நித்திரையின் சோத்தியத்தி    ல்
மனுமகனே தேடி வரவிருக்கி றானறிவா    ய்.

11. என்றுநம் யேசுபர னேற்கினவே யோதிய தை
இன்றுனக்கே யோதுகிரு ரென்கிறதாய்ச் சிந்தையில் வை
12. நினையாத நேரமதில் நீமரிக்க நேரா து
ஊனதசமந்தத் தைமறுத் தூக்கமுட னேயிருப்பா ய்
13. தருணமீ தல்லவென்ற தாசனைப்போல் நீயிருந்தா ல்
மரணங்கண் டோடிவரும் மாருத மோசமி தே
14. சொத்தினைக் கவர்ந்தெடுக்குஞ் சோரனைப்போற் சாவுன து
நித்திரையில் வந்தடுக்க நேருமோயீ தாரறிவா ர்
15. பாவத்தில் நித்திரைசெய் பக்குவத்திற் சாவுவந்தா ல்
ஆபத்து வந்ததப்பா லாரொவர்க்கு மீட்சியில் லை

## 2-ம் பிரிவு. சாவணுகிய நெறிகள்.

1. மண்ணிலத்திற் றீப்பிடித்த வாறுகனைக் கண்டொருவ ன்
அண்ணலொரு வன்மரிக்க லாகியநி மித்தமென்று ன்
2. சகுன முரைத்தவன்றே தானேயிறந்து நின்று ன்
விகடபு ரோகிதமும் வீணுய்முடிந்த தல் லோ
3. தன்னையே யடுத்துவந்த சாவையவன் காணுதா ல்
பின்னொருவன் சாங்குறியாய்ப் பேசியிவ னேமடிந்தா ன்
4. எண்ணிநிதா னித்துநட யீடேற வாவலுட ன்
புண்ணியத்தி லேமரித்தாற் பூரணத்தைக் கண்டடைவா ய்
5. சத்துருக்கள் கோமான் றலையறுக்க வுன்னியத் தை
மித்திரனே கண்டெழுதி விட்டானே ரோலைத னை
6. ஓலைபிரித் துப்படிக்க வோய்விலதால் நித்திரைசெ ய்
சாலையிடங் கொண்டு தலையணைக்கீ ழோலைவைத் து
7. வைத்த தலையணைமேல் மன்னவனே தூங்குகையி ல்
சத்துருக்கள் கூடிவந்து சங்கரித்தார் பூபதி யை
8. தலையணைகீழ் சாவிருந்த சற்பனையைத் தேருமல் ல்
பலகவலை யாலோலை பாராதுமாண்டு விட்டா ன்
9. கவலை கவலையென்றுற் காலமெலா முள்ளதப் பா
எவரை விடுங்கவலை யெப்படியுஞ் சாவாய் நீ
10. சாகப் பிறந்துவிட்டோஞ் சாகா திருந்துக தி
போகப் பிறந்தவன்போற் பூமியிலே வாழுகின்று ய்
11. சாங்கவலை யில்லாது சஞ்சரியா தேகுளியி ல்
போங்கவலை முக்கியமாய்ப் பூண்டுகொள்வா யுள்ளமதி ல்

12. தூக்குண்ணப் போமொருவன் சுற்றிலுள்ள வஸ்துக ளை
நோக்கி நினைப்பானோ நூதனத்தைக் கேட்பா னோ
13. சாங்கவலை யேயவனைச் சாடிநிற்கு நீயதுபோ ற்
போங்கவலை நீங்காது புத்தியிலே வைத்தொழுகா ய்
14. வேகிறதீ யையணைக்க வெட்டுகிண றொன்றவன்போ ற்
சாகிறதை யெண்ணியுந்தன் சள்ளைதொலைக் கக்கெடு வோ
15. பாவுலப் போஸ்தலரும் பக்தர்களை நேர்நோக் கி
சாவுவரு மென்னாமல் சாகிறோமென் றோலைவிட்டா ர்
16. சாகிறோ நஞ்சாவு க்ஷணத்து க்ஷணப்பொழுதா ய்
போகிறோநாங் கல்லறைக்கு புத்தியில்லா மானிடமா ய்
17. எல்லாமு முன்னுறுமை யென்றாக்கத் தேடுகிறா ய்
அல்லாமற் றொல்லைகளற் றாத்துமத்தைத் தேடவில் லை
18. கொம்பிருக்கும் புள்ளாய்க் குடியிருக்கி றோஞ்சிலநா ள்
சம்புக்கேன் வீண்விகட தற்கமெலா மாடுகிறா ய்
19. பத்தா வரவைவழி பார்த்திருக்குங் காதலிபோ ற்
கத்தர் வரவிருக்குங் காலத்தைப் பாரா யோ
20. சாவுவரு மன்னொடிநீ தக்கமுஸ்திப் போடிருந்தா ல்
தேவுலகி லாத்துமம் போய்ச்சேருமி திலின்னமுங்கே ள்
21. சந்தேக மன்னியில்நாம் சாவதுமெய் காலமிட ஞ்
சந்தேகங் காரணமுஞ் சந்தேகஞ் சந்தேக ம்
22. மாலையிலோ ராநடுவோ மத்தியா னத்திலே யோ
காலையுதை யாதியிலோ கண்மூடுநேர மப் பா
23. நேற்றிருந்தா ரின்றிறந்தார் நீயறிந்த சத்திய மே
தோற்றா திருப்பதென்ன சொல்லி விபரிப்பதென் ன
24. சயனிக்கும் வேளையிலோ சாப்பிடுங் காலையி லோ
பயணப் படுகையிலோ பஞ்சாயஞ் செய்கையி லோ
25. இன்னேர நீயுயிர்தா னென்றாலு மாவியக ல்
அன்னிமிஷ மாரறிவா ராரிருப்பா ருன்னருகி ல்
26. உல்லாச மாய்நடந் துலாத்துகிற சோலையி லோ
சல்லாப வேளையிலோ சாவணுகுஞ் சொல்லுறு தி
27. மூச்சாடி னால்மனுஷன் மூச்சோடினாற் சவந்தா ன்
பேச்சோடு நீயெடுத்த பேரு மறைந்துவிடு ம்
28. உன்னரண் மனைநடுவோ வூற்றார்சபை நடு வோ
இன்னவிட மென்றறியே னென்மரண காலவ றை

29. வீடோ நடுவழியோ வீதிகிணர் திண்ணையி லோ
காடோ மரத்தடியோ காரணந்தா னாறிவா ர்

30. பாலு பழத்தாலோ பக்ஷணத்தா லுஷ்டணத்தா ல்
வேலு விஷத்தாலோ விக்க லிடியா லோ

31. பழிப்பு நகைப்பாலும் பாக்குவெற் றிலையாலு ம்
விழிப்பு சலிப்பாலும் வீயும்வகை யறியோ ம்

32. இருந்தாப்போ லேயிருந் திறந்திடுநோய் தொண்ணூற்றே ழ்
கரந்தையிலே யோர்களவன் கன்னமிடும் போதிறந்தா ன்

33. சக்கரையென் றோர்கவிமான் சாப்பிட்டுக் கைகழு வி
உட்கார நேரமின்றி யோய்ந்தானாற் காவியி லே

34. மாடுவொட்டி வண்டிகட்டி மாமதுரை விட்டொருவ ன்
வீடுமுட்டி மாடவுட்க வேளையற்று மாண்டிருந்தா ன்

35. கசிமீ றொனுமிறைவன் கைப்பாத் திரத்தமு து
ருசிபார்க்க வுண்ட நொடியிலே பட்டிறந்தா ன்

36. மீனின்முள் தொண்டையிலே விக்கினதாற் றற்குவினி ன்
சூனியமா யன்றொடியே துஞ்சி யடங்கிவிட்டா ன்

37. மிந்திரிகைத் தீங்கனியே மென்னையிடை சிக்கியதா ல்
அந்தநொடி யேமாண்டா னனக்கிறே னென்கிறவ ன்

38. மேலேயு வென்றதுறை வேடிக்கை நாடகத்தி ற்
காலங் களிக்கையிலே கண்மூடித் துஞ்சின னே

39. நாடகத்துக் கேகியன்றி ராவிழித்துப் பார்த்திருந் து
வீடகத்துட் புக்குகையில் வீழ்ந்திருந்தான் ஞானமுத்த ன்

40. படுபாம்பு தீண்டினவன் பட்டிடுவா னென்றிரங்கி க்
கடிவாய் விஷமுருஞ்சிக் கண்மூடினான் சவ ரி

41. மாணுக்கர் சூழ்ந்துவர வஸ்தாவா மோர்பயில்வா ன்
வாணுத்தடி சுழட்டி மண்டிபோட் டங்கிறந்தா ன்

42. தீயோனி யூஸரசன் சேனைசெயம் பெற்றதெ ன
வாயூரிச் சொல்லுகையில் வையகத்தை நீங்கின னே

43. ஓங்குபுகழ் கீர்த்திபெற்ற ஓமா றொனும்புல்வ ன்
தீங்கா யகஸ்தியுற்றுச் செத்தா னகஞ்சுருங் கி

44. சாப்பிளென்ற வாசிரியன் சந்தோஷ பூர்த்தியினா ற்
பூப்போல மாந்தினனே பூவுலகோர் கேட்டதி ர

45. புத்திரிக்கு மன்றல் செய்து பூரித் தபூபதி யை
சத்துருக்கள் சந்தடியிற் சாகடித்தார் ரோமையி லே

46. தேசமெலாங் கீர்த்திபெற்ற சேசரொனா நீதிப தி
வாசற் படியிடறி மாய்ந்தானே மண்ணதி ர

47. ஆரோக்கி யப்புலவ னாபீசை விட்டுவங் து
சீராக் கழட்டிவைத்துச் செத்தானே தன்மனையி ல்

48. ஊழியனைப் பெப்புலிய னோலமிட்டிப் போதென் ன
நாழிகைசொல் லென்றனொடி நாவிழுந்து யோகமுற்றா ன்

49. வீம்பாகப் பெண்ணமர்த்தி மேலாய் மணமுடிக்க த்
தாம்பூல மாற்றுகையிற் சாய்ந்தானே யாதியப்ப ன்

50. விதிஸ்லா ஸென்னுமிள வேந்துமண மாலையிட்டு ப்
பதிவிரதை கைகோர்த்துப் பட்டிறந்தான் பந்தலி லே

51. இவ்வாறு சாஞ்சமைய மெண்ணளவில் லாதிருக் க
எவ்வா றாயச் சமின்றி யிங்கிருக்க ஞாயமுண் டு

52. சாவைப்போல் நிச்சயித்த சாஸ்திரமுங் காணரி து
சாவைப்போற் சந்தேக சங்கதியு மில்லையில் லை

53. மந்தையின்மேல் நாய்நரிகள் வன்கயவர் கொள்ளையி ட
வந்தணுகா தேற்கனவே வைத்திருப்பா யெச்சரிக் கை

54. அந்தவிதஞ் சாவதன்முன் னாத்துமத்துக் காபத் து
வந்தணுகா தெச்சரிக்கை வைத்திருக்க வேண்டா மோ

55. கப்பலுக் கபாயவழி காணுமுதல் நேருமெ ன
எப்பொழுது மாலுமிக ளேக்கமுற்று வாடுகிறா ர்

56. சாவுவரு மென்றறிந்துஞ் சற்றுமச்ச மற்றவனா ய்
சாவகாச மாயுலக சந்தடியைத் தேடுகிறா ய்

57. உலக சமுத்திரத்தி லோடுமோட்டைக் கப்பலுட ல்
அலைமோதித் தாழ்நேர மாரறிவார் பாரதி யா

58. எலிகள் தமக்கவதி யெய்துமென்று நூறுவ ழி
சலியாது செய்திருக்கச் சவகாச மேனுனக் கு

59. சாஞ்சமைய முந்தலமுஞ் சற்பனையுஞ் சந்தேக ம்
போஞ்சமைய நீரறியாய் போதகமொன் றின்னமுங்கே ள்

## 3-ம் பிரிவு. தவத்தினவசியம்.

1. தாமதியா தென்பிறப்பே சாகிறநாள் தூரமல் ல
சாமி வரவிருக்குஞ் சந்தியைநீ கண்டறியா ய்

2. கல்லுமுள்ளா யுன்னகத்திற் காணுகிற பாவவி னை
வில்லங்க வேரறுத்து விட்டெறிய நேர்த்தனைசெ ய்

3. தேகசுக நாளையிலே செய்யலாந் தவங்களையு ன
தேகபலந் தப்பியபின் செல்லாது சாதனைக ள்
4. தவஞ்செய்யா ராரொவர்க்குந் தப்பாது கேடென வே
தவறாத சத்தியமாய்க் கூற்றினார் யேசுபர ன்
5. பாவியொரு வன்றவசு பண்ணுகிலக் காரணத்தா ல்
தேவுலகிற் சந்தோஷஞ் சேருமிது நிச்சய மே
6. வியாதி வருமுதலே வேண்டுந் தவங்களுட ன்
தயாதீக மானமனஸ் தாபப்படக் கடவா ய்
7. வெள்ளம் வருமுதலே வெட்டியணை யையிடலா ம்
வெள்ளம் பிரண்டதன்பின் வீண்பிரயா சப்படலே ன்
8. சீவனுக்காய் வேண்டுமெனிற் றேயமெலாஞ் சுற்றுகிறா ய்
கோவிலுக்குச் செல்லவென்றாற் கூடாது போவதென் ன
9. சபைகூடி யோயாது சம்பாஷிப் பாயிருந் து
செபதீப மேற்றவெனிற் சிந்தையற்று வாடுகிறா ய்
10. உழுதுபயி ரேற்றுவதற் கோடுகிறாய் காலமெலா ந்
தொழுதேற்றுங் கோவிலைநீ தூறமெனச் சொன்னதென் ன
11. கச்சைகட்டி வீம்பாகக் காசுபணத் தையிறைத்தா ய்
பிச்சை காணிக்கையென்ற பேர்கேட்க வஞ்சுகிறா ய்
12. வருந்திவிருந் துக்களைத்தாய் வங்கணரை வாழ்பவ ரை
இரந்துவந்த யாசகரை யில்லையென வோட்டிவிட்டா ய்
13. வயிறை வளப்பதற்கு மாவருத்தப் பட்டுநொந்தா ய்
உயிரைக்காப் பாற்றுதற்கோ வொன்றேனுஞ் செய்ததில் லை
14. சத்தியற்று நோயாலே தாங்கா வுடலெனினு ம்
பத்தியம் பிடிக்கவென்றாற் பக்குவமாய்ச் சம்மதிப்பா ய்
15. அரிசியுஞ் சாதமின்றி யந்திசந்தி யாயிருந்தா ய்
ஒருசந்தி யாயிருக்க வொவ்வாது போனதென் ன
16. கசந்தமருந் துண்பதற்குக் கஷ்டமே யானாலு ம்
இசைந்தாய்நோ யோடவென வெப்படியோ வொப்புகிறா ய்
17. ஆத்துமத்தைக் காப்பதற்கா யற்பவருத் தஞ்சயிக் க
மாத்திரமே யுன்னாலே மாளாதென் றோதுகின்றா ய்
18. சங்கீதம் பாடவுண்டு சங்காத்த நேரமுண் டு
சங்கீர்த் தனம்படிக்கச் சந்தர்ப்ப மில்லாதே ன்
19. காசுகளைப் பாராது கச்சேரி யில்விதைப்பா ய்
பூசைசெய்து வைக்கப் புகலில்லை யென்றிருந்தா ய்

20. சொத்து சுகமிருந்தாற் சொந்தமெனக் கண்டுவப்பா    ய்
உத்தரிப்போ ராத்துமத்துக் கொத்தாசை செய்வதில்    லை
21. ஆனாலு மின்றளவி லற்பமதி யாற்றவரி    ப்
போனாலு மின்னமொரு புத்தியைக்கேள் புத்திர    னே

## 4-ம் பிரிவு. தற்காலத் தவப்பேறு.

1. உன்பவத்துக் காயுலகி லுத்தரித்தல் மாவெளி    து
பின்பவத்துக் குத்தரித்தற் பேரிடியாய்த் தீறும    றி
2. இப்படியா யோர்மனித னெய்தியநோய் தீரவெ    ண
எப்பொழுதும் வேண்டிவந்தா னேவலராஞ் சம்மனசோ    ர்
3. வந்தருகிற் காக்ஷிதந்து மன்றாடி வேண்டுகிறா    ய்
அந்தவேண் டலைபளிக்க வாக்ஷேபனை யதைக்கே    ள்
4. ஓராண்டு நோய்சகித்தா லுத்தரிப்பெ லாமுடிந்    து
நேராண் டவர்பதம்போய் நீளிக்கச் சம்மத    மோ
5. சான்றோனே யின்றிறந்தாற் றக்கதவம் பேறுபெ    ற
மூன்றேநா ளுத்தரித்து முத்திபெறச் சம்மத    மோ
6. என்றதற்கப் புண்ணியவா னின்றிறப்பே னென்றதனா    ல்
அன்றிறந் துத்தரிக்கு மாத்துமத் தலஞ்சேர்ந்தா    ன்
7. வானவனு மங்கேக வானவனைக் கண்டவுட    ன்
ஏனெனையே மாற்றுகின்றீ ரொத்தனையாண் டாயின    தோ
8. மூன்றேநா ளுத்தரித்து முத்தியென்றீர் முற்றிலும்பொ    ய்
சான்றோனே சம்மனசோ சங்கையல வென்றழுதா    ன்
9. அன்னேரம் வானவனு மன்பனே சொல்வதைக்கே    ள்
இன்னேர மெய்யடக்க வெத்தனிக்கி றாருலகி    ல்
10. ஆக்கினைக் கடோரமதா லற்பநாளி கைப்பொழு    தை
நோக்குகின்றா யாண்டுகளாய் நோயிதிலு மாகொடி    தோ
11. இவ்வாதை நீசயிக்க யேலாதாற் பூமியிற்போ    ய்
அவ்வுலகின் நோய்சகியோ ராண்டுபதிற் சொல்லுவென்றா    ர்
12. சம்மதிபோ லாத்துமத்தைச் சம்மனசோர் கூட்டிவந்    து
அம்மணி சவத்தோடொன் றாக்கிவைத்தா ராத்துமத்    தை
13. சொல்லியநோய் வேதனையாற் றுன்புறுங்கா லேங்கினற்    கு
சொல்லுவார் சகோதரரோ துன்பமெலா மின்பமேயா    ம்
14. எத்தனை கிறிஸ்தவரா யெண்ணைகிசிற் கெந்தகத்தா    ல்
சித்திரவா தைகழுவாற் றீயிலிட்டு நீறாக்    கி

15. கண்டதுண்ட மாய்நறுக்கிக் கைகாலிற் சிப்பிறக் இ
மண்டையுடற் றோலுரித்து வாதைசெய்தார் மன்னவர்க ள்
16. உத்தரிக்கி றஸ்தலத்தி லுள்ளமகா வற்பதுயர் க்
கித்தலத்தின் றுன்பமுழுற்று மீடுளைக்கக் கூடுமல் ல
17. அத்தலத்தில் வாதனைசெய் யக்கினிமுன் னித்தலத் தீ
சித்திரத் தழுத்தியதீ சீதளநீ ராயிருக்கு ம்
18. இங்குசெய் யற்பத்தவத்துக் கெண்ணரும்பா வக்கடன்போ ம்
அங்குபடு மாக்கினையோ வற்பவுத்த ரிப்பேயா ம்
19. ஓர்வருடச் சம்பளங்க ளோர்மாதத் துட் கிடைத்தா ல்
ஆர்வேண்டா மென்றுரைப்பா ரவ்வாறிப் பேறறிவீ ர்
20. பார்முழுதும் விற்றாலும் பற்றாவுன் பாவகட ன்
ஓர் ஜெபத்தா லோர்தவத்தா லுத்தரிக்க வாதையென் ன
21. தேவகிருபைச் சனாகால் ஜீவனுள்ள நாளையிலு ன்
பாவகடன் போக நல்லபாதை யிஃதென் பிறப் பே
22. பாவசங்கீர்த்தனத்தாற் பாவமெலாந் தீர்ந்தாலு ம்
பாவவப ராதகடன் பற்றறவே தீருமல் ல
23. இக்கடனைத் தீர்த்தொளிக்க யேற்றதவப் புண்ணியத் தை
தக்கசாவ தானமுடன் சாதகமாய்ச் செய்துநில்லே ன்

## 5-ம் பிரிவு. தேவசமுக ஞாபகம்.

1. காசுசுக போகமிதைக் கத்தனெனக் கும்பிடு நீ
ராசகனாக் கண்டவன்போல் நம்பாதே நன்மரண ம்
2. நன்மரணந் தேடுவதில் நாள்தோறுநீ முயன்றா ல்
உன்மனதைக் கண்டுபர னொத்தாசை செய்தருள்வா ர்
3. உள்ளரங்க சிந்தனைக ளொவ்வொன்றுந் திஷ்டிகளா ற்
றெள்ளறவே நேர்நோக்கித் தீர்க்கமுடன் சீரொடுப்பா ர்
4. வாயாலே யந்திசந்தி மன்றாட வுன்மன து
பேயாலே யாடிநின்றாற் பேறுபெறாய் நன்மரண ம்
5. இகபரபா தாளதல மெங்குநடந் தேறுவதி ல்
அகம்புர மென்பதொன்று மல்லகே ளாண்டவர்க் கு
6. உலகந் தனைத்துறந்த வோர்முனிவ னைக்கெடுக் க
விலைமாது நாணமற்று வேண்டிநின்றா ளத்தவ சி
7. சந்தைநடுக் கூட்டிவந்து சந்தியிதுநீ நினைத் தி
வந்ததை முடிக்கவென்றார் மானமற்ற வம்மடந் தை

8. ஆருமறி யாதிருக்க வந்தரங்கந் தேடுவென்று ள்
ஆருமறி யாஸ்தலத்தை யாரணங்கே காட்டுவென்று ர்
9. ஊருக்குப் பிறத்தியிற்போ யுள்ளவொரு வீடுபுக் கி
ஆருமறி யாதவிட மந்தரங்க ஸ்தானமென்று ள்
10. நாமிருவ ரல்லாது நம்மையுள வாக்கிவைத் த
சாமியவர் கண்ணெதிரிற் சங்காத்தஞ் செய்வா ரோ
11. தண்ணீருட் டோய்ந்தபஞ்சாய்ச் சாமிசமஸ் துட்கலந்தோ ன்
பெண்ணீர்மை யைக்கடந்து பேசுகிறாய் பாதகி யே
12. நினைத்தோன் முடிவறியான் நேருமுடி வின்னதென த்
தனக்கு வமையில்லானே சாஸ்வதமாய்க் கண்டறிவா ர்
13. எள்ளினுக்குள் ளெண்ணெயினை யெல்லாவஸ் துள்ளமைந் த
வள்ளலவர் நேத்திரத்தை மாறவைப்ப தார்மக ளே
14. இருளு மறைவுமவர்க் கில்லையெல்லாம் வெட்டவெ ளி
சுருளுஞ் சுழலுமற்ற தூரதிஷ்டி ஞானவெ ளி
15. அக்கினித் தணல்மயமா யங்குமிங் கெங்கணுமா ய்
திக்கனைத் தினுநிறைந்த தேவாதி தேவனிவ ர்
16. ஊகாந்த யீருந்தத் துள்ளவணு வுக்கணுவு ம்
ஏகாந்த மாயறிவார் என்மகளே கண்டறிவா ய்
17. ஆண்டவர்தா மோர்நாளுன் னந்தரங்க சிக்தையெலா ம்
ஈண்டுகணக் காயெடுப்பா ரெவ்வாறு மீட்படைவா ய்
18. என்றுமுனி சொன்னமொழி யெல்லாங்கேட் டம்மடந் தை
அன்றே மனந்திரும்பி யாரம்பித் தாள்தவத் தை
19. தம்பியரோ தேவ சமூகத் திருப்பதை நீ
நம்பிநடந் தாலுனக்கு நன்மரணந் தப்பா து

## 6-ம் பிரிவு. கள்ளஞானம்.

1. ஆலயங்க ளுக்கேகி யந்திசந்தி நீண்டசெ ப
மாலைகளை யேந்துவதால் வாய்ப்பதல்ல நன்மரண ம்
2. சத்திரங்க ளுண்டமைத்துத் தானதன்மந் தேர்த்திருநா ள்
சித்திரமாய்ச் செய்வதினாற் சிக்குமோ நன்மரண ம்
3. உன்கருத்தி னுட்கருத்து முட்கருத்தில் நற்கருத்து ந்
தன்கருத்தாற் சீரொடுத்தே தந்தருள்வார் நன்மரண ம்
4. சாடை சயிக்கினையுஞ் சைகைதலை கைகாலு ம்
ஆடையசை வத்தனையு மையன்றி வாரறிவா ய்

5. தயவுமுகத் தாக்ஷணைக்குந் தன்பெருமை யோங்குதற்கு ஞ்
சுயநலத் துக் கும்புரிந்தாற் றுய்யபுண்ணி யம்பழு தே

6. தேவதோத் திரத்தினுக்குன் செய்கைமுற்றுஞ் செய்துவரி ற்
சாவதுநா ளில்மிகுதி சந்தோஷ மாய்மரிப்பா ய்

7. பூவுலகுக் கெத்தனைதான் புண்ணியனாய்க் காணுகிலு ந்
தேவனுக்கொவ் வாதிருந்தாற் சிக்குமோ நன்மரண ம்

8. வெள்ளைவைத்த கல்லறைபோல் மேல்மினுக்காய்நீ நடக்கு ங்
கள்ளஞா னக்கருத்தைக் கண்டறிவார் சத்தியமா ய்

9. ராஜதுரை மார்களன்றி நாடோறுங்கு மேய்த்திடலா ம்
யேசுபரன் திஷ்டியைநீ யேமாற்றத் தீரா து

10. உன்னொழுக்கத் தைத்திருத்தி யுட்கருத்தைச் சீராக் கி
சன்மார்க்கஞ் செல்லாது சாமிகொடார் நல்மரண ம்

11. மேலெலகியோன் மந்தைகளை மேய்க்கிறநாட் பாலியத்தி ற்
சீலனெனப் பேர்படைத்துச் சில்வான நாளினுக்கு ள்

12. தந்தைதாய் மாய்ந்ததனால் தன்னதெலாந் தானமிட் டு
வந்துவனத் துண்ணுளைந்து மாதவஞ்செய் யப்புகுந் து

13. காய்சருகி லையருந்திக் கந்தமூலங் கள்புசித் து
வாய்புதைத்துக் கண்ணடக்கி வாறுகசை கள்நடத் தி

14. மனுடசஞ் சாரமற்று வாயின் ருசிப்புமற் று
இனிப்பு முவர்ப்புமொறுத் தேகாந்த யோகமுற் று

15. உபவாசங் காப்பதிலு மூணுறக்கஞ் செய்வதிலு ம்
உ.பமான மற்றதனா லோர்முனியாய்ப் பேர்விளங் கி

16. சன்னியா சம்பூண்டு தபஜெப தியானமுட ன்
சென்னீருட் டோய்ந்தவண்ணந் தேகத்தை வாதைசெய் து

17. ஞானக்கண் ணாடியென ஞானியர்கள் கொண்டா ட
மோன குருவெனவும் முத்தியினோர் வித்தெனவு ம்

18. எல்லவருந் தோத்தரிக்க யேற்கநடந் தந்தியமா ய்
வல்லோ னளைத்திடுநாள் வந்ததினா லச்சமய ம்

19. சங்கீர்த் தனம்புரிந்து சற்பிரசா தம்புசித் து
அங்கிருந்த பூசகர்க ளாசீர்வா தங்கேட்டா ர்

20. அவஸ்தையுங் கையேற்றாசீர்வாதங் கொடுத்தா ர்
ஜெபமுறு வேற்றிநிற்கச் சீவன் பிரிந்தது வே

21. இச்செய்தி பட்டணத்துக் கெட்டியதாற் கும்புகும்பா ய்
அர்ச்சீஷ் டவர்மரித்தா ராசரிக்க வாருமெ ன

22. தேவசபை யாய்க்கூடிச் சிங்கார மாயெடுத்து க்
கோவிலின்பீ டத்தடக்கிக் கும்பிட்ட சன்மார்க ள்
23. அந்திசந்தி பத்தியுள்ளோ ர்ச்சிஷ்டர் கல்லறையை ச்
சந்தித்து தீபமும்பூச் சாம்பிராணித் தூபமி ட
24. பூசைப்பிர சாதிகளும் புத்திபத்தி யுள்ளவரு ம்
நேசபிரார்த்தனைகள் நித்தியமுஞ் செய்துநிற் க
25. அடக்கிமறு காலையிலே யாலயவே லைத்தலைவ ன்
அடைத்தகோ விலைத்திறந்தோ ராச்சரிய மூன்றுதின ம்
26 கண்டதனால் நான்காநாட் காலையிலுங் கண்டுசென் று
உண்டான சம்பவத்தை யோதுகிறான் சேட்டரிட ம்
27. நல்லகுரு வேமரித்த ஞானியுடலைக்கோவி ற்
கல்லறைமேல் மூன்றுதினங் கண்டடக்கி னேன்குழிக்கு ள்
28. இன்றுமதி காலையிலே யிப்புதுமை யானதெ ன
என்றதைக்கேட் டம்மடத்தா ரெல்லவரு மேக்கமுற் று
29. சேட்டருமங் கோடிவந்தர்ச் சிஷ்டவரோ தாங்கலென் ன
கீட்படித லுள்ளவரோ கேட்பதற்கு மாறுணாயு ம்
30. தம்மையிங் கடக்கியது சங்கையல்ல வென்றிருந்தா ல்
உம்மையெவ்வா றெங்கடக்க வுத்தாரந் தாருமென்றா ர்
31. அன்றொடியே மெய்யெழுந் தார்ப்பரித்துக் கூக்குரலா ய்
வன்னியிட மாழ்ந்துவிட்டேன் வாயிலுள்ள நன்மையெடு ம்
32. உள்ளபடி பூமியையு மும்மையுமே மாற்றிவந் த
கள்ளனானென் னங்கமதைக் கல்லறையி னின்றெடுத் து
33. செத்த விந்த நாயைத் தெருத்தெருவா யீர்த்திழுத்து ச்
செத்தைகளிற் போட்டுவிடத் தீர்மானஞ் செய்தருளு ம்
34. பாவியாய் நானிருந்தும் பார்ப்பவர்க்குப் புண்ணியவா ன்
பாவனை யைக்காட்டிப் பரமிழந்தே னென்றகன்றா ன்
35. காட்டிற் றவமிருந்து சாயிலை யருந்தியவ ன்
காட்டானை யுண்ட கனியான தென்னசெய ல்
36. முத்தர்களுள் மேலாய் முதற்படிக்கா ளாயினவ ன்
கத்தருக்கே றாதவனாய்க் கண்டதென்ன வென்பிறப் பே
37. எத்தனையோ மாதவத்தோ னெவ்வளவோ பேறறத்தோ ன்
அத்தனையுங் கண்ட கன வாகப் பறந்தன வே
38. பூமியையே மாற்றியிவன் போயிரங்கி னான்நரகி ற்
சாமியைநீ யேமாற்றிற் றப்பாது துன்மரண ம்

## 7-ம். பிரிவு. சாவைச்சிந்தி.

1. இன்னாளிற் சாவைமறந் தேக்கமற்று நீநடந்தா    ல்
அன்னாளிற் றம்பியே யாறுதலுண் டோவுனக்    கு
2. தூரவஸ்தை நோக்கினால் தோற்றுந்தோற் றாததன்    மை
மாரகத்தை யெண்ணுனாய் வாழுகின்றாய் மண்மீ    து
3. சாவைமறந் தல்லவோநீ சண்டாளத் தீமையெல்லா    ந்
தேவையான மட்டிலின்னுந் தேடுகிறாய் நாடுகிறா    ய்
4. பாம்புதீண்டி னாலுடனே பட்டிறப்பா யென்றுகண்    டு
தீம்புவழி யைவிலகிச் செல்லுகிறாய் வேறுநெ    றி
5. துன்மார்க்க னாய்நடந்தால் துர்ச்சாவே நேருமென்    று
உன்மனதா றத்தெரிந்து முன்னையேய்ப்ப தென்னபுத்    தி
6. தன்கழுத்தைக் கட்டவருஞ் சாரக்க யிற்றையன்    று
முன்னறிந்தாற் றன்குருவை முத்திசெய்யான் யூதா    சு
7. தாவீதன் கைக்கவணால் தன்னுயிர்போ மென்றறிந்தா    ல்
மாவீறன் கொலியாத்தன் வம்பிழுக்கப் போவா    னோ
8. இன்னொருவ னுக்குமல்ல வென்கழுத்துக் கென்றாமா    ன்
முன்னறிந்தா லக்கழுவை முற்றமதில் நாட்டுவ    னோ
9. உன்னிறுதித் துற்சாவை யுண்மையாய்க் காணுகையி    ல்
உன்மனதை யேமாற்ற வுன்னுகிறாய் சோதர    னே
10. கையிலேதீ பத்தைவைத்துக் கண்மூடி நீநரக    த்
தீயிலேன் வீழ்ந்தளிவாய் செய்யாதே யிந்தம    தி
11. சல்தீ னெனுமிறைவன் சாரிவரும் போதுசவ    த்
தில்மூடுங் காங்குடைமுன் னேகவிதித் தோதுவ    து
12. ராஜாதி ராயனென நாடாண்டு தேடியதி    ன்
பூஜா பலனிதெனப் போதியென வோதிவந்தா    ன்
13. சாவுதலை மேலிருக்கச் சற்பனையாய்ப் பாதகத்தை    த்
தேவையா யமட்டிலுநீ தேடுவதெவ் வாறெனி    லோ
14. கழுத்தறுப்போன் றன்னைநம்பிக் காத்திருக்கு மாடுகன்போ    ல்
செழித்தபவ வாழ்வைநம்பிச் சீரழிகிறாய் மக    னே
15. ரோமைநா டாண்டதுரை நுட்பமாயோர் பெட்டகத்    தை
பூமியின்மேற் சாரிபோம்போது பின்னே கொண்டுவ    ர
16. ஏவியதால் மேன்துரைமா ரென்னபெட்டி பொக்கிஷ    மோ
தேவரீர்பின் செல்லுதற்குத் தீர்ப்புரைத்தீர் கூறுமென்றா    ர்

17. என்றமொழிக் கவ்விறைவ னென்னு டைய பொய்யுட லை
அன்றுவைத் தடக்கிடப்போ மாசந்தி யாகுமென்று ன்
18. இவ்வாறு தன்முடிவை யெண்ணிவந்த பூபதிபி ன்
எவ்வா றிறந்தனனென் றென்புதல்வா சொல்வதைக்கே ள்
19. தன்மகனைச் சிங்கா சனத்திறுத்திச் செங்கோலு ம்
பொன்முடியுஞ் சூட்டுகையிற் புத்திரனைப் பார்த்திறைவ ன்
20. என்மகனே யுன்சிரசி லென்கரத்தால் வைக்குமு டி
பொன்முடியென் றுன்னுதே புண்படுத்து முண்முடியா ம்
21. என்றுலகத் தைவெறுத் தேகியேசந் யாசமுற் று
அன்றுமுதல் நன்மரண வாயித்தஞ் செய்திறந்தா ன்
22. இந்தமொழி யத்துணையோர்க் கேவியதாற் பூவுலக ம்
அநதரத்தின் மின்னலிணை]யாகுமென நிச்சயித்தா ர்
23. சாவுசா வென்றயிந்த சத்தியத்தை நெஞ்சிறுத்தி ச்
சீவித்தோன் ஞானியென்றூர் தேவபத்த னம்மா னை

---

மாரணுனுபவச் சருக்கம் முற்றிற்று.

---

ஆகச்சருக்கமாறுக்கு பிரிவு நாற்பத்துமூன்றுக்குக் கூடிய செய்யுள் 883.

---

## நன்மரணநாடாத்தீமைச் சருக்கம்.

### விருத்தம்:

அம்புவியைப் பிரியுங் காலச்ச மின்றி
ஆவிவிட வொழுகுதல் நன்றென்ற சீரும்
நம்பினவர் மீட்படைவா ரென்று கூற
நடக்கையற்றோர் கேடுறுவா ரென்ற வாறும்
எம்பரனை யேய்ப்பதரி தென்ற நேறும்
இருமுறைமாய் வில்லையெனப் பகர்ந்த கூறும்
கம்பீர மாயிறந்தோ னுயிர்த்த வீரும்
கழறுவான் வேதமுனி கழறு வானே

### முதற் பிரிவு. சாவுக்கஞ்சாமை.

#### அம்மானை.

1. மரணமரண மென்னும் வாக்கியமென் காதேறு ந்
தருணந்த லைநடுங்கிச் சர்வாங்க வேர்வையுற்றே ன்
2. சாவெனப்பேர் சொல்லாது தக்கமதி யைப்புக ல
ஆவலுடன் கெஞ்சுகின்றே னாலுஞ் சித்தமென்றா ன்
3. அன்னேர ஞானமுனி யன்னவனைத் தேற்றுதற் கு
இன்னமுநீ யஞ்சுவதே னெல்லவரு மாள்வதுமெ ய்
4. சாவதற்கா யேக்கமுற்றுச் சஞ்சலித்தாற் சாரமென் ன
பாவவினைக் கஞ்சிப் பயந்தொழுகில் நன்மையுண் டு
5. அக்கினிக்குட் சிக்கியவ னஞ்சிமிரண் டாவதென் ன
அக்கினிக்கே தீனியவ னல்லாது மீட்சியுண் டோ
6. அஞ்சியொளிந் தாயெனிலு மந்தரமே சேருகிலு ந்
துஞ்சுவ திலையமுண்டோ சொல்வதைக்கே ளென்மக னே
7. தாசிமனை விட்டுவெளித் தாண்டுகையிற் றன்குருவை ச்
சீஷன்கண் டஞ்சியதாற் செப்புகிறா னாசிரிய ன்
8. ஆகாமை செய்ததனா லஞ்சுகிறா யின்னொருகா ல்
போகாதே யச்சமில்லை புத்தியென்றான் நற்குணனா ய்
9. அஞ்சுவது மெய்யானா லஞ்சாநெறி யொழுகி த்
துஞ்சுவதே யூகமெனச் சொன்னே னுனக்கும தி
10. நீர்ச்சுழலில் வீழ்ந்தபட்சி நீந்துவதால் மீட்சியுண் டோ
பார்மீதில்வந்து பயமுறலா லேதுநய ம்

11. கானகத்தோர் வாலமுனி கள்வரிடை சிக்கியபி ன்
நானுமக்கே னஞ்சிடுக யாதுமில்லா னென்றுரைக் க
12. யாதுமில்லா னென்பதுண்மை நாங்களுன தாருயி ளா
வாதைசெய்து வாங்குதற்கு வல்லவொன் றஞ்சுவென்றா ர்
13. வல்லவர்க ளாகிலென்ன மாளுதற்கே யஞ்சான்யா ன்
அல்லவோவென் றாரவர்போ லச்சமற நாட்கடத்தா ய்
14. இந்த யோசனையைமறந் தேக்கமற்று நீயொழுகி ல்
அந்தியநே ரத்திலுனக் காயாச நேர்வதுமெ ய்
15. தனகோடி யோர்சீமான் சம்பூரணத் திரளா ல்
மனங்கொள்ளாப் பூர்த்தியுடன் மம்மதையாய் வாழ்பொழுதி ல்
16. சாவடுத்த தென்றுகண்டு சாவேயெனை யளைத்து ப்
போவதற்கோ வந்துவிட்டாய் பூரணமாய் வேண்டுகிறே ன்
17. என்னுடைய வாஸ்திகளு மின்னுமுள்ள பூஸ்திதியு ங்
கன்னெல்நெற் காணிகளுங் கையளித்துக் கையெடுத்தே ன்
18. மக்கள்மறு மக்களையும் மானியங்க ளத்தனையு ம்
இக்கண முனக்களித்தே னென்னைவிடு வென்றநொ டி
19. தன்னருகிற் சாவுவந்த சன்னையைப் பகுத்தறிந் து
என்னுயிரோ நீயுமெனை யேன்விலக வெண்ணுகிறா ய்
20. நீசுகித்து நான்களித்து நீடியநாள் வாழ்ந்திருக் க
காசுமெத்தத் தேடிவைத்தேன் கண்மணியே யேகா தே
21. இன்றளவி லுன்சுகத்துக் கேதுமிடர் செய்தில னே
என்றுபல வாறுகெஞ்சி யேக்கமுற மன்னேர ம்
22. சீவன்பிரிவ தெனுந் தீர்மானத்தை யுணர்ந் து
சீவனே யென்னுடலைச் சீரளியக் காண்பதினா ல்
23. உன்னையிதோ பேய்களிட மொப்பிவைத்தே னென்றலறி ச்
சொன்னவுட னேமரித்துத் துன்பநரகத் தடைந்தா ன்
24. வந்துபிறந்து விட்டோம் மாளாது தீரா து
சந்தோஷ மாயிறக்கத் தக்கவழி யைத்தே டு
25. தூண்டிலுண்ட மீனினைப்போல் துள்ளுவதேன் துள்ளா தே
மாண்டிடுநாள் கிட்டாமுன் வாழ்பொழுதைச் சீர்ப்படுத் து
26. எத்தொழிலைச் செய்பவரு மேற்கனவே சிந்தைசெய்வா ர்
செத்ததன்பின் பாவதென்ன தீராதமோச மப்பா ல்
27. இல்லாரி யார்மரிக்கு மீருந்த வேளையி லே
சொல்லுகிறா னென்னுயிரோ துஞ்சுதற்கே னஞ்சுகிறா ய்

28. காலமெல்லா முன்னுடைய கத்தரோவு தற்படிக்கு ச்
சீலமெலாஞ் செய்தனையே சீக்கிரமிக் கூட்டைவிட் டு
29. தேவபத்தி ராசனத்தைச் சேருவென்க் கூறியபி ன்
ஆவிவிட்டார் நீயவர்போ லாவிவிட யோசனைசெ ய்
30. தலைமண்டை யோடேந்திச் சாவைநினைவிற் பொறுத் தி
உலகை மறந்திறந்தோ ரொன்றிரண்டோ கூறுதற் கு
31. ஆதலினாற் சாவைநினைந் தாத்துமத்தைச் சீர்திருத்தி ச்
சாதனைசெய் தாற்கடவுள் தந்தருள்வார் நன்மரண ம்
32. அவஸ்தைநாள்நற் சாவடைய வெண்ணுமானிடர்க ள்
அவதிச்சா வன்றி யவஸ்தைபூசல் கண்டடையா ர்
33. நன்னடத்தை யற்றவனாய் நாளொருங்கு வேண்டுகிலு ம்
நன்மரணங் கிட்டாது நம்புவென்றார் மாமுனிவ ன்

## 2-ம் பிரிவு. வீண்நம்பிக்கை.

1. நம்பினவர் வீண்போகார் நன்மரணங் கண்டடைவா ர்
அம்புவி யெலாமறியு மாரணமெய்ப் போதக ரே
2. முன்னாளோ ரூர்த்தலைவன் மூர்க்கனெனப் பேர்படைத் து
அன்னாளவ் வூர்க்குருவு மக்கயவ னைக்கயற் றி
3. நீக்கிவைத்தார் வேதவழி நீக்கிவைத்தார் கோவிலினு ம்
நீக்கிவைத்தார் நன்மைதின்மை நீக்கியபின் சாபமிட்டா ர்
4. சாபமடைந் தன்னவனோ சற்றுமிள காமனாய்க் க்
கோபவெறி கொண்டவனாய்க் கோவிலா ரோடெதிர்ப்பா ன்
5. குருக்களைச் சட்டைசெய்யான் கோடியிடைஞ் சல்முடிப்பா ன்
செருக்குமிகுந் தாணுவமாய்ச் சீவித்தா னீறளவு ம்
6. இந்தநெறி யாகவவ னேக்கமற்று வாழ்நாளி ல்
அந்தியகா லப்போ தடுத்தோடி வந்தன வே
7. வந்தநோ யுண்ட மருந்துகளிற் றீராதா ல்
எந்தவழி யாயினுந்தா னீடேற வேண்டுமென் று
8. எங்கிருந்தா லுங்குருவை யிங்கழைக்கில் வந்தநொ டி
சங்கீர்த்தனம் புரிவேன் சாக்கிரதை செய்யுமென்று ன்
9. ஒருமுறையா ளோட்டிவிட்டா னோலைவிட்டான் றூதுவைத்தா ன்
இருமுறையா யாளைவிட்டு மேனென்பா ராருமில் லை
10. மேற்றிராணி யார்சமுகம் விண்ணப்பஞ் செய்ததன்பி ன்
பற்றிலாப் பாப்புவின்பால் பாங்காய் மனுக்கொடுத்தா ன்

11. கேணியகத் திட்டகல்லாய்க் கேளா திருந்ததினா ல்
நாணிமனஞ் சோராது நம்பிநின்றான் வீடுபெ ற
12. எல்லவருங் கைநெகிழ்ந்தா ரெல்லாருந் தான்மறந்தா ர்
எல்லவருஞ் சாஞ்சமய மெண்ணியெதிர் பார்த்திருக் க
13. வந்தார் சபைவிலக்க மானகுரு வவ்வழியா ய்
வந்தவருக் கங்கொருவன் வாறுரைப்பான் போதக ரோ
14. அவஸ்தை யவஸ்தையென ஆவலுறு நோயனுக் கு
அவஸ்தைகொடுக் கக்குருக்க ளாருமில்லை வாருமென்றா ன்
15. என்றவுட னக்குருவு மேகியவஸ்தை யளிக் க
அன்றிறந்து மோக்ஷகதி யாத்துமஞ் சேர்ந்தன வே
16. இந்தச் சரித்திரத்தை யேற்கனவே யானறிவே ன்
எந்தவித முங்கடவு ளீடேற்றா தேனிருப்பா ர்
17. தஞ்சாய லாயமைத்தார் தாரணியின் மானிடனை த்
தஞ்சாயலை நரகில் தள்ளுவரோ தள்ளா ரோ
18. நித்தியமு நானவனை நிந்தைசெய்து தூஷணிக்க ச்
சத்தியமாய்த் தீயிலிடார் சாதகமாய் நம்புகின்றே ன்
19. சம்மனசோர் பேயாகித் தானிழந்த மோக்ஷமு டி
நம்பினருக் காகவென்றே நாதன்குறித்த தல் லோ
20. தன்னையே ரக்ஷிப்பதற்கோ சாமியிந்தப் பாடுபட்டா ர்
என்னை ரக்ஷிக்கவென்றே யிப்பாடு பட்டதுண் மை
21. பாவிகட்காய்ப் பட்டதிலே பங்கெனக்கிங் கில்லையெ ன
போவதொரு நாளுமில்லை பூர்த்தியிதை நம்புகின்றே ன்
22. கருணா கரக்கடவுள் காருண்ய நீதியில்ந ன்
மரணமே தந்தருள்வார் மாக்ஷியென்றா னம்மா னை

## 3-ம் பிரிவு. மூடநம்பிக்கையின் கேடு.

1. மாட்சியென்றோ சொல்லுகின்றாய் மாமோச மிந்தம தி
மீட்சியென லெவ்வாறாம் வின்னமப்பா கூறவதைக்கே ள்
2. அருளா னந்தப்பரம னாக்கினைசெய் யாரொன நீ
இருதயத்தி லெண்ணமிட லெவ்வாறா மென்னிலோகே ள்
3. சற்குணவான் றந்தையெனச் சாடியவனை யெதிர்த்தா ல்
துற்குணத்தை யெத்தனைநாள் தோஷமல்ல வென்றிருப்பா ன்
4. இரங்குவா ரொன்பதுமெய் யென்றாலு நீதியென் ற
கரங்களுனை நாசமுறக் காணுமிது திண்ணம றி

5. வந்தநோய் தீர்க்கும் வயித்தியர்கள் மிச்சமென ச்
சொந்தநோய்க் க வுழ்தமுணல் சொஸ்தியல்ல வென்பா யோ
6. எகத்துக் காறுகிணை றேரிகளிருப்ப திட்டு த்
தாகத்தில் நீரருந்தத் தக்கதல்ல வென்பா யோ
7, தந்தைதன சாலியெனத் தன்னையுடுத் தாருள ரோ
இந்தமதி யீனனெனவ னின்றொருவ ராருமுண் டோ
8. வலரிநக ரானொரு மாதினுக்குப் பாஸ்குவையி ல்
தலைதொட்டு ஞானத் தகப்பனென வாகியபி ன்
9. படிப்பிக்கக் கொண்டுசென்று பாவத்தில் வீழ்ந்ததினு ல்
அடுத்துவந்த ஞாயிறிலூ ராலயத்துக் கேகிலங் கு
10. தேவபழி நேருமெனச் சிந்தித்தன் றேதுமிட ர்
ஆவதில்லை யென்றுநம்பி யாலயம்போய் மென்மேலு ம்
11. மாழா திருப்ப தெண்ணி மாமோக னாய்நடக் க
எழாநா ளோர்வெள் ளி டிவிழுந் திறந்தன னே
12. அரசனன்றுந் தெய்வநின்று மாக்கினையென் பாரதுபோ ல்
மரணமா யி னோனுக்கு வந்ததீர்வை மண்ணறி ய
13. கல்லறை வெடிக்கவதிற் காளவாய்த் தீமுழங் க
எல்லவருங் கண்டுபயந தேங்கியஞ்சி னார்நடுங் கி
14. பற்பலவா றோடியொன்றாய்ப் பாய்ந்துநிரை யேறியொ ரு
நிற்புறங் க ரையுடைத்தால் நீச்சுநிலை காண்பவனா ர்
15. அன்றன்றி னாக்கினையை யாழ்ந்தடக்கி வந்ததெய்வ ம்
பின்புநீதித் தீமழையாய் பெய்துபழியை முடிப்பா ர்
16. இரக்கமுள்ள தெய்வமென வெண்ணியகங் கொள்ளா தே
திருக்கருணை நீதியுள்ள தேவனென வஞ்சிந ட

## 4-ம் பிரிவு. தேவதிருவாசகம்.

1. பாவிகட்கா யேசுபரன் பாடுபட்டா னென்பதுமெ ய்
பாவசுகத் தாணிநின்றாற் பங்குனக்குக் கிட்டுமல ல
2. அத்தனையு நீநினையா தாணவப்பா வம்புரிந்தா ய்
கத்தருனக் கோதவருங் கண்டனையைக் கேள்சுத னே
3. என்மகனே யிப்பவத்தை யெண்ணாதே மாமோச ம்
நன்மரணே நீயடைய நாங்குறித்த மார்க்கமல ல
4. உன்னாலுடம் பெடுத்தே னுள்ளங்கா லாதிமுத ல்
என்னாற் சகிக்கரிய வெத்தனையோ பாடுபட்டே ன்

5. கன்னமீதிற் கையறையுங் காலுதையுங் குத்துகளு ம்
பின்னல் வார்சாட்டை பிரம்படியும் பட்டே னே
6. சென்னிமிசை முண்முடியுஞ் செங்கரங்கா லைங்காய ஞ்
செந்நீர் பிரண்டோடச் சீவனையுந் தந்தே னே
7. எல்லா மறந்தலோநீ யென்னைப் பளி வாங்க ப்
பொல்லாத பாவம் புரியவழி தேடுகிறா ய்
8. தேகத்தால் நீசுகித்த சிற்றின்ப லீலையெந்த ன்
தேகசரு வாங்சமுற்ற செந்நீரின் காயமல் லோ
9. கன்மபவத் தைமுடிக்கக் கைநீட்டு நேரமெல்லா ம்
என்மீது கையெடுத்தா யீவிரக்க மற்றவ னே
10. எண்ணி நினைத் தாலோசித் தெப்பவநீ செய்தனை யோ
முண்முடியைப் பின்னிவந்து மூட்டுகிறா யென்சிரசி ல்
11. கையசைவு மெய்நலிவுங் காலடிக ளத்தனையு ந்
துய்யகைகா லாணிதைத்த சுத்தியலடிக் கிணை யே
12. வாட்டமற வோர்பவத்தை வாஞ்சையுறு நேரமெல்லா ம்
ஈட்டியைக் கொண்டேருவ வெய்துவிலா வைத்திறந்தா ய்
13. இப்பாடு செய்தபின்னு மின்னுமிரங் காயோ நீ
எப்பாடு செய்வதென வெண்ணுகிறாய் சண்டா ளா
14. நினைத்தபவத் தைமுடிப்பேன் நிச்சயமா யென்பதென் ன
உனக்கிஃது ஞாயமல்ல வொட்டாரஞ் செய்யா தே
15. என்மீதி லோங்கியகை யின்னமுநீ மாறவில் லை
என்னவிடர் செய்தேனென் றிக்கரும மெண்ணுகிறா ய்
16. அம்மட்டுன் கேடுகெட்ட வாசைவே ரோடின் தோ
எம்மட்டு மென்னுளாயை யெண்ணா திகழ்ந் திருப்பா ய்
17. என்னிஷ்டத் தைமறந்தே யீனமதி போனாலு ம்
உன்னிஷ்டத் தைநினைந் துற்றுணர வேண்டா மோ
18. வாழ்ந்திருந்த நாளதிக மானாநாட் டேரமல் ல
பாழ்நரகத் துன்மரணப் பாதையை வெறுத்துந ட
19. வானுலகி லோரிடமு மாமகுட முங்குறித்தே ன்
ஏனரகத் தீங்கிடங்கை யெண்ணுகிறாய் நின்மூ டா
20. உந்தனுக்காய்த் தீநரக முண்டாக்கப் பட்டதுண் டோ
உந்தனுக்கு மோக்ஷநக ரூதிப்பமாகக் குறித்தே ன்
21. உன்னாற் சுதந்தரத்தை யொட்டாரத் தோடகற் றி
அன்னியவத் தீநரகை யாவலுற யாதுவி தி

22. விண்கலங்க மண்ணதிர மேருமலை கள்வெடிக்க க்
கண்கலங்க வுன்மனது காய்ந்தகம ரோடிடு தோ
23. உள்ளமதி ராதிருக்கி லொன்றுமினை யாதநொ டி
வெள்ளிடி வி ழுஞ்சிரசில் மீளாது துன்மரண ம்
24. பூமியொரு மழையாற் பொங்கிச் செழிப்புறவு ன்
சாமி யருள் மழையாற் சற்றுமிள காயோ நீ
25. உன்னையீ டேற்றுதற்கா யோர்குறையும் வைத்ததில் லை
தன்னாலே கேடுகெட்டாய் சாபமென்பார் சாங்கால ம்

## 5-ம். பிரிவு. தேவ கோபாக்கினை.

1. வங்கிஷ பதித்துரையாய் மம்மதையில் வாழ்பவனாய்ச் ச்
சங்கோஷ மில்லானாய்த் தாறுமா றுள்ளவனா ய்
2. குருமொழி கொள்ளானாய்க் கோபா வேஷக்குணனா ய்
ஒருவருக் கடங்கானா யோட்டாரப் பாதகனா ய்
3. பாவசங் கீர்த்தனத்தைப் பண்ணமன மில்லானா ய்
ஜீவித்த வோர்துரைக்குத் தேவாதீனச் செயலா ல்
4. வந்தநோய் மாற்ற வயித்தியரும் வாகடமு ம்
வந்தநெறி நோக்கியபின் வல்லபர னேவுசலா ல்
5. போர்சியா வென்றமுனி போயடுத்தன் னேயனுக் கு
நேரிலிருந் தோதியதை நிச்சயமாய்க் கூறுகிறே ன்
6. பாதகாவென் கையிலுள்ள பாடுபட்ட விச்சுரூப ம்
போதியென்ற வாதனையால் புத்திசொல்ல விங்கெழுந்தோ ம்
7. இருமுறை சொல்சாக்ஷியினா லென்னையுன்பா லேகவைத் த
அருமையை நீயெண்ணாம லாணவத்தைக் கொள்ளா தே
8. இன்னேயால் நீமரிப்பா யென்றதன்றி நீதெளிந்தா ல்
உன்னையிவர் மீட்பதென வுண்மையுள்ள வாக்களித்தா ர்
9. பாவமெல்லாம் விட்டுவிட்டேன் பாவியையீ டேற்றுமென் று
கூவி யழா யுன்னுடைய குற்றமனைத் தும்பொறுப்பா ர்
10. என்னுரையைக் கேளாம லென்னையு நீ நோக்காம ல்
உன்னுடைய வாணுவத்தா லூழிநர கோடா தே
11. மூர்க்கனாய் நன்றிகெட்ட மூடனுன்ப வம்பொறுத்து க்
காக்கவந்த கத்தனைநீ கையெடுக்க மாட்டா யோ
12. பாவத்திற் றூங்கியிளைப் பாறினது போதுமிந் த
ஆபத்தில் மீட்கவந்த வாண்டவனைப் பாரா யோ

| | | |
|---|---|---|
| 13. | கட்டியுனைச் சேர்த்தணைக்கக் கைவிரித்த யேசுபத | ங் |
| | கிட்டியுன் பவப்பொறுத்தல் கேட்கமனங் கூசா | தே |
| 14. | உன்மீது தாமிரக்க முள்ளவ னெனத்தெரிய | த் |
| | தனமுகத்தை யுன்முகமாய்ச் சாய்த்ததைத்தான் பாரா | யோ |
| 15. | திறந்திருக்கு மையன் திருவிலாவி னுட்புகுந் | து |
| | உறங்கியிளைப் பாருதற்கிங் கோடிவரப் போகா | தோ |
| 16. | இத்தனை நாளாய்ப்புரிந்த தெத்தனையோ பாவகன்ம | ம் |
| | அத்தனையும் போக்குவதா யாண்டவரோ வாக்களித்தா | ர் |
| 17. | வேண்டா மடாமகனே வீராப்புச் செய்யா | தே |
| | மாண்டிடப் போ ராயெனவே வற்புறுத்திச் சொன்னதற் | கு |
| 18. | மோடியா யப்பாவி முகத்தைத் திருப்பினதா | ல் |
| | வாடிமுனி தீயனுக்காய் மன்றுடி னார்பர | னை |
| 19. | தேவபத்த னேந்துந் திருச்சுருப மக்கண | மே |
| | கோவவடி வாய்க்கரத்தின் கூராணியை முறித் | து |
| 20. | கத்தன் றன துவிலாக் காயமதிற் கையைவைத் | து |
| | ரொத்தத்தை வாரியவன் நேராய்முகத் தறைந் | து |
| 21. | இந்தவுதி ரப்பயனுன்னீ டேற்றமாகாம | ல் |
| | உந்தனகங் காரமதா லூழிநர கிற்படிந்தா | ய் |
| 22. | இத்தனைநாட் காத்திருந்தோ மெத்தனை யாய்ச் சகித்தோ | ம் |
| | அத்தனைக்குன் கண்கா தடைபட்டுப் போனதென் | னே |
| 23. | சாபிக்கப் பட்டவனே தாழாய்நீ தீயிலென | க் |
| | கோபிக்க வக்கணமே குத்துண்டாற் போலிறந்தா | ன் |
| 24. | தேவகிரு பைத்திரளாற் சிற்சிலமா பரவியர்க | ள் |
| | சாவதற்கு முன்திரும்பிச் சாவதென்ப தற்புத | மே |
| 25. | கண்ணிழந்தோ னோர்முனியாற் கண்ணடைந்த வற்புதத் | தை |
| | எண்ணியுந்தன் நேத்திரத்தை யீடளிக்க வுன்னுகிரு | ய் |
| 26. | ஆனதினுற் பாதகனே யப்புதுமை வாய்க்குமெ | ன |
| | ஈன மதி கொள்ளவேலா தென்றுரைத்தா ரம்மா | னை |

## 6-ம் பிரிவு. வஞ்சக நம்பிக்கை.

| | | |
|---|---|---|
| 1. | இன்னமொரு யோசனையு மென்னகத்துண் டென்குரு | வே |
| | இன்னதென விண்டுரைப்பே னிம்மொழியுங் கேட்டருள்வீ | ர் |
| 2. | சங்கீர்த்தனந் திறமாய்த் தப்பாதடைவதற்கெ | ன் |
| | பங்காக வோர் குருவைப் பாதுகாத்து வைத்திருப்பே | ன் |

3. ஏதோ வவஸ்தையுறி லேற்கனவே காத்தகு ரு
ஆதார மாயிருப்பா ராத்துமமீ டேறுமென்று ன்
4. ஆதாரமென்னுதே யாத்துமமீ டேறு து
சேதாரம் வந்துவிடுந் தெய்வமுன்க ருத்தறியு ம்
5. ஏய்க்கநினைந் தாண்டவருக் கேற்காமையா யொழுகி ல்
பேய்க்கடிமை யாய்மரிப்பாய்ப் பேய்க்கிரைதா னென்சுத னே
6. உள்ளூரிற் சற்குருக்க ளுண்டெனவே நம்பிநம் பி
துள்ளத் துடித் திறந்தோர் சொல்லுதற்கு நேரமுண் டோ
7. பிரபுத் தனையொருவன் பேராற் கிறிஸ்தவ னே
தருமகுண மில்லானுய்ச் சண்டாள னுய்நடந் து
8. தன்னிறுதி நம்புதலுந் தட்டளியா தேயடை ய
உன்னியவோர் தந்திரத்தை யோதுகிறேன் கேள்மக னே
9. தன்னூரில் வீடுமன்றிச் சவ்வாரி போஞ்சமய ம்
இன்னுமொரு மாளிகையு மேற்றினன் பட்டியிலு ம்
10. பட்டணத்தி லோர்குருவும் பட்டியகத் தோர்குருவு ந்
திட்டப்படுத்தியபின் ஜீவித்தா னச்சமற் று
11. துஷ்டசெய்கை யத்தனைக்குந் துந்துமியா னந்தனெ ன
இஷ்டபரி பூரணமா யேக்கமறவாழ் பொழுதி ல்
12. பட்டணத்தில் வண்டிகட்டி பட்டியகத் தேகவண் டி
சட்டமுறிந் தச்சுநடுச் சக்கரத்திற் சிக்கிவிட்டா ன்
13. வந்தவிபத் தோடிறுதி வந்துவிட்ட தன்றியுந்த ன்
சென்றதமனை சேர்வதற்குந் தோதிடைந்த தென்றுகண் டு
14. இருவரிரு மாபரிமீ தேறியிரு பாரிசம்போ ய்
குருவையனையுமெனக் கூறியிரு தூதனையு ம்
15. ஓட்டிவிட்டான் சற்குருபா லோடியிரு பேர்களையு ங்
கூட்டிவந்தார் கிட்டிவரக் குற்றுயிரும் விட்டிறந்தா ன்
16. கண்டாயோ வென்பிறப்பே காத்திருந்த சற்குருக்க ள்
அண்டாமுன் மாண்டிருந்தா னுண்டவனை யேய்ப்பவனு ர்
17. வையகத்தில் நீசஜென்ம மானிடன் நினைப்பதொன் று
தெய்வநினைப் பொன்றவரின் சித்தாந்தங் கண்டவனு ர்
18. நம்முடைய சிந்தனையை நாசப்படுத்தி யப்பா ல்
தம்முடைய சிந்தனையை ஸ்தாபிப்பார் கண்டிதமா ய்
19. நன்மரணங் கண்டடைதல் நாதனருள் நம்பிலுங்கே ள்
உன்மன மொன்றில்லாம லோர்நாளும் பேறுபெரு ய்

20. காலமெலாம் புண்ணியகண் காக்ஷியென நின்றசி    ல
சிலருமே நன்மரணந் தேராது கேடடைந்தா    ர்
21. காலமெலாம் பாவவழிக் கண்காக்ஷியானவுந்த    ன்
காலமுடி வெவ்வாறுங் கண்டறிந்து சொல்வேன்கே    ள்
22. கைப்புண்ணைப் பார்ப்பதற்குக் கண்ணடிவேண்டுவ    தோ
ஐப்பிதிலே யேதுமுண்டோ வஞ்சாதுசொல்லிவிட்டே    ன்

## 7-ம் பிரிவு. சாவதொரோ முறை.

1. ஒருமுறை சாவதென்ற லோகபிர சித்தமல்லா    ல்
இருமுறை மூன்றுமுறை யெங்கேனுங் கேள்வியுண்    டோ
2. ஒருகண்ணிற் பார்வையற்று லோர்விழியாற் பார்த்திடலா    ம்
ஒருவாயுந் தைத்துவிட்டா வுள்ளவுயிர் நஷ்டமல்    லோ
3. சாகாமுன் நன்மரணத் தையடையப் பாடுப    டு
ஆகாத சாவடைந்தா லப்பாலேமீ ட்சியில்    லை
4. முந்தியவோர் வாணிபத்தில் மூண்டுவிட்ட நஷ்டம    தை
பிந்திய வோர்செட்டால் பிறட்டியே செ ழித்திடலா    ம்
5. மாண்டு பிழைப்பாருமுண்டோ மாறியுநாம் மாய்வதுண்    டோ
மீண்டும் பிறப்பதுண்டோ வித்தாரம் பேசுவதே    ன்
6. இருமுறை சாவதென்று லெப்படியு மீட்படைவோ    ம்
ஒருமுறை சாவதனா லுள்ளநஷ்ட மாறுமல்    ல
7. தோர்வையினால் நஷ்டமெனத் துஞ்சுதலுக் கஞ்சா    து
போர்முனையி லோர்மையுடன் போராடும் வீரனைப்போ    ல்
8. நஷ்டமெலா முன்னதலோ லாபமுன்ன தாதலால்    நீ
கஷ்டமெலாம் பாராமற் கக்கிஷத்தோ டேவருந்தா    ய்
9. வலுவந்தஞ் செய்தவர்கள் மாத்திரமே வானுல    கை
சுலுவாய்ச் சுதந்தரிப்பார் சூட்சநெறி கண்டறிவா    ய்
10. கேட்டுக்குச் செல்வழிநேர் கீலக்க மல்லவேவா    ன்
வீட்டிற்குச் செல்நெறிதான் மெத்தநெருக் கச்சுழுக்கா    ம்
11. நெருக்கவழி செல்பவர்க்கே நேராது மோக்ஷமெனி    ல்
குருக்குவழி தேடுகிறாய் கூடாதங் கெய்துதற்    கே
12. தேடினர்க்கே நன்மரணஞ் சிக்குவது கஷ்டமெனி    ல்
நாடிவரு மோவறியேன் நல்லமர ணம் நமை    யே
13. செத்துப் பிழைப்பரில்லை தேவபுத மைச்செயலா    ல்
செத்துப் பிழைத்தவர்சொல் செய்தியொன்றைக் கேள்மக    னே

## 8-ம் பிரிவு. மறுமுறை மரித்தோனுளை.

1. தேசமெலாங் கூடியொரு செத்தமுனி தேகம தை
ஆசந்தி யேற்றி யடக்கநடந் தாரறவோ ர்
2. பூமியினுட் டாழவைத்துப் பூசகர்கள் சூழநின் று
சேமிக்குமன் னேரச் செபங்களையங் கோதுகையி ல்
3. குளிக்குள் ளமைத்தசவங் குந்தியங் கிருப்பதெ ன
விழித்தார் விழித்தவுடன் வேண்டினவ ரோடிவிட்டா ர்
4. உயிரடைந்த வப்பிணமோ வுண்மையொன்று மோதா து
தயிரியமாய் வீடுபுக்கித் தன்னாவாய் மண்ணாந் து
5. கண்மறைத்து வாய்புதைத்துக் கால்முடக்கிக் காதடக் கி
மண்பாலிறந்தவராய் வாழ்நாளைப் போக்கின ரோ
6. பன்னிரண் டாண்டுய்த்திருந்து பாரைப்பிரிந் திடுநா ள்
பின்னிருப்போர் வாய்திறந்து பேசுமென வேண்டிநின்றா ர்
7. பேசுமெனச் சொல்லுகின்றீர் பேதமையாய் நான்நடந்தே ன்
யேசுபரன் கோபவெறி யெவ்வாறுஞ் சொல்லிமுற்று ம்
8. எண்ண நினை வாசைகருத் தீண்டீண்டா றாய்வதினா ல்
பண்ணியிட்ட தானசெபம் பாவமே கலந்துளதா ம்
9. மெய்யசைவு கண்சமிக்கை மேன்மூச்சும் வாய்ப்பேச்சு ங்
கைவீசசுங் கால்நடையுஞ் சண்டிதமே யேதுனைப்பே ண்
10. தீர்வை யெவ் வா றென்றறிந்தால் தீர்க்கமுடனென் றனைப்போ ல்
ஓர்மொழியும் பேசாம லூமையரா வீர்களெ ன
11. இவ்வார்த்தை யையோதி றண்டாவதா யிறந்தா ர்
இவ்வாறாய் நீமரிக்க யென்னவட மானமுண் டு
12. நீண்டநாள் மாவனத்தில் நீண்டதவஞ் செய்தயிவ ர்
மாண்டடைந்த யேக்கமதால் வாயடைத்து வாழ்ந்ததென்றா ல்
13. நாள்முழுதும் வீண்வார்த்தை நாவெடுத்தாற் பொய்புற ணி
கோள்பிரளி யுங்குரளி குண்டணியும் பாடுகிறா ய்
14. இச்செயலோ னுக்கிறுதிக் கென்னமர ணங்கிடைக்கு ம்
நிச்சயமாய்ச் சொல்லுதற்கு நீதியுண்டோ வென்பிறப் பே
15. மீண்டுபிற வாதவர்கள் விண்சேரா றென்றமொ ழி
ஆண்டவரோ சொன்னதுண்டே யாராயு மென்பா யோ
16. ஜென்மகன்மப் பாவமறத் தீக்ஷைபெறார் வானடையா ர்
என்பதிதனுட்கருத்தே யின்னமுங்கே ளென்மக னே

17. மீண்டொருவன் தாய்வயிற்றில் மேதினியில் வந்திறக் க
ஆண்டவரோ செய்யாரே யாறுவென்று ரம்மா னை

## 9-ம் பிரிவு. வயோதிபதிசையனுசுத்தி.

1. நரைதிரை கண்டவர்க்கு நாஞ்சிறிது நல்லுணர்ச் சி
உரைசெய்கிறோ மதையு முன்னகத்தில் வைத்தொழுகா ய்
2. சீலதிசை யையயர்ந்து தீமைநெறி யிற்சுழலு ம்
வாலதிசை யைக்கடத்தி வைத்தவரை தோத்திரஞ்செ ய்
3. எத்தனைபேர் வாலிபத்தி லேக்கமுற்றுத் தீர்க்கமற் று
சித்தமயங்கிக் கலங்கச் சீவியநாளை முடித்தா ர்
4. நீண்டவய திவ்வுலகில் நீடித் திருப்பதனா ல்
ஆண்டவர்க்கு நம்மாலே ஆவதென்ன போவதென் ன
5. பழுத்தபழங் கொம்பிருக்கப் பாத்தியமோ அத்தகையாய் ப்
பழுத்து நரைத்தவரும் பாரமே பூவினுக் கு
6. காய்ப்போய்ந்த மாமரத்தைக் கண்டுகளிப் பாரதுபோ ல்
மூப்படைந்தா லுன்னையுமே முற்றுவிழ லாண்டியென்பா ர்
7. தொல்லை கவலை நம்மைச் சுந்தரமாய் நீங்குமன்றோ ள்
நல்லசவ காசமல்லோ நன்மரணந் தேடுதற் கு
8. சாங்காலம் வந்ததெனச் சாட்சிசொல்லு மவ்வய து
போங்கால் யாத்திரைக்குப் புத்தியின்ன தென்றுரைக்கு ம்
9. சத்தியற்று மெய்யயர்ந்து சாரமற்று வீரமற்று ப்
புத்தியற்ற மூப்பணுகிற் பூமியோர் பிறக்கணிப்பா ர்
10. பூமிநமைத் தள்ளிப் பிறக்கணிக்க நேர்ந்தாலு ஞ்
சாமி பிறக்கணித்துத் தள்ளாரோ சத்தியமா ய்
11. தள்ளாத ஆண்டவரைத் தாழ்ச்சியுடன் சேவைசெய் து
உள்ளன்போ டூழியஞ்செய் துய்வதுந்தன் மீதுகட ன்
12. நீண்டநோய் வந்துருக்கில் நீடூழி ஞாபகத்தை ப்
பூண்டொழுக ஆண்டவர்செய் பூரண கடாச்சம றி

---

**நன்மரண நாடாத்தீமைச் சருக்கம் முற்றிற்று.**

---

ஆகச்சருக்க மேழுக்குப் பிரிவு ஐம்பத்திரண்டுக்கு கூடிய செய்யுள் 1069.

---

## நோயனுசாரச் சருக்கம்.

### விருத்தம்.

சாகவேத வோடிருப்பத் தகுதியென்றுஞ்
சஞ்சலித்தாலெ கஞ்சுருதி தாவாதென்றும்
ஆகமிளைத் தாலடுத்தோ ருதவாவொன்றும்
அவஸ்தைதரு குருவருகை நேராதென்றுந்
தாகமுடனுத்தும சோதனைசெய் யென்றுந்
தக்கமனஸ் தாபமதில் முக்யமென்றும்
பாகமுட னவஸ்தைபெரி லுறுதியென்றும்
பகருவா னரியனும் பகருவானே

### முதல் பிரிவு. சாவுக்கேது.

1. ஞானமது ரக்கனியை நான்தெவிட்டா துண்பதற் கே
தேனுடன் கலந்ததன்மை தேவாமிர்தம் பொழிந்தீ ர்
2. ஆண்டவர்த யையா லவதிமர ணத்தகன் று
மாண்டிடு முன்னேயடுத்து வந்தவந்த நாளையி லே
3. ஏதுசெய்வ தென்பதையு மேழையென்மீ தன்புவைத் து
ஓதுமென்றுன் சற்குருவோ ஓதுகிறேங் கேள்மக னே
4. சாவதுநாள் நேரிடுமுன் சங்கீர்த் தனங்களெல்லா ம்
ஜீவியத்தி னீறிதெனச் செய்துவரி லச்சமி லெ
5. சாவின் குணங்குறிகள் சார்ந்தவுட னுன்னுடை ய
பாவசங் கீர்த்தனத்தைப் பங்கயறச் செய்வதென்னு ம்
6. எண்ணமகத் தெண்ணுதே யெள்ளளவு மாகா து
திண்ணமுள்ள நன்மரணந் தேடுபவன் மார்க்கம ல
7. வீட்டிலேதீ பற்றியபின் வெட்டுகிண றொன்றவன்போ ல்
வாட்டிடுநோய் பற்றியபின் மாளாதுன் னெண்ணமெலா ம்

### 2-ம் பிரிவு. அவஸ்தைப்பூசுதலினருமை.

1. சற்குருவுள் ளூரிலெனச் சற்றுமச்ச மில்லாம ற்
சொற்பமதி யைப்படைத்துத் தோஷவழி செல்லா தே
2. சிற்சிலர்கள் தம்மூரின் தேவால யத்திலுள் ள
சற்குருவை நம்பினதில் தத்தளித்தா ரச்சமய ம்
3. மடத்திற் படித்தவொரு மாணுக்கன் வேசிம னை
இடத்துட் புகுந்துவெளி யேறினு னேறுகையி ல்

4. அந்தவிடம் போக்குவர வாயிருந்த பின்னொருவ ன்
சந்திரனின் காந்தியினூற் சாயலறிந் தோடிவந் து
5. குத்தினனே நெஞ்சிற் குருக்களினோர் வீட்டருகி ல்
குத்துண்டோ னேடிக் குருபாதத் தைப்பிடித் து
6. அவஸ்தை யவஸ்தையென வார்ப்பரித்தா னந்தநொ டி
செபத்தி லிருந்துகுரு சீக்கிரஞ் செபத்தைவிட் டு
7. தச்சணமே யோடிவரச் சத்த மடங்கினதா ம்
அர்ச்சீஷ்ட வெண்ணெய்தொட வாத்துமமு நீங்கின தே
8. ஆகையினா லுன்னவஸ்தை யாருயிர்க் காறுதலா ய்
சாகையிலே கிட்டுமெனச் சத்தியமா யெண்ணு தே
9. இட்டபயிரல்லா லின்னொருப லன்றரு மோ
தட்டனுக்குச் சாங்காலந் துய்யவழி கூடுமல் ல
10. நன்றாயிருக்கையிலே நற்பதவி நாடிந ட
அன்றாகு மென்று துணிந் தச்சமற்று வாழா தே

## 3-ம் பிரிவு. அவஸ்தையாராட்டம்.

1. நோயடுத்தா லுன்னுடைய நோக்கமெலாம் வேறாகி க்
காயமெலிந் துள்ளுடையக் கைகாலுஞ் சோர்ந்துவிடு ம்
2. ஓட நடக்கத்திற முள்ளளவுமாத் துமத்தை த்
தேடமனங்கொள்ளாநீ தேடரிதா மச்சமய ம்
3. பச்சணங்களுங் கசக்கும் பாலுமுமட் டுந்தருண ம்
பச்சாத்தா பப்படுகப் பாங்காய் நினைப்புறு மோ
4. பண்டிதர்க ளோடிவந்து பச்சிலையு மூலிகையு ம்
கொண்டுவர யேவுகையில் கும்பிடநீ போவதெங் கே
5. கால்கள் நடைதவிர்ந்து கையடங்கிக் குக்கியினு ம்
மேல்சொடுங்கி வாடுகையில் விண்கருத்தை நாடுவரா ர்
6. தாய்கசந்து சேய்கசந்து தாரமுமே தான்கசந் து
பாய்கசந்து வாடுகையில் பச்சத்தா பங்கனி யோ
7. பாயில்வலசலமும் பத்தியமுஞ் சூழ்ந்துறுக் க
தூயசிந்தை யெண்ணமுறத் தொந்தனையாய் காணு தோ
8. பண்டிதருங் கைவிரிக்கப் பார்க்கவந்தோர் கள்சலிக் க
பெண்டீர ரவமதிக்கப் பேரின்பங் காணரி தே
9. மேன்மேச்சுள் வாங்குகையில் வீச்சமே லாடுகையி ல்
வான்மோக்ஷத் தைநினைக்க வாய்க்குமோ வாய்க்கரி தே

10. நெஞ்சிற் கவங்கடைய நெற்றியில் வேர்வையெ ழ
துஞ்சுகிரு யென்றுசிலர் சொல்லுவதுன் காதில்வி ழ
11. நாவுளரிப் பேச்சடங்கி நாசிநழுவியபி ன்
பாவசங் கீர்த்தனத்தின் பாதைதுலங் காதுமெய் யே
12. மூச்சுவிடச் சத்தியற்று மூளைசுண்டி ரத்தமற் று
பேச்சடங்க யேசுவென்ற பேருனாக்க நாவெழு மோ
13. நகக்கண் களுங்கருத்து நாவிழுந்துள் ளீரளித் து
முகக்குறியும் பேதலிக்க மோக்ஷநினை வெங்குதிக்கு ம்
14. நரம்புகளெல் லாஞ்சுருங்கி நாடிநடை சோர்ந்திரங்கி ச்
சிரமுருளுங் காலையிலே சிந்தனைகள்செல்லா தே
15. காதடைத்துக் கேள்வியற்றுக் கண்ணிருண்டு பார்வைகெட்டா ல்
ஓதுமுபதேசமெது முண்ணுழையா தென்பிறப் பே
16. தேடியவை யத்தனையுஞ் சித்தாந்த மாய்ப்பறந் து
ஓடிவிடுஞ்சஞ்சலத்தி லோர்நினைவுங் கூடா தே
17. இத்தாதி நஷ்டமெலா மேகமாய்ச் சூழ்ந்தழற் ற
கத்தாவைத்தேடவழி காணவரி தென்பிறப் பே
18. அன்னாட்சங் கீர்த்தனத்துக் காயித்தஞ் செய்யவுன்னி ல்
உன்னாலேலாதுபின்னு மோடிவருங் கஷ்டமுங்கே ள்

## 4-ம் பிரிவு. சாவினதுநஷ்டி.

1. பூவுலக கஷ்டமெலாம் புத்திக்கெட்டா தெனிலு ஞ்
சாவதிலே நேருநஷ்டிச் சம்மான மில்லையில் லை
2. எத்துரித நேரினுமி ஓண்டொருநன் மைகெடு தி
செத்தவனுக் கெத்துயருஞ் சேர்ந்துறழு மோர்தொகுப்பா ய்
3. பஞ்சத்தாள் செல்வமறும் பாளையத்தாற் தேசமறு ம்
வஞ்சகத்தால் நெஞ்செறியும் மாற்றானல் நேசமறு ம்
4. கண்குருட்டாற் பார்வைகெடும் கைமுடத்தாற் செய்கைகெடு ம்
விண்வெளுத்தால் மாரிகெடும் வீரமற்றால் வெற்றிகெடு ம்
5. சாதிபோங் கீழ்தொழிலாற் ருசிகத்தாற் சொந்தம்போ ம்
நீதிபோ மச்சமதா னேருமோ சொல்லெத்துயரு ம்
6. சாவொன்றால் மாத்திரமே சாஸ்வதமாய்த் தேடுகி ற
பூவுலக செல்வமெல்லாம் போய்த்தொலையுஞ் சத்திய மே
7. மட்டில்லாக் காசுபணம் மாடாடு காடுக ளை
தட்டுமுட்டுஞ் சேகரித்துந் தன்னினையெண்ணு ய்

8. தானதன்மஞ் செய்யானாய்த் தானுமுண் டுடுத்தானாய்
ஞானநெறி நாடானாய் நாள்விடுத்த னேருலோபி
9. இக்கருமி சாஞ்சமைய யேங்கியேங்கிப் பார்த்திருக்க
ஒக்கப்பிறந்தாரு முள்ளபங் காளிகளும்
10. வீடுசென்று கொள்ளையிட்டு வீதமானபாகமிட்டு
ஓடுமுதற் கையிலெடுத் தோடிவிடவப்பிசுனன்
11. கண்ணாறப் பார்த்திருந்துங் கையசைக்கக் காலுதர
ஒண்ணாதுவாய்திறந் தோலமிட்டுச் சீவனற்றான்
12. வையகத்தின்பாக்கியத்தில் வைத்தபிடி மானமதால்
ஐயையோ வென்றலரி யாத்துமத்தைப் போக்கடித்தான்
13. தருணத்தில் வேண்டுமெனச் சம்பாதித் தீரவைகள்
மரணத்திலுன்னை மறந்துவிடு நிச்சயமே
14. படிப்பதனால் நல்லுணர்ச்சி பாலிக்குமென்றுகற்றாய்
குடிப்போகுநாளிலவை கூடவருமோ வொருகால்
15. மக்களைக்கண்டு மகிழ்ந்துவளர்த் தாயவர்கள்
பக்கத்திருந்தும் பயனெதுவா மன்னேரம்
16. பஞ்சத்தைக் கார்க்கப் பாடுபட்ட தானியங்கள்
உன்சாவிற்றாங்க வொத்தாசையாய் வருமோ
17. எல்லா மறைந்தொழிய மெல்லாம் பறந்தழியும்
அல்லாம லுன்னவதிக் காறுதலே தாமவையால்
18. வேரில்லா வோர்மரத்தை மெல்லெனப் பிடுங்கிடலாம்
வேரிறங்கினமரத்தை வெட்டாது சாயாது
19. பொன்னாசை பெண்ணாசை பூவுலகத் தாசையென்ற
பின்னாசைவேரோடிற் பேதலிப்பாய் சாந்தருணம்
20. ஆகாகிராஜனவ னாஸ்திசு வாஸ்தியத்தில்
ஏகாதியாயிருந் திறந்திடுங்கால் கூறுகின்றான்
21. கைப்புள்ளசாவேரீ கண்டதன மித்தனையும்
இப்படிப் பிரித்தனையோ வென்றழு திறந்தனனே
22. மட்டில்லா விக்கினங்கள் வந்தமட்டு முன்னவஸ்தை
கிட்டியபின் பாவ சங்கீர்த்தனத்தை நாடுவையோ
23. கூடாது புத்திசித்தங் கூடாதுன் யோசனையும்
ஓடாதிதற்குவதி லோதுவென்றா ரம்மானை

## 5-ம் பிரிவு. குருவையழைத்தல்.

1. ஓதவிடை தந்ததனா லுள்ளரங்கத் துள்ளவொ ரு
சாதனையைத் தாள்பணிந்து சாற்றுகிறேன் சாவதற் கு
2. நோயடுத்து விட்டதெனு நோக்கமறிந் தானுட னே
காயமெலிவாகுமுதல் கற்பனையொன் றென்னவென்று ல்
3. குருக்களை யக்ஷணமே கூட்டிவந்து வந்தவுட ன்
குருக்கள்முன் பாவமெல்லாங் கூறுவதென் திட்டமென்று ன்
4. திட்டப் படுத்துகிறாய் சீடனே சொல்வதைக்கே ள்
மட்டுப்படுத்துகிறாய் (நீ) மாய்வதெந்த நோயா லே
5. இந்தநோயில் மாய்வதில்லை யென்றுபல ரெண்ணியெண் ணி
சந்தேகித் தேமாந்து சாவடைந்தோர் கொஞ்சமல் ல
6. தீருநோய் தீருமெனச் சிந்தித்திருக்க வன்றே ய்
மீரியே கொல்லுமப்போ வீணுமுன் வார்த்தையெலா ம்
7. கண்ணுள்ள நாளிலுனைக் கண்மறைவிற் றூஷணிப்போ ர்
கண்ணுடையு நாளிலுந்தன் கட்டளையைக் கேட்பா ரோ
8. உடையோன் முதுகாமோ வுன்னுடையோர் கண்களெல்லா ம்
தடைகள் பலதுளைப்பார் சாக்கும்பல தெதிர்க்கு ம்
9. அவஸ்தை சொல்லிக்கூட்டிவர வாட்போமோ வல்லதவ்வா ள்
கவுத்துவமாய்த் தாமதமாய்க் கண்மறைவாய்ப் போய்வரு மோ
10. சாவணுகிற் றென்றதிர்ந்து சஞ்சலிப்பா யென்றுருகா ல்
தீவரியாதாறுதலாய்த் தீர்க்கதிடஞ் சொல்வா ரோ
11. ஆத்துமத்தின் மீதுணக்கே யக்கறையில் லாதவுந்த ன்
ஆத்துமத்தை யீடேற்ற வாராத் திரப்படுவா ர்
12. ஊழியருமத்தருண முன்னவதி நோக்கார்க ள்
தோழியரோ நீவருத்துந் தொந்தரைக்கா ளாகார்க ள்
13. மக்களுமன் னேரமுந்தன் வார்த்தையைத் தடுத்திடுவா ர்
ஒக்கப்பிறந்தவரு மொவ்வாத போக்குரைப்பா ர்
14. புனற்பாகம் வைப்பதற்கே போகாதென் றேடுவரு ன்
மனப்பிரியம் போற்குருவை வாவெனப்போ வாரோசொ ல்
15. மூலிகைகள்தேடிவர முன்னதுபின் னாய்நடிப்போ ன்
ஆலயமட்டேகிவர வாக்ஷேபி யார்களோசொ ல்
16. காத்திருக்கமாட்டாது கண்மறைவில் தூங்குபவ ர்
ஆத்துமகுருக்களிட மக்கறையாய்ப் போயலையா ர்

17. சாகிறவன் வாயிலேமண் தன்வாயிற் சாதமென
போகிறவர் மெத்தவுண்டு புத்தியா யோசனைசெய்
18. விடிவிளக் கேற்றயெண்ணெய் வீண்செலவாய்ப் போகுதென்போர்
பிடியாள் பிடித்தனுப்பப் பேசுவரோ கூலிதர
19. தன்வினை தனைச்சுடுமே தப்பாதவஸ்தையிலும்
உன்வினையுனக்கிடரா யோர்சமையம் நீதியுண்டாம்
20. மற்றோ ரவஸ்தையிலெவ் வாறுதவி னாயதுபோல்
மற்றோரு மவ்வாறே வந்துதவு வார்தருணம்
21. எந்தவள வாயளந்தா யெவ்வா றுதவி நின்றாய்
அந்தவள வுந்தனுக்கென் றாண்டவரும் நிச்சயித்தார்
22. குருவையனை போவெனவே கூறாமுன் னேகுருபால்
சுருதியாய் நீநடந்து சொல்லிவந்த துண்டாமோ
23. ஒருநாளிகைவழிக்கா யோர்துணையைக் கேட்பவர்பின்
இருநாளிகைத்தூர மேகிவர வொல்காரோ
24. ஆனாலுங்கேள்மகனே யக்கணமே கூட்டிவரப்
போனாலுஞ் சற்குருவப் போதிருத்தல் சந்தேகம்
25. காற்றுமழை வெய்யலினால் கள்ளரபாயத் தடையால்
ஆற்றுவெள்ளம்ராவிருளா லட்டிவந்து நேராதோ
26. ஆகையினா லுன்னுடைய வாத்துமத்தைச் சுத்திசெய்ய
சாகையிலே தீர்ப்பதென்ற சந்தேகத் தாளாதே

6-ம். பிரிவு. இல்லாருக்கறிக்கை.

1. உற்றோரோபெற்றோரோ யுண்மையுள்ள மற்றவரோ
சுற்றிலுள்ள பெல்லவர்க்குஞ் சொலலுகிறே னம்மானை
2. நோயதிக ரித்துடலை நொந்துருக்கி வாட்டுகின்ற
சாயலை நீகண்டவுடன் சாக்கிரதையா யிருப்பீர்
3. பாவநாச வுச்சரிப்பின் பக்குவஞ்சென் றேகாமுன்
ஆவலாசையுண்டாக வானமதி யோதிவைப்பீர்
4. தயாதீக மானமனஸ் தாபமுற வானபுத்தி
சுயாதீன மேகாமுன் சொல்லியனை யுங்குருவை
5. அவஸ்தைசொலச் சற்குருபா லாளேகச்செய்வதிலும்
விவஸ்தையில் லாதவரை வீணாக வோட்டாதே
6. குருக்களுக் காளனுப்பிக் கூட்டிவரப் போனதன்பின்
இருப்பவர் சிந்தனையற் றேதுநினை யாதிருப்பீர்

7. நோவாளன் றன்பவத்தின் நுண்மையெலாஞ் சிந்தைசெய் ய
ஏவாது நீரிருந்தா லெக்காலுங் கேடடைவா ன்
8. சங்கீர்த் தனச்சுவடி தக்கமுறை வாசிப்பீ ர்
அங்குப தேசியேவந் தாயத்தஞ் சொல்லவையு ம்
9. தன்பவத்துக் குத்தமனஸ் தாபப்ப டும்படியா ய்
நன்மதியை யூட்டுவது ஞாயமாயுங்கட னே
10. சிந்தை பலவாருய்ச் சிதராதிருப் பதற்கா ய்
மைந்தர்மாத ரண்டினனா வற்புறுத்தி நீக்கிவைப்பீ ர்
11. சண்டைமனஸ் தாபமுண்டோ தையலர்கள் சேர்க்கையுண் டோ
உண்டான விக்கினத்தை யோதிவைப்பீர் சற்குருபா ல்
12. அபகரித்த சொத்திருந்தா லானமட்டுந் தீர்க்கவைப்பீ ர்
அபகீர்த்திநீங்குதற்கு வன்னுய ஞல்விடுப்பீ ர்
13. பட்டகடனுத்தரிக்கப் பக்குவமாய்ப் புத்திசொல் வி
திட்டப் படுத்தவெனச் சேர்ந்தோருக் கெச்சரிக் கை
14. பேய்ச்சடங்கு செய்கிலுங்கள் பேரிலுமா பாவமல்லா ல்
நோயனுக்குங் கேடாகும் நுட்பமாய் நீக்கிடுவீ ர்
15. பேதலித்த நோயனுக்கும் பேய்ச்சடங்கு செய்கிலவ ன்
மீதிலல்ல செய்துவைத்தோர் மீதுசா பஞ்சுற்று ம்
16. மீளாத நஷ்டம் வியாதியஸ்த னுக்கணு கி
மூளாதி ருக்கவழி முக்கியமாய்த் தேடிநில்லு ம்

## 7-ம் பிரிவு. பாவஞாபகமுறல்.

1. நோயனேகே ளென்மகனே நூறுண்டு வாழ்ந்தாலு ங்
காயமுயி ராய்ப்பிரியுங் காலமடுத் தோடிவரு ம்
2. ஜீவனுள்ள நாளளவுந் தேடியிட்ட செல்வமென ப்
பாவமும் புண்ணியமும் பற்றுமடா வெக்காலு ம்
3. பாவத்தைப் போக்குதற்கு பாவசங்கீர்த் தனத் தை
தேவத் திரவியமாய்த் தீர்வையிட்டார் யேசுபர ன்
4. பாவசங்கீர்த் தனத்தைப் பக்குவமாய்ச் செய்வதற்கு ப்
பாவங்க ளைக்கணக்குப் பண்ணுவதுன் மேற்கட மை
5. வரவுசெல வின்னதென வம்பேட்டில் திட்டமிட க்
கருதிநினை யாதவோர் கணக்கனெவன் ருனுமுண் டோ
6. கண்காதுவாயாலுங் கைகா லுடலாலு ம்
பண்ணிவந்த தீமையெலாம் பங்குபங்கா யோசனைசெ ய்

7. உண்டுபண்ணி னொகைஷசெய்யு மோர்பொருளே யல்லவென் று
கண்டதெலாந் தெய்வமெனக் கையெடுத்தல் மாபாவ ம்
8. மன்னவ னிருக்க மறு மன்னனுக்குக் கப்பமிட்டாய் த்
தன்னிகரில் லானிருக்கச் சாத்தானை வேண்டினதே ன்
9. ஜென்மசத்து ராதியைநீ தெய்வமென நம்பின தே
கன்மமிதைச் சற்குருபால் கட்டாயமுச் சரிப்பா ய்
10. மெய்யான சத்தியமே வேண்டாமென் றுனையுண் டே
பொய்யானைச் சத்தியமேன் புத்திகெட்டுச் செய்துநின்று ய்
11. மன்னவனைச் சாக்ஷிசொல வாருமென்பா னேநீச ன்
உன்னதன்பே ராலானை யுச்சரித்தாற் பாவமல் லோ
12. தபசுநாள் மேலுமொரு சந்திசுத்தபோ சனக்கட னை
அவமானஞ் செய்திருந்தா லத்தனையு முச்சரிப்பா ய்
13. ஞாயிறுநா ளாசரித்தால் நட்டமுனக் குண்டா மோ
ஆயிரமே வாயத்தாலு மந்தநா ளுன்னதல் ல
14. சாமியுனை மீறினர்க்குச் சம்பாவனை யுள தோ
பூமிபலன் தருமோ புத்தியற்றேன் வேலைசெய்வா ய்
15. ஆறுநாளுந் தனுக்கு மாண்டவனுக் கோர்நாளு ம்
வேறுபாடாக்கியபின் மீறுதற்கு ஞாயமென் ன
16. அன்னை பிதாவைவணங்கி யாசரிக்க ஞாயமுண் டே
குன்னிமன நோகவைத்தாற் குற்றமிசை பாபமி து
17. எவ்வாறுன் மேலவனை யேசியடித் தூட்டினை யோ
அவ்வாறுனக்குறுதி யாரறியா ரிப்புது மை
18. தாயையுந் தந்தையையுஞ் சங்கிப்போ ரெல்லவர்க்கு ம்
ஆயிசுநா ணீளுமென வாண்டவனிவ் வாக்களித்தா ர்
19. சண்டையும்ப கையுமனஸ் தாபங் கொலைகளி வை
உண்டானுற் றீர்க்கமுட னுச்சரிப்பாய் சற்குருமு ன்
20. வயிரத்தை நெஞ்சில்வைத்து வாக்காலுன் பாவமெல்லா ம்
பயிரங்கஞ் செய்கிலுந்தான் பாவமக லாதுறு தி
21. காமத்தையுன் னுவதுங் கண்ணேக்கிப் பார்ப்பதவு ஞ்
சாமிக்கேறுதபவந் தப்பாது வந்தடுக்கு ம்
22. கற்பினுக்கு நேர்விரோத காரியங்க ளிற்சிறிது ம்
அற்பசொற்ப முண்டெனவு மாணவமா யெண்ணு தே
23. ஆசிக்கவுத்தரவில் லாததுனைத் தூண்டிநின்று ல்
மாசில்லாவாசையிதில் வந்துறுத்தா தென்றறிவா ய்

24. பெண்ணாசை நெஞ்சிறுத்திப் பேதையின்மேற் கண்ணெடுத்தா ல்
திண்ணமுள்ளபாவமெனத் தீர்ப்புரைத்தார் யேசுபர ன்
25. சொத்துடைத் தோனைமருட்டிச் சோரனைப்போல் நீகவர்ந்தா ல்
உத்தரித்தால் மாத்திரமே யுன்பாவ நீங்கும தி
26. ஊரறிந்தவேசையையு மோர்வாக்குஞ் சொல்லா தே
பேர்தெளிந்தால் பாவமிகும் பேசாதே பேசா தே
27. ஆமொவர்கள் மீதிலேநீ யாவலாதி சொன்னதுண் டோ
தீரவவர்மீதிலேநீ செப்பிடுவாய் நற்புகழ்ச் சி
28. கற்பனையை மீறவுள்ள கக்கிஷமதைச் செலுத் த
அற்பமேனுமுண்டோவென் றுராய்ந்துபார் புதல் வா
29. கற்பனைகள் பத்துடனே கட்டளைகளைந் திலுந்தா ன்
அற்பமெனயெண்ணும லாலோசி சிந்தையி லே
30. மறைந்தபொரு ளோடி வரவழைப்பாய் ஞாபகத்தி ல்
மறைந்தபவந்தேடி வரவழைக்க வேலா தோ
31. சம்பாஷித் தோர்களினூற் சஞ்சரித்த வெல்லைகளா ல்
ஐம்பொறிகளால் முடித்த தத்தனையுந் தேடியபி ன்
32. வகைதொகைதப்பாது மாற்றாது சாட்டா து
பகைமனதில்வையாது பாசபற்று தல்விலக்கா ய்

## 8-ம் பிரிவு. மனஸ்தாபமுக்கியம்.

1. உன்னுடைய வாத்துமத்தி லுள்ளவச டத்தனையு ம்
என்னவிழைவித்ததென வெண்ணமிடா யென்பிறப் பே
2. ஆக்கலழித் தல்கீற்ற லாகியமூ வல்லவனா ச்
சீக்கழிக்கநிந்தையல்லோ செய்யநினைந் தாய்மதி யோ
3. ஊழியஞ்செய்யென்றரச னுன்கரத்தில் வாள்கொடுக்கி ல்
வாளினால வன்றலையை வாங்குவையோ நீயொருகா ல்
4. உன்னையொன்று மின்றியமைத் துள்ளசமஸ் துங்கொடுத் த்
தன்னூழியம்புரிய ஸ்தாபித்திங் குன்னைவைத்தா ர்
5. ஓர்பவத்தை நீமுடிக்க வுன்னுகிற வன்னிமிஷ ம்
ஆர்தலைக்குக் கற்பிடித்தா யார்க்கெதிரி யாய்முளைத்தா ய்
6. தெய்வமறி யார்புரிந்த தீமையின்றோ ஷங்களினு ந்
தெய்வமறிந் தோனீசெய் தீதுபெரி தென்றுணரா ய்
7. நீசனைப்பகைத்தடித்து நிந்தைசெய்த தீமையிலு ம்
ராஜனைந கைத்தகுற்றம் நாசமுற ஞாயமல் லோ

8. விஸ்தார நன்மையருள் மேலான நாயகனை க்
கஸ்தியுறச் செய்தசெயல் கண்டுசகிப் பாரோதா ன்
9. மன்னவன்றன் ஞேர்மகனை மாழ்கவைத்த தப்பிதத் தை
உன்னிடத்திற் காண்கிலர னுன்னுயிரை வாங்கா , ஞெ
10. தன்சுதனை யெண்ணுது சாகடித்த யெம்பரம ன்
உன்மீது காரமுறி லுன்னையென்ன செய்யார்சொ ல்
11. ஈசனுக்கே ருமையைச்செய் தெவ்வரமும் போக்கடித் தி
ராஜரீகத் தையிளந்து நாடிடைந்தேன் வீடிளப்பா ய்
12. பாவத்தில்மீதுமனப் பற்றுதலை நெஞ்சில்வைத் து
பாவத்தை யுச்சரித்தால் பாவமக லாதுநிச ம்
13. இப்படியா யோர்தனவா னெள்ளவு மாற்றமின் றி
செப்பியதன் பாவமதைச் செய்துசெய் துச்சரிப்பா ன்
14. தக்கமனஸ் தாபமிலாச் சங்கீர்த்த னன்றனக் கு
மிக்கநஷ்டிநேரா து வேதியர்க ளாகுலித் து
15. சங்கீர்த் தனங்கேட்கத் தக்கதல்ல வென்றவ னை
அங்கிகரியாது விட்டா ராணுலோர் வேதமு னி
16. மற்றக்குருக்களைப்போல் வற்புறுத்தித் தள்ளா து
உற்றபடிபாவமவ னுச்சரிக்கச் சேட்டுவந்தா ர்
17. பாவத்தை விட்டெழுகாப் பாவியோவி யாதியுற்று ச்
சாவதற் கவஸ்தையெனச் சாமிக்கோ ராளைவிட்டா ன்
18. அன்னேரமக்குருவு மட்டிசெய்யா தோடிவ ர
அன்ஞேயன் னேர்வரக்கண் டாத்திரத்தோ டோதுகின்ரு ர்
19. நல்லசுகத் தோடிருந்தும் நம்மிடத்த வஸ்தையென்றே ன்
சொல்லிவிட்டாய் பாவியெனச் சொல்லுகின்ரு னேரடுத்தோ ன்
20. நானுலக வாசியல்ல ஞாலமிசை நாசமுற் ற
றீநரகவாசியுன்ஞற் செல்வகதி யையிழந்தே ன்
21. மற்றுங் குருக்களைப்போல் வற்புறுத்தி நீ வெறுத்தா ல்
முற்றிலு மனந்திரும்பி மோக்ஷகதி சேர்ந்திருப்பே ன்
22. உன்னிளக்காரப்பிசகா லூழியில்நான் வீழ்ந்ததனு ல்
என்னுடனீயூழிபெற யேகாதி தீர்வையிட்டா ர்
23. ஆதலாலென் பங்குபெற வாத்தும சரீரமுட ன்
பாதகனே வாவெனவே பற்றியிழுத் தேகினனே
24. பாவத்தைச் செய்துசெய்து பாவமுச் சரித்துவந்தா ல்
பாவநாச மாகுமென்று பாசாங்கா யெண்ணு தே

25. பாவத்தைச் செய்தபின்போய்ப் பாவமுச் சரிப்பதென் ற
தேவகோப சாபமதைத் தேடியுங்கொள் ளாதே நீ
26. பெற்றதந்தை யையடிப்பேன் பேசிவைவேன் கால்பணிந்தா ல்
குற்றமறப்பானெனநீ கூறுவது நீதிமல் ல
27. பலநாளி லுந்திருட்டுப் பண்ணினவ னைப்பிடித்தா ல்
உலகரவ னைச்சீக்ஷை யொட்டிரொட்டி செய்யா ரோ
28. நல்லமனஸ் தாபமின்றி நாளெல்லா முச்சரித்தா ல்
பொல்லாங்கு சாஸ்திவரும் புத்திகெட்டுப் போகா தே
29. தக்கமனஸ் தாபமற்ற சங்கீர்த்தனங் களிறு ல்
எக்காலும் பாவமன்னிப் பில்லையெனல் நிச்சய மே

## 9-ம். பிரிவு. நற்பிரதிக்கினை நெறி.

1. புண்ணியத்தின் றீபமெனப் பூமியிலே காணலுற் ற
எண்ணரிய வாத்துமங்க ளெய்துகிறூர் தீநரகி ல்
2. கன்னிதிரோ சாயியென்பாள் கண்டவொரு காக்ஷியி லே
வன்னிநடு வாத்துமங்கள் மாமழையாய் வீழ்வதற் று
3. எப்பவத்தாற் றீநரக ரொண்ணதிக மாவதெ ன
அப்பவத்தைக் கண்டறிப வாண்டவனை வேண்டிவந்தா ள்
4. வேண்டிவந்த கன்னியர்க்கோ மெத்தவுநாட் சென்றதனபி ன்
ஆண்டவனோர் காக்ஷிகொடுத் தாகமிகள் மாத்திர மோ
5. விண்ணுலகச் சம்மனர்போல் மேன்மைநெறி யாய்நடந் த
புண்ணியருந் தீநரகிற் போய்விழுவார் கன்னியென்று ர்
6. இம்மொழிகேட்டம்மடந்தை யேவரிந்து நெஞ்சுலர்ந் து
சம்மனசோர்க் கொப்பனையாய்த் தாலமிசை நாள்விடுத்தோ ர்
7. எக்காரணப்பிசகா லித்தாதி பேறிளந் து
அக்கினிக்கே பக்ஷணமா யானதென வேண்டினட் கு
8. தக்கமனஸ் தாபமுந்த குந்தபிர திக்கினையு ம்
முக்கியமென் றெண்ணுதால் மோசமா னூர்க ளென்று ர்
9. அடிக்கடிசங் கீர்த்தனஞ் செய் யாசார மென்றுசில ர்
படிப்படியாய்த் தெய்வபய பற்றுதலை விட்டிடைவா ர்
10. வருஷக்கடன் செலுத்தும் வாடிக்கை யென்றுசென் று
ஒருகதைச் சொல்லுதல்போ லுச்சரிப்பார் வேறுசில ர்
11. பாவகன்ம மீதிலுள்ள பற்றுதல்நீக் காதமட்டி ற்
பாவசங்கீர்த் தனமாய்ப் பாணிக்கப் போகா து

12. ஓர்பவத்தில் மாத்திரமே யுட்பிரியம் வைத்திருந்தா ல்
சீர்கெட்ட தச்சமயஞ் செய்தசங் கீர்த்தனமு ம்
13. ஆனமனஸ் தாபத் தடையாள் மென்னமெனி ல்
ஆனபிரதிக்கினைதா னப்பனே கண்டறி யே
14. செய்தபிரதிக்கினைகள் தீர்க்கமற்றுப் போவதெனு ம்
ஐயமனத் துட்செனிக்கு மாயினுநான் சொல்வதைக்கே ள்
15. வண்ணார் வெளுத்தவெள்ளை மாறியழுக் காகுமென் று
எண்ணும லீய்வதுபோ லென்றுபிர திக்கினைசெ ய்
16. உன்மனஸ் தாபத்திடமு முன்னுடைய துற்பலனு ம்
நன்கறிவா ரெம்பரமன் நல்லபிரதிக் கினைசெ ய்

## 10-ம். பிரிவு. உச்சாரண விலக்ஷணம்.

1. சற்குருக்கள் வந்தவுடன் சாஷ்டாங்க நிஷ்டைசெய் து
பொற்பதத்தை யண்டியேநீ பூசிப்பா யன்னேர ம்
2. தீண்டிய விஷமிரக்கத் தேவுலகி லேயிருந் து
ஆண்டவரனுப்பிவைத்த வாரியனு கப்பணிவா ய்
3. குருஸ்வாமி வந்ததெனக் கொள்ளாது நம்யே சு
பரமகுரு வாயவனைப் பாவிப்பா யென்மக னே
4. பரன்யேசு நாயகருன் பாவசங்கீர்த் தனத் தை
தருமகுண மாய்க்கேட்பார் சாக்ஷிவிசா ரிப்பதில் லை
5. பாவமெலாஞ் சங்கரிக்கும் பாவசங் கீர்த்தனத்தா ற்
சாபமதைப்பெற்றுத் தணல்நரகில் வீழா தே
6. எப்பவுமும்முன்னறிந்த யேசுபரன் காதருகி ற்
செப்புவது போற்றெளிவாய்ச் செப்பநினை தப்பற நீ
7. எண்ணெய்க்கு டம்போ விழுவலாய்ப் பேசா து
தண்ணீர்க் குடம்போலத் தாராளமா யுரைப்பா ய்
8. குருக்களின் காதருகிற் கூச்சமற்றுன் குற்றமெலா ம்
வருக்கமா யுச்சரித்தால் மாளுங்கால் மீக்ஷியுண் டு
9. கூச்சமுற்று வெட்கம்வைத்துக் கூட்டியுநீ சா டியுமு ன்
பேச்சிற் சுளுக்குவைத்துப் பேசுவது மாகெடு தி
10. பாவகுணத் தைக்குறைத்துப் பாசாங்கா யுச்சரித்தா ற்
சாவதுநா ணேருகையிற் சந்தேகங் கொண்டுவிடு ம்
11. உள்ளநோய் சொல்லாவு ரோகஸ்தன் மாய்வதுபோ ற்
கள்ளச்சங் கீர்த்தனத்தின் காரியமு நாசமப் பா

12. கன்னியிளந் தையொருவி காரணக்கு ருக்களிட ஞ்
சொன்னாள் தன்பாவமெலாஞ் சொல்லுகையி லோர்பேயோ ன்
13. கன்னிகையா ளோடிருக்கக் கண்டுகுரு வாத்திரமா ய்
என்னசெய்கைக் கிங்குவந்தா யென்றுரைக்கப் பேயுரைப்பா ன்
14. இம்மாதிடந்திருடி யேகினதோர் நாணயத் தை
நம்மதல்லவென்றீய நாடிவந்தேன் யாதுவெனி ல்
15. நாணமெனும் பொக்கிஷமே நான்திருடிப் போனதந் த
நாணயத்தையீய்ந்துவிட நாடிவந்தே னென் றறைந்தா ன்
16. குறைத்துச் சரிப்பதற்குங் குற்றங்க ளிற்சில தை
மறைத்துச் சரிப்பதற்கும் வாதுசெய்வான் பேயடுத் து
17. பாவசங்கீர்த் தனத்தைப் பங்கமற நீமுடிக் க
ஆவலுடன்குக்ஷநெறி யாரியனே கூறுகிறே ன்
18. பெரிதான பாவமொன்றைப் பிற்பாடு சொல்வதென் று
சிறிதான குற்றமுந்தச் செப்பாதே கேடடைவா ய்
19. பதிவிலே கண்ணிவைத்துப் பட்சிவேட்டை யாடுவர்போ ற்
சதியான போதகஞ்சொல் சாத்தானின் கண்ணியி து
20. பாவசங் கீர்த்தனத்தைப் பண்ணுதலத் தைப்பார்த்து க்
கோபமுட னேயொருபேய் கூறியதைக் கேள்மக னே
21. அங்காங்கு தேடியவென் னுஸ்திகளா மத்தனையு ம்
இங்கிழந்தே னேயோவென் றேவரிந்து கூறினதா ம்
22. ஆதலாலுன் பாவமெலா மாண்டளந்து கண்டறிந் து
சாதகமாய்ச் சற்குருபாற் சாக்கிரதை யோடுரைப்பா ய்
23. உன்பவத்தை யந்தமுனி யோர்பொருட்டா யெண்ணுவ ரோ
உன்பவத்தி லுங்கனமா யுச்சரிக்கச் சேட்டிருப்பா ர்
24. சங்கீர்த் தனந்தீர்ந்தாற் சாவாயென் றோர்தூத ன்
சங்கேதஞ் சொன்னதுபோற் சத்தியமா யுச்சரிப்பா ய்
25. உச்சரிக்கக் கேட்டகுரு வோதுமதி கண்டனையு ன்
ரெக்ஷணைக்குறியதென நிச்சயித்துக் கொள்வா யே
26. பார்நோய்க் கவிழ்தமுண்டு பத்தியங்கா ராவெவனு ஞ்
சீரழிந்து போவதுபோல் திஷ்டாந்த மாய்முடியு ம்
27. ஒதியசங் கீர்த்தனத்தி லுன்பவங்க ணீங்குமெனி ல்
ஏதுவிதியாற்குருக்க ளிட்டதப ராதமெனி ல்
28. உத்தமனஸ் தாபத்தோ டோதியசங் கீர்த்தனத்தா ல்
நித்தியத்தி னுக்கினைதான் நீங்குமிது சத்திய மே

29. அனித்தியத்தின் நித்தியத்தி னுக்கிணையி ரண்டினி லே
அனித்தியத்தி னுக்கிணையை யாற்றுமப ராதம றி
30. இட்டவப ராதமதை யீங்கிஷ்மாய் நீமதித்து க்
கட்டாய மாய்விடுத்தால் கத்தருமே கைவிரிப்பா ர்
31. பாவசங் கீர்த்தனநீ பண்ணிமுடி வானவுட ன்
தேவநன்மை கையேற்றுத் தேவையெதோ கத்தரைக்கே ள்
32. உன்னவச ரங்களைநீ யோதியிச லாடியபி ன்
நன்மரணப் பேறுதர ஞாபகமாய் வேண்டுதல்செ ய்

## 11-ம் பிரிவு. அவசிநிற்கிரகம்.

1. அவஸ்தைப்பூசு தல்பெறுமுன் னூர்மேல்வி ரோதமுண் டோ
விவஸ்தையுடன் நீயிருக்கும் வேளையவ ரையளைத் து
2. உன்பிழை களைப்பொறுத்தே னுண்மைமனச் சாக்ஷியுட ன்
என்பிழை களைச்சகிப்பா யென்றுறுதி நீபகர்வா ய்
3. அச்சமயத் துன்னினத்தா ராகாதென் றோதுகிலு ம்
இச்சகக் சொற்கேளாதே யீடேற மார்க்கமல் ல
4. தன்னகத்தை நாடுகிற சத்துருசொல் நம்பாம ல்
உன்னலத்தை யுத்தேசித் துன்விரோதி யைச்சிநே கி
5. எப்படிப்பி றர்குறைக ளெல்லாம்பொ றுத்தனை யோ
அப்படியுன் பாவமெலா மாண்டவர் சகித்தருள்வா ர்
6. மன்னிப்பு நீயளித்தால் மாத்திரமே நிச்சயமாய் ப்
பொன்னுலகவீட்டிற் புகுதலெளி தாமக னே
7. உள்வன்ம நெஞ்சிறுத்தி யுச்சரித்த வாக்கியத்தி ற்
கள்ளமனஞ் சார்ந்தமையாற் கட்டாயங் கேடடைவா ய்
8. உன்மீதி லாரொவர்க்கு முண்டுமனத் தாங்கலெ ன
உன்னிலவ ரைப்பொறுதி யூக்கமுடன் கேட்டடைவா ய்
9. காணிக்கை செய்திடப்போங் காலையய லான்மன து
கோணிய தெனநினைத்தாற் கொண்டுவந்த நேர்த்தனை யை
10. செலுத்தாது முன்பவனைச் சீர்ப்படுத்தி மீண்டுவந் து
செலுத்துகா ணிக்கையென்று தீர்ப்புரைத்தார் யேசுபர ன்
11. அயலான்மனமிலனு யாக்ஷேபித் தாலெனிலு ம்
பயமனதிற் கொள்ளாதே பாக்கியத்திற் பங்கடைவா ய்
12. ஆரொவர்கள் மீதிலுநீ யாவலாதி செய்திருந்தால் ல்
ஊரறிய வுண்மையெதோ வுச்சரித்தால் நன்மைதரு ம்

13. தையலர்கள் சேர்க்கையுண் டோ சத்தியமாய் நீக்காயே ல்
தெய்வசா பனையடைந்து தீநரகில் வீழ்ந்தளிவா ய்

## 12-ம் பிரிவு. இறுதியிலுத்தரித்தல்.

1. இன்னுமுனக் கிறந்நா ளெய்துமுத லென்சுத னே
உன்னினைவை வாட்டுசில வுண்டவைகள் யாதெனி லோ
2. திருடியபகரித்துத் தெட்டிவைத்த சொத்திருந்தா ல்
வருடியதுத்தரித்த மட்டி லுனக் கச்சமில் லை
3. பிள்ளைகளைநம்பாதே பெண்டீரு மற்றவரு ம்
எள்ளளவு முத்தரியா ரெல்லாமுந் தம்மதென்பா ர்
4. பட்டகடனைச் செலுத்தப் பாத்தியப் படாதமக்க ள்
தெட்டிவைத்த துத்தரிக்கச் சிந்தைசெய்வா ரோமக னே
5. உன்னிறுதிநேரமு னுன்கடன்க ளத்தனையு ம்
பின்துடர்ச்சியில்லாது பேர்த்திசெய்வ துத்தம மே
6. தம்பியுன் னடைக்கலத்தில் தங்கள்பொருளை யெவரு ம்
நம்பிவைத்த துண்டானல் நட்டாற்றி லோட்டா தே
7. மனமாற வுன்கரத்தால் வஞ்சியாதீ நன்றுகு ம்
உனதுறியர் செய்வாரொன் றேதிலதிற்சாரமில் லை
8. உன்னுழையலால்தேடி யுண்டமைத்த சொத்துக ளை
பின்பிறக்கும் பிள்ளைகட்காய்ப் பேணிவைப்பா ரன்றிமக்க ள்
9. தான்பிளைக்கச் செய்தளைக்கத் தாரமானவள் செளிக் கா
தேன்பிணைப்பட் டுத்தரிப்பா ரீரமற்ற யெண்ணமி தே

## 13-ம் பிரிவு. அவஸ்தைப்பூசுதல்.

1. அவஸ்தைபெற் றோர்சாவார்க ளன்றிமீட்பில்லையென் று
விவஸ்தையி லாதுசிலர் வேண்டாமென் றேதுகின்று ர்
2. அவஸ்தைபூசு தல்பெறுவோ னுத்துமத்தில் மீந்திருக்கு ம்
பவத்தைத்தொ லைத்துடற்குப் பண்டிதனு மாகும து
3. அன்றியு முன்னுத்துமத்துக் காறுதலுந் தேற்றரவு ம்
என்றிதனை நிச்சயிப்பா யீருந்த வச்சமய ம்
4. சரீரத்து நோய்களையுஞ் சாந்தப்படுத் தினதா ய்
பரிட்சித்துக் கண்டிருந்தும் பாதகமே னெண்ணுகிறு ய்
5. தற்சமய சஞ்சீவி சாந்தருணம் வாய்த்திருக்க ப்
பிற்சமய மேற்பதென்றுற் பேதையுனைப் போலுமுண் டோ

6. அவஸ்தை யில்லாதுசிலர்க் காத்துமம் பிரிந்ததினா ல்
அவதிச்சா வென்றே னவதூறு பேசுகின்றா ர்
7. பவத்தின்மே லுத்தமனஸ் தாபமாயு யிர்பிரிந்தா ல்
அவஸ்தை பெருவிடினு மாத்தும மீடேறுமெய்யா ய்
8. இங்கிலத்தோ ரிராஜ்ஜியத்தி லேயிருந்த வோர் வே சை
சங்கீர்த்தனஞ் செய்பச் சந்தியின்றி மாய்ந்ததன்பி ன்
9. தோன்றியொரு மாமுனிக்குச் சொன்னமொழி யாதுவெனி ல்
மூன்றாநாள் வீய்ந்தவள்நான் மோக்ஷதல மேகுதுநீ ர்
10. செய்தபிர சங்கமெதென் சிந்தைமெழு காயிளக் க
மெய்மனஸ் தாபத்திறந்து வேதனைஸ்தலத் தமர்ந் து
11. இன்றுவேத னைமுடிந்த திந்தநன்றியை நினைந் து
மன்றாடு வேனுமக்காய் வாழியென வேகின ளே
12. ஜீவியர்கள் போலிருந்து தீயடைந்தோர் மெத்தவுண் டு
பாவிகள்போல் மாய்ந்து பரஞ்சேர்ந்தோர் கொஞ்சமல் ல
13. தேவனல்லோ வாத்துமத்தைத் தீர்வையிட வல்லவரா ம்
பாவியெனத் தீர்மானம் பண்ணுவதே மாகெடு தி
14. அன்றியுநீ மாய்ந்தபின்புன் னாத்துமத்தைச் சிந்தைசெய் ய
என்றுபொரு ளக்குருபா லீய்ந்துவைத்தால் நன்மையென்றா ர்

## 14-ம் பிரிவு. பதவிக்குதவியைத்தேடு.

1. நன்மையென வாக்களித்தீர் ஞானமருள் மாமுனி யே
என்மனதி லுள்ளதையு மிச்சமயங் கூறுகிறே ன்
2. எத்தனையோ காசுபண மேற்கனவே தேடிவைக் க
அத்தனையு மாளுமக்க ளென்னைபிதா வைமறவா ர்
3. மாண்டுத்தரிக்குமெமை மக்களேம றந்துவிடி ல்
ஆண்டவர வர்களுக்கு மாக்கினைசெய் யாதுவிடா ர்
4. பெற்றவர் களுத்தரிப்பில் பிள்ளையுத வாதிருக்கு ங்
குற்றமப் பிள்ளைகட்குக் கோரவதை யைப்பயக்கு ம்
5. பழிவாங்கத் தாய்தகப்பன் பத்தியுடன் வேண்டிநின்றா ற்
பழிகேளா தெம்பரமன் பார்த்திருப்பா ரோவவ னை
6. ஆதலினாலிக்கடனை யன்னவர்கள் தீர்ப்பபொ ன
சாதகமாய் நம்புகின்றேன் சற்குருவே ஞாயமென்றா ன்
7. ஞாயமென வோதுகிறாய் நாடறிந்த சம்பவத் தை
நீயறியா னாதலினால் நின்னுரையும் ஞாயமல் ல

8. தேட்டாள ஞோர்புதல்வன் தேடிவைத்த தந்தைய னா
ஒட்டிலிரந் துண்ணவிட்டா னுண்டிறந்தா னவ்வுட லை
9. கொண்டாட்டஞ் செய்தெடுத்த கோலாகா லக்களிப்பை க்
கண்டவர்கள் தூஷணிக்கக் கண்டமக ஞேதுகிரு ன்
10. நல்லடக்கஞ் செய்வதுவும் நற்பதவி சேர்ப்பதுவு ம்
அல்லவோ சுகிர்தமென்ரு னவ்வாறுஞ் செய்ததில் லை
11. திங்களி லடக்கிமறு திங்களிலூ ரேசியபி ன்
பங்குவிதஞ் சேகரித்துப் பண்ணிவைத்தா ஞேர்பூ சை
12. அன்றுமுதற் கல்லறைக் கடையாள நானறியே ன்
இன்றுமக னக்குழியை யெங்கிருப்ப தோகுறியா ன்
13. மாய்ந்த வுடன்பூசைவைக்க வன்மனஞய் நிற்குமக்க ள்
மாய்ந்துசில நாட்கடந்தால் மக்களல்ல யின்னமுங்கே ள்
14. லெக்ஷாதிப ஞெருவன் நேயமூன்று புத்திர னா
பக்ஷமுடன் கூவவவர் பக்கல்வர் தடைந்ததற்பி ன்
15. ஆங்கால முங்களுக்கா யாஸ்தியெலாந் தேடியிட்டே ன்
போங்காலம் வந்ததெந்தன் புத்திரரோ யென்னுயிர்க்கா ய்
16. யாதுதன்ம நீர்புரிவீர் நம்புதலா யானிறக் க
ஓதுமென மூத்தமக னுண்மையுறக் கூறியபி ன்
17. நடுவிலவ னவ்வாறே நம்புதலாய் வாக்குரைத்தா ன்
கடசிமகன தாதைசொற்குக் கட்டிணங்காச் சொல்மொழி ய
18. இருபுதல்வர் சொல்வசன மேற்றுனந் தித்தபி தா
ஒருபுதல்வன் வாசகத்தா லுள்ளுளைந்து மூச்செறிந் து
19. தாதைகண்ணீர் விட்டழுகச் சார்ந்தவர்கள் கூடிவந் து
தாதையுயிர்க் கென்றிரங்காச் சண்டாளா வென்றுரைத்தா ர்
20. பெற்றவர்க ளாத்துமத்தைப் பிள்ளைகள்பே ணக்கடன்று ன்
உற்றபடிக் கிம்மதியை யொப்பினன்மெய் யானலு ம்
21. ஆத்துமத்தின் மேற்றமக்கே யக்கறையில் லாதிறந்தா ல்
பாத்தியப்பட் டின்னெருவன் பாதுகா வானறியே ன்
22. தன்னுயிர்க்காய்த் தன்கரத்தாற் றன்பொருளை நேராம ற்
பின்னெருவர்க் காத்திரமோ பேசுகிறீர் தந்தையென்று ன்
23. அம்மனித னிம்மொழிகேட் டாஸ்தியிலோர் பங்கெடுத் து
அம்மனிதன் னாத்துமத்துக் காதரவு தேடின னே
24. பிள்ளைமறந் தாலுமுந்தன் பெண்சாதி யெண்ணுவ ளோ
எள்ளளவு நம்பாதே யிம்மனதைக் காணரி தே

25. பத்தினி யொருத்தியவள் பத்தா விறந்ததனா ற்
கத்தியலறிக் கொழுனன் கல்லறையே தஞ்சமென் று
26. இரவுபக லோலமிட் டெள்ளளவும் பானமற் று
ஒருவருனா கேளா துயிர்மடிப்பே னென்றிருந்தா ள்
27. அன்றோர்கு லைஞனைய டுத்தோர் குலைக்களத்தி ற்
கொன்றிருந்தார் தூக்கிவிட்டுக் கோமானின் நீர்வையினா ல்
28. கழுவிருந்த வப்பிணத்தைக் காத்திருந்த சேவக னோ
அழுகுரலி னோசையைக்கேட் டந்தநடு ராத்திரியி ல்
29. நெருங்கி யமுதளித்து நேத்திரத்தி னீர்துடைத் து
உறங்கிவிழித் தக்கணமே யோடினான் காவலுக் கு
30. கழுவிருந்த வப்பிணத்தை கள்வரெடுத் தானதென்று ம்
அழிவுநாள் வந்துதனக் காயுள் முடிந்ததென்று ம்
31. அழுதிருந்த மாதிடம்போ யையோயேது செய்வே ன்
கழுவிலொரு பிணத்தைக் காத்திருந்தே னென்வே லை
32. நான்காவல் விட்டநொடி யாரெவரோ கண்டறிந் து
தான்மோசஞ் செய்யச் சவத்தையெடுத் தோடிவிட்டா ர்
33. டாணாக்க ளோடிவந்து ராயனிடஞ் சேர்ப்பா ரோ
காணாமற் போனதனால் கட்டியடித் தோட்டுவ ரோ
34. என்றவன் கலங்குவதை யிம்மாது கண்டிரங் கி
ஒன்றுக்கு மஞ்சாதே யுன்னுயிரை ரெக்ஷைசெய்வே ன்
35. என்னவித மீட்பதெனி லிவ்விடமடக்கி வைத் த
என்புருட னுருடலை யேந்தியெடுத் தக்கழுவி ல்
36. ஏற்றிவைப்ப தேயுறுதி யென்றிருபே ருந்துணிந் து
நாற்றப் பிரேதமதை நட்டகம்பத் தேற்றிவைத்தா ர்
37. பிணமறை வானதன்பின் பெண்சாதி தான்பிளைக்கு ங்
குணமடைவா ளென்றியவள் கொண்டவனை யெண்ணுவ ளோ
38. உத்தரிப்போ ருற்சவத்தி லோர்பணங் கொடுத்தெழுத ச்
சித்திரக் கணக்கெடுத்துச் சேகரிக்கு மார்க்கமுங்கே ள்
39. ஆறுபேர் சோதரர்க ளாறுதுட்டுப் பங்கென வே
கூறிடுவா ரப்பணங் கொடுக்கவகை யில்லையென்பா ர்
40. பங்கும்பங் காளி பலபேராய்ச் சேர்ந்துவிட்டா ல்
பங்கிலொரு காசெனவே பாகித்துத் தண்டல்செய்வா ர்
41. பெற்றோர்கள் சொத்தைவைத்துப் பேணிப்பிழைக்கு மக்க ள்
முற்றிலு மறந்தசெய்கை மூதலிக்க வேண்டிய தோ

42. மரித்தபிதா வைமறந்த மைந்தனுத் தரிக்கிறநா ள்
இருப்பவர்செய் பேறுதந்தைக் கெய்துமெனச் சிந்தையில் வை
43. இறந்தவின ராத்துமத்தை யேதொருவன் முன்மறந்தா ல்
மறந்தபிழைக் கத்தரும மாயந்த முன்னோர்க் கேசாரு ம்
44. சாகிறவனுக்கேநீ தன்மமிட வாக்குறு தி
யாகினதேயுண்டானா லக்கணாயாய்ச் செய்துமு டி
45. எவ்வளவாய் நீயளந்தா யெத்தருமஞ் செய்துநின்றா ய்
அவ்வாறுன் னுத்தரிக்கு மாக்கினையுந் தீரும றி
46. உன்னறத்தாற் பேறுபல னொன்றுக்கு நூறாகு ம்
பின்னெவர்கள் செய்கையிலும் பேறுபலன் மாகுறை வே
47. என்பதனால் நீயவஸ்தைக் கேதுகர மாமுத லே
உன்பதவிக் கித்துணையே யோதுவென்றா ரம்மா னை

15-ம் பிரிவு. தெய்வசித்தமே நமது பாக்கியம்.

1. ஓதுவென்றீர் ஞானியருக் கோர்விளக் கெனத்துலங்கு ம்
வேதமுனி யேயடியேன் விண்ணப்பம் யாதுவெனி ல்
2. இந்தமட்டில் நீர்மொழிந்த வெப்பொருளை யுற்றுணர்ந்து ம்
அந்தமர ணத்தினினை வச்சமெனை நீங்கவில் லை
3. எந்தவித மேழைமன மிம்மரணத் தைத்தழுவு ம்
அந்தவுபா யத்தைமொழிந் தாற்றுமெனத் தாள்பணி ன்
4. ஆற்றுமெனக் கூறுகின்றா யன்புமிகுந் தம்பிய ரோ
தேற்றர வுண்டாகவழி செப்புகிறேங் காதுகொ டு
5. வானுலகிற் பூவுலகில் மற்றுமுள்ள யாவுலகி ல்
தானமைத்தோன் சித்தமல்லாற் சம்பவிப்ப தேதுமுண் டோ
6. ஜீவாதிவஸ்துகளுஞ் சீவனற்ற வெப்பொருளு ந்
தேவாதி சித்தமெதோ செய்வதறி யாயோ நீ
7. உடலுயிரி ரண்டினையு முண்டுசெய்தே யொன்றுசெய் த
கடவுளரின் சித்தமதே கட்டாயந் தேரும றி
8. சாகப்பிறந் ததுமெய் சாகாதிருப் பதுபொ ய்
சாகப்பயந்ததனால் தப்பமுடி யாதுறு தி
9. தெய்வசித்தத் துக்கமைந்து ஜீவனையுஞ் சாவினையு ம்
மையமன மாய்மதிக்கில் மாசுகிர்தம் பேறடைவா ய்
10. தேவசித்தத் துக்கிடராய்ச் சீவன்மே லாவலுற்றா ற்
பாவமதனால் விளையும் பாக்கியமுங் கண்டடையா ய்

11. என்னுேடி சாவெய்தானு மேங்காது தேவசித்த ம்
உன்னிட முண்டாகவென வொப்பினுற் பாக்கிய மே
12. ஆமெனநீ சம்மதித்தா லல்லது நிராகரித்தா ற்
போமெனச் சாவுன்னைவிட்டு பூரணத்திற் கொள்ளா தே
13. மனிதனினைப்பது போல் வாழவுண்டோ மண்ணுலகி ல்
உன துரினைவால் மயிறிலொன்றை வெண்மைசெய்வா யோ
14. வேண்டும் வேண்டாமெனிலும் வீய்வதுநாட் சாவதுமெ ய்
ஆண்டவரின் சித்தமெதோ வங்கிசரி யம்மா னை

நோயானுசாரச் சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கமெட்டுக்குப் பிரிவு அறுபத்தேழுக்குக்கூடிய செய்யுள் 1374

68165

O6:417
N14

## உயிரோகு சருக்கம்.

### விருத்தம்.

ஈறாந்தவவஸ்தைபெற் றாலினப்பேய்கள் சூழுமென்றுங்
தேறாதுபேயுங் கூடிச்சித்தமதை மருட்டுமென்றும்
ஏறாகமனப்பேய்நின்று யிசலாட்டஞ் செய்யுமென்றும்
வாறானமூன்று பொக்கும்மரணமு மறைகுவாமே.

முதல் பிரிவு. இனப்பேய்கள்.

### அம்மானை.

1. தருணமெனை நோய்வருத்தச் சாமிசெயத் தாலடியே ன்
மரணவாச லுட்புகுந்து வந்துசருக்கம் பகர்வே ன்
2. அந்திய காலக்கடமை யத்தனையுந் தீர்ந்ததென ச்
சந்தோஷத் தோடிருக்கத் தக்கதல்ல வத்தருண ம்
3. அங்கமென்ற முந்தினபே யாக்கமற் றிருப்பதுமெ ய்
வங்கணப்பேய் கூடிவந்து மாமோசஞ் செய்யும தி
4. தாரணிப்பேயென்ற வுந்தன் தாய்தகப்பன் பெண்டுபிள் ளை
பூரணமாய் நீகெடவே போதகராய் வந்திருப்பா ர்
5. ண்மறைவிற் சாத்தான் காரணங்கள் காட்டிநிற்கு ங்
கண்ணெதிரி லுன்னினப்பேய் காக்ஷிகொடுத் தோதவரு ம்
6. சாகிறவன் றன்னுயிரைத் தற்காக்க வொட்டா து
ஏகமாய்ச் சாதிஜன ரொல்லவருஞ் சூழ்ந்துநின் று
7. மெஞ்ஞான யெண்ணமுன்னை விட்டோடி நீமரிக் க
அஞ்ஞான சாஸ்திரங்க ளத்தனையுஞ் சேகரிப்பா ர்
8. சாவுக்குஞ் சீவனுக்குஞ் சாமியல்லோ காரணரா ம்
ஆவியைநி லைநிறுத்த வாகுமோ மந்திரத்தா ல்
9. பாம்புதீண்டி னாலுடனே பண்டிதஞ் செய்யாதலைந் து
சாம்பல்கொண்டு மந்திரித்துச் சாகவரங் கேட்பவர்போ ல்
10. வந்தநோய் பேய்களினால் வந்ததென மந்திரிக்க ச்
சொந்தவினைப் பேயடுத்துச் சொல்லுமதை நம்பா தே
11. உந்தனுட லோடுகெற்பத் துற்பவித்த நோய்களையு ம்
வந்தடுத்த வல்லலையும் மாறாட்ட மென்பானே ன்
12. ஊராரோ வந்தாலு முற்றாரோ சேர்ந்தாலு ம்
ஆராரிருந்தாலு மாவிபறந் தோடிவிடு ம்

13. வந்தநோ யுன்பவத்தை மாற்றுமருந் தாயுடலி ல்
வந்ததென நிச்சயித்து மற்றதெலாந் தள்ளிவி டு
14. அல்லவென மந்திரிக்கி லத்துடனே நீமரித்தா ற்
கல்லறைவிலக்க மெனக் கட்டளை திருச்சபையி ல்
15. நினைவு தடுமாறியபின் நின்னினர்செய் தோஷமெல்லா ம்
உனைச்சாரா தங்கிருக்கு முற்றார்க்கே மாபவங்கே ள்
16. பூமிவிட்டு நீபிரிந்து போகிறநாட் சொல்லுதற்கு ச்
சாமிவிட்ட தூதனென்று சாதிப்பா யன்னோ யை
17. ஓர்கிறிஸ்து வன்பலர்க் கோதிமந் திரிப்பதி லே
பேர்போர்ந்து மெத்தப் பிரஸ்தாபித் தானாவனா ய்
18. சாம்பலுடன் வேப்பந் தளைகொண்டு மந்திரிப்பா ன்
சாம்பிராணி யூதுபத்தி சர்க்கரையவற் படைப்பா ன்
19. வேதத்தோர் நம்பவென் வேஷமணிந் தஞ்ஞான ப்
பாதகத்தை யந்தரங்கம் பண்ணிவரு மன்னாளி ல்
20. அவ்வூரி லோர்பிரபு வாபத்தாய் நோயடை ய
எவ்விதமு மந்திரத்தா லின்னோயைத் தீர்ப்பனெ ன
21. மாந்தரீகத் திம்மனிதன் வல்லபனா மென்றழைக்க ச்
சாந்திசெய்தா னேந்திரங்கள் ஸ்தாபித்தா னெக்களிப்பா ய்
22. தன்னுடைய தேவதையைச் சாஷ்டாங்க தெண்டனிட் டு
என்னவுத்தா ரங்கொடுப்பா யென்றவுட னேயொருபே ய்
23. நீண்டவொரு கோலில் நிறையப் பழஞ்செருப்பா ய்
பூண்டடுக்கித் தோளில்வைத்துப் பூதவடி வெடுத் து
24. கோபா வேஷக்கடலைக் கொப்பளித்த சத்தமிட்டு ப்
பூபாலா நீயழைத்த பூட்டகங்கூ றென்றதப்பே ய்
25. கூறுகின்றா னெந்தன் குலதேவ தையெனக்கு த்
தேறுதலா யோர்வரநீ சீக்கிரத்தி லீய்ந்தருள்வா ய்
26. யாதுவெனி லிம்மனிதன் நல்லசுகத்தோ டெழுந்தா ற்
பாதுசெய்வே னன்றியுமுன் பாதாரம் வாழ்கவென்றா ன்
27. என்றட னவ்வலகை யிவ்வரமோ கேட்டுநின்றா ய்
இன்றளவி லென்முயற்சிக் கேற்றசம் பாவனைநா ள்
28. வந்ததெனக் கண்டு மகிழ்ந்திருக்கும் வேளையி லே
இந்தவர மேன்றருவே யில்லையில்லை யின்னமுங்கே ள்
29. இன்னோ யுனைப்பிடிக்கு மேதவிழ்த்த முண்டாலு ம்
அன்னோய னோடிறப்பா யாண்டவரின் சித்தமிதா ம்

30. இந்தமட்டி லுன்னிமித்த மென்காலிற் போட்டிழுத் து
ஐந்தசெருப் பொன்றிரண்டோ நன்றாக யெண்ணியும்பா ர்
31. உன்னாழியத் தினுக்கென் றேடியநா ளுங்குறைந் து
என்னாழி யத்தினுக்கு மீடேற்றங் கண்டறிந்தேன் ன்
32. வேதத்தை நீயறிந்தும் மெய்மறையின் கட்டளை யை
தீதெனநீ மீறியெனைத் தெய்வமென வாசரித்தா ய்
33. உன்னையோர் கிறிஸ்துவனென் றுன்னிமறை யுள்ளபல ர்
உன்னிடத்தில் மந்திரித்தே யூழிநரகைச் சேர்ந்தா ர்
34. ஆட்டுரிகொள் ளோனாய்போ லங்கவடை யாளமெல்லா ம்
காட்டினதா லுன்னுடைய கைகளினால் மந்திரித்தா ர்
35. ஆதலினால் நீயுமிந்த வாஸ்தியனு மின்றுமுத ல்
சாதிப்பே னெனக்கடிமைத் தாசனென நிச்சயிப்பீ ர்
36. இன்றுமுத லுன்னுடைய யேவலை நான்கேட்பதில் லை
என்றறிவா யென்றுமொழிந் தேகியவன் சாஞ்சமைய ம்
37. வந்தருகிற் காத்திருந்து வல்லாண்மை செய்துயி ரை
செந்தழலிற் சேர்த்தனவாந் தீயலகை யாதலினா ல்
38. அஞ்ஞான தந்திரத்தா லாத்துமத்தைக் கொல்லா து
மெஞ்ஞான மந்திரத்தால் மீட்கவழி பார்மக னே
39. உன்னுடல் கொள்நோயி னுபததிரவத் தைப்பா வ
மன்னிப்புக் கொப்படைத்து மாபொருதி யாயிருப்பா ய்

## 2-ம் பிரிவு. பித்தசேஷ்டை.

1. பித்தமிருந் தசமையம் பேசலியல் பையின்மபே ய்
சத்துருக் கலக்கமெனச் சாதிப்ப தென்னபுத் தி
2. நானேயவஸ்தை யுற்ற நாளையிலிச் சேஷ்டையெல்லா ம்
தானேநடந்ததினாற் சாக்ஷியமா யோதுகிறே ன்
3. ஆணுருவாய்ப் பெண்ணுருவா யண்டிநின்று கேட்பதுபோ ல்
காணுமுட னேபதிலுங் கண்டிதமாய்ச் சொல்லவரு ம்
4. இந்திரியங் கள்நுகர்ந்த தெல்லவையு மக்கணத்தி ல்
வந்துநிகழ் பூச்சியென வாதாடல் காணவரு ம்
5. முன்னால் நடந்தவைகள் முற்றுமுடி யாதவைக ள்
பின்னால் நடப்பவைகள் பேசுநிழ லாட்டமெ ன
6. கண்மூடி னாலுடனிக் காரணமெலா நடக்கு ம்
கண்திறந்தா லெல்லவையுங் காணும லோடிவிடு ம்

7. நித்திரையிற் கண்டகனு நேர்மையீ தென்றுணை வா
சத்துருக் கலக்கமெனற் றப்பிதத்திற் றப்பித மே
8. நிற்பவ ரின்ஞுமொன நிதானமறக் கண்ணிருண் டு
சொற்செவிக்கே ளுததன்தோற்ற மெவ்வாருமெனி லோ
9. சாயையுட னேநடக்குஞ் சைகைசம் பாவனை யை
மாயையென்றுந் தீர்வையென்றும் வந்துநிற்போர் பேசிடுவா ர்
10. சாதியினப் பேயினங்கள் சாகிறநேரந் தொடுக்கு ம்
சோதனையை நம்பாதே தோஷமென்றார் சற்குருவு ம்

## 3-ம் பிரிவு. இதரவுதவியநிச்சயம்.

1. நம்பாதே யென்றுரைத்தீர் நாதனருள் சற்குரு வே
அம்பாய நேராதோ ராதரவுண் டேதெனி லோ
2. தீர்க்கந் திருச்சுரூபஞ் சேகரமா யென்னருகி ல்
மூர்க்கருரை யையடக்க முக்கியமாய்ச் சேகரிப்பே ன்
3. உபதேசி மார்களையங் கோயா திறுத்திவைத் து
சுபவாசகம் படிக்கச் சொல்லுவது மல்லாம ல்
4. யேசுமரியேசூசை என்றசெபஞ் சொல்லவைத் து
நேசமுட னுச்சரிப்பேன் நீங்குமினப் பேய்களென்று ன்
5. நீங்கார்க ளென்புதல்வா நீமரித்த பின்பவரா ல்
வாங்கு முபதேசியவன் வாயெடுக்க வொட்டார்கே ள்
6. முகத்தாக்ஷ ணைப்பிசகால் மூத்தோருக் கஞ்சுகையா ல்
பகுத்தறியா மாபிழையால் பார்த்திருப்பா ஞேர்சமய ம்
7. யேசுமரியேசூசை யென்றுசொல்லா தோடுமு ப
தேசியுனைக் காத்திருப்ப தெவ்வாருஞ் சொல்கும ரா
8. தாள்வறவென் ஞேயனையுஞ் சந்திக்குமா ரொவரு ம்
நாளில் முனைக்குமுனை நாற்பதுநாட் பேறடைவீ ர்
9. பித்தமிகுந் தேயொருவன் பேசுவதைக் கண்டவுட ன்
புத்திபேத வித்ததெனப் போக்குரைக்கப் போகா து
10. பிணியாளி நோய்மிகுந்து பேச்சடங்கி ஞலுமினு ம்
மணியான புத்தியுண்டு வாசகத்தை நீக்கா தே
11. ஈருந்த வச்சமையம் யேசுவென்ற மந்திரத் தை
மாரும லுச்சரிப்பீர் வாசாகத்தி லுஞ்சிரேஷ்ட ம்
12. தோழனே யேசுமரி சூசையெனு நேரமெலா ம்
எழுவரு ஷப்பலனே டேழுமண்ட லப்பலனு ம்

13. மாரணத்தில் யேசுவென்ற மந்திரத்தோ டேயிறந்தா ல
பூரணபலன் பெறுவார் போதகஞ்செய் மாறும ல்
14. ஆனதினா லச்சமைய மாஜீரிற் காத்தவ னே
தானுணாக்கச் சிந்தைசெய்யத் தக்கதெல்லோர் மீதுகட ன்
15. அல்லதுப தேசியுன்னை யாஜீரிற் காத்திருந் து
சொல்லுகிற புத்திபயன் சூடுமென நம்பா தே
16. கள்ளிரு வர்க்கிடையே கர்த்தரிருந்த தாரறிவோ ம்
உள்ளபடி யேயொருவ னூழிநர கெய்தியதே ன்
17. சவரியார் சீடரிலே சண்டாள னாயொருவ ன்
அவதிமர ணத்தையடைந் தாழ்ந்தனனே தீநரகி ல்
18. ஆராரிருந்தாலு மாத்துமம் பிரிந்திடுங்கா ல்
ஏராளத் தந்திரங்க ளேகமாய்ச் சூழ்ந்திருக்கு ம்
19. தீக்ஷைபெற்றோ னோர்மனிதன் சிலவான நாளினுக்கு ள்
ஆக்ஷியுள்ள மாடுசெத்து வப்பாலோர் பிள்ளைசெத் து
20. தானுமே வியாதியுற்றுச் சாஞ்சமைய முற்றஜன ர்
ஏனுனக்குக் கெடுகால மெங்கள்தெய் வத்தைவிட்டா ய்
21. ஆனதினா லுன்னுயிர்மீ தாசைவைத்து நீதிரும் பு
போனதெல்லாம் போகவிதே புத்தியெனச் சொன்னதற் கு
22. சொல்லுகிறா னம்மனிதன் சுற்றிலுள்ள யென்னின ரோ
எல்லவர்க்கு நன்மைதின்மை யென்றிணைசதா னேருமல் லோ
23. சாமிகொடுத் தார்சமஸ்துந் தந்ததையே வாங்குகிறா ர்
நாமிதிலே தீமைசொல்ல ஞாயமல்ல போருமென்றா ன்
24. ஆனதினா லுன்னினப்பே யண்டிவந்து சொல்வதெலா ம்
ஞானமென நம்பாதே நாட்போக வாழ்ந்தவனா ர்
25. புதிதாகத் தீக்ஷைபெற்றோன் புத்தியுனக் கில்லாம ல்
மதியில்லா தஞ்ஞான மந்திரத்தைத் தேடுகிறா ய்

## 4-ம் பிரிவு. துன்மனப்பேயருட்டி.

1. அந்தி சந்தி காத்திருந்துன் னாத்துமத்தைக் கொண்டேக த்
தந்திரங்கள் செய்துவந்த சாத்தானுங் கூத்தாடு ம்
2. கடசிப்போ ராட்டமென்று கக்கிஷமாய் வாதாடு ம்
இடறினால் மாமோஷ மேற்கனவே சொல்லுகிறே ன்
3. தனக்குதவி யாயிருக்கத் தாரணிப் பேயல்லா து
அனற்கூழி தன்னினத்தை யங்கழைத்து வந்திருப்பா ன்

4. தோற்பும் கெலிப்பும் துரிதந் துரிதமெ ன
ஆர்ப்பரித்துக் கொக்கரிப்பா யாசீரிற் காத்திருக்கு ம்
5. சிங்கம் புலி கரடி செந்நா யோனுயுருவா ய்
பங்கமிலாக் கோரணியாய்ப் பார்வைக்கெதி ராகவரு ம்
6. முன்னாள்நீ செய்திருந்த மோசவழி யத்தனையு ம்
இன்னேரங் கண்ணெதிரி லேகமாய்க் காட்டவரு ம்
7. பண்ணியவுச் சாரணத்திற் பங்கமிகத் தோற்றிவைக்கு ம்
புண்ணியங் களைமுதலாய்ப் பொய்யாக்கி மூதலிக்கு ம்
8. துற்பழக்க ரக்கணமே சூழவர வந்தடுப்பா ர்
நற்குணர்க ளக்கணற்பேய் நாடாம லோட்டிவிடு ம்
9. உன்னாலே கெட்டவரா யுன்னினைவிற் றேற்றிவைத் து
என்னாளு மெவ்விதமு மீடேறு யென்றுரைக்கு ம்
10. பாவப் பழக்கமெலாம் பக்கத்தி லேநிறுத்து ம்
கோபம் பகைவர்மேல் கொண்டுவிடு மன்னேர ம்
11. ஜீவியநா ளத்தனையுந் தீர்க்கதவஞ் செய்திருந்தோ ர்
ஆவிவிடு மன்னேர மஞ்சியது கேட்டிலை யோ
12. நீண்டநாள் மாதவத்தில் நீளித்த வோர்முனிவ ர்
மாண்டிடுநா ளாகையிலே மற்றமுனி வோர்களெல்லா ம்
13. காத்திருந்தா ரேவலராய்க் கண்மூடு நேரமென ப்
பார்த்திருந்தார் நோயோன் பதரிமிக வாய்க்கத றி
14 கண்மிரண்டு வாயுளறிக் கைகால்கள் நீண்டுத றி
மண்பிரண்டு கண்ணை வலதுபுர மாய்த்திருப் பி
15. உள்ளவரைக் கையமர்த்தி யுற்றுச் செவிகொடுத் து
மண்பிரண்டு கண்ணை வலதுபுர மாய்த்திருப் பி
16. சேர்த்தார் நவதுறவிற் சிலவான நாளிருந் து
வார்த்தைப்பா டுச்சரித்த மாத்திரத்திற் றீர்ந்ததென்று ர்
17. கடைவிழியில் நீர்ததும்பக் கைநொடித்து மெய்நொடித் து
இடதுபுர மேரெடுத்து யிப்பவநான் செய்ததமெ ய்
18. தக்கமனஸ் தாபமுடன் சங்கீர்த் தனம்படித் து
மிக்கபலன் பெற்றதென வீதமுடனே யுரைத்தா ர்
19. சுற்றிலுள்ளோ ரித்தாதி தோற்றமுங்கண் டேங்குகையி ல்
சற்றுமவ னங்கரத்த சந்யாசி மூச்சொரிந் து
20. தோற்பதுபோற் கண்கலங்கிச் சூழவரக் கண்சுழற் றி
நாற்பதாண் டிக்குணக்காய் நற்றவசைச் செய்ததென்று ர்

21. கும்பலாகச் சேர்ந்த குரு முனிசிரோஷ்டரு மே
சம்பவமே தென்றேங்கச் சாய்ந்திருந்த நோய்த்தவ சி
22. மீண்டோர் திசைநோக்கி வேர்த்துடல் மீரளித் து
ஆண்டவ ளாங்காயமதி லாதரவுண் டாகுமென்று ர்
23. இம்மொழியைக் கேட்டசித்த ரிவ்விதம்வா தாடுவ து
சம்மனசோ சாத்தானோ சந்தேகங் காணுமென்று ர்
24. அன்னேர மாதவத்தோ னங்கமுழு தம்பிரண் டு
சன்னையேதோ கேட்பதுபோல் சற்றேதங் கண்விழித் து
25. இப்பவநான் செய்ததில்லை யெவ்வளவு மஞ்சுகிலே ன்
தப்பறைநீ பேசுகிறாய் சாத்தானே யோடுவென்று ர்
26. இந்தமொழி யோதிமுனி யெல்லவர்க்குங் கைகுவித் து
சந்தோஷ மாயிறந்தார் சந்நியாச சீலமொல்லா ம்
27. மாதவனே டிவ்விதம்பேய் வல்லாண்மைப் போர்புரிந்தா ல்
பாதகராமெமை யெந்தப் பாடுசெய்யு மென்றூர்த்தா ர்
28. மித்திரனே யுன்மரண வேளையிலுந் தீநர க
சத்துருக்க ளோடிவந்து சண்டைசெய்வா ரென்பதுமெ ய்
29. இக்கொடிய போர்முனையி லெவ்வாறு சண்டைசெய்வா ய்
அக்கடினத் தைத்தணிக்க வாண்டவனைக் கெஞ்சிநிற்பா ய்

## 5-ம் பிரிவு. சம்மனசோர்முயற்சி.

1. கேட்டாயே யென்பிறப்பே கேட்டுமனந் திரும் ப
மாட்டாயோ வுன்னொழுக்கம் மாற்றமனம் வாரா தோ
2. துன்மனப் பேய்செய்துவருஞ் சோதனையை நீ ஜெயிக் க
சன்மனது முன்னருகில் தானிருப்பா ராதரவா ய்
3. என்றாலு முன்சமீப மிந்தவிரு பேர்களு மே
நின்றாலுன் னேராய் நெருங்கிநிற்ப தாரறியே ன்
4. சன்மனசோ ரோவுதலைச் சாதனையா யேற்றிருந்தா ல்
துன்மனத்தோ னன்னேரந் தூரமா யோடிநிற்பா ன்
5. புண்ணிய வானயிருந்தாற் பொன்னுலகத் தேயிருந் து
எண்ணரிய வான்றங்க ளேவலாய்வந் தடுப்பா ர்
6. அச்சமையத் துன்காவ லாஞ்சுளாக்குந் தேற்றர வை
நிச்சயித்துக் கூறுகிறேன் நெஞ்சமுழுத்தி வைப்பா யே
7. பத்தியுள்ள வாத்துமமே பாவியெண நீமயங்கி ச்
செத்தவ நம்பிக்கையாற் றீநரகிற் போகா தே

8. பாவியென வுன்னையே நீ பாணித்தா லுத்தமன ங்
தாபமுறி லத்தனையுஞ் சர்வசங் காரம றி
9. பேய்க்கரத்தால் மீட்டுனைத்தன் பிள்ளையெனக் கொண்டதன்பி ன்
நாய்க்கிளையாய் விட்டுவிடார் நம்பியிரா யாத்தும , மே
10. உன்னைநர கத்திறுத்தி யூழியுள்ள காலமெலா ந்
தன்னைநிந்தை செய்திருக்கச் சம்மதியா ரொம்பரம ன்
11. தந்தையோ டுனையிணைக்கத் தாங்குருசி லேறியதா ல்
அந்தவிடம் விட்டிறங்கா தார்க்காகத் தொங்குகிறா ர்
12. கட்டியணைத் தீடேற்றக் கைவிரித்த யேசுபர ன்
கிட்டிநீ யடுத்துவிடிற் கேடுவர லாகுமோசொ ல்
13. இன்னபவ மின்னவிஷ மென்றறியா னிம்மனித ன்
மன்னியப்பா வென்றுனக்காய் மன்றாடி னாரல வோ
14. கள்ளனைவிழித்த கருணைக்கடலும் வற்றின வோ
பிள்ளையுனை யேமறந்து பேய்ககடிமை யாக்குவ ரோ
15. குருசடியிற் பிள்ளையாய்க் கைகொண்டவன்னை மாமரியு ம்
ஒருநிமிஷ மேனுமுனை யொப்படையாள் பேய்க்கரத்தி ல்
16. இன்னொரு முறையுனக்கா யிங்கிறக்கத் தாகமென்றே ன்
வன்னிநர கெய்துவென்ற வாக்கியத்தைச் சொல்வா ரோ
17. தன்பிதாமறந்ததுயர் சாஸ்தியென் றறிந்தகத்த ன்
உன்னைமறந்துவிடா ரூழூழி நாளளவு ம்
18. தாதைகரத் தாத்துமத்தை ஸ்தாபித்த யேசுபர ன்
வாதையுற வுன்னுயிரை வன்னியிடை வைப்பரல ல
19. உன்னிரக்ஷிப் பின்வேலை யொப்புரவே தீர்ந்ததென்றே ன்
இன்னுமதிற் பாக்கிவைத்தா ரொன்றுரைக்க நாவுள தோ
20. மானிடமும் வானிடமும் வாழிருத யத்திடத்தி ல்
ஏனிடமுனக் கருமை யில்லையெனத் தீரா தே
21. பிணைப்பட்டு மாண்டுயிர்த்தோன் பின்னுமுனக் கிவ்வே ளை
துணைப்பட்டுத் தந்தையிடஞ் சொல்லியுனை மீளா ரோ
22. ஐங்காயந் தந்தைசின மாற்றுமருந் தாயிருக் க
உன்காய நீங்கிடுநா ளுள்ளமருந் தெங்கேகு ம்
23. எங்களுக்கோ பாடுபட்டார் யேசுபரன் பாடுகட் கு
பங்காளிநீ யலோவுன் பங்கிளந்து போவா யோ
24. ஓர்திவலை யொத்தமுலை கெகறுங்கு மீட்கவல் ல
தார்பவந்தா னீங்காதுன் னக்கிரம மோரீ டோ

25. எப்படியு முன்னையிவ ரேற்றுஞ் சிந்தையயொ ன்
றெப்பியுன் பவங்களின்மே லுத்தமனஸ் தாபமு றே
26. இவ்வாறுன் பககலினின் றேவுவது மல்லாம ல்
எவ்விதமும் பேயனுகா தெச்சரித் தோட்டிவைப்பா ர்

## 6-ம் பிரிவு. பேயின் புத்தகம்.

1. கத்தர்வரு நாளிகைமுன் கன்மதன்மஞ் சித்தரித் த
புத்தகங்கள் மூன்று புலப்படுமுன் கண்களுக் கு
2. சாத்தான்கைப் புத்தகத்தில் தன்மமல்லா தெல்லவையு ம்
கோத்தெழுதி வைத்திருப்பான் கோடானு கோடிபி ழை
3. சின்னவயதின் வழுக்கள் செய்கையொன்று நீங்கா து
இன்னதின்ன சிந்தனையென் றீண்டீண் டெடுத்திருக்கு ம்
4. எவ்விடத்துஞ் சாத்தா னிருந்தாங்கு கண்டவைக ள்
ஒவ்வொன்றுந் தப்பவிடா தோர்ந்தெழுது மென்புதல் வா
5. பலிபூசைநேரம் பரிசாரகன் சிரித் த
ஒலிகேட்ட மர்த்தீனு ருள்ளறையிற் சேர்ந்ததன்பி ன்
6. என்சிரித்தாய் சீடனேநீ யென்னவவனோதுகிறு ன்
நான்சிரிக்கத் தக்கவொரு ஞாயமுண்டு யாதெனி லோ
7. காகிதமைக் கூடிறகுங் கையோடு கொண்டுவந் து
கோயிலினோர் சன்னலிலே கூசாதோர் பேயிருந் து
8. அங்குமிங்கும்பார்த்துப் பார்த்தாத்திரத்திற் கைசுருக்கா ய்
சங்கதிவரைந்த தனுற் றுளொருங்குந் தீர்ந்திட வே
9. இன்னமுந்தா ளேதோ யெழுதத் தவறுவதா ய்
உன்னிமன வாதையுட னுள்ளுடைந்தக் காகிதத் தை
10. பிடித்திழுத் தால்மேலும் பெரிதாக நீளுமென் றே
கடித்திழுத்த தந்தநொடி காகிதங் கிளிந்திட. வே
11. சன்னலிலே பேயின் றலைமோத மந்தியைப்போ ல்
பின்னெளித்துப் பல்திறந்த பின்பே சிரித்ததென்று ன்
12. இவ்வசனங் கேட்டகுரு யெவ்விடத் திருந்ததுபே ய்
அவ்விடத்தைக் காட்டுவென் றாலயத்திற் புக்கவங் கு
13. தலையடிபட்டப் பேயோசஞ் சலித்து கண்சொரிந் து
நிலையிலே சாய்ந்திருக்க நீத்தமுனி பார்த்தவுட ன்
14. இங்குவந்து நீயிருக்க யேதுவிதி யாமறி ய
நங்கடவு ளுன்கடவுள் நாமத்தாற் கூறுவென்று ர்

15. என்றவினு வுக்கலகை யென்னலுவ லோதுகிறே ன்
அன்றன்று மந்திசந்தி யாலயத்துட் புக்கினர்க ள்
16. செய்பிழைக ளத்தனையுந் தீர்க்கமுடன் கண்டெழு தி
கைகொண்டு புத்தகத்திற் கட்டிவைப்ப தென்வே லை
17. என்னபிழை யென்பீரோ யிந்தவாலை யத்திருந் து
சின்னஞ் சிறுவரோடு செல்லவிளை யாடலையு ம்
18. தூங்கினதும் பேசினதுந் தோழருட னடினது ம்
பாங்கியர்கள் மீதுவிழிப் பார்வையை யோட்டினது ம்
19. முடவராய்ப் பூசையிலே முட்டிடா திருந்ததுவு ம்
படபடப்பாய்ச் செபங்கள் பாடினது மோடினது ம்
20. வாய்மூடி யூமையென மந்திரஞ் சொல்லாததவு ம்
தாய்மார்கள் பிள்ளைகளைச் சப்பாணி கொட்டினது ம்
21. கட்டைகளைப் போட்டதுபோல் கால்நீட்டி வைத்ததுவு ம்
திட்டினது மேசிச் சிரித்துவிளை யாடினது ம்
22. பூசைமுகப் பார்வையற்றுப் பொல்லாத சிந்தையுட ன்
வேசைமுகச் சேவையிலே வீணேரம் போக்கினது ம்
23. கையலுக்குங் கண்சிமிட்டுங் கால்நீட்டுஞ் சாடைகளு ம்
மெய்யுலுக்குங் கொட்டாவி விட்டுநெட்டி வாங்கினது ம்
24. மந்திரத்தை வேண்டுகையில் மாடாடு வீடுகள்மே ல்
சிந்தனையை யோட்டுவதுந் தேர்ந்தெழுதிக் கொள்ளுகிறே ன்
25. எல்லாங் குறித்தெழுதி யிருந்தத் தீர்வையி லே
சொல்வதுவே வேலையென்று சொன்னதந்தப் பேய்மக னே

## 7-ம் பிரிவு. சம்மனசின் புத்தகம்.

1. தூயபரன் தூதருந்தஞ் சோளிகைப் புத்தகத்தி ல்
நீயறியாச் சிலமுதல் நிண்ணயமாய்க் கண்டிருப்பா ர்
2. புண்ணியக் கருத்தையகம் பூண்டுசுவா சித்துவந் த
எண்ணரிய மூச்சுமுத லெண்ணெடுத்த மைத்திருக்கு ம்
3. தன்மசிந்தை யையகத்தில் ஸ்தாபித்து நீ நடந் த
பொன்னடிக ளத்தனையும் பூர்த்தியாய்க் கணித்திருக்கு ம்
4. கானகத்தோர் மாதவத்தோன் கால்கடுக்க நீயொடுக்க ப்
போனநெறி யைச்சலித்துப் போகவரத் தோரணையா ய்
5. தன்குடிசை நீரருகில் ஸ்தாபிக்கு மெண்ணமுட ன்
முன்னடக்க வொன்றிரண்டு மூன்றெனச் சொற்கேட்டது வே

6. அக்கணமே பின்திரும்பி யாரொண்ண லேதுவெ ன
சிக்கெனவே காக்ஷிதந்த தேவதூது வன்பகர்வா ன்
7. அறவழிசெல் மெல்லடிகட் கானபல னென்பதனு ல்
துறவியேநீ செல்கைதொகுத் தெழுத லாகுதென்று ன்
8. இந்தவுரை கேட்டமுனி யேகியேதான் வாழ்குடி லை
அந்தவிடம் பேர்த்தின்னு மப்புறத் தமைத்தன னே
9. கண்டாயோ புண்ணியக் கண்கொடுப்பா னென்றுறு தி
கொண்டாயோ புண்ணியங்கள் கூடவழி தேடா யோ

## 8-ம் பிரிவு. மனச்சாக்ஷிபுத்தகம்.

1. சம்மனசுந் துன்மனசுந் தங்கணக்கைக் கூறுமு ன்
உன்மனமே வாதியா யுனக்கெதிராய்ச் சாக்ஷிதரு ம்
2. மனச்சாக்ஷிப் புத்தகத்தை வாசித்துப் பார்ப்பதற் கு
உனக்கிப்போ தில்லைபொழு துண்டப்போ தென்னபய ன்
3. பின்னொருவன் பொக்குகளைப் பேசுகிறாய் ஏசுகிறா ய்
உன்னருமைப் பொக்குகளி லோரெழுத்து நீபடியா ய்
4. ஆசாபா சத்திரைக ளன்றிரண்டா கக்கிழிய ப்
பாசாங்கும் போக்கனைத்தும் பர்வமென நெஞ்சறியு ம்
5. பாவத்தைப் புண்ணியமாய்ப் பாணித்துச் செய்ததுவு ம்
ஆபத்தே தில்லையென் றலகைபின்னு லோடினது ம்
6. ஆலயங்க ளைத்தொழுது தந்திசந்தி நீண்டசெ ப
மாலைகளை யோதில் வாய்த்தநஷ்டி திஷ்டிதரு ம்
7. தேவபலி பூசைமுன்னுன் றேகநில நிற்றதல்லா ல்
ஆவலாசை யெண்ண மலைந்ததெங்கே யென்றறிவா ய்
8. பாவசங் கீர்த்தனங்கள் பண்ணிவந்த சீரளிவு ம்
தேவபகை மூண்டதுவுஞ் சித்தரிக்கு முன்னினை வு
9. லாபமெனக் கூறிநீ நடத்தியகூ துங்கபடு ம்
பாபமோ புண்ணியமோ பாரபக்ஷமற் றுரைக்கு ம்
10. ஜெபமாலை யுத்தரீகஞ் சேகரித்துத் தொங்கினதி ல்
அபலமாய்ப் போனதென வன்னேரங் கண்டறிவா ய்
11. பற்பல சபையிலேபேர் பாங்கா யெழுதிவைத் து
கற்பனைகள் மீறினதாற் கண்டறிவாய் குற்றமெ ன
12. ஊர்க்கூரலைந்து சுற்றி யுற்சவங்கள் கொண்டா டி
தேர்த்திருநாள் பார்த்ததிலே தேடினதுங் காணவரு ம்

13. தானதன்மஞ் செய்ததிலுஞ் சத்திரங்கள் சேர்த்ததிலு ம்
ஞானநினை வில்லையென ஞாபகப் படுத்திவிடு ம்
14. சுயபக்ஷத் தாலுனக்குத் தோன்றாத குற்றமெலா ம்
நயவஞ்ச கங்களென நன்றாய்விரித் துணர்த்து ம்
15. உனைக்காத் தோர்புத்தகங்க ளோடிவாரா முன்னுன து
மனச்சாக்ஷிப் புத்தகமே வாஸ்தவமாய்ச் சாக்ஷிசொல்லு ம்
16. அதிதூத ரானமிக்கே லாஞ்சுதரா சேந்தகி ற
ததிவருமுன் னுன்மனமே சத்தியத்தைத் தீர்க்கமிடு ம்
17. தனித்தீர்வை சொல்வதற்குச் சாமிவரு முன்னுன து
மனச்சாக்ஷிப் புத்தகமே மாறாத தீர்வையிடு ம்
18. மனச்சாக்ஷி யுன்னடுவாய் வந்தெதிர்த்துத் தீர்ப்புரைத்தா ல்
உனக்கென்ன வாக்குரைக்கு முன்னதவான் சேர்வா யோ

## 9-ம் பிரிவு. இரக்ஷண்யவனுமானம்.

1. அழைக்கப்பட் டோரனந்த மானுற்றெரிந் தெடுத்து த்
தழைக்கப்பெற் றோர்சிலரோ சாமிசொன்ன திவ்வசன ம்
2. சத்தியவே தத்திலுனைச் சாமிதெரிந் தாரதுமெ ய்
முத்தியுல கத்திலுனை முக்கியமாய்த் தேடந ட
3. வேதத்தி லேபிறந்தாய் வேதத்தோ ருள்வளர்ந்தா ய்
வேதத்தோர் போலிறந்து விண்வீடு சேர்வா யோ
4. வேதத்தோர் போல்மரித்து விண்ணாகி லேபரம ன்
பாதத்திற் சேர்ந்தவரொன் பத்திலொன்றோ நூற்றிலொன் றோ
5. செல்வகதி போய்ஞான திக்கவுப தேசிமு னி
இல்வதியு மோர்தவசிக் கேகாந்தக் காக்ஷிதந் து
6. இன்றுமூவா யிரம்பேர் யேசுபரன்தீர்த்த தில்வி ண்ண
சென்றதைவர் மற்றவரோ தீநரகா ளாயினர்கே ள்
7. இத்தொகையில் நேர்மோக்ஷ மேறினதி ரண்டேபே ர்
உத்தரிக்க மூவரொன வோதிமறைந் தேகின ரோ
8. அவ்வுலகஞ் சென்றவரி லாயிரத்தி லைந்தறவோ ர்
திவ்வியவீ டேகினரோ தேர்ந்துசொல்வா யென்மக னே
9. இன்றைக்கே நீயிறந்தா லெக்கணக்கி லுட்படுவா ய்
அன்றைக்கு நீபரத்துக் காளாவா யோபகர்வா ய்
10. இத்தகையாய் நான்வருந்தி யீடேறச் சொல்லிவந் த
சத்தங்கா தேற்கமனந் தாளாதே னின்னமுங்கே ள்

## 10-ம் பிரிவு. மரணத்தன்மை.

1. கண்ணிமைபோற் காத்திருந்த காதலரோ யானாலு ம்
புண்ணாக நெஞ்செரிந்து புன்மொழியே கூறிநிற்பா ர்
2. இன்னுமிவன் சாகா திருப்பானோ வென்றுசில ர்
முன்னாக நின்றபடி மூக்காரத் தோடுரைப்பா ர்
3. காத்திருக்கு முன்னினரோ கண்மூடு மன்னொடி யை
பார்த்திருப்பா ருன்னுடைய பாத்தியங்க ளைப்பிரிக் க
4. மக்கள் மறு மக்கள் வளர்த்தெடுத்த புத்திரரு ம்
பக்கத்தில் வந்தெமக்குப் பாதையே துரையுமென்பா ர்
5. தலையுருட்டல் நின்றதற்பின் தங்குமூச் செடுத்தவுட ன்
குலையீரலுந் துடிக்கக் கும்பியுங் கொதிப்பெடுக் க
6. வாசிக் குழல்சுருங்கி வாய்வழியால் மூச்சச ர
யேசுவே யென்றுசில ரோகசத்தத் தோடல ற
7. சிலுவை வரைவாருந் தீர்த்தந் தெளிப்பாரு ம்
கலகமில்லா துன்னருகிற் காத்தடர்ந்து கூடிடுவா ர்
8. நெஞ்சுலர்ந்த நேரமென நிற்பவரிற் சொந்தவின ர்
பஞ்சிலே பாலூட்டிப் பருக்கிடுவா ரன்னேர ம்
9. உன்னுடைய நெஞ்சகத்தி லுற்பவிக்குஞ் சிந்தனைக ள்
என்னென்ன வென்றுசற் றெடுத்துரைப்பேன் கேள்துரை யே
10. பெண்சாதி பிள்ளைகளே போகிறேன் றூரவ ழி
கண்மறையுங் காலங் கடையுகநா ளெந்தனுக் கு
11. ஆடுமா டாஸ்திகளே யாளடிமை பூஸ்திதி யே
காடென் வீடாயினயான் கல்லரைக்கே நேர்பயண ம்
12. கண்காதே வாய்மூக்கே கைகா லுடலுறுப் பே
எண்சாண் சரீரமேயா னேகலுற்றேன் சொந்தநெ றி
13. கற்றறிந்த சாஸ்திரமே கல்விக் களஞ்சிய மே
மற்றமற்ற சூஸ்திரமே வங்கணமே செல்லுகிறே ன்
14. இப்படிக் குன்வாயா லியம்பாது மாளுகிலு ம்
தப்பாம லத்தனையுந் தானெகிழுஞ் சாங்கால ந்
15. எல்லா முனைமறுக்க வெல்லவையு நீவெறுத்து க்
கல்லரையே சொந்தமெனக் கட்டாய மோடிடுவா ய்
16. தேடியதேட் டெங்கே சேர்ந்தார் சிநேகமொங் கே
ஆடிய வாட்டமெங்கே யாங்காலம் போனதெங் கே
17. கடைசியி லாத்துமம்வாய் கண்ணாசி காதின்வ ழி
உடலைப் பிரிந்ததென வோலமிடு வாரறியா ர்
18. சீராதி யந்தமெல்லாஞ் சஞ்சரித்த வாத்தும மோ
அரூபமதற் கேதுதடை யங்கமெலாம் வெட்டவெ ளி

19. ஆகாய முங்காத்து மாத்துமத்துக் கீடுசொல்ல ப்
போகா தவையுலவப் போகாத் தலங்களுண் டே
20. நினைவைப்போ லாத்துமமு நேரானதென்னி லின்னு ம்
நினைவிலு மாத்துமமே நின்மாய மென்றறிவா ய்
21. ஆருமறி யாநெறியா யாத்துமம்ப றந்ததன்பி ன்
ஆரு முனக்குதவா ரப்பாலே மிச்சமென் ன
22. பார்முழுது முன்னுடைய பாத்தியமே யானாலு ம்
ஓர்நா ளவையொறுங்கு மோடிவிடுஞ் சத்திய மே
23. பெருநார்துங் கூடப் பிறந்தவைந்து சோதரரு ம்
ஒருமொழிபோ லிந்தவுலகுறுமை யைத்துறந் து
24. வெளியேறிச் செல்லுகையில் வீதியிலே யாடிநின் ற
இளையசகோதரனை யிவ்வறுவ ரும்பார்த் து
25. தம்பியேகே ளெம்முறுமைச் சர்வசு தந்தரமு ம்
நம்பியினுஞ் செய்வதனால் நாங்களினி யேற்பதல் ல
26. ஜெகமெலாம் பேர்முளங்கச் சீமாதி சீமானா ய்
மகராஜ னாயுலகில் வாழ்கவென்ரு ரொன்றவர்க் கு
27. என்னபங்கு பாகமிஃ தென்றமைய மார்களேநீ ர்
சொன்னவஞ்ச கப்பகுதி தோஷமெனக் கண்டுணர்ந்தே ன்
28. மண்ணுலக வைபோக வாட்கையையெ னக்குவைத் து
விண்ணுலகை யுங்களுக்கேன் விட்டிருப்பேன் கூடா து
29. உங்களுடன் பங்குமெனக் குண்டதிலே னில்லையென்பீ ர்
தங்களைப்போல் நேராய்ச் சரிபாகம் யானெடுப்பே ன்
30. அவதிவேளைக் கெட்டாத வாஸ்தியாஞ்சு வாத்தியங்க ள்
எவனுக்கு வேண்டியதா மெந்தனுக் குகந்ததல் ல
31. காசால் மனக்கவலை காமத்தால் நோய்மலியு ம்
ராசாங்கஞ் சற்பனையாம் கானிந்தப் பங்கேற்கே ன்
32. பாரபட்ச மானவிந்தப் பங்கடையச் சம்மதியே ன்
வார மெடுப்பதென மாதவத்திற் றீவிரித்தா ன்
33. நிலையற்ற வாட்கையென்றும் நீர்மேற் குமிளியென்று ம்
தலைமண்டை யோடெடுத்துச் சாங்காலத் தைநினைத் து
34. பாவங்க ளைக்களைந்து பற்றறுத்துப் பத்திவைத் து
தேவுலகைப் பெற்றவர்கள் சித்தவொன்ரு ரம்மா னை

உயிரோது சருக்கம் முற்றிற்று.

ஆகச்சருக்கமொன்பதுக்கு பிரிவு எழுபத்தேழுக்கு கூடிய செய்யுள் 1601.

## தீர்வைச் சருக்கம்.

### விருத்தம்.

தேவசபை மரித்தவிடந் தனிலேசேரும்
ஜீவியரா ளொறுங்குபரி க்ஷிக்கநேரும்
பூவுலகே முதன்மையெனச் சாக்ஷிகூறும்
பொல்லாத கூளிகள்வா தாடுவீருங்
காவலாஞ் சம்மனசோர் புகலுசீருங்
கன்மதன்ம நிறுப்பதினு லேதுதேறும்
பாவியுயி ருதவியின்றிக் களைக்குங்காறும்
பரனையுஞ் சாபனையும் பகருவாமே

### முதல் பிரிவு. தேவசபை.

1. உன்னுடலுள் வாழ்ந்த வுயிர்பிரிந்த தக்ஷணத்தி ல்
என்னநடந் தேறுமென வெவ்வாறு சொல்லிமுற்று ம்
2. மூடியகண் ணைத்திறக்கும் முன்னடக்குஞ் சம்பவத் தை
தேடியுனை யாடுதற்கென் சிந்தனைம யங்குதிப் போ
3. ஞானதிக் கர்சிரத்தி ரத்தினப்பீடக் கொலுவி ல்
தானுதி யேசுபரன் தங்கிநிற்பார் சிங்கமெ ன
4. தேவதாய் சூசைமுனி சித்தாதி சித்தர்முத்த ர்
காவலாஞ் சம்மனசுங் காவற்பேயுங்கூ ட
5. தேவசபை யாகவங்கு சேர்ந்திருப்போர் தம்மிலிந்த ப்
பாவநர னுத்துமமெப் பாங்குடனே நிற்குமெனி ல்
6. பாய்ந்தகொடு வேங்கையிரு பஞ்சாக காங்களி டை
சாய்ந்தசிறு சுண்டெலிச் சமானந்த வித்திருப்பா ன்
7. தீவாதை யூர்மனைக்குள் சிக்கியவோர் பாலனி னை
பாவாதி யாத்துமமும் பாடாய் நடுநடுங்கு ம்
8. காரிருளில் மாவனத்துள் காட்டுமிரு கங்கவிந் த்
ஓரருவை கர்ச்சனைகேட் டொல்குவது போற்றவிப்பா ன்

### 2-ம் பிரிவு. தேவகுரோதக்கடோரம்.

1. மயினைவ குன்தெடுக்கும் வாருய்நம் யேசுகத்த ன்
உயினைப் பிரித்ததிலே யுள்ளபிச கையெடுப்பா ர்
2. சன்மனசோர் தம்மகத்தில் தப்பிதத்தைக் கண்டபர ன்
துன்மனசோ னுள்ளமதில் தோஷவிஷங்காணரி தோ

3. சாக்குப்போக் கச்சமயஞ் சற்றேனுங் கிட்டமெல் ல
நீக்குவாக் கவ்விடத்தில் நில்லாது செல்லா து
4. தன்னுணையை மீறியதன் குருசிகன்மேல் ராஜனுக் கு
என்னவாத்தி ரம்பிறக்கு மெவ்வாறு சிக்ஷைசெய்வா ன்
5. பூசைகண்ட யிஸ்பாஞிய பூபதிதன் பின்னணியி ற்
பேசியது ரைகளிரு பேர்மீது கோரமுற் று
6. நோக்கியதால் மாத்திரமே நோய்பிடித்துத் தீரா து
ஆக்கைமெலிந் துள்ளுடைந் தாவியற்ற தாய்ப்பிளைத்தா ர்
7. கோபிமுகம் பார்க்கமனங் கூசுகிரு யேகொடி ய
பாபியே நீ சாமியைநேர் பார்ப்பதெவ்வா ருமறியே ன்
8. தயவுமுகத் தாக்ஷணையுஞ் சாராத வத்தருண ம்
நயவசன வேண்டுதலு நாடாது கூடா து
9. மாற்றுயர்ந்த பொன்னினிலும் மாசெடுக்கும் வாறறவோ ர்
ஆத்துமத்தி லுங்கசடை யாண்டளவ றுத்தெடுப்பா ர்
10. கத்த ரளித்தபத்துக் கற்பனையை மீறிய நீ
செத்தபின்ன வர்முகத்தைத் திண்ணமுடன் காணரி தே
11. பெருதேய மாண்டிருந்த பேர்போர்ந்த வோரரச ன்
பாரிகழச் சாமிபாடு பட்டரூபத் தைப்பிடித் து
12. மந்திரிகள் தந்திரிகள் மாக்ஷிபெற்ற மேலோரா ய்
வந்திருந்த முன்னூறு மானிடரு மோர்மையுட ன்
13. நிந்தைசெய்தா ரச்சுரூப நேத்திரத்தை யேறெடுத் து
தந்தலைய சைத்தவுடன் சங்கமுற்றுஞ் செத்தனவா ய்
14. ராச்சியமும் பட்டணமும் ராயனும் மடிந்துமற்று ம்
மூச்சடங்கிப் போனதென முற்றுநினைந் தெல்லவரு ம்
15. அழுது பிறள்வாரு மையையோ வென்பாரு ம்
இழவுகொண் டாடுவதற் கேதுகரஞ் செய்தன ரோ
16. இப்படியோர் சாம மிழவுகொண் டாடுகையி ல்
அப்பால்முன் னூறவரு மாவிபெற்றார் பெற்றதன்பி ன்
17. அவ்வேந்தன் தன்னரசி னாளுகையை நேர்நோக் கி
எவ்வினரு மெம்பரமன் யேசுதமைத் தூஷணித்தா ல்
18. மரணுக்கி னைத்தீர்ப்பு வாசிக்க லாகுமி தை
உரைசெய்வீர் யேசுபர னுண்மையாய்த் தெய்வமென்று ன்
19. அக்கினிச்ச முத்திபித்த ழற்கொழுந்தா யாண்டவர்க ண்
கக்குங்கோ பாக்கினையைக் கண்டஞ்சா ராருமுண் டோ

## 3-ம் பிரிவு. அனுபோகசாக்ஷி.

1. மண்மலங்க விண்கலங்க வான்றளங்க ளுந்தியங் க
கண்கலங்கிப் மாவி கல்க்கமுறு மச்சமய ம்
2. சஞ்சரித்த மாளிகையோ சாமிசமூ கத்தனு இ
அஞ்சாம லென்னிலிவ னக்கிரமஞ் செய்ததனு ல்
3. சீக்கிரமாய் வாதையுறத் தீர்வையிட்டிப் பாதக லை
ஆக்கினைக் கனுப்புமென வாசீராய்க் கேட்டுநிற்கு ம்
4. காசுபண நாணயங்கள் கத்தர்சமூ கத்தடைந் து
பேசுவதெம் மாண்டவரோ பேர்போக வாழ்வழித்தீ ர்
5. எழைகட்குப் பிச்சையிடா தெல்லவர்க்கு மேலெகி ரி
பிழைசெய்தான் பிச்சை பிறர்புகழச் செய்துவந்தா ன்
6. வட்டியனி யாயமிட்டு வாங்கியபே ராசையனை க்
கட்டிநர கத்தலறக் கட்டளையைத் தாருமென்னு ம்
7. தானியங்கள் பூரணனாய்ச் சாமிநீர்வைத்ததி லே
தீனிகுடி லாகிரியால் தேகசுகத் தைவளர்த்தா ன்
8. பசித்தவருக் கள்ளியிடாப் பாதகனைப் பேயினங்க ள்
வசத்திலே தள்ளுமென வாழ்த்திவரங் கேட்டுநிற்கு ம்
9. ஆண்டபொரு ளத்தனையு மல்லா துடவிலே நீ
பூண்டபணி யெல்லாமும் பொல்லாவிப் பாதக னை
10. அழுவாரோ டெய்தியழ வாக்கினையைக் கூறுமென் று
தொழுதடியில் வீழ்ந்திரந்து தொந்தனையாய் மன்றாடு ம்
11. நஞ்சைபிஞ்சை காணிகளு நாடுநக றாதிபமு ம்
வஞ்சகத்தால் நெஞ்சகத்தால் வாய்மதத்தாற் சேகரித்தா ன்
12. கள்ளவழக் காடிமற்றோர் காடுகணா கொள்ளையிட்டா ன்
தள்ளுநர கக்குழியில் சாகாது சாகவென்னு ம்
13. பெண்சாதி பிள்ளைகளும் பேத்திமா றாழியரு ம்
கண்போலி ருந்தவருங் கத்தரடி தெண்டனிட் டு
14. வேதவிதி போலொழுக வேண்டாமென் றிம்முரட ன்
சாதனைகள் செய்தமையாற் றள்ளு நரகிலென்பா ர்
15. கைகா லுடலுருப்பெங் காரணத்தாற் பாவமெல்லா ம்
செய்தமையா லின்னொடியே தீநரகிற் றள்ளுமென்னு ம்
16. சந்திரனுஞ் சூரியனுந் தங்களெதிர் தீமைசெய் து
வந்தவனைத் தீநரகில் வாட்டுமென மன்றாடு ம்

17. மண்ணுலகு னைவிழுங்க வாய்திறந்து கொண்டிருக்கு ம்
விண்ணுலகுன் சென்னியின்மேல் வீழ்கவிடை கேட்டதிரு ம்

## 4-ம் பிரிவு. பொய்ச்சாக்ஷி.

1. அத்தருணந் துற்சனப்பே யாண்டவர்முன் பாவிகன்ம ப்
புத்தகத்தை யேந்திவந்து போற்றிசெய்து தெண்டனிட் [illegible]
2. இம்மைமறு மைக்கடவு ளேகதெய்வ நீரிருக் க
உம்மையு மெம்மையுமே யொப்புரவா யெண்ணிநின்ற ன்
3. எங்குநிறைந் தெச்சுகமு மீயவல்லா னீரிருக் க
எங்களினல் நன்மைபெற வென்றுசாஸ்தி ரங்கேட்டா ன்
4. பொய்மதஸ்தோ ரொன்றனைப் பூசிக்கும் வாறும் மை
மெய்மறைய றிந்தவிவன் வேண்டவில்லை யாண்டவ ரோ
5. நம்பிவந்தா னென்பதுமெய் நாங்களொரு காலுமிவ ன்
கும்பிடுகை யேற்காதாற் கோணவலித் தேபணிந்தா ன்
6. மெய்க்கடவு ளாயவுமை வீணன காரியத்தி ற்
பொய்யானைச் சாக்ஷியென்ப் பூசித்தா னும்பெய ரை
7. அன்னைபிதா நெஞ்செரிய வந்தணர கஞ்சுருங் க
சின்னமொழி பேசுவதில் தீராதி தீரனிவ ன
8. பகைமன ஸ்தாபதின்மை பஞ்சாய சோரமுட ன்
வகைவகைத் தீம்புகளும் வஞ்சனைக ளும்படித்தா ன்
9. பெண்ணாசை நெஞ்சிலுறப் பேதையர்க ளைக்களிந் து
கண்ணாலே நோக்குபவன் காமியென்றீ ரிக்கயவ ன்
10. கண்காது வாயாலுங் கைகாலு டம்பாலு ம்
எண்ணரிய செய்கைதமக் கெல்லாந் தெரிந்தவை யே
11. தன்னதல்லா வஸ்துகளைத் தன்னுறுமை யாய்த்திரு ட
உன்னினின்ற வஞ்சகங்க ளொன்றிரண்டோ லெக்ஷா தி
12. பாடப் படிக்கவரம் பாவித்தீர் கற்றதனை ல்
கேடுகெட்ட வாசகத்தைக் கிலக்கங் கற்றறிந்தா ன்
13. இந்திரிய மத்தனையு மேற்றகதி யாய்ப்படைத்தீ ர்
அந்தவவ யங்களினு லக்கிரமந் தேடியிட்டா ன்
14. உற்பவித்த நேரமுத லுள்ளநா ளுள்ளமட்டு ம்
அற்பவிடை யூர்புரியா தாதரித்தீ ரில்லைநன் றி
15. பங்கப்ப டுத்தியெங்கள் பாக்கியசி லாக்கியமு ஞ்
சிங்காசன முங்குறித்தீர் செய்தநன்றி யெண்ணின னே

16. அந்தகா ரக்குழிக்குள் ளாக்கினையா யெம்மைவைத்து ச்
சந்திரனைச் சூரியனைத் தந்தீரிம் மூடனுக் கு

17. பட்சணமா யூணுடுப்பாய்ப் பற்றுதழ லெங்களுக் கு
சட்சுவையு மாடைகளுந் தாபித்தீர் தீயனுக் கு

18. அவலட்ச ணக்கோல மாக்கினீ ரெங்களைநீ ர்
இவனையோ சுந்திரமா யேன்படைத்தீ ரென்னபய ன்

19. நீசப்ப சாசுகளாய் நிந்தைசெய் தீரெங்களைநீ ர்
நேசமுள்ள புத்திரனாய் நீர்வளர்த்தீ ரிப்பய லை

20. வெளிச்சத்துக் காய்ப்படைத்தீர் வெள்ளிநில வைப்பொழு தை
விழித்திவன் பார்த்துவந்தான் வீண்சகுன சாஸ்திரங்க ள்

21. திரவியங்க ளைக்கொடுத்தீர் செய்வான் றருமமெ ன
கருமியாய்ப் பிச்சையிடாக் காதகனா கப்பிளைத்தா ன்

22. பட்டுப்பட் டாவளிகள் பாவநினை வாயுடுத்தா ன்
இட்டநகை யாபரண மீனமதி யாயணிந்தா ன்

23. சிந்தனைகா யெங்களைநீர் தீக்கிறையாய்த் தானமிட்டீ ர்
எந்தநன்றி யுள்ளவனென் றிக்கசட னைப்படைத்தீ ர்

24. காத்துங் கடலுமுந்தன் கட்டளைக்க டங்கவிவ ன்
மாத்திரமுங் கற்பனைக்கு மாற்றா கச்செனித்தா ன்

25. விண்ணவரா மெங்களைநீர் வேண்டாவெ றுப்பாக் கி
மண்ணுலகை மீட்கவந்து மாய்ந்தநன்மை யெண்ணின னோ

26. கன்மலைவெ டித்ததுமண் கஸ்தியால்ந டுங்கின து
கன்மனனும் பாடுகட்காய்க் கண்கலங்கி நின்றதி லை

27. எத்தனையோ பாதகங்க ளெத்தனைமு றைபொறுத்தீ ர்
அத்தனைக்கு நன்றிகெட்ட வக்கிரமி யாய்நடந்தா ன்

28. எங்களைப் பிழைபொறுத்தே யெங்களுக்காய்ப் பாடுபட்டா ற்
சங்கீதத் தோடு நித்தஞ் சாஷ்டாங்கஞ் செய்யோ மோ

29. முப்பது வெள்ளி முகாந்தரமே முத்தமிட் டு
ஒப்படைத்தான் யூதாசு யூசரிட மும்மையன் று

30. ஆதாய மின்றியுமை யாக்கினையிட் டானதனா ல்
ஊதாசி லுமிவனே ஆழிநர கக்குறியா ன்

31. தூண்டிலிட்டு மீன்பிடித்தோந் துண்டுதுண்டாய்க் கண்டமிட் டு
மூண்டதீயில் வாட்டியுண்ண முஸ்திப்பாய்ச் சேர்ந்துவந்தோ ம்

32. இக்கயவ னைக்கணமே யெங்களிடஞ் சேருமென் று
அக்கினிப்பா சங்களுட ஞசீராய்க் சாத்துநிற்கு ம்

## 5-ம் பிரிவு. சம்மனசோர் சாக்ஷி.

1. காவலாஞ் சம்மனசு கைக்கணக்குப் புக்குட னே
தேவசமூகத் தணுகிச் செப்புகிற நேர்மையிங்கே ள்
2. ஜெனித்தவுட னேயிவனின் சீஷனெனத் தாசனெ ன
எனேத் துணை யாகக்குறித்தீ ரெல்லாமுஞ் சித்தமென் றே
3. நீசமனுப் பூண்டிவனே நித்தியமுஞ் சத்தியமாய் த்
தாசிகன்போற் காத்திருந்தேன் தங்களுக்கெல் லாந்தெரியு ம்
4. இரவுபகற் கண்ணே யிமைகாப்ப தின்னுமிக்கா ய்
அறவுபளி சாவலகை யண்டாது தொண்டுசெய்தே ன்
5. பித்துப்பிடித்த பிள்ளைபெற்றவனே வைதடிக்கி ல்
மெத்தவு மவளிரங்கி வேணநன்மை செய்வதுபோ ல்
6. சிந்தனே வாக்குக்கிரிகை தீவினைக ளைத்தொடங்கு ம்
அந்தந்த வேளைகளி லாசீரா யானடுத் து
7. பாவவினே யாமிதுமா பாதகமென் றுன்னவைப்பே ன்
தீவரித்துத் தள்ளியதைச் சீக்கிரத்தி லேமுடிப்பா ன்
8. சாவுதீர்வை நித்தியத்தின் சத்தியத்தை யெண்ணுறுத்தி ல்
தேவதீர்வை தூரமெனச் சிந்தனையைப் பந்தனித்தா ன்
9. சாமியறி வாரொனவே சாடையாய் நினைப்புறுத்தி ல்
பூமியறி யாதிருந்தாற் போதுமெனத் தேறிநிற்பா ன்
10. நிந்தை யாவலாதியென நேரிடுகில் யோசனைக் கு
அந்தரங்கத் தில்முடிக்க வாலோசனை யெடுப்பா ன்
11. மற்றவர்கள் போதகத்தால் மாதிரிகை வாசகத்தா ல்
கற்றதை மறுத்தகற்றி கன்மமெலாஞ் சேகரித்தா ன்
12. தன்னையுங் கெடுத்ததன்றிச் சற்சனரை யுங்கெடுத் து
என்னையும் வெறுத்ததன்றி யென்னுரையுங் கேட்பதில் லை
13. நல்லகனி யுள்நறையான் நாசமுறத் தோன்றினபோ ல்
எல்லவருங் கண்டுவக்க வென்றுசெய்தான் தானதன்ம ம்
14. வலதுகரஞ் செய்தரும மற்றதறி யாமலென் று
உலகிடநீ ரோதியதை யுற்றறிந்து மேற்கவில் லை
15. புண்ணியங் களைத்தொலைக்கப் புல்லுருவி தோன்றினபோ ல்
பண்ணியசங் கீர்த்தனத்தைப் பாழாக்கிக் கேடுகெட்டா ன்
16. எல்லாமுஞ் சன்னதியி லெச்சரித்த லென்கடன்று ன்
அல்லாதுஞ் சித்தமதே யாகவெனச் சேவைசெய்வா ர்

## 6-ம் பிரிவு. சமன்றூக்குந் தராசு.

1. பாவ புண்ணியத்தூக்கம் பார்ப்பதற்காய் மிக்கயேலு த்
தேவதூத னன்னெழுத் திராசேந்தி யங்கடைவா ர்

2. புண்ணியமோர் தட்டினிலும் பொல்லாங்கோர் தட்டிலுமா ய்
அண்ணலெதி ரோகிறுப்பா ராராய்ந்து கொள்மக னே

3. மற்றவர்கள் கண்காணும் வாறுசெய்த நன்மையெல்லா ம்
முற்றிலும்வீண் புண்ணியத்தின் வேடமெ னத்தடுப்பா ர்

4. தானதன்மஞ் செய்ததிலே தக்கபொருள் நேராம ல்
ஈனவஸ்தை நேர்ந்திருந்தா லெல்லா மனர்த்தமென்பா ர்

5. ஞானக் கிருத்தியங்கள் நன்குமுடி யாதபத்த ம்
போனதெனக் கண்டு பிறக்கணிப்பா ரன்னேர ம்

6. சிந்தைதனில் வன்மமுடன் செய்காணிக் கைமுழுது ம்
அந்தமற்ற தென்றகற்றி யாக்ஷேபிப் பாரறிவா ய்

7. கைமாறைச் சிந்தைசெய்து காட்டியநற் செய்கைமுற்று ம்
பொய்யாகப் போனதெனப் போதிப்பா ரன்னேர ம்

8. பபநாச வுச்சரிப்பைப் பண்ணிமரித் தாயெனினு ம்
அபகரித்த சொத்திருந்தா லத்தையுமிடை நிறுப்பா ர்

9. பட்டகடன் தீர்க்கமனம் பாயாது துஞ்சுகிலு ம்
சட்டப்படி கடனைத் தப்பிதத்தின் றட்டில்வைப்பா ர்

10. பாவத்தி லொட்டாரம் பண்ணியசங் கீர்த்தனத்தி ன்
பாவங்க ளத்தனையும் பாவத்தி ருசிலுறு ம்

11. துன்மனப்பேய் கண்டறியாத் தோஷமெலா மச்சமய ம்
சன்மனதோர் கண்டறிந்து சாமிக்கெதி ரோகிறுப்பா ர்

12. புண்ணியங் கனத்திருந்தாற் பூரணவா சீருட னே
விண்ணவருங் கொண்டாட மேன்பதவிப் பேறடைவா ன்

13. பாவமே மிகுத்திருந்தாற் பாவநர ஞத்துமத்தை ச்
சாபமும் பேயினமுந் தம்மதென நாதமிடு ம்

## 7-ம் பிரிவு. பாவவாளன்றனிமை.

1. அன்னேரத் திற்றனக்கா ராதரவு செய்வமொ ன
தன்னருகில் நின்றிருக்குஞ் சம்மனசைத் தெண்டனிட் டு

2. என்காவற் றூதுவரோ யின்னேரங் காருமெனி ல்
உன்காவற் சம்மனசோ ரோதவரும் வாசகங்கே ள்

3. தின்மையனைத் துந்தவிர்த்துன் சீவிய்நா ளத்தனையு ம்
நன்மையனைத் தும்புரிந்து நம்முறைமையை மீறிநின்று ய்
4. தேவசமு கத்திலுனைச் சேர்க்கிறநாள் மட்டிலுமெ ங்
காவலேநீ யன்றியினிக் காலமில்லை நீங்குவென்பா ர்
5. தன்பேர்க் குடையவளைத் தாபரியு மென்றிரஞ்சி ல்
என்சலுகை முன்தேடா தேனிடைந்தாய் செல்லுவென்பா ர்
6. சஞ்சுசை மாமுனியைத் தஞ்சமென வஞ்சலித்தா ல்
எஞ்சனுகைத் தேடவந்தா யிம்மதியேன் முன்மறந்தா ய்
7. தேவபிதா தஞ்சுதனைச் சீராட்டி நாமிருக்க ப்
பாவியுனைக் காப்பாற்றப் பற்றுதோ வென்சலு கை
8. தம்மை வளர்த் திடுங்கைத் தாதையென யேசுபர ன்
எம்மைத் தெரிந்திருக்க வேனீ நமைமறந்தா ய்
9. இஸ்பிரீத்து சாந்துதெய்வ மெம்மனிதர்க் குள்தம து
இஸ்திரியை யெம்மைநம்பி யேனளித்தார் நீ மறுத்தா ய்
10. தேசுதிகழ் மோக்ஷந் திறந்துனைய துட்புகுத் த
யேசுமரி யென்ற யிருதிறவு கோலெம தே
11. சமஸ்தவரம் பெற்றீயெஞ் சத்தியைநீ கேட்டறிந்து ம்
நமஸ்கரித் தண்டாதவனே நம்மையகன் றெய்துவென்பா ர்
12. முத்திக் குடையவளே மோக்ஷத்தின் ராக்கினி யே
சத்தி மிகுத்தவளே தாபரியு மென்றிரஞ்சி ல்
13. பாவியைநே ரெறெடுத்துப் பாராது தேவம ரி
கோபமிகப் பொங்கினளாய்க் கூறவருங் கண்டனைகே ள்
14. ஆதிபிதா வென்றகப்ப னுதிசுத னென்மக னே
சோதிசாந் திஸ்பிரீத்தென் றுய்யமண வாளனல் லோ
15. மூவுலகுக் காண்டவளாய் மூவாளு மேற்றவெ மை
பாவி யேன் மறந்தனையோ பாழாகப் போகவென் றே
16. பாவிகளை மீட்பதையெம் பங்கெனப்பா ராட்டுகையி ல்
சாபிக்கப் பட்டவன்போற் றுறுமாறுய்த் திரிந்தா ய்
17. நம்மையன்றி வானுலக நாட்டகத்திற் சேர்ந்தவர்க ள்
இம்மையிற்றுன் கேள்வியுண்டோ வேற்கனநீ தேடாதே ன்
18. எம்மீது பத்தியற்றோ ரெங்குமுண்டோ வுண்டாகி ல்
அம்மனிதன் மாத்திரமே யாக்கினைக்கா ளாவனுண் மை
19. நம்பிய சண்டாளனையும் நாம் நெகிழ்ந்து போனதெ ன
அம்புவியிற் கேள்வியுண்டோ வக்கிரமி யானவ னே

20. பத்தாவின் மீதிலேனும் பத்திபக்ஷம் வைத்திருந்தா ல்
இத்தருண முன்னுயிரை யீடேற்றம் பாத்தியந்தா ன்
21. என்குருதி யாற்செனித்த வேகமகனை வெறுத்தா ய்
உன் பொருட்டால் மாய்ந்தகன்றி யுற்றுணர்ந்துங் கேடுகெட்டா ய்
22. பால்சுரந்த தாயிணையாம் பார்த்திருந்தோ முன்வர வை
கோலெரிந்த வந்தகன்போற் கூறவந்தா யென்றுரைப்பா ள்
23. இச்சமயம் பாவிபடு மேக்கமுங் கலக்கமுங்கொ ள்
அச்சமு மயக்கமுமுற் றுராய்ந்து சொல்லமுற்று ம்
24. மலைப்பாம்பு கவ்வியொரு மாதவளைக் குள்ளிழுத்து க்
கொலைபுரியச் செல்லுகையிற் கூடினவ ரோடிவி ட
25. தனித்தமட மாதலரித் தட்டளிந்துட் செல்சமைய ம்
இனிததனக்கு மீக்ஷியில்லை யென்றேங்கு வாளதுபோ ல்
26. எல்லோரு மாற்றலரா யெங்கும் பயங்கரமா ய்
எல்லாங்கோ பக்குறிகண் டேங்கிப் பதைபதைத் து
27. தேவுலகே நீயிடிந்தென் சென்னிமிசை வீழா யோ
பூவுலகே நீவெடித்துப் பூரணமா யுண்ணா யோ
28. மலைகளே குன்றுகளே வந்தெனது மேல்விழுந் து
கொலைபுரிய லாகாதோ கோரமிக வாகுதென்பா ன்

## 8-ம் பிரிவு. தேவதீர்வைத் தன்மை.

1. அந்நேரம் யேசுபர னாத்துமத்தை நேர்நோக் கி
என்னதீர்ப் பங்குரைப்பா ரொன்பிறப்பே காதுகொ டு
2. சற்சனர்க ளாத்துமத்தைச் சாமிதய வாயடுத் தி
உற்சாக மாகவணைத் துச்சரிப்பார் வாழ்த்துதல்க ள்
3. பாடுபட்ட யேசுபரன் பாவிகளைக் கண்டநொ டி
கோடையிடிச் சத்தமெனக் கோபாவே ஷக்கடலா ய்
4. ஆர்ப்பரித்துக் கூறுமொழி யாணவத்தாற் கேடுகெட் ட
தீர்ப்படைய வோஜெனித்தாய் தீநரகுக் காளானா ய்
5. இம்மையிலே பேய்களினா லெய்திவரு நன்மையெ ன
நம்மைவிட்டப் பேய்களைநீ நம்பினதாற் செல்லவர்பி ன்
6. நிற்கையிலுஞ் செல்கையிலும் நித்திரைப் படுகையிலு ம்
அற்பவிடை யூரணுகா தாதரித்தோஞ் சிநதைகெட்டா ய்
7. இன்றளவுங் காத்திருந்தோ மீடேற வாயெனநா ம்
நன்றிகெட்ட காதகனே நாட்கடந்து போனதி னி

8. பசித்திரந்து தேடிவந்தேன் பார்த்தாய் வலுத்தவ ளை
புசிப்பதற்கா யோர்சவளும் போசனமுந் தந்ததில் லை
9. தாகித்துன் வீடுவந்தேன் தாபரித்துன் பானமதி ல்
பாகித்துத் தந்திருநதால் பங்கடைவா யென்னுட னே
10. நோய்பிடித்து மெய்மலிந்து நொந்துவந்தேன் நோக்கா து
தாய்சனத்தை யோம்பிலதே சாரமென யெண்ணமிட்டா ய்
11. சிறையி லிருந்தவெனைத் தேற்றுவது வீணென வே
அறையி லிருந்தவனை யாசரித்தா யாதுபய ன்
12. ஆடையின்மே லாடையணிந் தாயணி யணியா ய்
வாடையுற்றே னோர்பீறல் வஸ்திரமுந் தந்ததில் லை
13. என்னைப் பிறக்கணித்தா யெல்லவரை யுங்கணித்தா ய்
உன்னைப் பிறக்கணித்தோ மூழியுள்ள காலமட்டா ய்
14. நித்தியகா லம்பகைத்தோம் நித்தியத்தின் ஜீவியவி ப்
புத்தகத்திற் பேர்கிருக்கிப் போட்டோ முனையறியோ ம்
15. என்தகப்பன் வீட்டிலுனக் கில்லிடமே யில்லையில் லை
உன் தகப்பன் வீட்டிலிட முண்டுனக்கங் கேநடப்பா ய்
16. சாபிக்கப் பட்டவனைத் தள்ளுநர கென்றநொ டி
கோபமிரு பேயிழுத்துக் கொண்டோடிப் போமக னே
17. அன்னேரம் பாதகனி னுத்தமமெய்ப் பாடுபடு ம்
என்ன துடிதுடிக்கு மென்றுரைக்க வார்க்கியலு ம்
18. நாதர்பூங் காவனத்தில் நாத்தாமே யென்றசொல்லா ல்
யூதரொலாஞ் செத்தனரோ யோசனைசெய் யந்நொடி யை
19. சொல்ல வுவமையிலேன் சொல்லுதற்கு ஞானமிலே ன்
எல்லா நொடிக்குமுத வித்தீர்வை நேரும றி
20. நித்தியத்தின் முழ்வுயர்வு நீளவக லங்கணிக் க
இத்தருணந் தக்கதல்ல வென்றறிவா யம்மா னை

---

**தீர்வைச் சருக்கம் முற்றிற்று.**

---

ஆகச் சருக்கம் பத்துக்குப் பிரிவு எண்பத்தைந்துக்குக்
கூடிய செய்யுள் 1756.

---

## ஊனொடுக்கச்சருக்கம்.

### விருத்தம்.

இந்தவுட லிறந்து பிண மாகத் தீரும்
ஏகஜன தளங்க ளங்கே னிசைந்து சாரும்
ஏந்தவிதஞ் சவங்குளிவா யிடத்திற் சேரும்
எல்விதமெய் யடக்குவது தகுதிபாரும்
சொந்தமனை கல்லறையே யிறுதி நேரும்
தூர்ததவுடல் மண்ணாயி லிருக்கும் வாறும்
பந்தகஞ்செய் குளிதிறந்தாற் காணுங் கூறும்
பாமரர்கள் போதகமும் பகருவாமே

### முதல் பிரிவு. பிரேத நேர்மை.

1. பிறந்துலகில் மானிடனாய்ப் பேரொடுத்தோ மின்னொருகா ல்
இறந்துபிண வாடைதட்ட யீங்கிஷமாய்ப் பேரொடுப்போ ம்
2. ஆணவத்தால் நீமுடித்த வாகாசக் கோட்டைகளு ம்
வீணவத்தம் பேர்ந்திடிந்து வெட்டவெளி யாமல வோ
3. இந்திரியச் சேஷ்டையெலா மின்றுமுத லோய்ந்ததெ ன
வந்தவினர் கட்டிவைப்பார் வாய்கைகா லாக்கைமுற்று ய்
4. ஓர்காக்கை வீழ்ந்தவுட னூர்க்காக்கை கூடுவபோ ல்
சேர்வார்கள் சாதிஜனர் சிந்தைசற்று மங்கிநிற்பா ர்
5. பெண்சாதி வைப்பிருப்பைப் பேணவகை யாதுவென க்
கண்சாடை யோடழுது காதலனைக் காத்திருப்பா ள்
6. மக்களெலாந் தன்தகப்பன் வாழ்க்கைமுற்று நம்மதெ ன
மிக்கமன மூறினராய் வேஷமிடு வார்புலம் பி
7. பங்கும்பங் காளிகள்தம் பங்கடைய வோர்வழக் கை
சிங்காரஞ் செய்வதிலே சிந்தனையை நாட்டிநிற்பா ர்
8. கடன்காரர் தங்கள் கடன்களுக்கோர் மோசமின் றி
திடனான வோர்வழியைத் தேடியே யுசாவிடுவா ர்
9. விரோதவை ராக்கியர்தம் வீம்புசெயம் பெற்றதெ ன
குரோத மகத் துட்பதித்துக் கூடுவரு ரொப்பனைக்கா ய்
10. மாண்டபர னெஞ்சகத்தில் வல்லயங்கொண் டெய்தவன்போ ல்
மாண்டவன்மேற் றீதுசொல்ல வந்திருப்பார் வேறுசில ர்
11. சேர்ந்தவரின் னுறுடலைச் சீக்கிரத் தடக்கிவிடி ல்
தீர்ந்ததிந்த வேலையெனச் சேகரிப்பார் பாடையொன் றை

12. ஆவியுந் தேகமுமா யன்புருவாய் வாழ்ந்திருந் த
தேவியுன் றேகமதைச் சீராட்டார் புத்திரரு ம்
13. சித்திரமா யுண்டமைத்துச் சீவித்த மாளிகைக்கு ள்
பத்திரப் படுத்தவுந்தான் பற்றாத கஷ்டம தே
14. சிங்கார மாளிகையைத் தீட்டியவோர் சீராள ன்
பங்கமிதிற் கூறுமெனப் பந்தயமாய்க் கேட்டதற் கு
15. சேர்ந்திருந்தோ ரொல்லவருந் தீரமெனக் கூறிநிற்க க்
கூர்ந்தவறி வேறொருவன் கூறியசீ ராடர்கள்மு ன்
16. நேயர்க ளுரைத்தமொழி நின்மலமே யென்றுனு ம்
வாயலிந்த மாளிகைக்கு வைக்கவொண்ணா தேனெனி லோ
17. வாசலிருந் தாலெசமான் மாய்கிலவர் நல்லுடலை த்
தாசரிந்த வாசலினால் தள்ளிவிட நேருமென்று ன்
18. அடுக்கடுக்காய் வீடுகட்டி யாயிரமாய் வாழுகினு ம்
ஒடுக்கமிஃ தல்லவென வுண்மைகொண்டா னத்தனவா ன்
19. மண்வீடு கட்டுதற்கு வைத்தகவ லைக்கவன ம்
விண்வீடு கட்டுதற்கு வேண்டா வெறுப்புனக்கே ன்
20. பணமேற வீடமைக்கும் பண்டித புரோகித ரோ
பிணமேகா தோர்மனையைப் பேசீரோ வந்தண ரோ

## 2-ம் பிரிவு. பாடையாத்திரை.

1. தனசீலர் மெய்யெனினுந் தம்மனைக்குள் வைத்திருக் க
மனமிலராய்ப் பாடைகட்ட மார்க்கமெலாந் தேடுவர்கே ள்
2. தலையெடுப்பும் வாய்மதமுந் தன்னகமு மோடியபி ன்
உலகினுக்கே நீசகிக்க ஒவ்வா விழலாகி ப்
3. பெண்டீர் மறுதலிப்பாள் பிள்ளைகள் பிறக்கணிப்பா ர்
கண்டவருஞ் சீக்களிப்பார் கல்லறைநே ரோடுவென்பா ர்
4. பொல்லார்மெய் சொல்கிலும் பூம்புகைத் தீபமுட ன்
எல்லவருஞ் சங்கைசெய் தெழுந்தடக்கப் போவதென் ன
5. தீக்ஷைபெற்ற தேகமெனச் சேர்ந்துசெபஞ் செய்தெடுத் து
பூச்சியத்தோ டெய்தடக்கல் புண்ணியமுண் டாமறிவா ய்
6. கஷ்டமு ணுஞ்செங்தெனினுங் கல்மரமபுல வீழுகினு ம்
நஷ்டமுறு தோர்சமயம் நன்மைதரு மென்றறிவா ய்
7. பஞ்சாமிர்தம் புசித்துப் பட்டுப் பட்டா டையுடுத் து
துஞ்சினவ ரங்கமுமே துற்கந்த நாறும றி

8. மாடாடு மாளுகிலும் வைத்துவைப்பார் நீயிருக்க க்
கூடாதென் ஞேட்டிவிடக் கும்பலங்கு சேரும றி
9. ஓடுவாயுன் மாளிகைவிட் டுள்ளதெலா நீயிளங் து
காடுனக்கு வீடாகுங் காற்காசு முன்னதல் ல
10. கட்டிலுநாற் காலியெங்கே காலொலுகு கையொலுகா ய்
கட்டியவா சந்தியல்லாற் காணேமோர் பாக்கியமு ம்
11. நால்வருனை மெச்சவென நாட்டியங்க ளாடிவந்தா ய்
நால்வருனைத் தூக்கவிதோ நாளோடி வந்தன வே
12. கொட்டிமுளக் கிட்டுநன் ருய்க் கூத்தாடிப் பூச்சாங்க ள்
கட்டியவப் பாடையுடன் கல்லறைக்கே கொண்டுசெல்வா ர்
13. ஆடிலென்ன பாடிலென்ன வாயிரமே ஜாதிஜன ர்
கூடிலென்ன வுன்னுடனே கூடவரு வோமோயெதுவு ம்
14. நாட்டிலேநீ யாடிவந்த நாடக முடிந்ததினி க்
காட்டிலே தனித்திருக்கக் காலமுடி வானதுமெ ய்

## 3-ம் பிரிவு. சவத்தைச் சேமித்தல்.

1. பாடையைக் கொண்டிறக்கிப் பாதாதி பூட்டிவைத் த
பூடணங்க ளத்தனையும் பொட்டாய்க் களைந்தெடுப்பா ர்
2. எக்கோலந் தாய்வயற்று லிங்குபிறந் தாயதுபோ ல்
இக்குழிக்குள் ளெய்தவென் றேடாள மாயுரைப்பா ர்
3. காதிற் சவடியெங்கே கண்டசர மாலையெங் கே
பாத சரங்களெங்கே பட்டுப்பட் டாடையெங் கே
4. நாகையிலே யோர்தினவான் நாயகியா ளையடக்கு ஞ்
சாகையிலே சேருமுனந் தங்கவெள்ளிப் பூத்தெளித் து
5. தம்பூரு நாகசனந் தாரைதவுல் மேளமுட ன்
கெம்பீர மாய்நடத்தி கீழிறக்கி மூத்தமக ன்
6. பொன்காய்த் ததன்தாயின் பூஷணங்க ளத்தனையு ந்
தன்கரத்தாற் சிக்கனமாய்த் தாவியெடுத் தானெனினு ம்
7. முக்கால் ரூபாய்மதிக்கும் மூக்குத்தி யை:க்கழட் ட
தக்கனவா யாகாதால் தாய்மூக் கறுத்தெடுத்தா ன்
8. கல்லறைக்குச் செல்பொழுதிற் கண்டசில வுக்கிஃதோ ர்
சல்லியள வற்றதற்காய்த் தாய்நாசி யையறுத்தா ன்
9. என்ற செய்கை யெண்ணி யெண்ணி யேவரிந்தே னென்மக னே
அன்றுன்னே டேதிவரு மாராய்ந்து சொல்புதல் வா

10. வந்தவர்க ளோர்பிடிகை மண்ணையுன்மேல் வீசிவிட் டு
அந்தவ ரையைமறந் தப்புறத்தே போய்நிலைப்பா ர்
11. மண்ணறை யுள்ளுனை வைத்து மண்ணமுத்திக் கூருகொண் டு
மண்ணு லுண்டானவனே மண்ணுய்ப்போ வென்றகல்வா ர்
12. மண்ணுவா யென்றவிந்த வாக்கியத்தை வாழ்நாளி ல்
எண்ணுது கல்லறைக்குள் ளேகாதே யின்னமுங்கே ள்
13. பெற்றவர்கள் வாசல்மட்டும் பெண்டீரோ வீதிமட்டு ம்
மற்றவர் மயானமட்டும் மண்போட்டா லெண்ணமுற்று ம்
14. சாங்கால நீமரண சாதகமாய்த் தீர்த்ததவு ம்
நீங்காது நீளுமென நிச்சயிக்கப் போகா து
15. காரிருளாய் மொய்த்தமுகில் காற்றிடையிற் றேய்வதுபோ ல்
பேரருகிச் சீரருகிப் பேசியபேச் சோய்ந்தழியு ம்
16. தண்ணீருள் வீழ்ந்தமந்தி சாமவஸ்தை கண்டினங்க ள்
எண்ணியா குலிப்பதுபோ லேங்கிநிற்பார் மானிடரு ம்
17. கண்ணெதிரிற் செத்தமந்தி கண்ணில்மறைந் தவுட ன்
விண்ணுரங் கொட்டுமந்த வேடிக்கை போல்மனுவோ ர்
18. பிணத்தை யடக்கியப்பாற் பேர்ந்ததன்பின் றம்பழைய
குணத்தைவிடா தகந்தைக் கோல மெலாங் காட்டிநிற்பா ர்
19. வெடி யோசைக் கஞ்சிமிரண் டோடு பட்சியின ங்
குடிப்போன வவ்விடத்திற் கூடுவதோ வாச்சரிய ம்
20. புத்தியிலாச் செந்துகளைப் போலே பகுத்தறியு ம்
புத்தியுள்ள நீயவைபோற் புத்தியற்ற தாச்சரிய ம்

## 4-ம் பிரிவு. அடக்கச்சமயம்.

1. மாய்ந்தவர்கள் தேகமெய்யாய் மாண்டிறந்த தல்லவென் று
ஆய்ந்துணர்ந்து தேருமலங்கமடக் கல்பிச கே
2. பேச்சடங்கி லக்கணமே பின்னுமுன்னுந் தேராம ல்
மூச்சடைத்துச் சாம்படிவாய் மூக்கையுமேன் கட்டுகிறீ ர்
3. சேத்துமமே லாடியபின் தேகத்தைப் புரட்டினதா ல்
ஆத்துமம டங்கியத னந்தமுறை யானறிவே ன்
4. சீவனற்ற தேகமொன்றைச் சேமிப்ப தாய்மதித் து
சீவனுடன் சிற்சிலரைச் சேமிக்கின் றூர்பெரியோ ர்
5. செத்தபிரே தங்களைநீர் சீக்கிரத் தடக்குவ து
மெத்தவுங்கே டென்றுசற்று வேளைதா மதித்தடக்கு ம்

6. லுயிஸேஸ் தலையடக்க நூலிடையாள் நீக்கினதா ல்
உயிரடைந்து பல்லாண்டா யுய்த்திறந்தா ரேபிராஞ்சி ல்
7. ஆழியகத் தோர்துரைதன் னங்கமிடா தாதரித் த
ஊழியனுக் காஸ்தியையொ யில்வரைந்து வாழ்ந்திறந்தா ன்
8. என்னவகை வீய்ந்தாலு மீராறு நாளிகைக்கு ப்
பின்னடக்கஞ் செய்தாற் பெற்ரோர் சிலாக்கிய மே
9. கர்ப்பிணியை வீய்ந்தடக்குங் கால்வயிற்றைக் கீறியந் த
கர்ப்பமக வைமடிமேற் கவுழ்த்துகிறீ ரொன்னபய ன்
10. மாரிவளங் குன்றுமென்று மாகெடுதி நேருமென்று ங்
கோரியிதைச் செய்வதுமா குற்றமுண்டா மானதினு ல்
11. தாயிறந்த தக்ஷணத்திற் சத்திரம்வைத் தத்தையெடு ம்
சேயிருந்தால் வாழ்வடையுந் தீக்ஷைபெற்றால் நன்மையுண் டு
12. இவ்வாறு செய்வதுநம் மெல்லவர்கள் மீதுகட ன்
ஒவ்வாது நீக்கினவ ருத்தரிப்பார் வேருலகி ல்

## 5-ம் பிரிவு. சுயாச்சிதமனை.

1. நாடுனை வெறுத்ததனுல் நான்குமுள மண்குளியு ன்
வீடுநெடு நாளதிலே வீற்றிருக்கப் பாத்திய மே
2. வாழ்விதுவே காலமென மாகவலை யுற்றலைந் து
மாழ்வதிலே யெய்துவதை மட்டிடாத வோர்வணிக ன்
3. சந்தையிலோர் கோழிகொண்டு தன்னேயன் பாலளித் து
எந்தனகஞ் சேருமென யேவிவிடுத் தானத னை
4. ஏவியச் சந்தைமுடிந் தில்லிடம்வந் தேறியபி ன்
தேவியின்பாற் கோழிவராச் செய்தியறிந் தக்கணம்போ ய்
5. அன்பனேயென் கோழியெங்கே யார்வசத்தி லொப்பிவித்தா ய்
என்மனையி லில்லையென்று னென்றவுட னன்னேய ன்
6. உன்மனையுட் கோழிவைத்தே னுள்ளாய்ந்து பாரா து
என்னிடநீ கேட்கவந்தா யென்றளைத்த வன்றனக்கா ய்
7. கட்டிவைத்த கல்லறையைக் காட்டியதுட் கோழிவைத்தோ ன்
எட்டியதுட் பாருமென யெக்களிப்பா யவ்வணிக ன்
8. இல்லிடஞ்சே ரொன்றலவோ யீய்ந்தனுப்பி னேனிதை நீ
கல்லறையி னுள்ளடக்கக் காரியமே தென்றமட் ட
9. வீட்டிலல்ல யிவ்விடநீ மெத்தவுநாள் வாழ்வதென க்
காட்டவிங் கொளித்துவைத்தேன் காரமுறு தின்னமுங்கே ள்

10. மாமுனி பிலாத்துகுழி வாசலிற்போய் நின்றகொண் டு
நாமிருக்கும் வீடிதே நடுத்தீர்வை மட்டுமென்று ர்
11. என்றுபல வாறு யியம்பவவன் நன்குணர்ந் து
அன்றுமுதற் புண்ணியத்தி லாயிசுநா ளைமுடித்தா ன்

6-ம் பிரிவு. கல்லறைவாயலைமூடல்.

1. கல்லறைக்குள் வைத்தசவக் காக்ஷியைநீ சிந்தைசெய்தா ல்
நல்லநினை வோடிவரும் ஞானவொளி தோன்றுமங் கே
2. மாய்ந்தராணி யாள்சவத்தை மண்ணறையில் நோக்கிய தை
ஆய்ந்துணர்ந்து போர்சியாரர்ச் சீஷ்டமுத்திபெற்று ர்
3. அழகு சவுந்தரிய மந்தஸ்து மேன்குலமு ம்
விழலிலும்வீ ணென்பதைநீ விஸ்தார மாயறிவா ய்
4. வித்தார மாளிகைக்குள் வீற்றிருந்த நாள்முடிந் து
செத்தால்நீ வீற்றிருக்குஞ் சிற்றறைக்கு வாமக னே
5. கல்லறைமேற் றிண்ணையிட்டு கற்குருசிற் பேரெழு தி
எல்லவரும் வேண்டிநிற்பா ரென்றமைப்பீ ருத்தம மே
6. கற்கடுக் கட்டிலென்ன காரைவைத் தழுத்திலென் ன
உட்கட்டில் நாற்றமெலும் புள்ளரங்க மெண்ணுவதா ர்
7. தீக்ஷையுள்ள நல்லுடலைச் சேமித்திக் கல்லறைமே ல்
பூச்சியத் துடன்றீபம் பூத்தூபஞ் சாற்றுகின்றீ ர்
8. தீக்ஷபெற்ற வங்கமெனச் சீரிடுதல் நன்முறைதா ன்
மோக்ஷமுற்றோர் கல்லறையை முக்கியங்கொண் டாடிநில்லு ம்
9. குலியேல்மூ தன்னுடைய கோமானைப் பார்த்திறை யே
சலியாம லோர்மனுநீர் தந்தருளும் யாதெனி லோ
10. எழுபதாண் டும்படைகட் கேகதளக் கர்த்தனெ ன
ஒழுகினதை யாரறியா ருன்மனமுஞ் சாக்ஷிசொல்லு ம்
11. சற்குருக்க ளையழைத்துச் சங்கீர்த்தனம் படித் து
நற்கருணை யேற்கவொரு நாள்தேவை தாருமென்று ன்
12. இந்தவுரை கேட்டவுட னேந்தல் மனமதிர்ந் து
அந்தவர மீயவென்ன லாகுமோவெ னப்பகர்ந்தா ன்
13. என்றமொழிக் கக்ஷணமே யேங்கியந்த நோயாள ன்
நின்றவரை யேரெடுத்து நெட்டுயிர்த்தென் சார்ந்தவ ரோ
14. இந்தவிறைக் கித்தனையாண் டேற்கடந் திவ்வுலகி ல்
வந்தகா ரணத்தைவிட்டு மாண்டானெனக் குறித் து

15. வைப்பீரோர் கல்விவிதை வைப்பீரொன் கல்லறைமே ல்
வைப்பீரொன் பேருமதில் வாசிப்போர்க் கென்றிறந்தா ன்
16. கல்லறையைச் சித்திரமாய்க் கட்டுவதால் மோக்ஷமுண் டோ
நல்லொழுக்க மாத்திரநன் நாடுதரு மம்மா னை

## 7-ம் பிரிவு. மூடிய குழியைத் திறந்துபார்.

1. கருத்துடன்சே மித்துவைத்த கல்லறைவா சற்றிறந்தா ல்
திருக்கூத்து மெத்தவுண்டு திஷ்டிமகிழ்ந் தூக்கமிகு ம்
2. நேற்றுப் புதைத்தசவம் நிஷ்டையி லிருப்பது வோ
வேற்றுருவா கிப்பயமாய் வேஷமுங் குலைந்தன வே
3. சந்திரமுகத் தொளிவுந் தாமரைக் கரத்தெழிலு ம்
சுந்திரத்தே கத்தழகுந் தோள்மார்பின் சங்கையெங் கே
4. ஊதிவீங்கி விம்மிவீராந் துப்பிய தைத்துதித் து
காதுவிழி நாய்வாசி கைகாலுற் றூராய்வா ய்
5. ஈயாட மேனி யெரும்பரிக்க வாதியந்த ஞ்
சீயாடத் தேகஞ் செனித்த புழுவரிக் க
6. நாற்றங் கசுமால நாற்றமகாத் துற்கந்த ம்
நாற்றமு ரோங்கதைகஷ்ட நாற்றப்பிண மிது வே
7. ஓர்வருட முன்புதைத்த துள்ளவொரு கல்லறை யை
பார்வையிட நீவருகப் பக்ஷமுடன் வேண்டுகினறே ன்
8. பார்மகனே கால்கையைப் பல்லுபழுவெண்பு மண் டை
கோர்வைதவி ராதடுக்காய்க் கொத்துட னிருப்பதல் லோ
9. மூடிநின்ற தோல்தசையும் மூளைகுட லீரலெல்லா ம்
கூடியிராதெங்கு குடியேறிப் போயினசொ ல்
10. நக்ஷத்திரக் கண்ணுபள்ளம் நாசியேக மானதொள்ள ல்
விக்ஷித்திரக் காதுபொத்தல் மேல்கீழ்வா யேகபத்த ல்
11. எல்லாமும் வெள்ளெலும்பு எல்லாம்வீ ணனசம் பு
எல்லாமுதிர்த்த மொட்டை யெல்லா முழுக்கட் டை
12. ஒப்பிலதாய்த் தன்னழகை யுத்தேசித் தோர்மடந் தை
சிற்பசாஸ் திரத்தொடையாய்ச் சித்தரிப்போ னையளைத் து
13. சொன்னபடிக் கோவியனுஞ் சுந்தரசவுந் தரமா ய்
சென்னிமுதற் றேள்வரையிற் றேரலங் காரமெ ன
14. தெள்ளற வரைந்ததற்பின் றேகாதி யந்தமுற்று ம்
வெள்ளெலும்பா கப்பொறித்து மெல்லிநல்லாள் கைகொடுக் க

15. கண்டவுட னம்மடந்தை காய்ந்தவனை யேறெடுத்து
வெண்டுடலாய்த் தீட்டியெனை வெட்கவைத்த தென்னவென
16. உள்ளபடிக் கிப்போதி தும் முகத்தின் சாயலினி
வெள்ளெலும் பாய்ப்போவதையும் விஸ்தரித்தே னென்றுரைத்தான்
17. இம்மதியுற் றவ்வனிதை யீற்றெலும்பைச் சிந்தைவைத்து
தம்மரண நாளளவுஞ் சான்றநெறி யேநடந்தாள்
18. வேந்தொருவ னோர்முனியை வேட்டைமுனை போதுகண்டு
போந்தமுனி யையடுத்து போற்றிசெய்யக் காத்துநிற்க
19. உந்திதலை மண்டையினோ டொன்றதன்மேற் சிந்தைவைத்து
வந்தமன்ன னைமறந்த வாறிருந்தா ரம்முனிவர்
20. தன்வரவை யெண்ணாதால் தன்னகனென் றுன்னிமன்னன்
என்னவா லோசிப்பதென்றா னென்றமொழிக் கந்தரிஜி
21. என்றகப்பன் மண்டையென்றும் யாரொவர் கபாலமென்றும்
உன்றகப்பன் மண்டையோடோ வுன்னினேன் சொல்லென்றதற்கு
22. என்றகப்பன் மண்டையென்றும் யாரொவர் கபாலமென்றும்
உன்றகப்பன் மண்டையென்று மோதலரி தாகுமென்றான்
23. இந்தவுரை கேட்டுமுனி யேந்தலைக் கண் ணேறெடுத்து
மந்திரிகள் வாணொன்ற வைபோக வாழ்விதுவே
24. குயவனோர் மண்ணெடுத்துக் கோற்கலங்கள் பற்பலவாய்
பயனடையச் செய்வதிலப் பாத்திரத்துள் ளேதுயர்த்தி
25. பாக்கலங்கள் கோக்கலத்தைப் பாதகமா யோதினபோல்
மேக்குலத்தார் கீட்குலரை வேறுபடக் கூறுவதேன்
26. எல்லாமும் மண்கலம்போ லெல்லாரு மண்கலந்தான்
அல்லாமற் பொன்னுடலா ராக்கையெல்லாங் கால்மிதிமண்
27. ஆணவமேன் வீராப்பே னாங்கார மேனடிப்பேன்
வீணிலும்வீ ணான விழ லாண்டி யார்நாமே
28. காலிழிவைக் கண்டுவெட்குங் கானமயிற் போலுனது
கோலமறிந் துக்கிமனங் கூசிநட வென்றுரைத்தார்
29. ஓரரசன் பொன்னாலே யோர்கலப்பை செய்துவைக்க
ஊருளரோ னென்றமொழிக் கோதியநல் வாசகங்கேள்
30. மன்னவனா யாகுமுதல் மண்ணுழுதி யான்பிழைத்த
முன்னிலமை யெண்ணமுற மூட்டிவைத்தே னென்றறைந்தான்
31. ஐந்துவிர லுண்டதிலொன் றாணவஞ்செய் சங்கதியாய்
மைந்தரோலா மண்ணலோவுன் வாழ்வுசத மோபகர்வாய்

32. நம்பிறப்பு மண்ணூழி நம்முணவு மண்ணதுபோல்
நம்முடிவு மண்ணளிவே நற்பொருளொன் றேனுமுண்டோ

8-ம் பிரிவு. மரித்தோர் முறைப்பாடு.

1. இங்கிறந்தோர் காரணங்க ளிவ்விதமாங் கல்லறைக்குள்
தங்குகின்றோர் சொல்மொழிக்குஞ் சற்றேசெவி கொடுப்பாய்
2. சாகமன மில்லாதார் சாக்ஷிபல வாறுரைப்பார்
சாகிறவன் சொல்மதியே தப்பாத வாக்கியமாம்
3. மாயும்பேர் சொல்லுவதிலு மாய்ந்தவர்கள் வாக்கியமே
ஆயிரம்பங் குண்மையென வாதார மாதலினல்
4. என்னுடன்நீ கல்லறைமட் டேறிவர வேண்டுகின்றேன்
உன்மனதி லுள்ளவைய மூண்மையாய் நீங்கிவிடும்
5. கல்லறைக்குள் வீற்றிருக்குங் கன்மவினை யாளர்களே
சொல்லுமுப தேசமெனிற் சொல்லவரும் போதகங்கேள்
6. மண்ணிலத்தில் மண்புசித்து வாழுகின்ற மானிடரே
எண்ணிப்பா ராமையினு லெய்தியகே டேதுரைப்போம்
7. அடிமுடிவில் லாதபெரு மாணவக்கோட் டையெழுப்பி
முடிவுநினை யாதிறந்து மூடர்களாய் வந்துவிட்டோம்
8. மண்ணுலக மென்றவுங்கள் வாசாப்பு மேடையின்மேல்
அண்ணாவி வேஷமணிந் தாடிநின்றோம் பாடிவந்தோம்
9. மன்னனொன வேடமிட்டு மந்திரிகளாய் நடித்து
தென்னனொன நாட்டியங்கள் செய்துமதி கேடுகெட்டோம்
10. மிட்டாதார் பட்டயதார் மேன்குலவீ ரர்களாய்ச்
செட்டிதட் டார்களெனச் சேஷ்டையெலாங் காட்டிநின்றோம்
11. சிங்காரமா யுடுத்தோந் தேயமொறுங் கேற்றவென
ரிங்காரம் பாடியபின் நேற்றிரவி லிங்கெழுந்தோம்
12. நாங்களிங்கு வாழ்வோம் நடுத்தீர்வை நாளளவும்
நீங்களங்கு வாழுகினும் நீடியநாள்வாழ்க்கையல்ல
13. கல்லறையி னுட்புகுந்து காலத்தைப் போக்குவதில்
நல்லசக வாசமுண்டு நாட்போக்கு மெத்தவுண்டு
14. பஞ்சணைசாய் மெத்தையுண்டு பக்குவமோர் கட்டிலுண்டு
வெஞ்சா மரைசளுண்டு வீற்றிருக்க லாம்வருவீர்
15. நெய்பாலு மோருமுண்டு நீரோடை வாடையுண்டு
ஐயமற்ற வாழ்க்கையுமுண் டாபரண மெத்தவுண்டு

16\. எண்ணெய் மினுக் குண்டின்னு மேற்கைசேர்க்கை நேயருண் டு
தண்ணீரின் ஸ்நானமுண்டு தக்கமரி யாதையுண் டு
17\. பேச்சும் படிப்புமுண்டு பேருமுண்டு கீர்த்தியுண் டு
பூச்சிகளின் பாட்டுமுண்டு பொம்மலாட்டின்னுமுண் டு
18\. எங்களுக்கு வாய்த்தமனைக் கீடுசோ டங்குள தோ
உங்களுக்கு மாளிகைகளுண்டிங் கெழுந்தருள்வீ ர்
19\. வாருங்க ளெங்களுடன் வந்திங்கி லைப்பா ரி
பாருங்க ளெங்களதி பாக்கிய சிலாக்கியத் தை
20\. இத்தாதி வாழ்க்கையின்மே லேனுவ லற்றிருப்பீ ர்
செத்ததன்பின் னெங்களைப்பின் செல்லுவதி லென்னபய ன்

## 9-ம் பிரிவு. எக்காலக்கண்ணிகள்.

1\. எம்மறையு மோர்மதமென் றேமாற்றி யோதுகெட் ட
துன்மனசோ ரெங்களைப்போல் துஞ்சிடுவ தெக்கால ம்
2\. எல்லாமுந் தெய்வமென யேகமாய்க் கையெடுக்கு ம்
புல்லரொலாங் கல்லறைக்குட் புக்குவது மெக்கால ம்
3\. அக்கியானச் சாஸ்திரமு மஞ்சனமுஞ் சூனியமு ம்
வக்கிரமா மென்றுணரா வாழ்வொழிவ தெக்கால ம்
4\. ஆலயத்திற் பேசிநகைத் தாசாரக் கேடுபண் ணி
பாலனுட னுடுவொம் பங்கடைவ தெக்கால ம்
5\. பச்சத்தா பத்திற் சொலப் பாபத்தைப் புரிபவ ரோ
பச்சமுட னுங்களுமைப் பாரத்துவப்ப தெக்கால ம்
6\. காலைமாலை வேளையிலே கட்டளைச்செபங்கள் பண்ண ம்
காலமில்லை யென்பவர்கள் கண்ணடைவ தெக்கால க்
7\. சாமி படைப்பேதெதையுஞ் சாபமிட்டுத் திட்டுவ னா
பூமிபிறம்பாகத் தள்ளிப் புத்திசொல்வ தெக்கால ம்
8\. புண்ணியனைத் தூஷணித்துப் புத்திசொல்வோ னைநகைப்பா ர்
மண்ணறையிற் புக்கிவெட்கி வாயடைப்ப தெக்கால ம்
9\. ஆண்டவரர்ச் சிஷ்டவரா லாணைசத்தி யங்களைச்செ ய்
பாண்டமே யுடைந்து படுப்பதுதா னெக்கால ம்
10\. ஊர்க்கூராய்த் தண்டல்செய் துற் சவங்களை நடத்த ப்
பார்த்திருக்கும் லோபியர்காள் (நீர்) பட்டிறப்ப தெக்கால ம்
11\. பொருத்தனைகளைச்செலுத்தப் போக்குனைத்து நாட்களிப்போ ர்
திருத்தமுற வெங்களைப்பின் செல்வதினி யெக்கால ம்

12. பொல்லாத வார்த்தைகளைப் பிள்ளைகட்குச் சொல்லிவைக்கு ம்
எல்லாரு மிங்குகுடி யேறுவது மெக்கால ம்
13. அன்னைபிதா மேலவருக் காசாரக் கேடுசெய்வோ ர்
இன்னிலவ றையையுடைந் தேங்கிநிற்ப தெக்கால ம்
14. தங்கைநங்கை மாமிமச்சி தாய்பிறப்பு சேயர்க ளை
மங்கையிணை யெண்ணினவர் மண்ணையுண்ப தெக்கால ம்
15. உன்னதல்லா தைத்திருடி யுத்தரியா தாண்டிருக்கு ம்
வன்மனனே யுன்வாயில் மண்விழுவ தெக்கால ம்
16. பொய்வழக்குத் தஸ்திரமெய் போல்விளங்கச் செய்பவரு ங்
கைலெஞ்சங் கேட்பவருங் கண்கெடுவ தெக்கால ம்
17. கடனீயார் கூலிகொடார் கைம்பெண்க ளேழைகளி ன்
உடமைபறிப் போரொம்மோ டெட்படுவ தெக்கால ம்
18. ஏழைபர தேசிகட் கிரங்கியிடார் நிந்தைசெய்வா ர்
தோழர்களா யெங்களுடன் தூக்கமுற லெக்கால ம்
19. தவசொரு சந்திதள்ளிச் சாராயங் கள்ளருந்து ம்
எவர்களும் வந்துபசித் தேங்கிநிற்ப தெக்கால ம்
20. கொழுக்கவுட லைவளர்க்குங் கோரபோ சனப்பிரிய ர்
புழுக்களுக்கு நல்விருந்து போடுவது மெக்கால ம்
21. இவ்வாறு முன்னவர்க ளேவுவதாய் நீமதித் து
எவ்வாறு மேல்நடப்ப தென்றுமதி யம்மானை

---

ஊணெடுக்கச் சருக்கம் முற்றிற்று.

---

ஆகச்சருக்கம் பதினொன்றுக்குப் பிரிவு தொண்ணூற்று நாலுக்குக்கூடிய செய்யுள் 1922.

---

## புண்ணியர் தேகமான்மியச் சருக்கம்.

### கலிவிருத்தம்.

ஜீவியர்திருத் தேகப் பெருமையும்
பூவுலகோர்க் கவர் போதக சாரமும்
மூவிதகால முறைபுகல் கண்ணியுங்
காவலன் தீரமுங் களருவாமரோ

### முதல் பிரிவு. ஜீவியரங்கமாக்ஷி.

1. சத்தியத்தை யோதியருள் சற்குருவே நீருணாத் த
புத்தியெனக் காயதெனப் பூரணமாயாய்ந் துணர்ந்தே ன்
2. பாவிகளி னாக்கையுறும் பாடறைந்தீ ரானாலு ம்
ஜீவியர்கள் மெய்க்குமிந்தச் சீரழிவேன் கூறுமென்றா ன்
3. கூறுமென்றா யென்பிறப்பே குற்றமிலார் மெய்களு மே
நீறுநீறாமெனினும் நேர்ந்திலங்கு மாக்ஷியுங்கே ள்
4. ஜீவன் பிரிந்ததன்பின் செத்தசவத் தையடுத்து த்
தீவங்க ளேற்றிவைக்கச் செய்வதற்குக் காரணமே ன்
5. தீக்ஷைபெற்ற மெய்யெனவே தீபங்கள் வைப்பதென்றா ல்
மோக்ஷமுற்றோ ராக்கையின்னும் முக்கியசீ ராட்டுறங்கே ள்
6. மாண்டவெலியாசுடலை மற்றோர்மெய் யோடிசைக் க
மீண்டும துயிர்த்ததுபோல் வேண்டுநவ மோதரி தே
7. ஆதிவன வாசிபவு லங்கமடக் கச்சமைய ம்
மேதசிங்கம் வந்துகுளி வெட்டியது கேட்டிலை யோ
8. மானாருட் கத்தரினாள் மாய்ந்தவுடலைவானோ ர்
சீனாமலை யிற்கொண்டு சேமித்த தாயறிவோ ம்
9. புண்ணியர்கை யாண்டவஸ்தைப் போற்றியதை யஞ்சலித்தா ல்
விண்ணடைந்தோர் காத்திரங்கள் வீணவல மாகுமோசொ ல்
10. அல்லாம லந்தந்த வர்ச்சிஷ்டர்க் குற்சவமு ம்
எல்லாவர்ச் சிஷ்டருக்கு மென்றுதிரு நாளுளதே ன்
11. இவ்வுலகோர் கண்டறியா தெத்தனையோ சீலருண்டா ம்
அவ்வுலகி லேயவருக்கான சங்கை நீங்குமல் ல
12. மன்னவர் படைமுகத்தில் மாண்டவர் களையரச ன்
இன்னா ரெனவறியா னேற்றபய னீயவுன்னா ன்

13. ஆண்டவராற் கண்டறியா வற்பவனு வேனுமுண் டோ
மாண்டவரில் மீண்டவர்கள் மாய்ந்தவகை யுந்தெரிவா ர்
14. என்பதனுல் மாண்டவர்க ளெல்லவரந்தீஸ்தநிந் து
இன்பமளிப் பாரவருக் கேலாத வேலையல் ல
15. சுட்ட வுடற்சாம்பற் சுழற்காற்றி லாற்ருே டு
விட்டாலுஞ் சேகரித்து மேனிசெய்து வீடளிப்பா ர்
16. பூவுலகோர்க் கெட்டாத புண்ணியதே கம்மெனினு ம்
தேவுலக வல்லான் தெரிந்தாச ரிக்கவைப்பா ன்
17. தலமார்க் கிராஜஜியத்திற் சஞ்சரித்த சாக்கோ பு
செல்மார்க்கக் கல்லறைமுன் சேர்ந்தடுத்து வேண்டுகையி ல்
18. சம்மனசோர் கல்லறையைச் சாரிவல மாய்வரு க
இம்முனிகண் டாண்டவனா யேற்றிநிற்கக் கேட்டசத்த ம்
19. சாக்கோபே ஞச்சரியந் தக்கசங்கை யற்றுமுத்த ர்
ஆக்கையிரா தாஞ்சுகள்வந் தாசரிப்பா ரொன்றன வே
20. சஞ்சவரி யார்மெய் சதவருடங் கள்கடந்து ந்
துஞ்சார்போற் றேகமினுந் தூங்குவதே னென்புதல் வா
21. அங்கமழி யாதிருக்கு மற்புதங்க ளைத்தொகுத் து
இங்குரைக்குங் காலமல்ல வென்ஞெறுங்கு நீக்கினன்யா ன்
22. செத்தவர்க ளிற்சிலபேர் தேசுமுயிர்த் தெழுந் து
முத்தியிலே வாழ்வதென மூதலிக்கும் வேதமொ ழி
23. ஆனதினு லெம்பரம ஞத்துமவந் தீஸ்சநியு ம்
ஞானதிஷ்டி யீசனென நம்பிடுவா யென்பிறப் பே

## 2-ம் பிரிவு. ஜீவியருபதேசம்.

1. கன்மிகளின் கல்லறைபோய் காதுகொடுத் தோமதுபோ ல்
தன்மசீவி யோர்களுடன் சம்பாஷிப் போம்வருவா ய்
2. மண்ணறைக்குள் வந்திருக்கும் மாசுகிர்த சீலர்க ளே
விண்ணறைக்குள் யாம்புகுத வேண்டியதற் கேதுசெய் க
3. எங்களிணை தேகிகளா யீனமன ராயிருந்து ம்
மங்காத மாக்ஷிபெற்ற மார்க்கமென்ன கூறுமென்று ல்
4. என்னபதி லோதுவர்கே ளெங்களதி நேயரோ ர்
உன்னதன்வான் சேருவதற் குங்களா லேலாததல் ல
5. உங்களிலும் பாவிகளா யுல்லாசித் தோமுலகி ல்
எங்களுக்கு நன்மனதி ருந்தமையால் மீட்படைந்தோ ம்

6. பற்பலதொள் ளாளிகளாய்ப் பாடுபட்டு நொந்துளைத்து ங்
கற்பனைக் கிசைந்தொழுகிக் கண்டடைந்தோம் வானுல கை
7. சோதனையுந் தந்திரமுஞ் சூழ்ந்துமை வருத்துவபோ ல்
சாதனையா யெங்களுடன் தர்க்கமிட்ட தென்பதுமெ ய்
8. அற்பநா ளெங்களையிங் காண்டடக்கி வந்தமையா ல்
தற்பரனைக் காக்ஷிகண்டு சாக்ஷாது நாள்வாழ்வோ ம்
9. நல்லமன மில்லாதால் நாங்கள்செய்த புண்ணியங்க ள்
எல்லவையு நீர்புரிய வேலாதென் றெண்ணுகிறீ ர்
10. வேளைவரும் போதுபவம் விட்டகல்வோ மென்றுரைக்கு ங்
கோளைமன முள்ளவராற் கூடுமோவிண் ணுடுபு க

## 3-ம் பிரிவு. முக்காலக்கண்ணிகள்.

1. வந்ததுயர் பேய்களினல் மாறுமென அஞ்ஞா ன
மந்தரத்தை நாடுவதே மார்க்கமென்பாய் தற்கால ம்
2. ஈப்பிடிக்கும் பூச்சிவலைக் கீடாயுனைக் கெடுக் க
பேய்பகட்டு மாயமெனப் பேசிடுவாய் பிற்கால ம்
3. தேவசெய லாலேதான் றீமையுனைச் சாருமொன்றி ற்
பாவமதால் வந்ததெனப் பாணிப்ப தெக்கால ம்
4. அன்ன சத்திரங்குளங்க ளாலயந்தேர் செய்தமைத்தா ல்
உன்பேர் பிரஸதாபித் தோங்குமென்பாய் தற்கால ம்
5. மண்ணிலத்தோ ருன்பேரை வாழ்த்தவென நீபுரிந் த
புண்ணியபலன் சிதைந்து போனதென்பாய் பிற்கால ம்
6. எந்தநற் கிருத்தியமு மேற்றபய னைப்பயக் க
அந்தரங்க த்தில்முடிக்க ஆவலிப்ப தெக்கால ம்
7. துடினமாய் வேலைசெய்து சொத்துமிகச் சேகரிக்க க்
கடன்றிரு நாட்களிலுங் கைசோராய் தற்கால ம்
8. கற்பனை கொடுத்தகத்தன் கண்டனை யதிகமிட் டு
வனமித்தா ரொன்று மனமடிவாய் பிற்கால ம்
9. வாழ்வினைக் கொடுப்பதவர் வாழ்வினைத் தடுப்பதவ ர்
மாழ்நாளே தாகுமென வாசிப்ப தெக்கால ம்
10. தேகசுக போகமென்ற சிற்றின்ப இச்சையி லே
தாகந் தணிக்கவென்று சஞ்சலிப்பாய் தற்கால ம்
11. மாதனை நேர் நோக்கிலதே மாபாவ மூண்டதெ ன
நாத னுரைத்தமொழி நம்புவாய் பிற்கால ம்
12. ஆசிக்க உத்தரவில் லாதவையை நீ மனதி ல்
யோசித்தல் தீமையென யூகிப்ப தெக்கால ம்

13. மற்றவர் சொத் துன்கரத்தில் வாய்த்தவுடன் நீ மகிழ்ந் து
முற்றிலு மதைக்கவர்ந்து மூடுகின்றாய் தற்கால ம்
14. தன்னதல்லா வஸ்துகளைத் தந்துத் தரிக்கா து
மன்னிப்பே யில்லையென மட்கிடுவாய் பிற்கால ம்
15. ஆண்டவ ரழித்ததிலுன் னுவலைநீ நாட்டாம ற்
சேண்டலத்தில் நீயதனைச் சேகரிப்ப தெக்கால ம்
16. தனக்கெவருஞ் சங்கைசெய்ய தக்கசுப நன்மைசெய் ய
மனப்பால் குடிக்கிறதே மார்க்கமென்பாய் தற்கால ம்
17. மற்றவரை துன்புறுத்தி மாற்றலரைச் சங்கரித் து
சுற்ற த்தைநொந்ததெலாந் தோஷமென்பாய் பிற்கால ம்
18. தன்னைநே சிப்பதுபோல் தன்பிறனின் றப்பிதத் தை
மன்னிப்பீய்ந் தொற்றுமையாய் வாழ்வதுதா னெக்கால ம்
19. பாவசங் கீர்த்தனத்தாற் பாவமே தீர்ந்ததென ப்
பூவகத்தி லேக்கமற்றுப் பூரிப்பாய் தற்கால ம்
20. நித்தியத்தி னுக்கினைதான் நீங்கலுற்ற துன்றவத்தா ல்
உத்தரிக்கும் வேறுகட னுண்டென்பாய் பிற்கால ம்
21. ஓர் பிழைக்காய்ப் பல்லாண்டு முத்தரிக்க நேராமு ன்
ஓர் செபத்தா லோர்தவத்தா லுத்தரிப்ப தெக்கால ம்
22. தருமத்தைச் செய்வதிலே சம்பத்து நஷ்டியென் ற
மருமத்தை நெஞ்சிறுத்தி வாயடைப்பாய் தற்கால ம்
23. ஒன்றினுக்கு நூறுமடங் குன்தருமஞ் சேகரமா ம்
என்றறிந்து சந்தோஷித் தின்புறுவாய் பிற்கால ம்
24. யேசுபர னுன்முன்கை ஏந்தியொரு யாசகன்போ ற்
பேசுவதாகக் குறித்துப் பிச்சையிட லெக்கால ம்
25. தேவஅன்னை மாமரியைச் சேவைசெய்துத் தோத்தரிப்போ ர்
பாவனையாய் நீசேவை பண்ணுகின்றாய் தற்கால ம்
26. மாதாவின் பத்தியில்லார் மாத்திரமே தீநரக ப்
பாதாளஞ் சேர்ந்ததென்ப பார்த்துணர்வாய் பிற்கால ம்
27. இரக்கமுள்ள தாயேவிண் ணேகுநெறி யாகுமெ ன
உருக்கமுள்ள பத்தியுன்னில் உற்பவிப்ப தெக்கால ம்
28. எங்களினைவைபோக இச்சைகளை வென்றடக் க
உங்களா லாகாதென வோதுகிறீர் தற்கால ம்
29. சாண்வயிறைத் தெய்வமென சாமிசேவை யைமறந் து
வீண்விழ லாய தெண்ணி வெட்கிநிற்பீர் பிற்கால ம்
30. மாயசுக போக வாழ்வுசத மல்லவென் ற
ஞாயமுணர்ந் தெங்களைப்போல நாட்களிப்ப தெக்கால ம்

31. நாளைக்குத் தீமைவிட்டு நல்லறங்கள் செய்வதெ ன
வேளைக்கு வேளைசொல்லி வீணாய்த் தற்கால ம்
32. எற்கனவே நல்வழிசென் றீறள்வு நீ நடந்தா ல்
மேற்கதியில் வாழ்வதீக மேவுமென்பாய் பிற்கால , ம்
33. இந்நொடியே தீர்மானித் தெச்சுகங்க ளுந்துறந் து
நந்நெறியி லூர்ந்ததெனும் நாள்வருவ தெக்கால ம்
34. இந்தவுப தேசமெலா மின்னொருவர்க் கோதின தோ
உந்தனுக்கே கூறுகிறே முண்மையென்பார் சீவியர்க ள்

## 4-ம் பிரிவு. இறுதிமதி.

1. ஆனாலுரைத்த மதி யத்தனையு நீ மறந் து
போனாலு மின்னுமொரு புத்தியுனக் கோதுகிறே ம்
2. பாவியொரு சண்டாளன் பூாப்பு சமுகத்தனு கி
பாவசங்கீர்த் தனத்தைப் பண்ணியபின் பாப்புமு னி
3. இட்டவப ராத மவனேலா தே லாதுவென த்
தட்டினதாற் பாப்புரிஜி சாவாயென்றே வறைந்தோ ர்
4. ஆழியவன்கையி லணிந்தன்றன்று பார்வையிடு ம்
நாழிகைகள் தோறுமிதை ஞாபகமாய் வாசியென்று ர்
5. வாசித்தா னம்மனிதன் வாசகத்தாற் சீரடைந் து
பூசித்தான் மெய்த்தவத்தைப் புண்ணியத்தால் நாள்முடித்தா ன்
6. அப்படியிப் புத்தகத்தை யன்றன்றும் வாசியெ ன
செப்பாம லோர்மனுயான் செப்புகிறோம் யாதுவெனி ல்
7. பகலெலா நீகவலைப் பட்டுளைத்து வாடினைந் து
அகமதிற் சேர்ந் துண்டுகளித் தாயாச மாற்றவெ ன
8. நித்திரைக்குப் போகுமுதல் நீமுடித்த செய்கைகளை ச்
சித்திரமாய் ஞாபகத்திற் சேகரித்த வைகளி லே
9. தீங்கானசெய்கை களைச் சீரொடுத்துக் கண்டறிந் து
ஓங்கிநெடு மூச்செறிந் துத்தமனஸ் தாபமுற் று
10. படுக்கையா சந்நியெனப் பாவித்துன் மெய்யையதி ற்
கிடத்துவாயன் னேரமொரு கேளிக்கை யெண்ணா து
11. யேசுமரி யேசூசை யென்னையொ க்ஷி யுங்களென் று
ஆசீர்வா தங்களடைந் தச்சமற்று நித்திரைசெ ய்
12. நித்திரைக்கெ னப்படுத்து நித்தியமாய்த் தூங்கிவிட்டோ ர்
எத்தனைபே ராமவர்க ளெத்தலம்போய்ச் சேர்ந்திருப்பா ர்
13. ஓமாரொனும் பூப னுண்டசந் துறங்குகையி ல்
ஏமாறி மாண்டா னெதிரிகளின் மத்தியி லே

14. சதுரங்க சேனைத் தளவாயா மொல்பேர் னு
சுதித்தாளின் பட்டயத்தாற் றுஞ்சிவிட்டான் நித்திரையி ல்
15. செருசலேம் பட்டணத்தைச் சென்னக்கரிப்பரச ன்
திரமுடனே சூழ்ந்து செயமடைந்த தாய்மகிழ்ந் து
16. எண்ணமற்று றங்கலெக்ஷத் தெண்பத்தை யாயிரம்பே ர்
கண்ணடைந்து துஞ்சிவிட்டார் கண்டாயோ சோதர னே
17. அத்தனைபேர் நித்திரையி லாவிவிட்டா லோரிரவு ள்
இத்தனைபோர் வீரரிலே யெத்தனைபேர் வானடைந்தா ர்
18. மண்பிறந் திராவிறந்த மானிடருள் ளெத்தனைபே ர்
விண்பிறந்தா றொன்றுசற்று வேளைதியா னித்துறங் கே
19. நேற்றிரவில் நீயுனது நித்திரைநே ரத்திறந்தா ல்
ஆத்துமமெங் கேகிநிற்கு மப்பனே மாறுலாசொ ல்
20. இன்னேர மட்டிலுநா மெத்தனையோ சாதகமா ய்
சொன்னதெலா முன்னகத்திற் றேற்றிடுமெய் யானலு ம்
21. பின்னெருவர்க் கம்மானை பேசினேனென் றெண்ண தே
உன்னிமித்த மித்தனையு மோதினம்யாம் நிச்சயந்தா ன்
22 ஓராண் டிராறு மதிக்குள் ளுனைத்தபுத்திம தி
தாராள மேகவிடை தாருமென்று ரம்மா னை

## 5-ம் பிரிவு. பிரதிக்கினை.

1. இந்தமொழி கேட்டவுட னேந்சலா சனத்தைவிட் டு
சந்தோஷ மாய்வணங்கிச் சாஷ்டாங்க தெண்டனிட் டு
2. என்னருமைப் போதகரோ யென்னீடேற்றப் பொருட்டா ய்
சொன்னவுப தேசமெந்தன் சொந்தமெனச் சிந்தையுற்றே ன்
3. ஆனதினு லென்னுடைய வாத்துமத்தின் வேலையொன் றை
நானதிகந் தேடியுய்வேன் நாட்போக்கேன் வீண்விருதா ய்
4. எதுக் கெனைப்படைத்தா றொன்றிதுநாள் நோக்கா து
பாதகனுய்க் காதகனுய்ப் பன்னளும் போக்கின னே
5. வானுலகைப் பூவுலகை மற்றுமுள்ள வஸ்துவெல்லா ந்
தானமைத்துத் தந்தவர்க்குச் சண்டாளஞ் செய்தே னே
6. நன்மையனைத் துஞ்சொரிந்த நாயனரு ளுன்னும ல்
தின்மைசமஸ் தும்புரிந்து தீய்க்குறுமை யானே னே
7. பாவத்தின் மேற்பவத்தைப் பண்ணெனவே யெந்தனுக் கு
சீவனையளித்தது போல் தின்மைகளைச் செய்தே னே
8. ஓர்பவமே நீநரகை யுண்டுசெய்த தென்னிலென் று ற்
சேர்பவங்க ளெத்தொகுதி நீநரகைச் சேர்க்கா தோ

9. ஆதிதந்தை செய்பவமிவ் வண்டமெலாங் கெட்டதெந்த ன்
தீதகந்தை யெத்தகையாய்த் தீமைகளைக் கூட்டா தோ
10. என்பாவத் தின்பெருக்க மெண்ணளவில் மேலதிக ம்
துன்மாதிரிப் பலுக்கந் தோரணையாய்ச் சேரா தோ
11. அரசர்க ளெந்தநெறி யந்தவழி யேபிர சை
பெரியவர்க ளெந்தநெறி பிள்ளைகளுஞ் சேரா தோ
12. பாவியெனப் பேர்படைத்துப் பன்னாளுமாய்ந் துளைத் து
ஜீவியநா ளின்றளவிற் செய்தபவ மேபோது ம்
13. இன்றளவெ னைச்சகித்த பேசுநச னென்பார்க் கு
நன்றிகெட்ட காதகனாய் நானடந்த நாட்போது ம்
14. நானறிந்த சத்தியத்தின் ஞாயவழி யைத்தவ ரி
போனபொழு தைவீணாய்ப் போக்கடித்த நாட்போது ம்
15. முன்னமென தாணவத்தால் மூர்க்கபவ னானாலு ம்
இன்னமுநான் சீர்திருந்தி யீடேற நாட்போது ம்
16. புண்ணியங்க ளூட்பழுது புக்கியவ மானதெ ன
எண்ணியங்க லிக்கிறநா ளெய்துமூன் சீராய்நடப்பே ன்
17. அந்தியனே ரச்சமீபத் தாணவப்பேய் போர்முகத்தி ல்
சந்தேகத் தாளாது தக்கமுறை யாய்நடப்பே ன்
18. சீவனுக் கபாயமின்றிச் சிபாரி சங்கிருக் க
தேவசபை யோருதவி சேகரித் தியானடப்பே ன்
19. தாசானு தாசனுமைச் சாஷ்டாங்கப் பூசைசெய்தே ன்
ஆசீர் வாதமளித்தும் மாச்சிராமம் போய்வருவீ ர்

### 6-ம் பிரிவு. வாழி.

1. வேதசெங்கோ லோச்சுமுனி மேற்றிராணி மார்சேட்ட ர்
வேதியர்க ளோடெனது மெய்க்குருவே நீர்வா ழி
2. இறுதிமுடி வைக்கருதி யெச்சுகத்தின் சிக்கறுத் த
துறவறசந் யாசநெறி துய்யதவத் தோர்வா ழி
3. பாரின்பச் சீர்வகுத்துப் பாவநசலை விரித் தா
பேரின்பத் தைத்தொகுத்துப் பேசுகவி ஞோர்வா ழி
4. நோய்பிடித்து மெய்வடித்து நொந்தவனை நோகா து
தாய்முறையா யோம்புஞ் சமஸ்தருமே தான்வா ழி
5. ஆர்க்கவஸ்தை யென்னிலுஞ் சென் றங்குகுரு வையமைக் க
போக்குணாயா தெய்திவரும் புண்ணியசீ லர்வா ழி
6. நல்லடக்கஞ் செய்வதற்கு நானெனமுயற்சி யுற்று க்
கல்லறை மட்டேகிவருங் கண்ணாள ரோவா ழி
7. வீய்ந்தவர்க ளாத்துமத்தின் வேதனைகளைத் தணிக் க
வேண்டுதல் நடாத்திவரு மெய்க்கிறிஸ்து வோர்வா ழி

8. இந்நூலை யுண்டமைத்த வெந்தனுயிர்க் காறுதல்செ ய்
நந்நூலோ ராண்களுக்கு நங்கையர்க்குந் தான்வா ழி
9. அம்மானை சொல்லிவரு மாரியரோ ரீர்வா ழி
இம்மாலை மோந்தருளு மெல்லவரு மேவா ழி
10. ஆராய்வீர் நன்மரண வம்மானை நூலள வு
ஈராயிரத்து நூறு மேவாழி அம்மா னை

ஆகச்சருக்கம் பனிரெண்டுக்குப் பிரிவு நூறுக்கு கூடிய செய்யுள்-2040.

## விருத்தம்.

1. இப்படிக்கத் தவன்ஞானக் கருப்பஞ்சாற்றை
எடுத்தூட்ட யின்னொருவர்க் கென்னுதுண்டு
எப்பொழுதும் படைத்தவனைத் துதித்தல்வேண்டும்
என்றகட னல்லவென வேலாதார்க்கும்
ஒப்பியவர் தயையைத்துதி புரிதல்நன்றே
ஊழியிட நீதியைத்தோத் தரித்தல்நன்றே
தப்பறத்தானீடேறித் தயையைப்போற்றல்
சரியென்று னன்றுமுதல் நெறிநின்றானே

2. நெறியெனவே தேவமரி சேவைசெய்யான்
நிச்சயம்விண் வீடுபெறு னென்று மோக்ஷந்
திறந்தருள யேசுமரி யென்றசாவி
செங்கரங்கொண் டிருப்பவர்சஞ் சுசையென்றும்
அறவழியே யேவுவது தனதுகாவல்
ஆஞ்சுவென்று மீக்ஷிபெற வுறுதியான
குறியிவர்கள் திருவடியே கெதியாமென்று
குணங்கொண்டான் சேவைசெய்ய மனங்கொண்டானே

3. கொண்டகொள்கைக் கொருவனையே மீட்டோன்றன்னைக்
குறைவறவே மீட்டுமுடி வாயதென்று
தொண்டனுமா யோர்ந்தினர்க்குஞ் சுகிர்தமூட்டி
சுசீலநெறிக் குருவென் றெ வருமெண்ண
மண்டலத்தி லீரறனுய் நடந்தானன்னுன்
மாசுகிர்த தன்மமெலாம் பரமலோக
மண்டலன்கண் டிரங்கவே நன்மரணமென்ற
வரமுற்றான் மோக்ஷமுடி சிரம்பெற்றானே

வெண்பா—1. விருத்தம்—18. சருக்கம்—12-க்கு பிரிவு 100-க்குச் செய்யுள் 2040 பாயிரஞ் செய்யுள் 60 ஆகக்கூடிய செய்யுள் 2100.

நன்மரண அம்மானை சம்பூரணமாயது.

✠

சர்வேஸ்வராயநம.

# திருமரணத் திறவுகோலெனும், நன்மரண அம்மாணை.

## அநுபந்தம்.

### அவஸ்தை ஆயத்தம்.

எனது சகோதரமே! நன்மரணத்தினாலே நித்திய பேரின்ப பாக்கியம் நிறைந்த மோக்ஷமும், துன்மரணத்தினாலே சகலவித ஆக்கினைகளும் நிறைந்த நித்திய நரகமும், வருமென்பது குன்றாத வேத சத்தியமாமே. திரித்துவ யேக சர்வேசுரன் ஆதியிலே சாகாவரத்தைக் கொடுத்தே மனிதனை யுண்டாக்கினார், ஆனால் விலக்கிய மரத்தின் கனியைப் புசித்து தேவ கட்டளையை மீறின பாவத்திற்காக்கினையாகச் சாகவே சாகக்கடவீர்களெனச் சாபத்தைக் கட்டளையிட்டார். இந்தச் சாபனையானது சென்மப் பாவத்துடனே பிறந்த மனிதர்களை மாத்திரமே சாகடிக்கிறதென எண்ண வேண்டாம். சென்மப்பாவதோஷமின்றி சென்மித்துப் பிறந்த அர்ச். தேவமாதாவும் சாகாது பரகதி சேர்ந்ததில்லையே, சாபத்தைக் கட்டளையிட்ட கடவுளாகிய நமதாண்டவர் சேசுக்கிறீஸ்துநாதர் தான் சாகாது பரலோகத்துக்கேறினதில்லையே. ஆனபடியால் மண்ணிற் பிறந்தவர்களெல்லாந் தேவ சாபத்தினாற் சாகக்கடமைப்பட்டவர்களாய்ப் பிறந்துவிட்டோம். சாவுக்குத் தப்பித்துக்கொள்ளவே கூடாது. இந்தக் கடனைத் தீராது பரஞ்சேர முடியுமோ! அல்லது இந்தக்கடன் உன்மீதிலல்லவென்று நீக்க யாராலாவது கூடுமோ! அதுவுமுடியாது. ஒன்றிலுனக்குச் சாகாவரங் கொடுக்கவாவது இயலுமோ, அதுவுமாகாது.

ஆகையினாலே அந்த மரணகாலமானது உன்னை அடுத்து வந்திருக்கின்றது. நீயோவென்றால் சாகாவரம்பெற்றவனைப்போலிருக்கிறாய், மண்ணுலகிற் பிறந்த எவனும் மரணமென்கிற வாசலால் மறுலோகத்துக்குப் பிரயாணப்படவேண்டுமேயல்லாது வேறுவகையில்லை. ஆனால் நன்மரணவாயலென்றுந் துன்மரணவாயலென்று மிரண்டினுள் நீ தெரிந்துகொள்ள வேண்டியது எது, உண்மையாகவே நன்மரணமே உனக்கு வேண்டுமென

ஆசிப்பாயோ; அப்படியானால் அதற்குத் தகுந்த ஏற்பாடுகள் உடனே செய்யாதிருக்கிற முகாந்தரமென்ன. சுகதேகிகளாயிருக்கிறவர்களானாலுஞ்சரி எவ்வயதுள்ளவர்களாயிருந்தாலுஞ் சரி மரணத்துக்குள்ப்பட்டவர்களாய் மரிக்கிறதையும் நான்குபேர் தூக்கிப்போய்ப் புதைக்கிறதையும் நீயே பார்த்திருக்கிறாயே, நீயோவென்றால் இப்போது நோயடைந்து பாயும் படுக்கையுமாயிருக்கிறாய். பத்திய பரிகாரமும் உனக்குப் பக்கத்துணையாயிருக்கிறது; நீயோ யேதுக்கும் அஞ்சாத நெஞ்சனாயிருப்பதெப்படி, பந்து ஜனங்களுமுன்னைச் சந்திக்க வந்துபோகிறார்களே; தம்பி! நீ யேக்கமற்று நித்திரையிலிருக்கிறதென்ன. உனது நித்திரையைச் சோதித்துக் கள்ளன் உள்ளே பிரவேசிப்பானென்று சேசுநாதர் ஏற்கனவே சொன்னதை மறந்துபோனாயோ; ஆனால் ஆண்டவருன்மட்டிலே இரக்கம்வைத்து அவர் செய்திருக்கிற உபகாரத்தையாவது யோசித்துப்பார். திருடன் உனது நித்திரையைச் சோதிக்கும்படிக்கு வந்திருக்கிறானென்பதை நீயறிந்துகொள்ளவும், நீ சாக்கிரதைப்பட்டு விழித்துக்கொள்ளவுமாக இந்த வியாதியை உனக்கு அனுப்பியிருக்கிறார். நீ இத்தையறியாமல் நித்திரைபோகிறாய்; ஆண்டவர் அனேகருக்கு இந்த எச்சரிக்கை செய்யாமலே சாவையனுப்பியிருக்கிறார். ஆகையால் நீ யதிகச் சாவதானமாக நல்லமரண மடைவதற்கு வேண்டுவனவெல்லாஞ் செய்யக்கடவாய்.

இப்படியாய் மரணமென்கிற கள்ளன் உன்னுடைய பாவநித்திரையைப் பரீட்சிக்க உன் பாரிசத்தில் வந்திருக்க நீ நல்லமரணத்துக்கு ஆயத்தஞ் செய்வதில் அசமந்தனாக யேனிருப்பாய். ஒன்றிற் சாக மனமில்லாது ஒருபிரகாரமாயிருக்கிறாயோ, சாகப் பிறந்திருக்கிறோமென்று காலமெல்லாம் நீயே அனேகமுறை அனேகருக்குச் சொல்லி வந்தாயே; இப்போது நீ கவலைப்பட நியாயமென்ன! உனது பெண்சாதி பிள்ளைகளைப் பற்றி நீ கவலைப்படுவானேன்! அவர்களுக்குப் பின் ஆதரவில்லையென்று நினைக்கிறாயோ! உன்னை யுண்டாக்கின ஆண்டவர் இன்றளவு முனக்குப் படியளந்துன்னைக் காப்பாற்றி வந்ததுபோலவும் சீவகோடிகளிலொன்றையேனுந் தவறவிடாது அனைத்தையும் பராமரித்து வருகிறதுபோலவும் கடவுள் உன்னுடையவர்களையுங் காப்பாற்றி நடத்த அவருக்குத் தெரியாதோ என்ன! இன்னும் உன்னிலுமவர் அதிகக் கவலை சாக்கிரதையுடன் பராமரித்துக்கொள்வாரென்பது நிச்சயம். ஆகையாலென் சகோதரமே இந்தக் கவலையை அவருக் கொப்பித்துவிடுவாயாக. உனது கால முடிவுக்குப்பின்பு அவர்களுக்குப் பலவகையிலும் இடையூறுகள் வந்தடுக்குமென உத்தேசிக்கின்றாயோ. அதுவுந் தேவ தீர்மானத்தினால் மாத்திர மவர்களுக்குச் சித்திக்க வேண்டியதே யல்லாது தற்செயலாக நடந்தேறக்கடவதல்லவே.

அன்றியும் நிலபலம், ஆஸ்திபாஸ்தி, சொத்து, சுதந்தரங்களை விட்டு நீ பிரிகிறதைப்பற்றிக் கவலைப்படக் காரணமேயில்லை. ஏனெனில்

இவை யாவையும், நீ தேடின கருத்தென்ன உனக்குப் பின்னிருப்பவர்களுக்கு உதவியாயிருக்கவேண்டுமென்றும், உனது புத்திர சந்தானங்கள் ஆண்டனுபவித்து தழைத்தோங்கி உன் பேரோடுக்க வேணுமென்றும் நீ தேடினதேயல்லாது அவைகளை நீயே நீடூழிகாலம் ஆண்டனுபவிக்க வேண்டியதென்றும் அல்லது உன்னுடன் அவைகளைக் கொண்டுபோகவேண்டுமென்றுந் தேடிவைத்தாயோ, உன்னுடையவைகளிலே உன்னுடனே நீ கொண்டுபோகக்கூடியவைகள் என்னவென்ருல், நீ உனது சுதந்தரச் சொத்தில் ஏதேனுந் தான தருமத்தில் செலவழித்ததுகள் ஏதாவதுண்டானுல் மாத்திரம் ஒன்றுக்கு நூருக மறுமையில் பலனைப் பெறுவிக்க உன்னைப் பின்பற்றுமேயன்றி நீ விட்டுப்போகிற சொத்துக்களெல்லாம் உனக்கோர் பிரயோசனப்படாமலும் விழலும் பாழுமாகப் போய்விடும். அவைகளைக் கையாட்சி செய்யயிருக்கிறவர்களால் உன்னுத்துமத்திற்கு ஏதேனும் நன்மை சகாய உதவி சித்திக்குமோ ; என் பிரிய சகோதரமே, இவைகளைக் கனவிலும் நம்பாதே. ஏனெனில் அவர்கள் தங்கள் சவுகரியத்தைப் பிரதானமாகக் கண்காணிப்பார்களேயன்றித் தாங்களடைந் தனுபவிக்கிற உன் பொருளை உன்னுத்துமத்துக்காக வேண்டுதல் பிச்சை பூசை செய்விக்கவுமாட்டார்கள். உன் ஆத்துமத்தின் உத்தரிக்கிற கடமைக்குச் சற்ருவது சகாயமாயிருக்க நினைத்து வேண்டிக்கொள்ளவுமாட்டார்கள்.

இவ்விதமெல்லா மிருக்க இன்னமும் நீ சாக ஒரு பிரகாரமாயிருக்க மூகாந்தரமென்ன! நீ எத்தனைதான் வருந்தினுலும் ஒரு நிமிஷ நேர மாத்திரம் உன்னுத்துமம் பூமியில் நிலைத்திருக்கச் செய்ய உன்னுற் கூடுமோ, நீ நடக்கிற அடிகளின் கணக்கை முடித்து உன்னைப் படுக்கையிற் கிடத்தின சுவாமியின் நீதியினுல் உனது மூச்சு முதலாய் எண்ணிக் கணக்கிடப்பட்டிருக்கின்றது. அந்தக் கணித மூடிந்தவுடனே மறு மூச்சுவிட உனக்கு உத்தரவுமில்லை ; ஒரு மூச்சு உள்வாங்கவு முன்னுலே முடியாது. நேரஞ் செல்லச்செல்ல நினைவு புத்தி மனமென்கிற அந்தகரணங்கள் மழுக்கமடைகின்றது ; அங்க உருப்புகளின் அசைவும் குறைந்துவிடும். கண்ணொளிமாறி மாசிபடர்ந்து பஞ்சடைந்து நீரொழுகி நிற்கும். காதுகள் கேள்விகுன்றி அருகிலிருந்து சேசுவேயென்று கூக்குரலாய்ச் சத்தமிடுவோர் குரலோசையும் கேணிக்குள்ளிருந்து கூப்பிடுவதுபோல சத்திக்கப்படும். நாசிவழி யோடிய சுவாசம் வரவரக் குறைந்து முற்றிலுமறிபட வாய்வழியாகப் பெருமூச்சோடிச் சற்றுப்போதுக்குள் தொண்டை வரண்டுத் தங்குமூச்சுடன் நெஞ்சிற் கவங்கடைய நெற்றியில் வேர்வையெழ தோசத்தால் நாவரள அடுத்திருப்போர் பஞ்சிற் பாலூட்டி பருக சன்னிமேலாடிக் கைகால் ஈரளித்து உடலாதியந்தம் குளிர்ந்து பிணவெடிநாற சாகப்போகிருனென்றுஊரோ பேசிக்கொள்ளுமல்லோ. தம்பி இந்தப் பேதாபேதமுற்று முன்னில் நடந்தேறவிருக்கையில் ஏன் கவலையற்றிருக்கிருய் அல்லது நீ ஓடி ஒளிங்

தாலும் நீ சாவுக்குத் தப்பித்துக்கொள்வாயோ, நீ ஆகாயத்திலே பறந்தாலும் பாதாளத்திலே புகுந்தாலும் அந்தந்த இடங்களிலும் மரணம் உன்னைச் சந்தியாது விடத்தக்கதில்லை. மரணமானது உன்னுடன் ஜெனித்து உன்னுடன் பிறந்து உன்னுடலின் உள்ளே சீவித்து உன்னுயிரைப் பரிக்காதிருக்கையில் என் பிரிய சகோதரமே! சாவுக்கேன் பயப்படுகிறாய் இவ்வாறு நீ பயப்படுகிறதினாலே எள்ளத்தனை நேரமுனக்குச் சித்திக்குமோ?

நீ சாவுக்கஞ்சும்படிக்கு ஓர் விஷய மாத்திரம் உண்மையாயிருக்கலாம், அந்த ஒன்றுமாத்திரம் உன்னிடத்தில் இல்லாதிருந்தால் நீ சாகப் பயப்படவுமாட்டாய், மேலுஞ் சாகவேண்டுமென்றும் மோக்ஷத்துக்குப் போகவேண்டுமென்றும் ஆவலுடனிருப்பாயாமே. அந்த ஒரு காரியம் என்னவென்றால், பெரிதாகிய பாவம் அதாவது சாவானபாவம் ஒன்றுமாத்திரம் உன்னுள்ளத்தில் இல்லாதிருந்தால் வானமும் பூமியும் உனக்கு விரோதமாய்க் கொந்தளித்தாலுஞ்சரி பாதாளத்திலேயுள்ள வேதாளமெல்லாம் எதிர்த்தாலுஞ் சரி சாவுக்கஞ்சவேண்டியதில்லை. ஆனால் சாவான பாவம் ஒன்றுமாத்திரம் உன்னுள்ளிருப்பதாக அறிவாயாகில் அது மாத்திரமே உன்னைக் கலங்கடிக்கவும் நடுநடுங்கச் செய்யவுங் கூடுமாமே. அப்படியிருந்தாலுந்தான் நீ தத்தளியாது உனக்காகப் பாடுபட்ட கிறீஸ்துநாதரைத் தியானித்து மனநொந்துருகி மனஸ்தாபப்பட்டுப் பொறுத்தலைக் கேள். அவருனக்குப் பாவப்பொறுத்தலைத் தந்தருளச் சித்தமாய்க் காத்துக்கொண்டிருக்கிறார்; கூடுமானால் உடனே குருவானவரை வரவழைத்துப் பாவசங்கீர்த்தனஞ்செய்து பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளக்கடவாய். அவர் வரக்கூடாவிட்டால் நேரே சேசுநாதர் சுவாமியிடத்திலே உன் பாவங்களையெல்லாஞ் சொல்லி இனிமேல் இப்படிப்பட்ட பாவங்களைச் செய்யத்தக்கதில்லையென்று நேர்மையான பிரதிக்கினை செய். பிளைத்துக்கொண்டால் அப்பால் பார்த்துக்கொள்வேன் என்ற தத்தளிப்பான எண்ணம் உன்னுள்ளத்திலிருக்குமாகில் ஐயோ கேட்டுக்குச் செல்லும் வழியிலே நடக்கிறாய். தத்தளிப்பான எண்ணமுன்னிலேயில்லாவிடில் எதுக்குமஞ்சாது அமரிக்கையோடு மரணத்துக்கு எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிரு; அன்றியும் குரு சுவாமியை நீ சந்திக்குந் தருணம் வாய்த்தால், என் பிரிய சகோதரமே! சேசுநாதரிடத்தில்செய்த பாவசங்கீர்த்தனத்தைக் குருசுவாமியிடத்தில் செய்வாயாக.

மேலும் உனக்கு ஒரே ஆத்துமமாத்திரமிருக்கிறதினாலே அந்த ஒன்றையும் நரக பிராப்தியாக்கிவிடாதே, இரண்டு ஆத்துமமுனக்கிருந்தால் ஒன்றை நரகத்திலே போக்கினாலும் மற்றொன்றையாவது ஈடேற்றப் பிரயாசப்பட்டு மோக்ஷராச்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளலாம்; ஆனால் ஒரே ஆத்துமமாத்திரம் நமக்கிருக்கிறதினாலே இது சமயத்தில் மகா எச்

சரிக்கை ஊக்கத்துடனே அதை இரட்சித்துக்கொள்ள முயற்சிப்படவேண்டு மல்லோ. மேலும் ஒருவிசைமாத்திரமே சாகிறதேயன்றி செத்துப் பிழைத்து மறுமுறை சாகிற வழக்கமுண்டுமோ அதுவுமில்லையே. இரண்டாந்தரஞ் சாகிறதென்ற மாமூலிருந்தால் ஒரு முறை வந்த நஷ்டத்தை மறுமுறை பரிகரிக்கலாம். ஆனால் அந்த ஏற்பாடே இல்லையாகையால் எவர்களும் ஒருவிசை மாத்திரம் சாகிறதென்றிருக்கிறதினால் ஒருவன் மரித்தவுடனே அவர்களுக்கு நீடூழி நித்தியமானது ஆரம்பிக்கின்றதாமே. ஆனலது பேரின்ப பாக்கிய நித்தியமாயிருக்குமோ! அல்லது ஐயோ சகல கஸ்தி வாதை நிறைந்த நித்தியமாயிருக்குமோ; என் பிரிய சகோதரமே! நீ நல்ல மரணத்தையடைந்தாயானால் பாக்கியசாலிதான்; ஐயோ துன்மரணத்தை யடைவாயாகில் நிற்பாக்கியவான் நீயே யென்று சொல்லவும் வேண்டுமோ.

நல்ல மரணமானது தேவவரமெனச் சொல்லவேண்டியிருக்கின் றது. நீண்டகாலமாகக் கடுந்தவஞ்செய்து ஓயாது ஆண்டவரோ நல்ல மரணந் தந்தருளுமென்று சீவியநாள் முற்றிலும் இரந்துமன்றாடிய புண்ணி யவான்கள் நல்ல மரணத்தைக் கண்டடைகிறதே சந்தேகமாயிருக்கின்றது. ஆனால் புண்ணியத்திலே அசாக்கிரதையுள்ளவர்களாய் அல்லது பாவச் சேற்றிலே புரண்டு நல்வழியை நாடாதிருக்கிறவர்களுக்கு நல்ல மரண வரஞ் சித்திக்கிறதெப்படி ஆனால் நீ நல்லமரண வரமடைய ஒரு சுலபமான வழியுண்டு. அதேதென்றால் பாவிகளைத் தன் பாரிசமா யேற்றுக்கொண்டு மரணதருணத்திற் பரகதியிற் சேர்த்தருள வல்லபியான மோக்ஷவிராக்கி னியை இதுதருணம் வீரத்துவமான பத்தியோடு நம்பிக்கையாக வேண்டி னில், பூலோகத்திற் பிறந்த பூமான்களில் அர்ச். சூசையப்பரைப்போல பாக்கியமான மரணத்தையடைந்தவர்களாருமில்லை. அவர் அவஸ்தைக்காரர் களுக்குப் பாதுகாவலராகவும் இருப்பதினாலே உன்னுடைய வியாதி நேரங் களில் அவருடைய வல்லப சலுகையை உருக்கமாக நம்பிக்கைவைத்து வேண்டிக்கொள்ளுவாயாக, அர்ச்சியசிஷ்டவர்களோவெனில் 40, 50, 100 வருடங்களாக அருந்தவத்தைமுடித்துப் பரகதியைச் சம்பாதித்தார்கள். நீயோவென்றால், இன்னுங் கொஞ்சத்தில் மோக்ஷத்தைச் சுலுவாய்த் தேடிக்கொள்ள வழிபாடு வாய்த்திருக்கின்றது. எப்படியெனில், உன்னைத் தேவமாதாவின் அடைக்கலத்தில் ஸ்தாபித்து, உன் பாவங்களையெல்லா முற்றிலுந் துவேஷித்து வெறுத்துச் சமயங்கிடைத்தால் பாவசங்கீர்த்த னஞ் செய்வேனென உறுதியான பிரதிக்கினையோடு மரிப்பாயாகில் நீயே பாக்கியவான். பாவிக்கடைக்கலத் தாயார் உன்னைத் தமது ஆதரவிலேற் றுக்கொண்டதற்குப் பிற்பாடு பயமென்ன ஏக்கமென்ன. தமது அடைக்க லத்தைநாடித் தஞ்சமென்றோடிவந்த பாவிகளில் ஒருவனாகிலும் வீணாய்ப் போனதாக உலகத்திலே கேள்விப்பட்டதேயில்லை. அப்படியிருக்க நீ தத்தளிக்கவேண்டியதேன். நீ பாதிவழி நரகத்திலே போயிருந்தாலும்

அந்த ஆண்டவனுடைய நம்பிக்கையை விடாதே இரட்சிக்கப்படுவாயாமே. அர்ச்சியசிஷ்டவர்களோ அநேகங்கஷ்டப்பட்டு வலுவந்தமாய் உயிரை முதலாய்த்தந்து மோக்ஷத்தையடைந்தார்கள். நீயோவெனில் ஒரு வருத்தமுமன்னியில் சொற்பநேரத்திற்குள் இந்த இரக்ஷணியத்தினிருப்பிடத்தாயாராலே மோக்ஷவிராட்சியத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும் நிலைமையிலிருக்கிறாய். என் பிரிய சகோதரமே! இது எப்படிப்பட்ட அதிர்ஷ்டமென்று கண்டுணர்ந்து பார்.

சகோதரமே, இதுசமயம் மோக்ஷத்துக்குப் போகிறதானாலும் நரகத்துக்குப் போகிறதென்கிலும் உன்னிஷ்டப்படி தெரிந்துகொள். எனெனில் எத்தனை குருப்பிரசாதிகளுனக்காக மன்றாடி நின்றாலும் எத்தனை அர்ச்சியசிஷ்டவர்கள் உனக்காக வேண்டிக்கொண்டாலும் நீயே மனப்பிரியமில்லாவிடில் அவர்களாலுமிவர்களாலுமுன்னைக் கரையேற்றலாகாது. கடைசியாக உன்னையுண்டாக்கின சர்வேசுரன் முதலாய் உன்னையல்லாமல் உன்னை ரக்ஷிக்கவேமாட்டார். ஆகையால் நீ செய்யவேண்டியதென்னவென்றால், உன்னுடைய பாவங்களை முற்றிலும் வெறுத்து கள்ளப்பிரதிக்கினை செய்யாது நேர்மையான பிரதிக்கினை செய்து நிற்பாயாகில் என் பிரிய சகோதரமே, தேவதாயார் அர்ச். சூசையப்பர் உன் காவல் சம்மனசு முதலிய மோக்ஷவாளர் உனக்காக எடுத்துக்கொள்ளுகிற முயற்சி உனக்கு நித்திய பேரின்பத்தைப் பெறுவிக்குமாமே.

வந்த வியாதி உனக்கு மறுலோக பிரயாணத்தை நினைப்பூட்டும்படியாகச் சர்வேசுரன் அனுப்பிய தூதனாகப் பாவிக்கக்கடவாய். இந்த வியாதியைப் பொறுமையாய்ச் சகித்து இதன் பலன் வீணாய்ப்போகாதபடிக்கு உன் பாவப்பரிகாரமாக ஒப்புக்கொடுப்பாயாக. அவ்வுலகத்திலே உன் பாவங்களுக்கு அநேகநாள் உத்தரிக்கவேண்டிய சாஸ்தியான கடனை இந்தச் சொற்ப வியாதியைக்கொண்டு வெகு சுளுவாய் உத்தரித்துப்போடலாம். இப்பேர்க்கொத்த அதிர்ஷ்ட சமயத்தை வீணாக்கிக்கொள்ளாதே. இது சமயம் நீ மரணிக்கமாட்டாயென்பதாகச் சாத்தானுனக்கு மனதிலே உபதேசிக்கவரும். இதையும் நீ நம்பாதே, வைத்தியனும் இந்த நோயினால் ஆபத்தில்லை சீவனுக்கொரு அபாயமிருந்தால் என் சீவனைத் தருகிறேனென்பான்; அதனையு நம்பாதே. சீவதாதிலே யாதொரு அனுக்கமுமில்லை பிழைத்துக்கொள்வாயென்பான். நாளுக்குநாள் வியாதி மேலிட்டு க்ஷணப்பித்தம் க்ஷணச்சித்தமாய் மயக்கமும் ஆராட்டமு மெலிவும் பெலக்குறைவும் சாப்பாட்டில் அரோசமுங் காணுகையில் அவர்களுடைய பசப்புவார்த்தையை என் நம்புகிறாய். இப்படியாக உன்னை மருட்டி ஆத்தும காரியத்தைக் கவனியாமல் உன்னையேய்த்து நரகபிராப்தியாக்க வழிதேடுகிற பேய்களென மதி எச்சரிக்கை சாவதானத்துடனே உன்னாத்தும காரியங்களைச் சீரிடக்கவனிப்பாயாக. இந்த வியாதியிலே நான் சாகப்போகிறதில்லை

யென்று நம்பியிருந்த அனேகர் அந்த வியாதியினாலே தானே மரணித்து விட்டார்கள். ஆகையால் இன்னும் பிழைத்துக்கொள்ளுவோமென்கிற நம்பிக்கைவைத்துத் தாமதம்பண்ணாதே. அனேகர் நாளுக்குநாள் தாமதஞ் செய்த சமயத்திலே அவஸ்தையும் நினைவுதடுமாற்றமுஞ் சாவும் வந்தமையினாலே தங்கள் பாவங்களுடனே செத்து நரகத்தில்விழுந்தார்கள். உனக்கு நல்ல அறிவு நினைவுமிருக்கிறபோதே குருவானவரை யழைக்கவும் பாவசங்கீர்த்தனஞ் செய்யவுந் தேவநற்கருணையுட்கொள்ளவும் அவஸ்தை பூசுதல் பெறவுந் தக்கமுயற்சிசெய். ஏனெனில் உனக்கு நினைவு பேதலித்தபின் குருவையழைக்க ஆளகப்படுவதே வருத்தமாயிருக்கும். உடையவனுடைய முதுகாகுமோ ஊழியனுடைய கண் உன்னுடைய அந்தியவேளையில் அவர்களனைவரும் உனது கெஞ்சுதலையும் மன்றாடுதலையும் சட்டைபண்ணமாட்டார்கள். நீ சாலாலிட்ட வேலையைத் தலையாலே செய்தவர்களும் இன்னேரம் அசட்டையாய்ப் பல போக்குச் சொல்லி சுயநலத்தை மாத்திரமே எத்தனிப்பார்கள். அவஸ்தைபெற்றவர்கள் பிழைக்கத்தக்கதில்லை. கட்டாயம் மரணமாய்ப் போவார்களென்று சில மதியீனர் நினைக்கிறபடி நீ எண்ணாதே. அவஸ்தைபூசுதலாகிறதென்ன ? முதலாவது வியாதிக்காரர்களுடைய மீதியான பாவங்களுக்குப் பரிகாரமாகவும், 2-வது அவர்களுடைய ஆத்துமத்துக்குஞ் சரீரத்துக்கும் ஆறுதலாகவும், உண்டாக்கப்பட்ட தேவ திரவிய அநுமானமென்று என் பிரிய சகோதரமே நிச்சயிக்கக்கடவாய்.

குருசுவாமியாரையழைக்க ஆள்ப்போனதாக நீ யறிந்தவுடனே உனது வீட்டுக்காரியங்களையும் நிலபலகாரியங்களையும் இன்னும் புறக்கவலைகளத்தனையும் சாக்கிரதையாக ஒழுங்குபடுத்திவிட்டு உன்னுடைய ஆத்துமத்துக்குள்ளே புகுந்து உனது பாவங்களையெல்லாம் ஆராய்ந்து முந்தின பாவசங்கீர்த்தன முதலின்றளவில் நீ கட்டிக்கொண்ட பாவாக்கிரமங்களையெல்லாம் வகை விபரமாகவும் எண்ணிக்கை பிசகாமலும் ஞாபகப்படுத்தி எந்தப் பாவங்களை முந்தத் தெரிவிக்கிறதென்றும் பெரிய பாவங்களைத் தெரியப்படுத்தியபின் மற்றதுகளைச் சொல்லுகிறதென முடிவு கட்டிக்கொள். சகோதரமே! இது சமயத்திலே உனது சீவியகாலத்தினுடைய சகல பாவங்களையுங் கூடியமட்டில் ஞாபகப்படுத்திப் பொது பாவசங்கீர்த்தனஞ் செய்வாயேயாகில் மகா உத்தமமாமே. உனது காவலான சம்மனசானவர் உன்னை நோக்கி இந்தப் பாவசங்கீர்த்தனம் கடைசிப் பாவசங்கீர்த்தனமாகும், இந்தப் பாவசங்கீர்த்தன முடிந்தவுடனே மறுலோக பிரயாணத்துக்கு ஆயத்தமாயிருக்கக்கடவாயென்று சொன்னதுபோல எண்ணிப் பாவங்களையெல்லாம் நினைத்துக்கொள்ளக்கடவாய். நினைவிலே வந்த பாவங்களை மாத்திரஞ் சொல்லலாமென்று ஆத்துமசோதனை செய்கிறதிலே அசாக்கிரதையாயிராதே ; எல்லாஞ் சாவதானமாய் வகைதொகையுடன் ஞாபகப்படுத்தி அதுகளுக்காக மனநொந்து மனஸ்தாபபடு. மனஸ்

தாபப்படுகிற பாவி எவனுக்கும் சுவாமி பொறுத்தலளிக்க வழிநோக்கிக் காத்துக்கொண்டிருக்கிறார். ஆகையினாலே நீ அவருக்குப் பொருந்தாமையான பாவக்கிரமங்களால் சமஸ்த நன்மைகளுள்ளவரும் உனக்கு ஒரு தின்மையுஞ் செய்யாதவரும் உனக்கு சகலவித நன்மைகளைச் செய்தவருமான சுவாமிக்குத் துரோகஞ் செய்ததற்காக மனதில் கஸ்திப்படுவாய். நீதிப்படிக்கு உன்னைத் தண்டித்திருப்பாரானால் முதற்பாவஞ்செய்த அந்நேரமே உன்னைப் பளி வாங்க நரகத்திலே தள்ளியிருப்பார். ஆனால் இரக்கம்புரிவது அவருடைய தொழிலேயல்லாது நீதி செலுத்துவது அவருடைய இயற்கையல்ல. நித்திய நரகத்துக்குப் பாத்திரவானாயிருந்தவுன்னை இன்றளவுங் காப்பாற்றி பாவசங்கீர்த்தனஞ்செய்ய நேரமும் வயதுங் கட்டளையிட்டு மோக்ஷத்துக்குப்போகிற வழியிலே உன்னை நிலைநிருத்தி எப்படியாவது உன்னை ரக்ஷித்துக்கொள்ளச் சித்தமாயிருக்கிற சுவாமியிடத்தில் பொறுத்தல கேட்டு மன்றாடி இனியப்படிப்பட்ட பாவங்களைச் செய்கிறதில்லையென்று பிரமாணிக்கமான பிரதிக்கினை செய்யக்கடவாய்.

குருசுவாமி வந்தவுடனே சேசுநாதரோ உன்னாத்துமக் கணக்கைக்கேட்க வந்திருப்பதாக மதித்து வணங்கி முந்திய பாவசங்கீர்த்தனஞ் செய்து இத்தனை மாசமானதெனச் சொன்னபின் முந்தப் பெரிதான பாவங்களையும் பின்பு படிப்படியாக மற்றப் பாவங்களையும் அறிக்கையிட்டு அவருனக்குச் சொல்லும் புத்திமதிகளையும் இடுகிற அபராதத்தையுங் கருத்தாய்க்கேட்டு அனுசரிக்கக்கடவாய். ஆனால் முந்திய பாவசங்கீர்த்தனத்திலே வெட்கத்தினாலேயாவது கூச்சத்தினாலேயாவது அல்லது உன் சீவிய காலத்தில் யாதொரு பாவத்தை ஒளித்திருந்தால் அல்லது சண்டை மனஸ்தாபம் பகையை மனதிலே வைத்துக்கொண்டு பாவசங்கீர்த்தனஞ் செய்திருந்தால் அல்லது பளிவாங்கவேணுமென்ற வயிரத்தை மனதிலே வைத்துக்கொண்டு பாவசங்கீர்த்தனத்துக்கு போயிருந்தால் அல்லது பிறர் பொருளைத்திருடி அடைக்கலமாக வைத்தபொருளை யபகரித்து சங்கீர்த்தனம் பண்ணியிருந்தால் அல்லது பிறதாரச்சேர்க்கை ஒன்றிற் சோரத்தனச்செய்கையை மனதில் வைத்து பாவசங்கீர்த்தனம்பண்ணினதுண்டானால் எத்தனை வருஷமாக இப்பேர்க்கொத்த தேவதுரோக பாவசங்கீர்த்தனஞ் செய்தாயென்றுசொல். இதுமாத்திரம் போதாது, எத்தனை பாவசங்கீர்த்தனங்கள் இப்படிச்செய்து தேவநன்மை வாங்கினாயென்று எறக்குறையத் தெரியப்படுத்தி அது காலங்களில் நீ பாவசங்கீர்த்தனத்தில் வெளிப்படுத்தியிருந்த பெரிய பாவங்களையும் திரும்ப உன் நினைவிலே வருவித்து இயன்றமட்டுக்கும் மறுபடியும் பாவசங்கீர்த்தனஞ் செய்யக்கடவாய். ஏனென்றால் நீ இதற்குமுன் செய்திருந்த பாவசங்கீர்த்தனமெல்லாம் உனக்கே தேவசாபத்தையும் நரகத்தையும் பெறுவிக்கிற பாதகமான பாவசங்கீர்த்தனமாய்ப்போனதேயல்லாது உன் பாவங்களத்தனையும் பொறுக்கப்படவே

யில்லையாமே. இப்போது நீ நித்திய நரக நிற்பந்த ஆக்கினையைத் தப்பித்துக் கொள்ளவேண்டுமானல் மோசக்கேடான அந்தப் பாவசங்கீர்த்தனத்திலிருந்து சகல பாவங்களையும் நீ சங்கீர்த்தனஞ்செய்தால் மாத்திரமே இரட்சிக்கப்படுவாய். நீண்டகாலமாயிப்பேர்ப்பட்ட அபாசமான பாவசங்கீர்த்தனஞ் செய்திருந்தாயானல் அனேக பாவாக்கிரமங்கள் உன்னுடைய ஞாபகத்துக்குளெட்டாதென்பது வாஸ்தவந்தான். ஆகையால் எதார்த்தமான உனது ஆத்துமசோதனைக்கெட்டாத பாவங்களை அல்லது மறந்துபோன பாவங்களைப் பாவசங்கீர்த்தனத்தில் சொல்லக்கடனில்லையென்றாலும் அந்தப் பாவங்களையெல்லாம் தேவ இரக்கத்துக்கு ஒப்புக்கொடுத்து ஞாபகப்பட்ட அக்கிரமங்களத்தனையும் பாவசங்கீர்த்தனஞ்செய்தபின் மனச்சமாதானத்துடனே மரணத்துக்கு எதிர்நோக்கி என் பிரிய சகோதரமே ஆவலாய்க் காத்துக்கொண்டிருக்கக்கடவாய்.

கள்ளப்பாவசங்கீர்த்தனமென்கிற ஆபத்தான பாதாளப் படுகுழியில் நீ வீழாதிருந்திருப்பாயேயாகில் தம்பி நீயே பாக்கியசாலியாகும். ஆகையால் மன உச்சாயத்தோடுஞ் சந்தோஷத்தோடும் பாவசங்கீர்த்தனஞ் செய்வாயாக. அதாவது முந்தின பாவசங்கீர்த்தனத்துக்குப்பின் நீ தேடிக்கொண்ட பாவங்களெதுவோ அவைகளை எறெடுத்து நோக்கி சங்க்ஷேபமாகக் குருவின் பாதங்களிலறிக்கையிட்டு மன அமரிக்கை சமாதானத்துடனே மரணவாசலிற் பிரவேசிக்க ஆசையுடனே காத்திருப்பாயாக.

சற்பிரசாதமுட்கொள்ளும் பாக்கியமுனக்குச் சித்திக்குமேயாகில் அதை ஆசையன்புடனே பெற்றுக்கொண்டு உன்னுள்ளத்திலெழுந்தருளி வந்திருக்கிற சற்பிரசாதநாதரைநோக்கி உனக்கு நல்ல மரண வரத்தைக் கட்டளையிட்டருளவேணுமென்று அடிக்கடி மன்ருடிக்கொள்.

குருவானவர் உனக்கு அவஸ்தை பூசுதல் கொடுப்பதற்காக அர்ச்சியசிஷ்ட எண்ணெயைக்கொண்டு உன்னுடைய கண் காது நாசி முதலிய இந்திரியங்களிற் சிலுவையடையாளமிடும்போது நீ நினைத்துக் கொள்ளவேண்டியதாவது, அந்தந்த இந்திரியங்களினலே நீ கட்டிக் கொண்ட பாவங்களை சேசுநாதர்அந்தந்த இந்திரியங்களினலே அனுபவித்த வாதைகளைக் குறித்துப் பொறுத்துக்கொள்ள மன்ருடி நில்.

நீ உத்தரீயம் பெருதவனயிருந்தால் அது சமயம் நீ உத்தரீயம் பெற்றுக்கொள், அல்லது உத்தரீயம் எற்கனவே பெற்றிருப்பாயாகில் மிகவும் நன்மையே. ஆனல் மரணவேளையில் உத்தரீயம் அகத்தியமுன்னிலிருக்கவேண்டியது. எனெனில் "உத்தரீயத்துடன் மரணிப்பவர்கள் நரகத்துக்குப்" "போகமாட்டார்களென்று தேவமாதா வாக்குத்தத்தஞ் செய்திருக்கிறு" "ளாமே."

அதன்பிறகு அர்ச். பாப்புக் குருசுவாமியவர்களுடைய பரிபூரண பாவப்பொறுத்தல் ஆசீர்வாதங் குருவானவர் உனக்குக்கொடுப்பார், அத்தருணம் நீ செய்யவேண்டியதாவது, உனது சீவியத்தையும் மரணத்தையும் சுவாமிக்கு ஒப்புக்கொடுத்து அந்தப் பூரண பலனுசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுவாயாகில் நீ மரணிக்கும் நேரத்தில் அப்பரிபூரணபலன் உனக்கு மிகு பிரயோசனத்தைப் பெறுவிக்குமாமே.

மேலும் இன்னொருவிஷயம் உனக்கு அவசியந் தெரிவிக்கக் கடவேன், அதாவது உன் மனமாற உன் கையாலே உன்னுத்தும இளைப்பாற்றிக்கு நீ செய்விக்கிற ஒரு பூசை தானதருமத்தினுல் நீ யடையப்போகிற உதவி சகாயம் உன்னுறவினர் செய்விக்கிற பல பூசை தானதருமங்களினுற் சித்திக்குமெனச் சொல்லப்போகாது. அல்லது உன்னுடைய பெண்சாதி பிள்ளைகளுடைய பின்னுதவியை நம்புவாயாகில் நிச்சயமாகவே நீ மோசம் போவாயாமே, ஏனெனில் கட்டாயமாகவே அவர்கள் உன்னை மறந்துவிடுவார்கள். ஒன்றிலவர்கள் செய்யப்போகிற செபதவ தானதருமமுஞ் சொற்பமாயிருக்கும், அத்தால் வரவேண்டிய நன்மை சகாய உதவியுமுன்னையே சாருமோ அல்லது எந்த ஆத்துமத்துக்கு உதவி சகாயமாகுமோ சந்தேகந்தான். ஆகையால் புத்திசாலித்தனமாக நீ செய்யவேண்டியதென்னவென்ருல் இத்தருணத்தில் உன்னுத்தும இளைப்பாற்றிக்குச் செய்யவேண்டும், பூசைப்பணத்தையாவது தானதருமத்தையாவது உன் கையாலேதானே குருவின் பாதத்திலே செலுத்திவிடுகிறது உத்தமமாமே.

தம்பி உனக்குப் பாவசங்கீர்த்தன முதலிய தேவதிரவிய அநுமானங்களைக் கொடுக்கக் குருவானவர் சமீபத்திவில்லாவிடில் அல்லது அவர் வரக்கூடாத அசந்தர்ப்பம் நேர்ந்திருக்குமாகில் இதனுலே நீ அவநம்பிக்கைபடாது தேவதயவை நம்பி உன் பாவங்களுக்கு மனஸ்தாபப்பட்டு நல்ல பிரதிக்கினை செய்துகொள். இப்படி நல்ல பிரதிக்கினை செய்தபிற்பாடு நீ இரட்சிக்கப்படுவாயோ, சேசுநாதர் என்ன தீர்வையிடுவாரோவென்கிற தத்தளிப்பான எண்ணத்துக்கு மனதிலே இடங்கொடாமல் இதற்கு விரோதமான சிந்தனைகள் முற்றும் பசாசினுடைய தந்திர சோதனைகளென மதித்துத் தேவயிரக்கத்தின்மட்டில் முழுநம்பிக்கையாகயிரு. குருசுவாமியிடஞ் சமய நேர்ந்தால் நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்கிறதென்கிற மனஓர்மை மாத்திரம் உனக்கிருக்கவேண்டியது; உன்னுடைய கட்சி முடிவான அந்திய அவஸ்தை வேளைக்கு இந்தத் தேவ உதவிகளுனக்குச் சித்தியாமற்போனதுக்கு உன் பாவமே காரணமென நினைத்து உன்னையே நீ நொந்துகொண்டு தேவ சமுகத்தில் மன்ருடு. நீ அவஸ்தைபூசுதல் பெற்றதற்குப்பிற்பாடு உன்மட்டில் தேவசித்தமெதுவோ அதுவே நடந்தேறுமாகையால் நீ சீவிப்பதும் மரிப்பதும் ஆண்டவருடைய சுயசித்தமேயல்

லாது மற்றெதுவுஞ் செல்லாது. இப்படியிருப்பதினால் பிழைத்துக்கொள்ள வேண்டுமென்கிற விருப்பமுங் கொள்ளாதே. சாகவேண்டுமென்கிற ஆசையுங்கொள்ளாதே, என் பிதாவே உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுமாப்போலே என்னிடத்திலேயுஞ் செய்யப்படுவதாகவென அடிக்கடி செபித்துக்கொள், ஏனெனில் நாம் ஆசிக்கிறபடிக்கு ஒன்று நடக்கத்தக்கதில்லையாமே. இவ்வாறு தேவசித்தப்படிக்கு உன் மனதை ஓர்மைப்படுத்துவாயாகில் இதுவே ஒருநல்ல புண்ணிய முயற்சியாகி உனக்கும் மோக்ஷத்திலே பலனை மிகுவிக்குமாமே, அல்லது தேவ சித்தத்துக்கு விரோதமாகக் கஸ்திப்பட்டு முறையிடுவாயாகில் ஏதுவுமுன் பிரியப்படி நடவாதிருப்பது மாத்திரமல்ல, தேவ சமுகத்திலே தெண்டனைக்குப் பாத்திரவானுவாயென்பது தப்பாது. தம்பி இவ்விதமாக உன் மனதைத் தேவசித்தத்துடனே ஒன்றுபடுத்தியதற்குப் பிற்பாடு தேவ இரக்கத்தின் மட்டில் முழு நம்பிக்கையாயிரு.

இந்த அவசரத்திலே உன்னுடைய சத்துராதியாகிய சென்மப் பசாசு உன்னைப் பயப்படுத்திக் கலங்கடிப்பதுவேண்டி ஓடி வருவான் அவனுடைய மிரட்டலுக்கு நீ அஞ்சவேண்டியதில்லை. . அதேனென்றால் உன் பாவங்களனைத்தையு முன்னறிந்திருக்கிறவராகிய சேசுநாதரிடத்திலேயே சங்கீர்த்தனஞ் செய்கிறதாக மதித்து குருசுவாமியவர்களிடத்திலே பாவசங்கீர்த்தனஞ்செய்துமுடிந்ததே. 2-வது. இதுவே உன் கடைசிப் பாவசங்கீர்த்தனமென்று உனது காவலான சம்மனசு உனக்கு அறிக்கை செய்ததாக நிச்சயித்து நல்ல பாவசங்கீர்த்தனஞ் செய்திருக்கிறாயே. 3-வது. இனி ஒருக்காலும் ஒரு பாவதுரோகத்தையுஞ் சுவாமிக்கு விரோதமாகச் செய்கிறதேயில்லையென்று வீரத்துவமான பிரதிக்கினை செய்துகொண்டாயே. இப்படியெல்லாமிருக்க உனக்குப் பயமென்ன, ஏக்கமென்ன அவநம்பிக்கையேன் சாத்தானுடைய தொழிலென்ன துரும்பைத் தூணாக்கி மெய்யைப் பொய்யாக்கிப் புண்ணியத்தைப் பாவமாக்கி மயக்கடித்துப் பயப்படுத்தி அவநம்பிக்கைப் படுகுழியிற்றள்ளி உன்னை நரகத்திலே கொண்டுபோகப் பிரயாசிப்பதேயதன்வேலை. நீயோவென்றால் அப்பேர்ப்பட்ட அவகடமான விபரீத விசாரங்களுக்கு இடங்கொடாமல் புறக்கணித்துத் தள்ளிவிடு, சேசுநாதர் தமது இரத்தத்தைக்கொடுத்து உனக்காகவே மோக்ஷவிராச்சியத்தை விலைக்கு வாங்கி வைத்திருக்கிறாரோ தவிரத் தமக்காக வாங்கினவரல்லவே, ஏனெனில் மோக்ஷம் அவருடையதாகவேயிருக்கின்றது. 2-வது. உன்னை நரகத்திலேவைத்து ஆச்சேந்திரகாலந் தம்மை நிந்தித்துக்கொண்டிருக்க அவருக்குச் சம்மதமாயிருக்குமோ, ஆகையால் அந்த ஆண்டவர் உன்னைப் பேயின் பாரிசமாயாக்காது இரட்சிப்பார். 3-வது. பெரிய பாவிகளையும் மீட்டிரட்சிப்பதையே தமக்கு மகிமையாகப் பாராட்டுகிற தேவதாயாரடைக்கலத்திலே உன்னை ஒப்புக்கொடுத்து மன்றாடு. உன்னைக் கரையேற்றப்

பூரண ஆசையாவலோடிருக்கிற அந்த இரக்கமுள்ள மாதா உன்னைப் பசாசின் கையிலே நின்று எவ்விதமும் விடுவித்துக்காப்பாள். 4-வது. அந்திசந்தி எந்த நிமிஷமும் கண்ணை இமைகாப்பதிலும் மிக்காயுன்னை இன்றளவும் அருமையாகக் காத்துவருகிற அர்ச். காவல் சம்மனசானவர் உன்னை மோக்ஷ வழியிலே நிருத்தி தேவ நீதிக்கோபமுன்னைச் சர்வசங்காரஞ்செய்யாதவண்ணம் இந்தமட்டும் உனக்காக மன்றாடிவந்தவர். இன்னுமுனக்காகத் தேவ சன்னதியில் சலியாது மன்றாடுவாரென்கிறதினாலே இந்த சத்துருவின் கொடிய உய்த்த சமயத்தில் அவரைக் கூப்பிடுவாயாகில் தப்பாமலவர் வந்து அந்தச் சாத்தானைத் துறத்துகிறதுமல்லாமல் தீர்வைநேரத்திலுமுனக்காக மெத்தவாயினும் பரிந்துபேசுவார்.

இப்படியாக நரகப்பேயின் போராட்டமுடிவதற்குள்ளாக இன்ப பேய்களுமுன்னை நரகத்திலே தள்ளப்பிரயத்தனப்படுவார்கள். அந்த முந்தின சாத்தானாலே யேவப்பட்டவர்களா யுன்னையடுத்துவந்து சொல்லுகிறதாவது, அக்கியானிகளைக்கொண்டு மந்திரிக்கவேண்டுமென்றும் சாம்பலை மந்திரித்துத் தெளிக்கவேண்டியதென்றும் களிப்புக்களிக்கவும் பேயோட்டவும் பில்லிசூனியத்தைத்தடுக்கவுமென்றிப்படியாகப் பற்பல அடாத உபதேசமெல்லாஞ் செய்வார்கள். நீயோவென்றாலவர்களை இன்பப் பேய்களெனத் துவேசித்து வெறுத்து சுவாமிமட்டில் ஒரே உறுதியாயிரு, மேலுமிவர்களே உனக்கு தேவ கோபத்தையுந் தேவசாபத்தையும் வருவிக்கும்படி பிசாசினாலே தூண்டப்பட்ட இன்ப பேய்களென நிச்சயப்படுத்திக்கொள்ளுவாயாக.

வியாதிக்காரனுடைய இனத்தாருஞ் சினேகிதருமாகிய சகோதரர்களே, வந்தவியாதி யதிகரித்துப் புத்திப் பேதலித்துப் பேச்சுத்தடுமாற்றமாகுமுன்னுதாகவே தகுதியான ஓர் ஆளைக் குருசுவாமியையழைக்கும்படிக்கு அனுப்பக் கவனியுங்கள். இன்னமுங் குருவானவரிருப்பிடமதிகத்தூரமாக இருந்தால் ஒருநாள் முன்னதாகவேபோய்த் தெரிவிக்கவேண்டியது, சிலமுறை குருவானவர் வேறு அவஸ்தைக்கும் இன்னொரு ஊருக்கும் போயிருக்கலாம். பல அசந்தர்ப்பங்களவருக்கு நேரும். இப்படியிருப்பதால் போகிற ஆள் சாக்கிரதையற்றவனாயிருந்தால் குருவானவர் வரத் தடையாகிப்போகும். ஒரு சமயம் புத்தி பேதலித்தபின் குருசுவாமி வந்தாலும் பாவசங்கீர்த்தனங் கொடுக்கக்கூடாவிட்டால் பிரயோசனமில்லை; போக்கின ஆள் வியாதிஸ்தனுடைய சரியான நிலைமையைத் தெரிவிக்கத்தக்கவனாயிருக்கவேண்டும். எப்படியென்றால் வியாதிஸ்தன் அடிக்கடி சத்தி பண்ணுகிறதாயிருந்தால் அல்லது பேச்சடங்கி அறிவு தடுமாறியிருந்தால், அல்லது உத்தரீயம் பெற்றதும் பெறாததும் தரித்திருப்பதுமாகிய விபரங்களையுந் தெரிவிக்கக் கூடியவனாயிருக்கவேண்டும்.

ஆளைக் குருசுவாமி பக்கலில்போக்கின பிற்பாடு நோவாளி தக்கபடி பாவசங்கீர்த்தனஞ்செய்ய ஆயத்தஞ் சொல்லுகிறது ஒன்றிற் புஸ்தகங் களில் வாசித்துக் காட்டுகிறது நன்மை.

குருசுவாமி வருமுதலே சண்டை மனஸ்தாபங்களிருந்தால் சமாதா னப்படுத்துகிறது, இதிலேயறியவேண்டியதாவது, வியாதிஸ்தனலே அய லான் கஷ்டநஷ்டப்பட்டவனயிருப்பானகில் அகத்தியமாய் அயலானை அருகில் தருவித்து, இருவரையும் சமாதானப்படுத்தவேண்டியது. ஆனல் பிறத்தியானலே நோயாளி அவமானமுஞ் சேதாரங்களும் அநுபவித்தி ருப்பானகில், அந்தப் பிறத்தியான் அவனிடம் வரவே மாட்டான். ஏனென்றல் தனது செய்கையே அவனை மனதிற் குற்றஞ் சாட்டுவதால் அணுகி வர விக்கினப்படும். இப்பேர்ப்பட்ட சந்தர்ப்பத்தில் பிறத்தியான் இவனைப் பொருதி கேட்க வேண்டியதே யல்லாது நோவாளி அவனைப் பொருதி கேட்கக்கடனுமில்லை. இவன் மனசமாதானத்துடன் மரணிக்க விக்கினமுமில்லை. எப்படியிருந்தாலுங் குருசுவாமி வந்தவுடனே அவர் சமுகந்தெரிவிப்பது நலமாமே. மேலும் வேசி விபசாரச் சேர்க்கை விஷயத் தையும் வேத விரோதமான செய்கைகள் அதாவது பேயுச்சாடன பேயூழி யம் பேய்மந்திர தந்திரமிவைகளையுந் தெரிவிக்கிறது.

அக்கியான மந்திரதந்திரச் சடங்குகளைச் செய்விக்கச் சொல்லுகிறவர் களையுஞ் செய்கிறவர்களையும் வீட்டைவிட்டு அப்புறப்படுத்திவிடுகிறது.

இந்த ஆபத்தான அவஸ்தைவேளையில் வியாதிக்காரனுடைய ஆத்து மம் பரகதிக்குச் சேரும்படிக்கு உங்களாலியன்றமட்டும் புத்தி சொல்லுகிற திலும் செபத்தினலும் உதவிபுரியவேண்டுமேயல்லாது பேய்க்காரியங் களைச் செய்து இந்த ஆத்துமத்தை நரகத்திலே தள்ளிப்போடாதேயுங்கள்.

இவன் தன்னுத்தும காரியத்தைச் சரியாய்த் தீர்க்கவும் அடிக்கடி சுவாமியை நினைத்து மன்றடவும் தேவமாதா அர்ச். சூசையப்பர் காவலான சம்மனசுகளை வேண்டிக்கொள்ளவும் ஏவிக்கொண்டிருங்கள்.

இவ்வாறு நீங்கள் நடந்துகொள்ளுவீர்களேயாகில் இவன் பரகதி சேர்ந்து ஆனந்தமடைகிற நேரத்திலுங்களை ஆசீர்வதித்து தன்னுடனே நீங்களும் மோக்ஷதலம் வந்து சேரும்படிக்கு தேவசன்னதியில் மறவாது மன்றடி நிற்பான். உங்களுடைய அசாக்கிரதையினலாயினும் உங்களு டைய அடாத செய்கையினலென்கிலும் நித்திய அக்கினிச் சமுத்திரத்தில் விழ நேருமாகில் ஐயோ உங்களுக்கு மிவனுக்கு மெத்தனையோ கேடாயி ருக்கும். இப்பேர்ப்பட்ட தருணத்திலிவனுக்கு வேண்டிய உதவிசெய்து இவனுக்கிரங்காதிருப்பீர்களோ; அல்லாமலும் நோயனுக்கு நல்ல அறிவு நினைவிருக்கும்போது நீங்களேதொரு பேய்க்காரியங்களைச் செய்வீர்களா கில் ஐயோ அவனுக்கு முங்களுக்குந் தேவசாபத்தை வருவித்துக்கொள்ளு கிறீர்களாமே. ஆனலவனுக்கு அறிவு நினைவு பேதலித்தபிற்பாடு நீங்கள்

செய்விக்கிற பேய்க்காரியங்களினாலே அவனுக்கு தோஷமில்லாவிட்டாலும் உங்களுக்குத் தேவசாபம் நேருமென்பது நிச்சயம். ஆத்துமத்துக்கு ஆத்துமம் பளிகேட்கப்படுமென்று வேதத்திலே சொல்லியிருப்பதினால் ஒரு ஆத்துமமுங்களாலே நரகத்துக்குப் போனால் உங்களுடைய ஆத்துமத்தையுங் கெடுத்தப்போட்டீர்களென்று சொல்லவேண்டியிருக்குமாமே.

தம்பி உன் வியாதி வருத்தத்தில் செபததை விட்டுவிடாதே; நீண்ட செபங்களைச் செய்யக்கூடாதாயின் சிறு வசனங்களாலடிக்கடி வேண்டிமன்றாடிநில்; சேசு மரியாயே சூசை யென்கிற திரு மந்திரமானது உன்னிருதயத்திலும் உன் ஞாபகத்திலும் உன்னாவிலுமிருக்கும்போது மரணிக்க மன்றாடு. அர்ச். அமிர்தநாதனைப்போல தேவநற்கருணை வாங்கின உடனே சேசுநாதரிடத்தில் மரணிக்க வரத்தைக்கேள், அர்ச். இஞ்ஞாசியாரைப்போல சேசுவே சேசுவே செசுவே என்கிற நேரத்திலுயிர்விட ஆசிப்பாயாக. தம்பி மரணிக்கிற நேரத்தில் சேசுவே என்று உச்சரித்தால் பூரண பலனுண்டென்றறிவாயாக.

---

## வியாதியில் மனவல்லயச் செபங்கள்.

சர்வேசுரன் சத்தியமாயிருக்கிறதினாலே விசுவசிக்கிறேன்.

சர்வேசுரன் பிரமாணிக்கராயிருக்கிறதினாலே நம்பியிருக்கிறேன்

சர்வேசுரன் சகல நன்மை சுரூபியாயிருக்கிறதினாலே அவரைச் சினேகிக்கிறேன். இதைச் சொல்லும் ஒவ்வொருமுறைக்கும் 7-வருஷமும் 7-மண்டலப் பலனுமுண்டு.

### விசுவாச முயற்சி.

என் சர்வேசுரா சுவாமி, திருச்சபை விசுவசித்துப் படிப்பிக்கிற சத்தியங்களை எல்லாம் தேவரீர்தாமே அறிவித்த படியினாலே நானும் உறுதியாக விசுவசிக்கிறேன்.—ஆமென்சேசு.

### நம்பிக்கை முயற்சி.

என் சர்வேசுரா சுவாமி, தேவரீர் வார்த்தைப்பாடு கொடுத்தபடியினாலே சேசுநாத சுவாமி பாடுபட்டுச் சிந்தின திரு இரத்தப் பலன்களைப் பார்த்து என் பாவங்களை எல்லாம் பொருத்து எனக்கு உம்முடைய வரப்பிரசாதங்களையும், மோட்ச பாக்கியத்தையுந் தந்தருளுவீர் என்று உறுதியாக நம்பியிருக்கிறேன்.—ஆமென்சேசு.

### தேவசிநேக முயற்சி.

என் சர்வேசுரா சுவாமி, தேவரீர் மட்டில்லாத சிநேகத்துக்குப் பாத்திரமாயிருக்கிறபடியினாலே, எல்லாத்தையும் பார்க்க உம்மை நான் முழுமனதோடே சிநேகிக்கிறேன். பின்னையும் உம்மைப்பற்றி என்னை நான் சிநேகிக்கிறாப்போலே மற்ற எல்லாரையுஞ் சிநேகிக்கிறேன்.—ஆமென்.

இந்த மூன்று முயற்சிகளை சொன்னாலும் 7-வரு 7 மண்டலப் பலன்.

சேசு மரி சூசை 7-ஆ 7 மண்டலப் பலன்.

சேசுவின் திரு இருதயமே! என் நம்பிக்கையை உமதுபேரில் வைக்கிறேன். (300-நாள் பலன்.)

தினசரி சொல்லுகிறவர்களுக்கு மாசத்துக்கு ஒரு தடவை பரிபூரண பலன். 10-ம் பத்திநாதர்.

சேசுவின் திரு இருதயமே! என் மட்டில் உமக்குள்ள சிநேகத்தை விசுவசிக்கிறேன் (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

சேசுவின் திரு இருதயமே! உம்முடைய இராட்சியம் வருக. (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

சேசு, மரியே! (300-நாள் பலன்.) 10-ம் பத்திநாதர்.

தயவுள்ள பிதாவே! உம்முடைய அளவில்லாத கிருபையினால் என் பாவங்களைப் பொறுத்தருளும், மகா பாவியாகிய அடியேன்மேல் இரக்கமாயிரும்.

உம்முடைய நீதிப்பிரகாரமாய் எனக்குத் தீர்வை இடாதேயும். தயாளமுள்ள கர்த்தாவே! பாவிகளுக்காக உமது திரு இரத்தத்தைச் சிந்தினீர், அதிலொரு துளியாகிலும் அடியேன்மேல் இரக்கமாய் விழப்பண்ணி என்னைப் பரிசுத்தனாக்கும்.

ஆ என் நல்ல பிதாவே! தேவரீருக்கு நான் துரோகஞ் செய்தது எவ்வளவோ அநியாயம், எவ்வளவோ நன்றியறியாமை, என் பாவங்களை எல்லாம் முழுமனதோடே வெறுத்துவிடுகிறேன்.

நிஷ்டூர பாவமே! என் திவ்விய கர்த்தனை வாதித்தாய்; எனக்கு மோக்ஷ வாசலை அடைத்து என்னை நரகத்திற் பயங்கர ஆக்கினைகளுக்கு உள்ளாக்கக் காரணமாயிருந்தாய்; உன்னை என்றென்றைக்கும் அரோசித்துத் தள்ளுகிறேன்.

என் பிரிய சேசுவே! என் பாவத்துக்குப் பரிகாரமாக இந்தக் கஸ்தி கொடுக்கிறீர். அடியேன்மேல் உமக்குள்ள தயவினாலே என்னைத் தண்டிக்கிறீர், உமக்குத் தோத்திரஞ் சுவாமி, உம்முடைய சித்தத்தின்படியே ஆகட்டுஞ் சுவாமி.

ஆ என் ஆத்துமமே! இந்தக் கஸ்தி உனக்குக் கடினமாய்த் தோன்றுகிறதற்கு நியாயம் இல்லை. உன் பாவங்களுக்கு அவுஷதம் வேண்டாமோ? பரம கர்த்தர் உன் பாவங்களுக்காக உன்னைப்பார்க்கிலும் எத்தனையோ அதிக கஸ்தி நிர்ப்பந்தம் அனுபவித்தார்.

ஆ என் திவ்விய சேசுவே! மாசில்லாதவராகிய தேவரீர் அடியேனுக்காக பொறுமையோடே சகல கஸ்தியும் பட்டிருக்கப் பாவியாகிய நான் கஸ்தி பொறுக்காமல் எப்படி முறையிடுவேன்? சுவாமி! எனக்குப் பொறுமை தந்தருளும். தேவரீர் அனுபவித்த கடின பாடுகளையும் மரணத்தையும் பார்த்து என் மரணநேரத்திலே என்னை இரட்சித்தருளுஞ் சுவாமி.

என் திவ்விய கர்த்தாவே! தேவரீர் திருச்சபையைக் கொண்டு எனக்குப் போதிவிக்கிறதெல்லாம் உறுதியாக விசுவசிக்கிறேன், என் விசுவாசத்தை அதிகரிக்கச் செய்தருளும்.

என் மதுர சேசுவே! எனக்காகக் கடின பாடுகளைப் பட்டு, நிஷ்டூர மரணத்தை அடைந்தீர்; உம்மை நம்பியிருக்கிறவர்களை இரட்சிக்க வார்த்தைப்பாடு கொடுத்தீர்; உம்மை முழுமனதோடே நம்பியிருக்கிறேன். என்னைக் கைவிடாதேயும்; என்னைப் பரகதியிற் சேர்த்தருளுஞ் சுவாமி.

மட்டில்லாத சகல நன்மைச் சொருபியாயிருக்கிற சர்வேசுரா சுவாமி, என் இருதயத்தை முழுதும் உமக்கு ஒப்புக்கொடுக்கிறேன். தேவரீர் அளவில்லாத சிநேகத்துக்குப் பாத்திரமாயிருக்கிறபடியினாலே உம்மை நான் முழுமனதோடே நேசிக்கிறேன். எல்லாத்தையும் பார்க்கிலும் உம்மைச் சிநேகிக்கிறேன். சுவாமி உம்முடைய திவ்விய சிநேகத்தின் அக்கினியை என் ஆத்துமத்தில் எரியப்பண்ணும்.

ஆ அன்புள்ள இரட்சகரே! பிரியமுள்ள சேசுவே, என்மேலுள்ள அன்பினாலே எனக்காக உம்முடைய பிராணனைத் தந்தீர்; உம்முடைய அன்பினால் உமது திருக் கரத்தில் என் பிராணனைவிட ஆசையாயிருக்கிறேன். என் அன்பே, என் சீவியமே இந்தப் பரதேசத்தை விட்டு எப்போது உம்முடைய பாக்கியமுள்ள தரிசனையை அடைவேன்?

அர்ச். மரியாயே! பாவிகளுக்கு அடைக்கலமே, தயாளமுள்ள தாயே, எனக்காக உம்முடைய திருக் குமாரனை வேண்டிக்கொள்ளும். தேவமாதாவே! என் பேரிலே தயையாயிரும், எனக்கு உதவியாயிரும். என் காவலான சம்மனசானவரே, இந்த ஆபத்துள்ள வேளையில் இடைவிடாமல் என்னைக் காத்தருளும். நான் பேர்கொண்டிருக்கிற அர்ச்சிய சிஷ்டவரே! சகல மோக்ஷவாசிகளே, அடியேனும் பரகதியை அடைந்து உங்களோடே சர்வேசுரனைத் தரிசித்துத் துதிக்கும்படிக்கு எனக்காக வேண்டிக்கொள்ளுங்கள். சேசுவே! மரியாயே, சூசையே, எனக்கு அடைக்கலமாயிருங்கள்.

☞ இந்த வார்த்தைகளை அடிக்கடி விசேஷமாய் மரண நேரத்திற் சொல்லுவாயாக.

# நன்மரணப் பிரார்த்தனை.

சுவாமி கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ கிருபையாயிரும்...மற்றதும்.

சுவாமீ தேவரீருடைய மட்டில்லாத கிருபையைக்கொண்டு,—எங்களுக்கு நன்மரணந் தந்தருளுஞ் சுவாமீ.

மாசில்லாத கன்னிகையான உமது திரு மாதாவின் பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,—எங்களுக்கு நன்...

தூதரும் அதிதூதருமாகிய சகல சம்மனசுகளுடைய மன்றாட்டைப் பார்த்து,—எங்களுக்கு நன்...

அப்போஸ்தலருஞ் சுவிசேஷகருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,—எங்களுக்கு நன்...

மேற்றிராணிமார்களும் ஸ்துதியர்களுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,—எங்களுக்கு நன்...

வேத வித்தியாபாரகரான சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,—எங்களுக்கு நன்...

சந்நியாசிகளுந் தபோதனருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,—எங்க. நன்...

குருப்பட்டமுள்ளவர்களும், ஆசாரியருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,—எங்களுக்கு நன்.

கன்னியாஸ்திரிகளும், விதவை ஸ்திரீகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய பேறுபலன்களையும் மன்றாட்டையும் பார்த்து,—எங்களுக்கு நன்.

அசுப்பில் வருகிற துர் மரணத்திலே நின்று,—எங்களை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமீ.

மரணத்தறுவாயிலே சகல பாவங்களிலே நின்று,—எங். இரட்சி...

மரணத்தறுவாயிலே பசாசினுடைய சகல உபாய தந்திரங்களிலே நின்று,—எங்களை இரட்சி...

மரணத்தறுவாயிலே எவ்வித அச்சத்திலே நின்று,—எங். இரட்...

மரணத்தறுவாயிலே அவநம்பிக்கையான தந்திரத்திலே நின்று,—எங்களை இரட்சி...

மரணத்தறுவாயிலே வீண் நம்பிக்கையான தந்திரத்திலே நின்று,—எங்களை இரட்சி...

மரணத்தறுவாயிலே கன்னெஞ்சத்தனத்திலே நின்று,—எங்களை

மாணத்தறுவாயிலே உம்முடைய கோபத்திலே நின்று,—எங். இரட்...

மரணத்தறுவாயிலே பசாசினுடைய வல்லமையிலே நின்று,—எங்களை இரட்சி...

மரணத்தறுவாயிலே நரக வேதனைகளிலே நின்று,—எங். இரட்.

மரணத்தறுவாயிலே உலகம், சரீரம், உறவின்முறையார் முதலான சகல மயக்கங்களிலே நின்று,—எங்களை இரட்சி...

மரணத்தறுவாயிலே நல்ல பாவசங்கீர்த்தனம் செய்யவும், தேவ நற்கருணை வாங்கவும், அவஸ்தைப்பூசுதல் பெறவும்,—எங்களுக்குத் தந்தருளுஞ் சுவாமீ.

மரணத்தறுவாயிலே தேவ இஷ்டப்பிரசாதத்தின் பெருக்கத்தை, எங்களுக்கு...

மரணத்தறுவாயிலே எங்கள் பாவங்களுக்குத் தக்க உத்தம மனஸ்தாபப் பெருக்கத்தை,—எங்களுக்கு...

மரணத்தறுவாயிலே விடாத நம்பிக்கையையுந் தவறாத விசுவாசத்தையும்,—எங்களுக்கு...

மரணத்தறுவாயிலே தேவசிநேகத்தின் மிகுதியை,—எங்களுக்...

மரணத்தறுவாயிலே நேரிடப்போகிற கஸ்தி உபாதைகளில் அசையாத பொறுமையை,—எங்களுக்கு...

மரணத்தறுவாயிலே பசாசின் போர்ச்சண்டையில் வெல்லப் படாத தைரியத்தை,—எங்களுக்கு...

மரணத்தறுவாயிலே தேவரீருடைய திருச்சித்தத்துக்குக் கீழ்ப் படிதலை,—எங்களுக்கு...

மரணத்தறுவாயிலே சர்வேசுரனை முகமுகமாய்த் தரிசிக்கவேணுமென்கிற ஆசையை,—எங்களுக்கு...

மரணத்தறுவாயிலே மாசில்லாத திவ்விய மாதாவின் ஆதரவையும், சம்மனசுக்களுடைய அடைக்கலத்தையும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய சிபாரிசையும்,—எங்களுக்கு...

மரணத்தறுவாயிலே குருவானவருடைய ஒத்தாசையையும் ஆறுதலையும்,—எங்களுக்கு...

நித்திய பிதாவின் ஏக சுதனாகிய சேசுக்கிறீஸ்துநாதரே எங்களுடைய மரணத்தறுவாயிலே தேவரீருடைய மாங்கிஷ ஐக்கியத்தைப் பார்த்து,—எங்களை இரட்சித்துக்கொள்ளும் சுவாமீ.

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருடைய பிறப்பைப் பார்த்து, —எங்களை இரட்சி....

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருடைய ஞானஸ்நானத்தையும் உபவாசத்தையும் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருடைய வருத்தமான சீவியத்தைப் பார்த்து,—எங்களை இரட்சி..

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருடைய திரு விழிப்பையும் தாகத்தையும் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீர் சிந்தின திருக்கண்ணீர்களைப் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருடைய திவ்விய இருதயம் அனுபவித்த அச்சத்தையும் கிலேசத்தையும் பார்த்து,—எங்களை இரட்.

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருடைய திரு இரத்தத்தையும் வெயர்வையையும் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே கற்றூணோடே கட்டப்பட்ட தேவரீருடைய திருக்கரங்களைப் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீர் சகித்த நிந்தைகளையும் அவமானங்களையும், அறைகளையும் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீர் சாட்டைகளாலும் கசைகளாலும் பட்ட திருக்காயங்களைப் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருக்குத் தரிக்கப்பட்ட முண்முடியைப் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீர் பற்பல இடங்களில் சிந்தின திவ்விய இரத்தத்தைப் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருடைய திருச்சிலுவையையும் பாடுகளையும் பார்தது,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருடைய திருத்தாயார் சிலுவை அடியிலே அனுபவித்த சொல்லிலடங்காத வியாகுலங்களைப் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருக்குக் கொடுக்கப்பட்ட பிச்சோடு கலந்த புளித்த முந்திரிகை இரசத்தைப் பார்த்து,—எங். இரட்.

எங்கள் மரணத்தறுவாயிலே இருப்பாணிகளால் ஊடுருவப்பட்ட தேவரீருடைய திருக்கரங்களையும் பாதங்களையும் பார்த்து,—எங். இரட்.

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீர் திருச்சிலுவையிலே மூன்று மணிநேரம் அனுபவித்த அவஸ்தையைப் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீர் நித்திய பிதாவுக்கு ஒப்புக்கொடுத்த உமது திவ்விய ஆத்துமத்தைப் பார்த்து,—எங்களை இரட்சி.

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருடைய சரீரத்தைவிட்டுப் பிரிந்த உமது திவ்விய ஆத்துமத்தைப் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருடைய மரணத்தைப்பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே ஈட்டியினாற் குத்துண்ட தேவரீருடைய திவ்விய இருதயத்தைப் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே குத்தப்பட்ட தேவரீருடைய திருவிலாவிலே நின்று சொரிந்து விழுந்த உதிரத்தையும் தண்ணீரையும் பார்த்து,—எங்களை இரட்சி...

எங்கள் மரணத்தறுவாயிலே தேவரீருடைய திரு அடக்கத்தைப் பார்த்து,—எங்களை இரட்சி...

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

முதல்.—உம்மை நம்பியிருக்கிற நாங்கள் கடைசியில் பேறுபெறத் தக்கதாக,

துணை.—எங்களைச் சிநேகிக்கும் ஆண்டவரோ, எங்களுக்கு அநுக்கிரகம் பண்ணியருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

அதிதூதரான அர்ச். மிக்கயேலே, நவவிலாச சபையில் உட்பட்ட சகல சம்மனசுக்களே, எங்களுக்குக் காவலாயிருக்கிற தேவ தூதர்களே, நாங்கள் பேர்கொண்ட மோட்சவாசிகளே, நாங்கள் தேவ நீதி சந்நிதியினின்று தள்ளப்படாமல் எங்கள் மரணத்தறுவாயிலே எங்களைக்காப்பாற்றித் தாபரிக்கவேணுமென்று உங்களைப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம்.

சேசுக்கிறீஸ்துநாதருடையவும் தேவமாதாவினுடையவும் திருக்கரங்களில் பாக்கியமான மரணத்தை அடைந்த அர்ச். சூசையப்பரோ, மரிக்கிறவர்களுக்குச் சரணமாக அளிக்கப்பட்ட நீரோ எங்கள் மரணநேரத்திலே எங்களை ஆதரித்து இஷ்டப்பிரசாதத்தோடே மரிக்கச் செய்தருளும்.

பரிசுத்த கன்னிகையுந் தேவமாதாவுமாகிய அர்ச். மரியாயே, சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய இராக்கினியே, கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவே, நிர்ப்பாக்கியராகிய எங்களுக்கு இரங்கி எங்களுடைய ஆத்துமம் பாவமில்லாமலும், பாவத்துக்குச் செலுத்தவேண்டிய கடனில்லாமலும், சரீரத்தைவிட்டுப் பிரிந்து சம்மனசுக்களாற் கைக்கொள்ளப்

படவும் மோட்ச இராச்சியத்தில் பிரவேசிக்கப்படவும் உமது திருக்குமாரனிடத்தில் வேண்டிக்கொள்ள வேணுமென்று உம்மைக் கெஞ்சி மன்ருடுகிருேம் தாயே.—ஆமென்சேசு.

---

## நன்மரணம் அடைவதற்குச் சேசுக்கிறீஸ்துநாதருடைய திவ்விய இருதயத்தை நோக்கிச் சொல்லத்தகுஞ் சுகிர்த மன்றட்டு.

ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதரே! கருணை நிறைந்த பிதாவே, தயாபரரான சர்வேசுரா, அடியேன் மிகுந்த மனஸ்தாபப்பட்டுக் கலங்கிப் பிரலாபித்து உமது சந்நிதியிலே நிற்கிறேன். அடியேனுக்கு நல்ல மரணமும் நல்ல தீர்வையும் கிடைக்கும்படிக்குத் தேவரீர் அநுக்கிரகம் பண்ணியருள வேணுமென்று உம்மை மன்ருடுகிறேன்.

என் கால் இரண்டும் அசைவின்றி உஷ்ணமின்றி என் படுக்கையிலே கடினமாய் வலித்து, நான் இவ்வுலகில் செய்த பிரயாணம் முடிந்ததென்று காட்டும்போது,—தயாபர சேசுவே என்பேரில் இரக்கமாயிருஞ் சுவாமீ.

என் கண்ணிரண்டும் பஞ்சடைந்து அகோரமாய்த் திகைத்துப் பயங்கரமாய் விழித்து இவ்வுலக பிரகாசத்தைக் கடைசியாய்ப் பார்க்கும்போது,—தயாபர...

என் கையிரண்டும் அதிர்ந்து நடுங்கிப் பெலனற்று உமது திருச்சிலுவைச் சுரூபத்தைக் கடைசிச் சரணமாக ஏந்தும்போது,—தயாபர.

என் உதடு இரண்டும் குளிர்ந்து கறுத்து கிடுகிடுத்து உமது திருநாமத்தை அபய சத்தமாய் உச்சரிக்கும்போது,—தயாபர...

என் கன்னமிரண்டும் ஒன்ருேடொன்று ஒட்டி வெளுத்து அகோரமாய்க் குழிந்து அவலமாய்ச் சுருங்கி என்னைச் சூழ்ந்துவருகிறவர்களுக்குப் பயங்கரமும் அருவருப்பும் வருத்துவிக்கும்போது,—தயாபர.

என் காதிரண்டும் கேள்வியற்று மனுஷ சம்பாஷணையை விட்டுப் பிரிந்து நீர் என்பேரில் ஊழியுள்ளகாலம் இடப்போகிற தீர்வையைக் கேட்க ஏதுவாகும்போது,—தயாபர...

என் தலையோடு மயிரொட்டி, என் நெற்றியிலே வெயர்வையெழ தேரஷத்தால் என் நாக்கு வரண்டுபோக, என் உடலெல்லாம் துர்க்கந்தம் வீச, என் நாடி விழ, சிலேஷ்டுமம் மேலாட என் முடிவு நெருங்கும்போது,—தயாபர.

மயங்கும் என் மனதிலே அச்சமுறுத்த வீண் தோற்றங்களும் பயங்கரமுள்ள பூதங்களும் காணப்பட்டுப் பசாசு என் பாவங்களை மிகுவித்து உமது நீதியைப் பாராட்டி உமது அளவில்லாத கிருபையை

மறைத்து நான் அவநம்பிக்கையாய்ச் சாக என்னோடு கடைசி யுத்தம் நடத்தும்போது,—தயாபர...

நிர்ப்பலமான என் இருதயமானது வியாதியின் வருத்தத்தால் தளர்ந்து, சாவின் அச்சத்தால் தோய்ந்து, பசாசின் விரோதத்தாற் சோர்ந்து கடைசியாய்த் துடித்து ஓயப்போகும்போது,—தயாபர...

என் கண்களிலே நின்று கிட்டின கடைசிக் குறியாகக் கண்ணீர் சொரிந்துவிழ, இந்தக் கண்ணீர்களை என் பாவங்களுக்குப் பரிகாரமாகக் கிருபையாய் ஏற்றுக்கொண்டு, பயங்கரமான அவ்வேளையிலே என்னைக் கைவிடாதேயும் சுவாமீ,—தயாபர...

என் சுற்றத்தார் சிநேகிதர் என்னைச் சூழ்ந்துகொண்டு அலறிப் பதறி மாரடித்து, எனக்காக உம்மை மன்ருடி ஐயையோ! சாகிருனென்று சொல்லி அழும்போது,—தயாபர..

என் சக்தியற்று, என் பஞ்சேந்திரியம் புலமில்லாதிருக்க, இவ்வுலகில் உள்ளதெல்லாம் என்னைவிட்டுப் பிரிய, நான் மரண இக்கட்டுக்குள்ளே களைத்துக் கலங்கி என் உயிரை இழக்கும்போது,—தயாபர...

நான் கடைசியான சுவாசம் விட்டு, என் ஆத்துமம் என் சரீரத்தை விட்டுப் பிரிய பிரயாசப்படும்போது,—தயாபர...

என் ஆத்துமம் புறப்பட்டு, என் சரீரம் உயிரில்லாமல் புழுக்களுக்கு இரையாக என்றும் பிணமாக விடப்படும்போது,—இந்த என் அழிவை உம்முடைய மகத்துவத்துக்குப் பலியாகக் கிருபையாய் ஏற்றுக் கொள்ளும்.

கடைசியாய் என் ஆத்துமமானது பிரதாபமுள்ள உமது சமுகத்திலே நிறுத்தப்பட்டுத் தன்னுடைய தீர்மானத்தைக் கேட்க நடுங்கி நிற்கும்போது,—என்னை உமது அண்டையில் நின்று தள்ளாமல் என்னைக் கிருபாகடாட்சத்தோடே பார்த்து உம்மை என்றென்றைக்கும் வாழ்த்தி ஸ்துதிக்க உமது இராச்சியத்தில் என்னை பிரவேசிக்கப்பண்ணியருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சேசுக்கிறீஸ்துநாதருடைய இரக்க நிறைந்த திவ்விய இருதயமே, ஊதாரி மகனை மிகுந்த பட்சத்தோடு அணைத்துக்கொள்ளும் நல்ல தகப்பனே, மேட்டிலும் பள்ளத்திலும் சிதறிப்போன ஆட்டுக்குட்டியைத் தேடுங் கவனமுள்ள இடையனே, பூங்காவனத்தில் துக்கசாகரத்தில் அமிழ்ந்தி எங்களுக்காகச் சர்வாங்கத்திலும் இரத்த வெயர்வை வெயர்த்துச் சிலுவை மரத்தில் மூன்றுமணிநேரம் அவஸ்தைப்பட்டு, சாவின் வருத்தம் எல்லாவற்றையும் அனுபவித்து, ஈட்டியால் குத்துண்டு உமது திரு உதிரமெல்லாம் சிந்திப்போடச் சித்தமானீரோ. சகல சிநேகிதரிலும் உத்தமமான சிநேகிதரே, தான் பெற்று வளர்த்த குமா

ரனை நேசிக்குந் தாயாரிலும் எங்களை அதிகமாய் நேசிக்கிற திவ்விய இருதயமே, எங்களுக்கு நல்ல மரணம் கட்டளையிடவேணுமென்று உம்மை நம்பிப் பிரார்த்தித்துக்கொள்ளுகிறோம். இந்த அபாயமுள்ள தருணத்திலே உம்மை நேசித்து, நம்பி வாழ்த்தி, ஸ்துதித்துவருகிற எங்களைத் தேவரீருக்குச் சத்துருவாகிய பசாசுக்கு இரையாக ஒட்டாமல் எங்களைத் தாபரித்துக் காப்பாற்றி, தேவரீர் அண்டையில் என்றென்றைக்கும் வாழ எங்களைச் சேர்த்தருளும். உம்மை நம்பினோம், உம்மை நம்பினோம், எங்களைக் கைவிடாதேயும் சுவாமி.—ஆமென்சேசு.

---

## அவஸ்தைப் பிரார்த்தனை.

சுவாமீ * இவன்மேல் கிருபையாயிரும்.

கிறீஸ்துவே இவன்மேல் கிருபையாயிரும்.

சுவாமீ இவன்மேல் கிருபையாயிரும்.

பரமண்டலங்களிலே இருக்கிற பிதாவாகிய சர்வேசுரா,—இவனுக்குத் தயை செய்தருளும்.

உலகத்தை மீட்டிரட்சித்த சுதனாகிய சர்வேசுரா,—இவனுக்குத்.

இஸ்பிரீத்துசாந்துவாகிய சர்வேசுரா,—இவனுக்குத் தயை...

அர்ச். தமதிரித்துவமாயிருக்கிற ஏக சர்வேசுரா, இவனுக்குத்...

அர்ச். மரியாயே, இவனுக்காக வேண்டிக்கொள்ளும்.

தூதரும் அதிதூதருமாகிய சகல அர்ச். சம்மனசுக்களே,—இவனு

அர்ச். அபேலே,—இவனுக்காக...

புண்ணிய ஆத்துமாக்களான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—இவ.

அர்ச். அபிராமே,—இவனுக்காக...

அர்ச். ஸ்நாபக அருளப்பரோ,—இவனுக்காக...

அர்ச். சூசையப்பரோ,—இவனுக்காக...

பிதாப்பிதாக்களுந் தீர்க்கதரிசிகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—இவனுக்காக...

அர்ச். இராயப்பரோ, இவனுக்காக...

அர்ச். சின்னப்பரோ,—இவனுக்காக...

அர்ச். பெலவேந்திரரோ,—இவனுக்காக...

அர்ச். அருளப்பரோ,—இவனுக்காக...

அப்போஸ்தலருஞ் சுவிசேஷகருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—இவனுக்காக...

ஆண்டவருடைய சகல பரிசுத்த சீஷர்களே,—இவனுக்காக...

மாசில்லாத சகல அர்ச். குழந்தைகளே,—இவனுக்காக...

அர்ச். முடியப்பரோ,—இவனுக்காக...

வேதசாட்சிகளான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—இவனுக்காக.

அர்ச். சில்வேஸ்திரியுவே,—இவனுக்காக...

அர்ச். கிறகோரியுவே,—இவனுக்காக...

அர்ச். அகுஸ்தீனுவே,—இவனுக்காக...

மேற்றிராணிமாரும் ஸ்துதியருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—இவனுக்காக ..

அர்ச். ஆசீர்வாதப்பரே,—இவனுக்காக...

அர்ச். பிராஞ்சிஸ்குவே,—இவனுக்காக...

குருக்களும் தபோதனருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—இ.

அர்ச். மரியமதலேனையே,—இவனுக்காக.

அர்ச். பிரகாசியம்மாளே,—இவனுக்காக...

அர்ச். கித்தேரியம்மாளே,— இவனுக்காக...

கன்னியாஸ்திரீகளும் விதவை ஸ்திரீகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—இவனுக்காக...

ஆண்டவருடைய திருவடியார்களான ஸ்திரீ பூமான்களாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—இவனுக்காக...

தயாபரராயிருந்து,—இவனுடைய பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமீ.

தயாபரராயிருந்து,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமீ.

சகல பொல்லாப்புகளிலே நின்று,—இவனை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமீ.

சகல பாவங்களிலே நின்று,—இவனை...

தேவரீருடைய கோபத்திலும் தண்டனையிலும் நின்று,—இவனை...

தேவரீருடைய தயவின்மேல் அவநம்பிக்கையிலும் மரண அவஸ்தையிலும் நின்று,—இவனை...

சாவின் பயங்கரத்திலும், சீவன்மேலுள்ள மிகுந்த ஆசையிலும் நின்று,—இவனை...

துர்மரணத்திலே நின்று,—இவனை...

நரக வேதனையிலும் சகல பொல்லாப்பிலும் நின்று,—இவனை...

பசாசின் சோதனையிலும் தந்திரத்திலும் நின்று,—இவனை...

உலக காரியத்தில் ஊன்றி நித்தியத்திற்கு ஆயத்தப்படாத அசட்டையிலும் நின்று,—இவனை...

தேவரீருடைய திரு அவதாரத்தைப் பார்த்து,—இவனை...

தேவரீருடைய சிலுவையையும் பாடுகளையும் பார்த்து,—இவனை.

தேவரீருடைய திரு மரணத்தையும் அடக்கத்தையும் பார்த்து,—இ.

* ஸ்திரீயானால் இவள்மேல் கிருபையாயிருமென்று சொல்லவும்.

தேவரீருடைய மகிமையான உத்தானத்தைப் பார்த்து,—இவனே.

தேவரீருடைய அதிசயமான ஆரோகணத்தைப் பார்த்து,—இவனே.

தேற்றரவு பண்ணுகிறவரான இஸ்பிரீத்துசாந்துவின் வரப்பிரசாதத்தைப் பார்த்து,—இவனே...

மரணவேளையிலேயும் நடுத்தீர்க்கிற நாளிலேயும்,—இவனே...

பாவிகளாகிய நாங்கள் தேவரீரை மன்ருடுகிருேம்,—எங்கள் மன்ருட்டைக் கேட்டருளுஞ் சுவாமீ.

இவனுடைய பாவங்களேப் பொறுத்தருள வேணுமென்று தேவரீரை மன்ருடுகிருேம்.—எங்கள் மன்ருட்டைக் கேட்டருளும் சுவாமீ.

உலகத்தின் பாவங்களேப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்கள் பாவங்களேப் போக்கியருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களேப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்கள் பிரார்த்தனேயைக் கேட்டருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களேப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—எங்களேத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

முதல்.—சுவாமீ எங்கள் மன்ருட்டைக் கேட்டருளும்,

துணே.—எங்கள் அபயசத்தம் உமது சந்நிதிமட்டும் வரக்கடவது. ஒரு பர.

## ஆத்துமங் கேவுகிறபோது சொல்லுகிற செபம்.

இவ்வுலகத்தைவிட்டுப் பிரிகிற இந்தக் கிறீஸ்துவனுடைய ஆத்துமமே! உன்னேப் படைத்த சர்வ வல்லப பிதாவாகிய சர்வேசுரனுடைய நாமத்திஞலும், நித்திய சீவியமுள்ள தேவஞகிய அவருடைய அமல சுதனுமாய் உனக்காகப் பாடுபட்டவருமாயிருக்கிற சேசுக்கிறீஸ்துவின் நாமத்திஞலும், உன்னிடத்தில் எழுந்தருளி வந்தவராகிய இஸ்பிரீத்துசாந்துவின் நாமத்திஞலும், தேவமாதா, பத்திசுவாலகர், ஞாஞதிக்கர் முதலான நவகண வாஞேர்களுடைய நாமத்திஞலும், பிதாப்பிதாக்கள் தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், சுவிசேஷகர், வேதசாட்சிகள், ஸ்துதியர், கன்னியர் இவர்களுடைய நாமத்திஞலும், சுவாமியுடைய திருவடியாரான சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய நாமத்திஞலும், இந்த நிர்ப்பாக்கியமான பரதேசத்தைவிட்டு நிறைந்த நம்பிக்கையோடு உனது நித்திய வீடாகிய பரகதிக்குப் புறப்படுவாயாக. இன்று நீ சமாதானத்தின் வாசமடைந்து, சீயோனென்கிற மோட்ச இராச்சியத்திலே குடிகொண்டு இளேப்பாறக்கடவாய். ஆமென்சேசு.

# சகல அர்ச்சியசிஷ்டவர்களின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்...மற்றதும்.

அர்ச். மரியாயே,—எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,—எங்களுக்காக...

கன்னியாஸ்திரீகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,—எங்.

அர்ச். மிக்கயேலே,—எங்களுக்காக...

அர்ச். கபிரியேலே,—எங்களுக்காக...

அர்ச். இரபயேலே,—எங்களுக்காக...

* தூதரும் அதிதூதருமாயிருக்கிற சகல சம்மனசுக்களே,—எங்....

* நவவிலாச சபையாயிருக்கிற சகல சம்மனசுக்களே,—எங்...

அர்ச். ஸ்நாபக அருளப்பரோ,—எங்களுக்...

அர்ச். சூசையப்பரோ,—எங்களுக்...

* பிரதான பிதாக்களும் தீர்க்கதரிசிகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்களுக்காக...

அர்ச். இராயப்பரோ,—எங்களுக்...

அர்ச். சின்னப்பரோ,—எங்களுக்...

அர்ச். பெலவேந்திரரோ,—எங்களுக்...

அர்ச். யாகப்பரோ,—எங்களுக்...

அர்ச். அருளப்பரோ,—எங்களுக்...

அர்ச். தோமையாரோ,—எங்களுக்...

அர்ச். சின்ன யாகப்பரோ,—எங்களுக்...

அர்ச். பிலிப்புவே,—எங்களுக்...

அர்ச். பர்த்தலோமையே,—எங்களுக்...

அர்ச். மத்தேயுவே,—எங்களுக்...

அர்ச். சிமோனே,—எங்களுக்...

அர்ச். ததேயுவே,—எங்களுக்...

அர்ச். மத்தியாசே,—எங்களுக்...

அர்ச். பர்னபாவே,—எங்களுக்...

அர்ச். லூக்காவே,—எங்களுக்...

அர்ச். மாற்குவே,—எங்களுக்...

* அப்போஸ்தலருஞ் சுவிசேஷகருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்களுக்...

* எங்கள் ஆண்டவருடைய சீஷர்களாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்களுக்...

---

* இக்குறியிட்டிருக்கிற வாக்கியங்களுக்கு "எங்களுக்காக வேண்டிக் கொள்ளுங்கள்" என்று சொல்லவும்.

* மாசில்லாத சகல அர்ச்சியசிஷ்ட குழந்தைகளே,—எங்களுக்...
அர்ச். முடியப்பரோ,—எங்களுக்...
அர்ச். செய்யப்பரோ,—எங்களுக்...
அர்ச். விஞ்சேஞ்சியுவே,—எங்களுக்...
* பபியானுஞ் செபஸ்தியானும் என்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்களுக்...
* அருளப்பரும் சின்னப்பரும் என்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்களுக்...
* கோஸ்மாவும் தமியானுமென்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்.
* செர்வாசியும் புரோத்தாசியும் என்கிற அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்களுக்...
* வேதசாட்சிகளான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்க ..
அர்ச். சிலுவேஸ்திரியுவே,—எங்களுக்...
அர்ச். கிறகோரியுவே,—எங்களுக்...
அர்ச். அமிர்தநாதரோ,—எங்களுக்...
அர்ச். அகுஸ்தீனுவே,—எங்களுக்...
அர்ச். இயெரோணிமுவே,—எங்களுக்...
அர்ச். மர்த்தீனுவே,—எங்களுக் ..
அர்ச். நிக்கோலாவே,—எங்களுக்...
* மேற்றிராணிமார்களும் ஸ்துதியர்களுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்களுக்...
* வேத வித்தியாபாரகரான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்.
அர்ச். அந்தோனியாரே,—எங்களுக்...
அர்ச். ஆசீர்வாதப்பரோ,—எங்களுக்...
அர்ச். பெர்நர்துவே,—எங்களுக்...
அர்ச். சாமிநாதரோ,—எங்களுக்...
அர்ச். பிராஞ்சீஸ்குவே,—எங்களுக்...
* குருக்களும் ஆசாரியருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்களுக்...
* சந்நியாசிகளும் தபோதனருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்களுக்...
அர்ச். மரியமதலேனம்மாளே,—எங்களுக்...
அர்ச். ஆகத்தம்மாளே,—எங்களுக்...
அர்ச். பிரகாசியம்மாளே,—எங்களுக்...
அர்ச். அகினேசியே,—எங்களுக்...
அர்ச். செசீலியே,—எங்களுக்...
அர்ச். கித்தேரியம்மாளே,—எங்களுக்...

அர்ச். அனஸ்தாசியே,—எங்களுக்...

* கன்னியாஸ்திரீகளும் விதவை ஸ்திரீகளுமாகிய சகல அர்ச்சிய சிஷ்டவர்களே,—எங்களுக்...

* ஆண்டவருடைய திருவடியார்களான ஸ்திரீ பூமான்களாகிய சகல் அர்ச்சியசிஷ்டவர்களே,—எங்களுக்...

தயாபரராயிருந்து,—எங்கள் பாவங்களேப் பொறுத்தருளுஞ் சுவாமீ.

தயாபரராயிருந்து,—எங்கள் பிரார்த்தனேயைக் கேட்டருளுஞ் சுவாமீ.

சகல பொல்லாப்புகளிலே நின்று,—எங்களே இரட்சித்துக்கொள் ளும் சுவாமீ.

சகல பாவங்களிலே நின்று,—எங்களே...

உமது கோபத்திலே நின்று,—எங்களே...

பூமி அதிர்ச்சியாகிய அகோர ஆக்கினேயிலே நின்று,—எங்களே...

அசுப்பில் வருகிற துர்மரணத்திலே நின்று,—எங்களே...

பசாசினுடைய தந்திரங்களிலே நின்று,—எங்களே...

கோபம் பகை முதலான சகல துர்க்குணங்களிலே நின்று,—எங்.

மோக அக்கினியிலே நின்று,—எங்களே...

இடி பெருங் காற்றிலே நின்று,—எங்களே...

நித்திய மரணத்திலே நின்று,—எங்களே...

தேவரீருடைய மனுஷாவதாரத்தின் பரம இரகசியத்தைப் பார்த்து,—எங்களே...

தேவரீருடைய ஆகமனத்தைப் பார்த்து,—எங்களே...

தேவரீருடைய பிறப்பைப் பார்த்து,—எங்களே...

தேவரீருடைய திவ்விய பாலத்துவத்தைப் பார்த்து,—எங்களே...

தேவரீருடைய ஸ்நானத்தையும் உபவாசத்தையும் பார்த்து,—எங்.

தேவரீருடைய சிலுவையையும் பாடுகளேயும் பார்த்து,—எங்களே.

தேவரீருடைய மரணத்தையும் அடக்கத்தையும் பார்த்து,—எங்.

தேவரீருடைய திவ்விய உத்தானத்தைப் பார்த்து,—எங்களே...

தேவரீருடைய திவ்விய ஆச்சரியமான ஆரோகணத்தைப் பார்த்து,—எங்களே...

தேற்றரவு பண்ணுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனத்தைப் பார்த்து,—எங்களே...

நடுத்தீர்க்கிற நாளிலே,—எங்களே..

பாவிகளாயிருக்கிற நாங்கள் தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமீ.

எங்கள் பாவங்களேப் போக்கியருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

எங்களுக்குத் தயைபண்ணி இரட்சித்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

நாங்கள் மெய்யான தவம்புரிய உதவிசெய்ய வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

தேவரீர் உமது அர்ச். சபையை ஆளவும் பாதுகாத்தருளவும் வேணுமென்று, தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

அர்ச். பாப்பு முதலான அதிசிரேஷ்ட ஆசாரியரையும் ஆகமசபைகளில் உட்பட்ட சகல குருக்களையும் சந்நியாசிகளையும் சத்தியவேத முறைமைகளில் தற்காத்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

உமது அர்ச். சபையின் சத்துருக்களைக் கீழ்ப்படுத்த வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

சத்தியவேத இராஜாக்களுக்கும் பிரபுக்களுக்கும் சமாதானத்தையும் சரியான ஒருமையையும் தந்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

சமஸ்தமான கிறீஸ்துவர்களுக்கும் சமாதானத்தையும் ஒருமைப் பந்தனத்தையும் கட்டளையிட்டருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

தேவரீருடைய திருப்பணியிலே அடியோரைத் திடப்படுத்திக் காப்பாற்றவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

எங்கள் மனது பரலோக ஆசையைப்பற்றி உயரவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

எங்களுடைய உபகாரிகளுக்கு நித்திய நன்மையைப் பலனாகக் கட்டளையிட்டருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,-எங்கள் மன்.

எங்கள் ஆத்துமங்களையும் எங்களுடைய சகோதரர் பந்துக்கள் உபகாரிகளுடைய ஆத்துமங்களையும் நித்திய நரக ஆக்கினையிலே நின்று இரட்சித்தருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,-எங்கள் மன்.

பூமியிலே நல்ல பயிர் விளைவின் பலன் தந்து காப்பாற்றவேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

மரணத்தை அடைந்த சமஸ்த விசுவாசிகளுக்கும் நித்திய இளைப்பாற்றியைக் கட்டளையிட்டருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

எங்கள் வேண்டுதலை நன்றாய்க் கேட்டருள வேணுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

சர்வேசுரனுடைய சுதனே உம்மை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்.

உலகத்தின் பாவங்களைப்போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப்போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப்போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

சேசுவே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.

சேசுவே எங்கள் பிரார்த்தனையை நன்றாகக் கேட்டருளும்.

முதல்.—இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றைக்கும்,

துணை.—ஆண்டவருடைய திருநாமம் வாழ்த்தப்படக்கடவது.

சுவாமி கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமி கிருபையாயிரும்.—பர.

## பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ வல்லபரான நித்திய சர்வேசுரா! சீவியர்கள்மேலும், மரித்தோர்கள்மேலும் செங்கோன்மை செலுத்தி, விசுவாசத்தாலும் நற்கிரியைகளாலும் உமது பட்சம் ஆவார்கள் என்று தேவரீர் முன் தெரிந்த சமஸ்தருக்கும், தயையுள்ளவராயிருக்கிறீர். நாங்கள் யாராருக்காகச் செபித்து மன்றாடுகிறோமோ, அவர்கள் எல்லாரும் சரீர சம்பந்தத்தோடு இவ்வுலகில் இருக்கின்றவர்களாயினும் சரீரத்தைவிட்டு மறு உலகில் சென்றவர்களாயினும் சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய வேண்டுதலாலும் உமது நன்மைப் பெருக்கத்தின் கிருபாகடாட்சத்தாலும் பாவப் பொறுத்தலை அடையத்தக்கதாகத் தேவரீரைப் பிரார்த்திக்கிறோம். தேவரீரோடும் இஸ்பிரீத்துசாந்துவோடும் ஏக சர்வேசுரனுயிருந்து சதாகாலஞ் சீவியருமாய் இராச்சிய பரிபாலகருமாயிருக்கிற உம்முடைய திருச்சுதனாகிய சேசுக்கிறீஸ்துவினுடைய திருமுகத்தைப் பார்த்து இந்த மன்றாட்டைத் தந்தருளும் சுவாமீ.—ஆமென்சேசு.

## ஆத்துமம் பிரிந்தவுடனே சொல்லுகிறது.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ இவன்மேல் தயையாயிரும்.—பர.

சர்வேசுரனுக்கு உகந்த சகல அர்ச்சியசிஷ்டவர்களே, இவனுக்குச் சகாயமாக வாருங்கள்; அர்ச்சிய பிரபுத்துவங்களைக் கொண்டிருக்கிற பத்திசுவாலகரோ, ஞானதிக்கரோ, பத்திராசனரோ, நாதகிருத்தியரோ, சத்

துவகரோ, பலவத்தரோ, பிராதமிகரோ, அதிதூதரோ, தூதரோ இவனுக்கு எதிராக வந்து இவனுடைய ஆத்துமத்தைக் கூட்டிக்கொண்டுபோய், பராபர கர்த்தருடைய சந்நிதியிலே விடுங்கள்.

இப்பரதேசத்தைவிட்ட ஆத்துமமே, அனந்த காருண்ணிய கிறீஸ்துவானவர் இன்றைக்கு உன்னைத் தம்முடைய திருவடியாராகிய அறவோருடைய சமுதாயத்தில் அழைத்தருளுவாராக, தமது தேவசந்நிதியில் உன்னை வைத்துக்கொள்ளுவாராக, சம்மனசுக்கள், அபிராம் இருக்கிற ஸ்தலத்துக்கு உன்னை அழைத்துக்கொண்டுபோய் விடக்கடவார்களாக.—ஒரு பர. தீர்த்தம்.

---

## அடக்கம் செய்யும் ஒழுங்கு.

### வேண்டிய நேரம் ஆன பின்பு பிரேதம் எடுக்கிறதற்கு முன் சேபம்.

சுவாமீ! இவனுக்கு முடிவில்லாத காலத்தின் பேரின்ப சுகத்தைக் கட்டளையிட்டருளும். நித்தியகாலத்தின் பிரகாசம் இவனுக்குப் பிரகாசிக்கக்கடவது.—ஆமென்சேசு.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ இவன்மேல் தயையாயிரும்.—ஒரு பர.

நரக வாசலிலே நின்று இவனுடைய ஆத்துமத்தைக் கைதூக்கி இரட்சித்துக்கொள்ளும் சுவாமீ. இவன் சமாதானத்தில் இளைப்பாறக்கடவானாக.

முதல்.—சுவாமீ நாங்கள் இந்த ஸ்தலத்திலே இருந்து கூப்பிடுகிற சத்தம்,

துணை.—தேவரீருடைய சந்நிதிமட்டும் வரக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுராசுவாமீ! தேவரீருடைய அடியானாகிய இவனுடைய ஆத்துமத்தின் பாவ அசுத்தத்தைப் போக்கி, உலகத்துக்கு இவன் செத்தவனாயிருந்தாலும், பரகதியில் உமக்குப் பிழைக்கிறவனாயிருக்கவும், சரீரத்தின் துர்ப்பலத்தினால் இவன் செய்த குற்றங்கள் உமது மட்டில்லாத கிருபாகடாட்சத்தால் பொறுக்கப்படவும், அநுக்கிரகம் செய்தருளவேணுமென்று தேவரீரை வேண்டிக்கொள்ளுகிறோம். இந்த மன்றாட்டுகளை எல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளுஞ்சுவாமீ. ஆமென்சேசு.

## குழியில் வைக்குமுன் சேபம்.

முதல்.—சுவாமீ! தேவரீர் நரக வேதனையிலேயும் சகல உபத்திரவங்களிலேயும் நின்று,

துணை.—உம்முடைய அடியானாகிய இவன் ஆத்துமத்தை இரட்சித்தருளுஞ் சுவாமீ.

சுவாமீ! தேவரீர் ஏனோக் எலியாஸ் என்பவர்களைச் சாதாரணமான உலக சாவிலே நின்று இரட்சித்ததுபோலே,—இவன் ஆத்துமத்தையும் இரட்சித்தருளுஞ் சுவாமீ.

சுவாமீ! தேவரீர் நோயனை ஜலப்பிரளயத்திலே நின்று இரட்சித்ததுபோலே,—இவன்...

சுவாமீ! தேவரீர் அபிராமென்பவரை ஊரொன்கிற பட்டணத்தின் அக்கியானத்திலே நின்று இரட்சித்ததுபோலே,—இவன்...

சுவாமீ! தேவரீர் ஈசாக்கென்பவனைத் தன் தகப்பன் கையால் பலியாகிறதிலே நின்று இரட்சித்ததுபோலே,—இவன்...

சுவாமீ! தேவரீர் சோபென்பவரைத் தரித்திரத்திலும் துன்பத்திலும் நின்று இரட்சித்ததுபோலே,—இவன்...

சுவாமீ! தேவரீர் சோதோமென்கிற பட்டணத்திலும், அந்தப் பட்டணத்தைச் சுட்டெரித்த அக்கினியிலும் நின்று லோத்தென்பவரை இரட்சித்ததுபோலே,—இவன்...

சுவாமீ! தேவரீர் எஜிப்துதேசத்தின் இராஜனான பாரவோனிடத்தினின்று மோயீசனை இரட்சித்ததுபோலே,—இவன்...

சுவாமீ! தேவரீர் தாவீதென்கிறவரைக் கொலியாத்தென்கிற இராட்சதன் கையிலும், சவுல் என்கிற இராயன் கையிலும் நின்று இரட்சித்ததுபோலே,—இவன்...

சுவாமீ! தேவரீர் தனியேல் என்பவரைச் சிங்கங்களின் கெபியிலே நின்று இரட்சித்ததுபோலே,—இவன்...

சுவாமீ! தேவரீர் இரக்கமற்ற நபூக்கன் கையிலும் அவன் சூளைத்தீயிலும் நின்று மூன்று வாலரை இரட்சித்ததுபோலே,—இவன்...

சுவாமீ! தேவரீர் சுசானாள் என்கிற புண்ணியவதியை அவதூறிலே நின்று இரட்சித்ததுபோலே,—இவன்...

சுவாமீ! தேவரீர் அர்ச். இராயப்பரையும் சின்னப்பரையும் சிறைக்கூடத்திலும் விலங்கிலும் நின்று இரட்சித்ததுபோலே,—இவன்...

சுவாமீ! கன்னியாஸ்திரியும் வேதசாட்சியுமாகிய தேக்கிளாள் என்பவளை மகா நிஷ்டூர ஆக்கினைகளிலே நின்று இரட்சித்ததுபோலே,—இவன் ஆத்துமத்தை...

தேவரீருடைய அடியானுகிய இவன் ஆத்துமத்தையும் இரட்சித்து உமது மோட்ச இராட்சியத்தின் செல்வ பாக்கியங்களுக்கும், நித்தியானந்த சந்தோஷத்துக்கும் பங்காளியாயிருக்கக் கிருபை செய்தருளும். ஆமென்சேசு.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ தயையாயிரும்.—பர. தீர்த்தம்.
சுவாமீ எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளும்.
சுவாமீ எங்கள் பிரார்த்தனையை நன்ருகக் கேட்டருளும்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வேசுரா சுவாமீ! இரக்கம் புரிகிறதும், பொறுத்தல் அளிக்கிறதும் எப்பொழுதும் உமது திருவுளத்தியல்பாமே. ஆதலால் இன்று இவ்வுலகத்தினின்று அழைக்கத் தேவரீர் திருவுளமாயின இந்த அடியானுடைய ஆத்துமத்தைச் சத்துருக்களின் வசம் அளிக்காமலும், கடைசிபரியந்தம் அதைக் கைவிடாமலும் இருக்க உம்மைப் பிரார்த்திக்கிறோம். தேவரீரை அத்தியந்த விசுவாசத்தோடு நம்பியிருக்கிறபடியால் இந்த ஆத்துமம் பாதாள வேதனை அநுபவியாமல் நித்திய ஆனந்தத்தை அடையும்படி பரிசுத்த தூதர் அதைக் கைப்பற்றிக்கொண்டு போய்ப் பரகதியாகிய நித்திய பேரின்ப நாட்டில் சேர்த்தருளக் கட்டளையிட்டருளுஞ் சுவாமீ. இந்த மன்ருட்டுகளை எல்லாஞ் சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும்.—ஆமென்சேசு.

### குழியில் வைத்தவுடனே சொல்லுகிற சேபம்.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ தயையாயிரும்.—பர.—தீர்த்தம்.

சுவாமீ! தேவ திருவுளத்தைப்பத்தியோடு அங்கீகரித்திருந்த இவன் தன் குற்றங்களுக்கேற்ற ஆக்கினையை அநுபவியாமல் மன்னிப்பை அடையவும், வானோர்களோடு மோட்ச இராச்சியத்தில் நிரந்தரம் உமக்கு ஸ்துதி புரியவும், மரித்த உம்முடைய அடியானுகிய இவனுக்குக் கிருபை கூர்ந்தருள வேணுமென்று தேவரீரை மன்ருடுகிறோம். இந்த மன்ருட்டுகளை எல்லாஞ் சேசுக்கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும்.—ஆமென்சேசு.

சுவாமீ! இவனுக்கு முடிவில்லாத காலத்தின் பேரின்ப சுகத்தைக் கட்டளையிட்டருளும். நித்தியகாலத்தின் பிரகாசம் இவனுக்குப் பிரகாசிக்கக்கடவது.—ஆமென்சேசு.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ இவன்மேல் தயையாயிரும்.—ஒரு பர. தீர்த்தம்.

## உத்தரிக்கிற ஆத்துமாக்களின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்...மற்றதும்.

அர்ச். மரியாயே,—மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளும்.

சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,—மரித்த...

கன்னியாஸ்திரீகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,-மரித்.

அர்ச். மிக்கயேலே,—மரித்த...

* தூதரும் அதிதூதருமாகிய சகல சம்மனசுக்களே,—மரித்த...

* நவவிலாச சபையாயிருக்கிற சகல சம்மனசுக்களே,—மரித்த.

அர்ச். ஸ்நாபக அருளப்பரே,—மரித்த...

அர்ச். சூசையப்பரே,—மரித்த...

* பிதாப்பிதாக்களும் தீர்க்கதரிசிகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—மரித்த...

அர்ச். இராயப்பரே,—மரித்த....

அர்ச். சின்னப்பரே,—மரித்த...

அர்ச். அருளப்பரே,— மரித்த...

* அப்போஸ்தலரும் சுவிசேஷகருமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—மரித்த...

அர்ச். முடியப்பரே,—மரித்த...

அர்ச். லவுரேஞ்சியாரே,—மரித்த...

* வேதசாட்சிகளான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—மரித்த....

அர்ச். கிறகோரியாரே,—மரித்த...

அர்ச். அமிர்தநாதரே,—மரித்த...

அர்ச். அகுஸ்தினரே,—மரித்த...

அர்ச். இயெரோணிமுவே,—மரித்த...

* மேற்றிராணிமார்களும் ஸ்துதியர்களுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—மரித்த...

* வேத வித்தியாபாரகரான சகல அர்ச்சியசிஷ்டவர்களே,-மரித்த.

* குருக்களும் ஆசாரியர்களுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே, மரித்த...

---

* இவ்வடையாளமிட்டிருக்கிற இடங்களிலெல்லாம் வேண்டிக்கொள்ளுங்கள் என்று சொல்லவும்.

* சந்நியாசிகளும் தபோதனர்களுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—மரித்த...

அர்ச். மரியமக்தலேனம்மாளே,—மரித்த...

அர்ச். கத்தரிநாளே,—மரித்த...

அர்ச். பார்பரம்மாளே,—மரித்த...

* கன்னியாஸ்திரீகளும் விதவைகளுமாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—மரித்த...

* ஆண்டவருடைய திருவடியார்களான ஸ்திரீ பூமான்களாகிய சகல அர்ச்சியசிஷ்டவர்களே,—மரித்த...

* தயாபரராயிருந்து,—அவர்கள் பாவங்களைப் பொறுத்தருளுஞ் சுவாமீ.

* தயாபரராயிருந்து,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமீ.

* சகல பொல்லாப்புகளிலே நின்று,—அவர்களை இரட்சித்துக்கொள்ளுஞ் சுவாமீ.

உமது கோபத்திலே நின்று,—அவர்களை...

உமது நீதி அகோரத்திலே நின்று,—அவர்களை...

பசாசின் வல்லமையிலே நின்று,—அவர்களை...

கடூர வியாகுலத்திலே நின்று,—அவர்களை...

கொடிய ஆக்கினையிலே நின்று,—அவர்களை...

மரணத்தின் பயங்கரமான இருளிலே நின்று,—அவர்களை...

அக்கினிச் சுவாலையிலே நின்று,—அவர்களை...

துயரமான அழுகையிலே நின்று,—அவர்களை...

உத்தரிக்கிற ஸ்தலத்துச் சிறைச்சாலையிலே நின்று,—அவர்களை...

தேவரீருடைய திரு மனுஷாவதாரத்தைப் பார்த்து,—அவர்களை...

தேவரீருடைய மாசில்லாத உற்பவத்தையும் பிறப்பையும் பார்த்து,—அவர்களை...

தேவரீருடைய மதுரமான நாமத்தைப் பார்த்து,—அவர்களை...

தேவரீருடைய பாலத்துவத்தைப் பார்த்து,—அவர்களை...

தேவரீருடைய ஞானஸ்நானத்தையும் உபவாசத்தையும் பார்த்து,

தேவரீருடைய மிகுந்த தாழ்ச்சியைப் பார்த்து,—அவர்களை...

தேவரீருடைய சுறுசுறுப்பான கீழ்ப்படிதலைப் பார்த்து,—அவர்·

தேவரீருடைய கிருபையின் மிகுதியையும் அளவில்லாத சிநேகத்தையும் பார்த்து,—அவர்களை...

தேவரீருடைய கொடூர உபத்திரவங்களையும் நிர்ப்பந்தங்களையும் பார்த்து,—அவர்களை...

தேவரீருடைய இரத்த வெயர்வையைப் பார்த்து,—அவர்களை ...

தேவரீர் கட்டுண்ட கட்டுகளைப் பார்த்து,—அவர்களை...
தேவரீர் பட்ட அடிகளைப் பார்த்து,—அவர்களை...
தேவரீருடைய முண்முடியைப் பார்த்து,—அவர்களை...
தேவரீருடைய திருச்சிலுவையைப் பார்த்து,—அவர்களை...
தேவரீருடைய கடூர்மான மரணத்தைப் பார்த்து,—அவர்களை...
தேவரீருடைய ஐந்து திருக்காயங்களைப் பார்த்து,—அவர்களை...

எங்கள் மரணத்தை ஜெயித்தழித்த தேவரீருடைய அவமானமுள்ள மரணத்தைப் பார்த்து,—அவர்களை...

தேவரீருடைய விலைமதியாத திரு இரத்தத்தைப் பார்த்து,—அவர்.
தேவரீருடைய மகிமையான உத்தானத்தைப் பார்த்து,—அவர்.
தேவரீருடைய அதிசயமான ஆரோகணத்தைப் பார்த்து,—அவர்.

தேற்றரவு பண்ணுகிறவராகிய இஸ்பிரீத்துசாந்துவின் ஆகமனத்தைப் பார்த்து,—அவர்களை...

நடுத்தீர்க்கிறநாளிலே,—அவர்களை...

பாவிகளாயிருக்கிற நாங்கள் தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்றாட்டைக் கேட்டருளுஞ் சுவாமீ.

பாவியாயிருந்த மரியமதலேன் அம்மாளுக்குப் பாவ மன்னிப்புத் தந்தவரும், நல்ல கள்ளனுடைய மன்றாட்டைக் கேட்டவருமாகிய தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

மரணத்தின் திறவுகோலையும் நரகத்தின் திறவுகோலையும் கைக்கொண்டிருக்கிற தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

இரட்சண்ணியத்துக்கு உரியவர்களை இலவசமாய் இரட்சிக்கிற தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

எங்கள் சகோதரர் பந்துக்கள் உபகாரிகளுடைய ஆத்துமங்களை உத்தரிக்கிற ஸ்தலத்திலே நின்று இரட்சித்தருள வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

பூலோகத்தில் யாரும் நினையாத சகல ஆத்துமாக்களுக்கும் தயவு செய்யவேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

கிறீஸ்துநாதரிடத்தில் இளைப்பாறுகிற சகலருக்கும் குளிர்ச்சியும் பிரகாசமும் சமாதானமுமுள்ள ஸ்தலத்தைக் கட்டளையிட்டருளத் தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

பாவ தோஷத்தால் அவர்களுக்கு உண்டாகிற ஆக்கினையைக் குறைக்கவேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

அவர்கள் துயரத்தைச் சந்தோஷமாக மாற்றியருளத் தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

அவர்களுடைய ஆசை நிறைவேறத் தயைபுரிய வேண்டுமென்று தேவரீரை மன்றாடுகிறோம்,—எங்கள் மன்...

அவர்கள் உம்மைப் புகழ்ந்து ஸ்துதி பலியை உமக்குச் செலுத்தும்படி செய்தருளத் தேவரீரை மன்றுடுகிறோம்,—எங்கள் மன்...

உம்முடைய அர்ச்சியசிஷ்டவர்களின் கூட்டத்தில் அவர்களை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவரீரை மன்றுடுகிறோம்,-எங்கள் மன்.

சர்வேசுரனுடைய குமாரனே தேவரீரை மன்றுடுகிறோம்,-எங். ம.

கிருபையின் ஊறணியே தேவரீரை மன்றுடுகிறோம்,-எங்கள் மன்..

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—அவர்களுக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—அவர்களுக்கு இளைப்பாற்றியைத் தந்தருளும்.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப்புருவையாகிய சேசுவே,—அவர்களுக்கு நித்திய இளைப்பாற்றியைத் தந்தருளும்.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமீ தயையாயிரும்.—பர.

நரகவாசலில் நின்று,—அவர்களுடைய ஆத்துமங்களை மீட்டு இரட்சித்தருளும்.

சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக. அப்படியாகக்கடவது.

முதல்.—சுவாமீ எங்கள் மன்றுட்டைக் கேட்டருளும்.

துணை.—எங்கள் அபய சத்தம் தேவரீருடைய சந்நிதிமட்டும் வரக்கடவது.

பிரார்த்திக்கக்கடவோம்.

சகல விசுவாசிகளுடைய சிருஷ்டிகரும் இரட்சகருமாகிய சர்வேசுரா! மரித்த உமது அடியார்களுக்காகச் செய்யப்படுகிற பத்தியுள்ள மன்றுட்டுகளை அங்கீகரித்து, அவர்கள் மிகுந்த ஆவலோடே இச்சிக்கிற பாவ மன்னிப்பைக் கிருபை செய்தருள வேண்டுமென்று உம்மை மன்றுடுகிறோம். சதாகாலமும் சீவியரான சர்வேசுரா, இந்த மன்றுட்டைத் தயவோடே கேட்டருளுஞ் சுவாமீ.

நித்திய பிதாவே! பெற்றோர், பந்துக்கள், சிநேகிதர், உபகாரிகள் முதலியவர்களைத் தக்கவிதமாய் நேசித்து அவர்களுக்கு வேண்டிய நன்மை செய்யக் கற்பித்தருளினீரோ. ஆகையால் எங்களைப் பெற்று

அன்போடு வளர்த்து ஆதரித்தவர்களும், பற்பல உபகாரம் எங்களுக்குச் செய்தவர்களும், எங்கள் பந்துக்கள் சிநேகிதர் முதலானவர்களும் வேதனை நீங்கி நித்தியகாலம் உம்மைச் சந்தோஷமாய்த் தரிசித்துக் கொண்டிருக்கத் தேவரீர் கிருபை செய்தருள வேணுமென்று மன்றாடுகிறோம்.

முதல்.—மரித்த விசுவாசிகளுக்காக வேண்டிக்கொள்ளுவோமாக.

துணை.—நித்திய இளைப்பாற்றியை அவர்களுக்குத் தந்தருளுஞ் சுவாமீ; முடிவில்லாத பிரகாசமும் அவர்களுக்குப் பிரகாசிக்கக் கடவது.

## கிருபைதயாபத்து மந்திரம்.

கிருபை தயாபத்துக்கு மாதாவாயிருக்கிற எங்கள் இராக்கினியே, வாழ்க. எங்கள் சீவமே, எங்கள் தஞ்சமே, எங்கள் மதுரமே, வாழ்க. பரதேசிகளாயிருக்கிற நாங்கள் ஏவையின் மக்கள், உம்மைப் பார்த்துக் கூப்பிடுகிறோம். இந்தக் கண்ணினீர்க் கணவாயிலே நின்று பிரலாபித்தழுது, உம்மையே நோக்கிப் பெருமூச்சுவிடுகிறோம். ஆதலால் எங்களுக்காக வேண்டி மன்றாடுகிற தாயே. உம்முடைய தயாளமுள்ள திருக்கண்களை எங்கள்பேரிலே திருப்பியருளும். இதன்றியே நாங்கள் இந்தப் பரதேசங் கடந்தபிற்பாடு. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய சேசுநாதருடைய. பிரத்தியட்சமான தரிசனத்தை எங்களுக்குத் தந்தருளும். கிருபாகரியே, தயாபரியே. பேரின்ப இரசமுள்ள கன்னிமரியாயே.

சேசுக்கிறீஸ்துநாதருடைய திருவாக்குத்தத்தங்களுக்கு, நாங்கள் பாத்திரவான்களாயிருக்கத் தக்கதாக.

சர்வேசுரனுடைய பரிசுத்த மாதாவே, எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்,

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ சக்தியுடையவருமாய் நித்தியருமாயிருக்கிற சர்வேசுரா! முத்திப்பேறுபெற்ற கன்னித்தாயான மரியாயுடைய ஆத்துமமும் சரீரமும் இஸ்பிரீத்துசாந்துவின் அனுக்கிரகத்தினாலே தேவரீருடைய திருக்குமாரனுக்குயோக்கியமான பீடமாயிருக்க ஏற்கனவே நியமித்தருளினீரே. அந்தத் திவ்விய தாயை நினைத்து மகிழ்கின்ற நாங்கள் அவளுடைய இரக்கமுள்ள மன்றாட்டினாலே இம்மையின் சகல பொல்லாப்புகளிலேயும் நித்திய மரணத்திலேயும் நின்று இரட்சிக்கும்படிக்குக் கிருபைகூர்ந்தருளும். இந்த மன்றாட்டுகளையெல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுநாதருடைய திருமுகத்தைப் பார்த்து எங்களுக்குத் தந்தருளும், ஆமென்சேசு.

### சேபம் முடிக்கிற வகை.

புதிதாய் மரணமடைந்த (இன்னாருடைய ஆத்துமம்) உத்தரிக்கிற ஸ்தலத்திலிருந்தால் மோக்ஷகரை சேரத்தக்கதாக 3 பர. 3 பிரி. 3 திரித்துவ தோத்திரமுஞ் சொல்லுகிறது.

சர்வேசுரனுடைய அர்ச்சியசிஷ்ட மாதாவே இதோ உம்முடைய அடைக்கலமாக ஓடிவந்தோம் எங்கள் அவசரங்களிலே நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறதற்கு நீர் பராமுகமாயிராதேயும் ஆசீர்வதிக்கப்பட்டவளுமாய் மோக்ஷத்துக்குடையவளுமாயிருக்கிற நித்திய கன்னிகையே சகல ஆபத்துக்களிலே நின்று எங்களைத் தற்காத்துக்கொள்ளும்.

தேவவரப்பிரசாதத்தின் தாயே இரக்கத்துக்கு மாதாவே அர்ச். மரியாயே எங்கள் மாற்றானுடைய சோதனையிலேயும் மரண வேளையிலேயும எங்களைக் காத்து நடத்தி ஆண்டுகொண்டு எங்களை ஆதரித்தருளும். ஆமென்சேசு.

சேசுநாதருக்குந் தேவமாதாவுக்கும் அர்ச். சூசையப்பருக்குந் தோத்திரமுண்டாகக்கடவது.

சேசுமரி சூசை எங்களை இரட்சியுங்கள்.

அர்ச்சியசிஷ்ட சிலுவை அடையாளத்தினாலே.........மற்றதும்.

குழியை மூடும்படி பர. பிரி. விசுவாசமந்திரம். தீர்த்தம். மண்ணிடவும்.

---

## பாலர் அடக்கம்.

இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றைக்கும் சர்வேசுரனுடைய திருநாமம் வாழ்த்தப்படக்கடவது.

சுவாமீ கிருபையாயிரும்.

கிறீஸ்துவே கிருபையாயிரும்.

சுவாமி தயையாயிரும்.—பர.—தீர்த்தம்.

பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வ வல்லபமும் அளவற்ற தயாளமுமுள்ள சர்வேசுரா! ஞானஸ்நானத்தினாலே ஞானப்பிறப்பை அடைந்து, இந்தப் பரதேசத்தை விட்டு நீங்குகிற குழந்தைகளுக்குச் சொந்தப் புண்ணியப் பேறுகள் ஒன்றுமில்லாதிருந்தாலும், தேவரீர் உடனே அவர்கள் எல்லாருக்கும் நித்திய பேரின்ப சீவியத்தைத் தந்தருளுகிறபடியால் இந்தப் பிள்ளையின் ஆத்துமத்துக்கு இன்று தந்தருளுவீர் என்று விசுவசிக்கிற அடியோர்கள் எப்பொழுதுங் கன்னியாஸ்திரியாயிருக்கிற அர்ச். மரியாயி

னுடைய மன்ருட்டினுலும், சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய வேண்டுதலினுலும் இவ்வுலகத்தில் பரிசுத்த இருதயத்தோடு உம்மைச் சேவிக்கவும், பரகதியில் முத்தரான மாசில்லாத குழந்தைகளோடேகூடத் தேவரீரைச் சதாகாலமும் தரிசிக்கவும் எங்களுக்குக் கிருபை செய்தருளுஞ்சுவாமீ. இந்த மன்ருட்டுகளை எல்லாம் எங்கள் ஆண்டவரான சேசுக்கிறீஸ்துநாதருடைய திரு முகத்தைப் பார்த்துத் தந்தருளும்.— ஆமென்சேசு.

---

## அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனை.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்......மற்றதும்
அர்ச். மரியாயே,—எங்களுக்காக வேண்டிக்கொள்.
சர்வேசுரனுடைய அர்ச். மாதாவே,—எங்களுக்காக...
கன்னியாஸ்திரிகளுக்குள்ளே உத்தம அர்ச். கன்னிகையே,—எங்.
கிறீஸ்துவினுடைய மாதாவே,—எங்களுக்காக...
தேவ வரப்பிரசாதத்தின் மாதாவே,—எங்களுக்காக...
மகா பரிசுத்த மாதாவே,—எங்களுக்காக...
அத்தியந்த விரத்தியாயிருக்கிற மாதாவே,—எங்களுக்காக...
பழுதற்ற கன்னியாஸ்திரியாயிருக்கிற மாதாவே,—எங்களுக்காக.
கன்னிசுத்தங்கெடாத மாதாவே,—எங்களுக்காக...
மகா அன்புக்குப் பாத்திரமாயிருக்கிற மாதாவே,—எங்களுக்காக.
ஆச்சரியத்துக்குரிய மாதாவே,—எங்களுக்காக...
நல்ல ஆலோசனை மாதாவே,—எங்களுக்காக...
சிருஷ்டிகருடைய மாதாவே,—எங்களுக்காக ..
இரட்சகருடைய மாதாவே,—எங்களுக்காக...
மகா புத்தி உடைத்தான கன்னிகையே,—எங்களுக்காக...
மகா வணக்கத்துக்குரிய கன்னிகையே,—எங்களுக்காக...
பிரகாசமாய் ஸ்துதிக்கப்பட யோக்கியமாயிருக்கிற கன்னிகையே,—எங்களுக்காக...
சத்தியுடையவளாயிருக்கிற கன்னிகையே,—எங்களுக்காக...
தயையுள்ள கன்னிகையே,—எங்களுக்காக...
விசுவாசியாயிருக்கிற கன்னிகையே,—எங்களுக்காக...
தருமத்தினுடைய கண்ணுடியே,—எங்களுக்காக ..
ஞானத்துக்கு இருப்பிடமே,—எங்களுக்காக...
எங்கள் சந்தோஷத்தினுடைய காரணமே,—எங்களுக்காக...

ஞான பாத்திரமே, எங்களுக்காக...
மகிமைக்குரிய பாத்திரமே,—எங்களுக்காக...
அத்தியந்த பத்தியுடைத்தான பாத்திரமே,—எங்களுக்காக...
தேவ இரகசியத்தைக் கொண்டிருக்கிற ரோஜா என்கிற புஷ்பமே,—எங்களுக்காக...
தாவீது இராஜாவுடைய உப்பரிகையே,—எங்களுக்காக...
தந்தமயமாயிருக்கிற உப்பரிகையே,—எங்களுக்காக...
சொர்னமயமாயிருக்கிற ஆலயமே,—எங்களுக்காக...
வாக்குத்தத்தத்தின் பெட்டியே,—எங்களுக்காக...
பரலோகத்தினுடைய வாசலே,—எங்களுக்காக...
விடியற்காலத்தின் நட்சத்திரமே,—எங்களுக்காக...
வியாதிக்காரருக்கு ஆரோக்கியமே,—எங்களுக்காக...
பாவிகளுக்கு அடைக்கலமே,—எங்களுக்காக...
கஸ்திப்படுகிறவர்களுக்குத் தேற்றரவே,—எங்களுக்காக
கிறீஸ்துவர்களுடைய சகாயமே,—எங்களுக்காக...
சம்மனசுக்களுடைய இராக்கினியே,—எங்களுக்காக...
பிதாப்பிதாக்களுடைய இராக்கினியே,—எங்களுக்காக...
தீர்க்கதரிசிகளுடைய இராக்கினியே,—எங்களுக்காக...
அப்போஸ்தலர்களுடைய இராக்கினியே,—எங்களுக்காக...
வேதசாட்சிகளுடைய இராக்கினியே,—எங்களுக்காக...
ஸ்துதியருடைய இராக்கினியே,
கன்னியாஸ்திரிகளுடைய இராக்கினியே,—எங்களுக்காக...
சகல அர்ச்சியசிஷ்டவர்களுடைய இராக்கினியே,—எங்க...
ஜென்மப்பாவம் இல்லாமல் உற்பவித்த இராக்கினியே,—எங்க...
திருச்செபமாலையின் இராக்கினியே,—எங்களுக்காக...

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்கள் பாவங்களைப் போக்கியருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்கள் பிரார்த்தனையைக் கேட்டருளுஞ் சுவாமி.

உலகத்தின் பாவங்களைப் போக்குகிற சர்வேசுரனுடைய செம்மறிப் புருவையாகிய சேசுவே,—எங்களைத் தயைபண்ணி இரட்சியுஞ் சுவாமி.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ தயையாயிரும்.—பர. தீர்த்தம்.

## குழியில் வைத்தவுடனே சொல்லுகிற செபம்.

வாலரும் கன்னியரும் பாலரோடு விருத்தருஞ் சர்வேசுரனுடைய நாமத்தை ஸ்துதிக்கக்கடவார்கள்.

சுவாமீ கிருபையாயிரும்.
கிறீஸ்துவே கிருபையாயிரும்.
சுவாமீ தயையாயிரும்.—பர.

முதல்—பாலர்களை நமது அண்டையில் வரவிடுங்கள்.

துணை.—ஏனெனில் மோட்ச இராச்சியம் அப்படிப்பட்டவர்களுடையது.

### பிரார்த்திக்கக்கடவோம்.

சர்வத்துக்கும் வல்லவருமாய் நித்திய சீவியருமாய் மாசற்ற கற்புடையோருக்குப் பிரசந்ந கருணையுள்ளவருமாய் இருக்கிற சர்வேசுரா! தேவரீர் இந்தப் பாலனுடைய ஆத்துமத்தை இன்று மோட்ச இராச்சியத்துக்கு அழைத்தருளக் கிருபை செய்தீரோ; அடியோர்களுக்கும் கிருபை செய்து நாங்கள் பாவதோஷமின்றி ஜீவித்து, உம்முடைய உபத்திரவமான திருப்பாடுகளின் பலன்களினாலும் மோட்ச பாக்கிய சம்பன்னரான அர்ச். மரியாயிமுதல் சகல மோட்சவாசிகளுடைய வேண்டுதலினாலும் உம்மாலே தெரிந்துகொள்ளப்பட்ட சகல அறவோர்களோடு முடிவில்லாத மோட்ச இராச்சியத்தில் களிகூர்ந்திருக்க அநுக்கிரகஞ் செய்தருளும். இந்த மன்றாட்டுகளை எல்லாஞ் சேசுக் கிறீஸ்துநாதருடைய திருமுகத்தைப் பார்த்துத் தந்தருளும்.—ஆமென்.

கிருபை[illegible]க்கு மந்திரம் 182-ம் பக்கம் காண்க.

# பொருள் அட்டவணை.


| பிரிவு. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 1 | பாயிரம் ... ... ... ... | 1 |
| 2 | தெய்வ வணக்கம் ... ... ... | 6 |
| 3 | அவையடக்கம் ... ... ... | 7 |
| 4 | வரமிரத்தல் ... ... ... ... | 8 |
| 5 | ஆசான் முயற்சி ... ... ... | 9 |
| 6 | கேட்போருக்குரை ... ... ... | 9 |

(பாயிரத்தில் பிரிவு 6-க்குச் செய்யுள் 60.)

நாடாளான் சருக்கம். ... 11

| | | |
|---|---|---|
| 1 | நாட்டுவளம் ... ... ... ... | 11 |
| 2 | நகர்வளம் ... ... ... ... | 12 |
| 3 | அரசியல் ... ... ... ... | 13 |
| 4 | குருவியல் ... ... ... ... | 14 |
| 5 | குரு உபதேசம் ... ... ... | 15 |
| 6 | குரு அரசனைக் காணல் ... ... ... | 15 |
| 7 | அரசனையுறல் ... ... ... | 17 |

(ஆ சருக்கம் ஒன்றுக்குப் பிரிவு 7-க்குச் செய்யுள் 96.)

மாயவினிச்சயச் சருக்கம். 18

| | | |
|---|---|---|
| 1 | அரசனையமறல் ... ... ... | 18 |
| 2 | சாகாருமுளரோ ... ... ... | 19 |
| 3 | கற்ப மருந்து... ... ... ... | 20 |
| 4 | ஆத்துமமுங் கதியும் ... ... ... | 21 |
| 5 | சொந்தவேலே யெது ... ... ... | 25 |
| 6 | எதுக்குப் படைத்தார் ... ... ... | 26 |

(ஆ சருக்கம் 2-க்கு பிரிவு 13-க்கு செய்யுள் 261.)

நன்மாணத்தடைச் சருக்கம். ... 29

| | | |
|---|---|---|
| 1 | சாதகசாரம் ... ... .. ... | 29 |
| 2 | நீடிய ஆயுள்ளியல்பு ... .. .. | 30 |

| பிரிவு. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 3 | ஓர் பவத்தீது ... ... ... ... | 32 |
| 4 | வீண்கால நஷ்டி ... ... ... | 33 |
| 5 | ஆவலாதிப் பெருக்கம் ... ... ... | 34 |
| 6 | இடரற இதுயாது பாவத்தீது ... ... | 35 |
| | (ஆ சருக்கம் 3-க்குப் பிரிவு 19-க்கு செய்யுள் 392.) | |
| | மரணமுன்னுத் தீமைச் சருக்கம். ... | 38 |
| 1 | சாங்காலத்தேகம் ... ... ... | 38 |
| 2 | துர்ப்பளக்கச் சருக்கம் ... ... ... | 39 |
| 3 | பாவப்பளக்கச் சருக்கு ... ... ... | 40 |
| 4 | பாவப்பளக்க அபாயம் ... ... ... | 40 |
| 5 | நன்மனுவசியம் ... ... ... | 42 |
| 6 | பேயின் சத்துவம் ... ... ... | 44 |
| 7 | தெய்வச்செயல் ... ... ... | 44 |
| | (ஆ சருக்கம் 4-க்கு பிரிவு 26-க்கு செய்யுள் 517.) | |
| | நன்மரணுதவிச் சருக்கம். ... | 46 |
| 1 | வாலதிசையைச் சீரிடல் ... ... ... | 46 |
| 2 | தேவதாயை மன்றுடு ... ... ... | 47 |
| 3 | சூசை முனிவரை வேண்டு... ... ... | 48 |
| 4 | காவல் சம்மனசைப் பிரார்த்தி ... ... | 48 |
| 5 | உத்தரிப்புச் சபையார் உதவியை நாடு ... ... | 49 |
| 6 | நன்மரணந் தேவவரம் ... ... ... | 50 |
| 7 | தேவசாபம் ... ... ... ... | 50 |
| 8 | தன்மமே நிச்சயம் ... ... ... | 51 |
| 9 | ஒரே ஆத்துமம் ... ... ... | 54 |
| 10 | ஆத்துமப்பெருமை ... ... ... | 54 |
| | (ஆ சருக்கம் 5-க்கு பிரிவு 36-க்கு செய்யுள் 686.) | |
| | மாணனுபவச் சருக்கம். ... | 57 |
| 1 | சாவணுகிற சந்தி ... ... ... | 57 |
| 2 | சாவணுகிய நெறிகள் ... ... ... | 58 |
| 3 | தவத்தின்வசியம் ... ... ... | 61 |
| 4 | தற்காலத்தவப்பேறு ... ... ... | 63 |
| 5 | தேவ சமுக ஞாபகம் ... ... ... | 64 |

| பிரிவு. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| 6 | கள்ளஞானம்... ... .. ... | 65 |
| 7 | சாவைச் சிந்தி ... ... ... | 58 |

(ஆ சருக்கம் 6-க்கு பிரிவு 43-க்கு செய்யுள் 883.)

நன்மரணநாடாத் தீமைச் சருக்கம். ... 76

| | | |
|---|---|---|
| 1 | சாவுக்கஞ்சாமை ... ... ... | 70 |
| 2 | வீண் நம்பிக்கை நாசம் ... ... ... | 72 |
| 3 | மூட நம்பிக்கையின் கேடு ... ... ... | 73 |
| 4 | தேவதிருவாசகம் ... ... ... | 74 |
| 5 | தேவகோபாக்கினை ... ... ... | 76 |
| 6 | வஞ்சக நம்பிக்கை ... ... ... | 77 |
| 7 | சாவதொரோமுறை ... ... ... | 79 |
| 8 | மறுமுறைமரித்தோனுமா ... ... ... | 80 |
| 9 | வயோதிபதிசையனுசுத்தி ... ... ... | 81 |

(ஆ சருக்கம் 7-க்கு பிரிவு 52-க்கு செய்யுள் 1069.)

நோயனுசாரச் சருக்கம். ... 81

| | | |
|---|---|---|
| 1 | சாவுக்கேது ... ... ... ... | 82 |
| 2 | அவஸ்தைபூசுதலருமை ... ... ... | 82 |
| 3 | அவஸ்தையாராட்டம் ... ... ... | 83 |
| 4 | சாவினது நஷ்டி ... ... ... | 84 |
| 5 | குருவையழைத்தல் ... ... ... | 86 |
| 6 | இல்லாருக் கறிக்கை ... ... ... | 87 |
| 7 | பாவஞாபகமுறல் ... ... ... | 88 |
| 8 | மனம்தாப முக்கியம் ... ... ... | 90 |
| 9 | நற்பிரதிக்கினை நெறி ... ... ... | 92 |
| 10 | உச்சாரணவிலெக்ஷணம் ... ... ... | 93 |
| 11 | அவசியநிற்கிரகம் ... ... ... | 95 |
| 12 | இருதியிலுத்தரித்தல் ... ... ... | 96 |
| 13 | அவஸ்தைபூசுதல் ... ... ... | 96 |
| 14 | பதவிக்குதவியைத் தேடு ... ... ... | 97 |
| 15 | தெய்வசித்தமே நமது பாக்கியம் ... ... | 100 |

(ஆ சருக்கம் 8-க்கு பிரிவு 67-க்கு செய்யுள் 1374.)

| பிரிவு. | பொருள். | பக்கம். |
|---|---|---|
| | **உயிரோது சருக்கம்.** ... | 102 |
| 1 | இன்ப பேய்க்கோஷ்டம் ... ... ... | 102 |
| 2 | பித்தசேஷ்டை ... ... ... | 104 |
| 3 | இதர உதவி அநிச்சயம் ... ... ... | 105 |
| 4 | துன்மனப் பேயருட்டி ... ... ... | 106 |
| 5 | சம்மனசோர் முயற்சி ... ... ... | 108 |
| 6 | பேயின் புத்தகம் ... ... ... | 110 |
| 7 | சம்மனசின் புத்தகம் ... ... ... | 111 |
| 8 | மனச்சாட்சிப்போக்கு ... ... ... | 112 |
| 9 | இரட்சண்ணிய அநுமானம் ... ... | 113 |
| 10 | மரணத்தன்மை ... ... ... | 114 |
| | (ஆ சருக்கம் 9-க்கு பிரிவு 77-க்கு செய்யுள் 1601.) | |
| | **தீர்வைச் சருக்கம்.** | |
| 1 | தேவசபை மாட்சி ... ... ... | 116 |
| 2 | தேவகுரோதக்கடோரம் ... ... ... | 116 |
| 3 | அனுபோக சாட்சி ... ... ... | 118 |
| 4 | பேயின் சாட்சி ... ... ... | 119 |
| 5 | சம்மனசோர் சாட்சி ... ... ... | 121 |
| 6 | சமன் றூக்குந் தராசு ... ... ... | 122 |
| 7 | பாவவாளன்றனிமை ... ... ... | 122 |
| 8 | தேவதீர்வைத் தன்மை ... ... ... | 124 |
| | (ஆ சருக்கம் 10-க்கு பிரிவு 85-க்கு செய்யுள் 1756.) | |
| | **ஊனெடுக்கச் சருக்கம்.** ... | 226 |
| 1 | பிரேத நேர்மை ... ... ... | 126 |
| 2 | பாடை யாத்திரை ... ... ... | 127 |
| 3 | சவத்தைச் சேமித்தல் ... ... ... | 128 |
| 4 | அடக்கச் சமயம் ... ... ... | 129 |
| 5 | கயாச்சித மனை ... ... ... | 130 |
| 6 | கல்லறை வாயலைமூடல் ... ... ... | 131 |
| 7 | மூடிய குழியைத் திறந்துபார் ... ... | 132 |
| 8 | மரித்தோர் முறைப்பாடு ... ... ... | 134 |
| 9 | எக்காலக்கண்ணி ... ... ... | 135 |
| | (ஆ சருக்கம் 11-க்கு பிரிவு 94-க்கு செய்யுள் 1922.) | |

பிரிவு. பொருள். பக்கம்.

புண்ணியர் தேகமான்மியச் சருக்கம்.

1 சீவிய ரங்கமாட்சி ... ... ... 137
2 சீவிபருபதேசம் ... ... ... 138
3 முக்காலக்கண்ணி ... ... ... 139
4 இறுதிமதி ... ... ... 141
5 பிரதிக்கினை ... ... ... 142
6 வாழி ... ... ... 143

(ஆக சருக்கம் 12-க்கு பிரிவு 100-க்கு செய்யுள் 2040.)
பாயிரச்செய்யுள் 60. ஆக செய்யுள் 2100.)
வெண்பா 1. விருத்தம் 18.

அநுபந்தம்.

அவஸ்தை ஆயத்தம் ... 144
வியாதியில் மனவல்லயச் செபங்கள் ... 158
நன்மரணப் பிரார்த்தனை ... 161
நன்மரணமடைய திரு இருதயத்தை நோக்கிச் சொல்லத்தகும் சுகிர்த மன்றாட்டு ... 165
அவஸ்தைப் பிரார்த்தனை ... 167
ஆத்துமங் கேவுகிறபோது சொல்லுகிற செபம் ... 169
சகல அர்ச்சியசிஷ்டவர்களின் பிரார்த்தனை ... 170
ஆத்துமம் பிரிந்தவுடனே சொல்லுகிற செபம் ... 174

அடக்கம் செய்யும் ஒழுங்கு. 175

பிரேதம் எடுக்கிறதற்கு முன் செபம் ... 175
குழியில் வைக்குமுன் செபம் ... 176
குழியில் வைத்தவுடனே சொல்லுகிற செபம் ... 177
உத்திரிக்கிற ஆத்துமாக்களின் பிரார்த்தனை ... 178
கிருபைதயாபத்து மந்திரம் ... 182
செபம் முடிக்கிற வகை ... 183

பாலர் அடக்கம். ... 183

அர்ச். தேவமாதாவின் பிரார்த்தனை ... 184

அட்டவணை முற்றுப்பெற்றது.

68165
Q6:417
N14

# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி | பிழை. | திருத்தல். |
|---|---|---|---|
| 37 | 6 | மீட்சியில்லை. | மனஸ்தாபப்படுகிற பாவி எவனும் மீட்படைவானென்பதில் ஆக்ஷேபனையில்லை. |

7A
1-117